35.

Sundar.

செ. சுந்தரம்பிள்ளை
துறை வீதி
யாழ்ப்பாணம்

[illegible]

Sundrampillai,
Peddiyalai,
Karainagar

# கலையும் பண்பும்

பிறையன்பன்

கிங்ஸ்லி பதிப்பகம்,
கண்டி.

கலைவாணி புத்தக நிலையம்.
கண்டி.

முதற் பதிப்பு
மார்கழி 1961

விலை ரூபா. 3-25

கண்டி
கிங்ஸ்லி அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

# இந்நூலில்


| | பக்கம் |
|---|---|
| தோற்றுவாய் | 3 |
| இஸ்லாத்தின் சிறப்பியல்புகள் | 9 |
| தோற்றமும் வளர்ச்சியும் | 22 |
| ஈழமும் முஸ்லிம்களும் | 57 |
| புவியியலும் வர்த்தகமும் | 72 |
| கலைகள் | 91 |
| விஞ்ஞானமும் சட்டமும் சமுதாயமும் | 113 |
| இஸ்லாமியர் தமிழ்மொழிக்காற்றிய தொண்டு I | 129 |
| இஸ்லாமியர் தமிழ்மொழிக்காற்றிய தொண்டு II | 144 |
| இந்நூலாக்கத்திற்கு உதவிய நூல்கள் | 161 |
| அட்டவணை | 164 |

எல்லா உரிமையும் ஆக்கியோனுக்கே.

# தோற்றுவாய்

உலக மக்கட்டொகுதியில் நான்கிலொரு பகுதியினர் இன்று இஸ்லாமியராகத் திகழ்கின்றனர். உலகின் எல்லாத் திக்குகளிலும் நாள்தோறும் இருபத்து நான்கு மணிநேரத்திலும் 'அல்லாஹு அக்பர்' எனத் தொடங்கும் தொழுகை அழைப்பின் குரல் கேட்கின்றது. இத்தகைய சமயத்தின் திடீர்த் தோற்றமும் வியத்தகு வளர்ச்சியும் மனித வரலாற்றின் கவர்ச்சியான பகுதிகளாய் அமைந்துள்ளன.

இச்சமயம் இஸ்லாமியப் பேரரசு ஒன்றனை நிறுவியதோடு அமையாது, கலையையும் பண்பாட்டையும் உலகிற்கு அளித்தது. இதன் ஆதிக்கம் பரவிய நாடுகளில் இஸ்லாமியக் கலைகளும் வாழ்க்கை முறைகளும் பரவியிருக்கின்றன. மேனாட்டு நாகரிக வளர்ச்சிக்கும் இச்சமயமே காலாக விளங்கியது. நான்கு நூற்றாண்டு வரை சமயம் வரலாறு வைத்தியம் பூகோளம் வானநூல் விஞ்ஞானம் கலைகள் முதலிய பல துறைகளிற் பிற நாடுகளிலே தனது செல்வாக்கைப் பரவச் செய்த பெருமை இஸ்லாத்திற்குரியது.

இவ்வாறு உலகப் பண்பாட்டினையும் வரலாற்றினையும் மாற்றி அமைத்த இஸ்லாமியரின் கலையும் பண்பும் இதுவரை தமிழில் எந்நூலிலும் கூறப்படவில்லை. ஒரு சகோதர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இஸ்லாமிய மக்கள். அவர்கள் தாய்மொழி எம்மொழியாக இருப்பினும் அவர்கள் யாவ

ரையும் சமயம் இணைத்து வைக்கின்றது. எனவே வெவ்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் இஸ்லாமியராகவிருக்கின்றனர். இவர்களுள் தமிழ் பேசும் மக்களும் பலர் பல நாடுகளில் உளர். ஆங்கில மொழி அறிவில்லாத தமிழ் பேசும் மக்கள் தமது கலையையும் பண்பையும் பற்றி அறிந்துகொள்வதற்குத் தமிழில் நூல் இல்லாத குறையைத் தீர்க்கும் முதல் முயற்சியாக இந்நூல் வெளிவருகின்றது.

இஸ்லாத்தின் அடிப்படைக் கருத்தையும் அனுட்டானக்கொள்கைகளையும் கூறுகின்றது இஸ்லாத்தின் சிறப்பியல்புகள் என்னும் பகுதி. முகம்மது நபி (சல்) அவர்களின் வரலாற்றுச் சிறப்பும் இதில் இடம் பெறுகின்றது. அல்லாஹ்வை ஏகதெய்வமாகக் கொள்ளுதல், நாள்தோறும் ஐந்துவேளை தொழுதல், ரமலான் மாதத்தில் நோன்பு நோற்றல், சகாத்து என்னும் ஏழைவரி கொடுத்தல், ஹஜ்ஜுக்குச் செல்லுதல் ஆகிய ஐந்து அனுட்டானக் கொள்கைகளின் சிறப்பியல்புகளையும் இப்பகுதி விரிவாக எடுத்துக் கூறுகின்றது.

கடந்த பதினான்கு நூற்றாண்டில் பல இனங்களைச் சேர்ந்த மக்களையும் பல மொழிகளைப் பேசும் மக்களையும் ஒரே குடும்பத்திற் சேர்த்த இச்சமயத்தின் வரலாறு தோற்றமும் வளர்ச்சியும் என்னும் பகுதியில் அடங்கியுள்ளது. மூட நம்பிக்கை, கொடிய பழக்க வழக்கம், தீய ஒழுக்கம் முதலியவற்றிற் பதிந்துகிடந்த மக்கட் சமுதாயத்தை நபிகள் திலகம் (சல்) உயரிய வழியிற் கொண்டு செலுத்தி, ஒரு கட்டுப்பாடான இனமாக அமைத்த வரலாற்றையும் அதற்குப்பின் இஸ்லாம் பிற பிரதேசங்களுக்குப் பரவிய வரலாற்றையும் இப்பகுதி மொழிகின்றது.

ஈழத்துப் பழங்குடி மக்களுள் இரண்டாவது சிறுபான்மைச் சமுகத்தினர் முஸ்லிம் மக்கள். ஈழத்தில் அவர்கள் வந்து குடியேறிய வரலாற்றையும், ஈழத்துப் பொருளாதார விருத்திக்கு அவர்கள் ஆற்றிய தொண்டினையும், அவர்கள் கட்டியெழுப்பிய பள்ளிவாசல்களின் சரித்திரத்தையும், கலைத்துறையிலும் கல்வித்துறையிலும் அவர்கள் சாதித்தவற்றையும், ஈழத்து இஸ்லாமியர் தமிழ் மொழியை வளம்படுத்திய பணியையும் ஈழமும் முஸ்லிம்களும் என்னும் பகுதி விளக்குகின்றது.

புவியியற் கொள்கை வரலாற்றிலும் புவியியல் அறிவு வரலாற்றிலும் இஸ்லாமியர் ஆற்றிய தொண்டு சிறப்புடைத்து. புவியியல்பற்றி இஸ்லாமியர் எழுதிய நூல்களின் வரலாறு, அவர்களின் கடற்போக்குவரத்து, தரைப்போக்குவரத்து, அவர்கள் நடத்திய வர்த்தகத்தின் வரலாறு முதலியவற்றை எடுத்துக்கூறுகின்றது புவியியலும் வர்த்தகமும் என்னும் பகுதி.

இஸ்லாமியர் இயற்கையாகவே கலையுணர்வு மிக்கவர்; பிறருடைய சிறந்த கலை அம்சங்களை ஏற்றுக்கொள்ளும் பரந்த மனப்பான்மை உடையவர். அவர்களின் கட்டடங்களிற் பல கலை முறைகளின் சாயலைக் காணலாம். எனினும், பல நூற்றுண்டில் இஸ்லாமியக் கட்டடக்கலை ஒரு தனிப் பண்பைப் பெற்றது. இதனைப் பற்றியும், இஸ்லாமியப் பள்ளிவாசல்களின் அமைப்பைப்பற்றியும் இஸ்லாமியக் கோட்டை அமைப்பைப்பற்றியும் கலைகள் என்னும் பகுதியிற் காணலாம். ஓவியம், இசை, நாடகம், கைத்தொழில் ஆகிய துறைகளில்

பிற நாட்டவர் இஸ்லாமியரிடமிருந்து கற்றுக்கொண்டவற்றையும் கலைகள் என்னும் பகுதி கூறுகின்றது.

விஞ்ஞானத்திலும் வைத்தியத்திலும் இஸ்லாமியர் சாதித்தவை மகத்தானவை. இஸ்லாமிய சமுதாயத்தின் சட்ட அமைப்பும் ஒழுங்கான முறையில் அமைந்துள்ளது. இச்சட்ட அமைப்பும் அதனோடு இணைந்துள்ள சமுக அமைப்பும் பல சிறப்பியல்புகளைக் கொண்டவை. இவை யாவற்றையும் விஞ்ஞானமும் சட்டமும் சமுதாயமும் என்னும் பகுதி விரிவாக விளக்குகின்றது.

இஸ்லாமியர் தமிழ் மொழிக்காற்றிய தொண்டு இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளது. இஸ்லாமியர் தமிழ் மொழிக்காற்றிய தொண்டினை இஸ்லாமியரே அறியார். காப்பியம், கலம்பகம், அம்மானை, அந்தாதி, ஆற்றுப்படை, திருப்புகழ், கும்மி, தாலாட்டு, மாலை, ஏசல், சிந்து ஆகிய இலக்கிய வகைகளில் இஸ்லாமியர் இயற்றிய நூல்களைத் தமிழ்த்தொண்டு முதலாம் பகுதி விரிவாகக் கூறுகின்றது. இரண்டாம் பகுதியில் இஸ்லாமியர் தமிழை வளம்படுத்தத் தமிழிற் புகுத்திய புதிய பிரபந்த வகைகளாகிய படைப்போர், முனாஜாத், கிஸ்ஸா, மசலா, நாமா ஆகியவற்றின் விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. இஸ்லாமியர் இயற்றிய ஞானப்பாக்கள், மாலை நூல்கள், சமய ஒழுக்க நூல்கள், உரைநடை நூல்கள் ஆகியனவும் இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

இந்நூலை நாம் எழுதுவதற்குக் காலாக இருந்தவர் ஜனப். எம். எம். உவைஸ் அவர்கள். இந்நூலுக்கு நெறி வகுத்து, பிரதிகளைப் படித்து, ஆலோசனை கூறிப் பல

வகையில் உதவிய அப்பெரியாருக்குப் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம். இத்தகையதொரு நூல் தமிழில் இல்லாத குறையைத் தீர்க்கவேண்டும் என்று பல முறை தூண்டி ஊக்கம் அளித்த அவ்வறிஞரின் பெருந்தன்மை மறத்தற் பாலதன்று.

இந்நூலின் முகப்புப்படம் வேர்விலைக் கெச்சிமலைப் பள்ளிவாசற் படமாகும். இதற்குரிய புகைப்படத்தை நல்ல முறையிற் பிடித்துதவிய ஜனாப் எம். றசீக் அவர்களுக்கும், அதனை அழகாக வரைந்துதவிய ஓவியக் கலைஞர் 'தேனுகா' அவர்களுக்கும் எமது நன்றி உரித்து.

பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கச் சஞ்சிகைகளையும் இலங்கைக் கலைக் கழகத் தமிழ் நாடகக் குழுவின் வெளியீடுகளையும் அச்சிட்ட கண்டி கிங்ஸ்லி பதிப்பகத்தார் இந்நூலை வெளியிடுகின்றனர். ஈழத்து எழுத்தாளரின் படைப்புக்கள் ஈழத்திலேயே வெளியிடப்பட வேண்டுமென்பது எமது கொள்கை. அப்பொழுதுதான் ஈழத்தில் நல்ல பதிப்பகங்கள் தோன்றும். மலைநாட்டிலே தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் இன்று கிங்ஸ்லி அச்சகம் முதலிடம் வகிக்கின்றது. இந்நூலையும் அவர்கள் மிகக் குறுகிய கால எல்லையுள் வெளியிட்டுதவியமைக்கு எமது நன்றி உரியதாகுக.

இப்பதிப்பகத்தைக் கொண்டு நடத்தும் திரு. ஜே. ஜி. றொட்ரிகஸ் அவர்கள் இந்நூல் சிறந்த முறையில் அமைவதற்கு அல்லும் பகலும் உழைத்தவர். அவருக்கும் அவருக்கு உறுதுணையாயிருந்து பலவகையிலும் உதவிய திரு. க. வேலாயுதம் அவர்களுக்கும் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

அவர்களுடன் ஒத்துழைத்து இந்நூலை நூல் வடிவில் அளித்த திரு. அழகர், ஜனப். மொஹிடீன் போன்ற பதிப்பகப் பணியாளருக்கும் எமது உளம் நிறைந்த நன்றி உரித்தாகுக.

இது புதியதொரு முயற்சி; எனவே, பல குறைகள் இருக்கக்கூடும் என்பதை உணர்கின்றோம். இருந்தும், இத் துறையில் முதல் முறையாக இதனைச் செய்யத் துணிந்தோம் என்ற எண்ணம் அந்த உணர்ச்சியிடையே ஓர் ஆறுதலை அளிக்கின்றது. இந்நூலைத் தமிழ் பேசும் நன்மக்கள் அன்புடன் ஏற்று, இப்பணியினைத் தொடர்ந்து செய்வதற்கு ஆதரவும் ஊக்கமும் அளிப்பார்களென எதிர்பார்க்கின்றோம்.

*28/1, பழைய கலகா வீதி,*
பேராதனை.
*20-12-1961*

**பிறையன்பன்**



புனித ஹஜ்ஜை நிறைவேற்றச் சென்ற பக்தர்கள்
தொழுகைக்காகப் புனித கஃபாவைச் சுற்றி எழுந்து நிற்கின்றனர்

# இஸ்லாத்தின் சிறப்பியல்புகள்.

இஸ்லாம் என்ற பெயருக்குப் பலரும் பல காரணம் கூறுவர். இச்சமயம் இன்பமயமான சாந்தியையே பெரும்பாலும் போதித்து வருவதனுல் இஃது இஸ்லாம் என்ற பெயரால் வழங்கிவருகின்றது. இஸ்லாத்தில் மிகுதியாகக் காணப் படுவது சாந்தியே. ஆண்டவனிடத்திருந்துண்டாகும் சாந்தியின் காரணமாக, அவனுடைய படைப்புக்களிடத்தில் எவனெருவன் சாந்தியுடன் நடந்துகொள்கின்ருனே, அவனே இஸ்லாத்துக்குரியவன். அவனுடைய சமயமே இஸ்லாம் எனப்படும்.

இறைவனிடத்துச் சாந்தி பெறுவதென்பது, தூய்மையும் நன்மையும் நிறைந்துள்ள ஆண்டவனின் விதிகளுக்கு நாம் முற்றிலும் கட்டுப்பட்டு நடத்தலாகும். இறைவனின் படைப்புக்களிடத்தில் சாந்திசெய்வதென்பது, உலகிலுள்ள உயிர்கள் யாவற்றினிடத்தும் கருணை காட்டுவதாகும். இவ்விருகருத்தையும் இறைவன் தன் திருமறையிற் பின்வருமாறு விளக்குகின்ருர்: ''அல்லாவுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு ஒழுகுபவன் எவனே, அவனே மற்றவர்களுக்கு நன்மை செய்வான்; இறைவனிடத்து அவனே சன்மானம் பெறுவான்; அவனுக்கு அச்சம் ஏற்படாது; அவன் மனவேதனை அடையத் தேவையில்லை''. இதுவே இஸ்லாத்தின் முடிவான வீடுபேறு.

மேலும், முஸ்லிம்கள் ஒருவரை ஒருவர் காணும்போது முதலிற் கூறும் வணக்கமும் சலாம் என்பதே இதன் பொருள்

சாந்தி, அல்லது சமாதான்ம். மேலுலகத்தில் முஸ்லிம்கள் ஒருவருக்கு ஒருவர் வந்தனம் செலுத்தும்போதும் சலாம் என்னும் சொல்லேயே வழங்குவர். அங்கே சலாம் சலாம் என்று சொல்லக்கூடிய சொற்களைவிட வேறுவெறும் பேச்சையோ பாபமொழிகளையோ கேட்கமுடியாது. அல்லாவுக்குரிய சிறந்த பெயர்களுள் சாந்திமூர்த்தி என்பதும் ஒன்றாகும். இஸ்லாமிய முறைப்படி ஒழுகுபவர் கடைசியில் அடையும் நிலையைச் சாந்தி ஆச்சிரமம் எனத் திருக்குர்ஆன் குறிப்பிடுகின்றது. எனவே, சாந்தி என்பது இஸ்லாத்திற்குச் சிறந்த ஒரு குணமாகும். இஸ்லாத்தின் அடிப்படை இதுவே; இதனுலேயே இச்சமயத்தைச் சாந்திமார்க்கம் எனச் சிறப்பித்து அழைப்பர்.

இத்தகைய சிறப்புவாய்ந்த மார்க்கம் மக்களுக்கு அவசியமான தேவைகளுக்கு ஏற்றதாகவும், உண்மையோடு மாறுபடாத கொள்கைகளை உடையதாகவும் விளங்குகின்றது. ஒரு சமயத்தின் பெருமையை அதனுடைய உயரிய தத்துவங்களைக்கொண்டு மதிக்கக் கூடாது; அம்மதம் அனுட்டிக்கும் தன்மையைக் கொண்டே மதிப்பிடவேண்டும். இஸ்லாத்தில் உயர்ந்த எண்ணங்களும் அறிவுக்குரிய அனுட்டான முறைகளும் அடங்கியிருக்கின்றன. அது மனித இயற்கையை உதறித் தள்ளவில்லை. உண்மையான வழியை, நேரிய வழியை, விட்டு அப்பால் விலகிச் செல்லவுமில்லை.

இஸ்லாமிய சமயத்தின்படி எல்லா மனிதரும் ஒரு சகோதர குடும்பத்தைச் சேர்ந்தவர். மேன்மக்கள் என்றும் கீழ்மக்கள் என்றும், அரசன் என்றும் அடிமை என்றும், செல்வன் என்றும் ஏழை என்றும், உயர்ந்த சாதி என்றும் தாழ்ந்த சாதி என்றும் எவ்வித வேற்றுமையும் போற்றப்படுவதில்லை. மக்கள் யாவரும் இறைவனுடைய சம படைப்பாகக் கருதப்படுவதால், இஸ்லாத்தில் தீண்டாமை என்ற கொடிய வழக்கம் அடியோடு அகற்றப்பட்டிருக்கின்றது.

மக்கள் எத்தொழிலைச் செய்தாலும், எந்நிலையில் இருந்தாலும், குலப்பெருமையோ சாதி இறுமாப்போ ஒரு சிறிதும் பாராட்டப்படுவதில்லை. எல்லா உலகங்களுக்குந் தலைவனான இறைவன் முன்னிலையில் யாவரும் ஒரே சாதியைச் சேர்ந்தவராகவே கருதப்படுகின்றனர். அவரவர் செய்யும் நன்மை தீமைகளுக்கு ஏற்றவாறு இறைவனின் சன்மானமும் அருளும் கிட்டுமேயல்லாமல், அவரவர் பிறப்பினாலோ தொழிலினாலோ எவ்வித மேன்மை தாழ்மைகளும் ஏற்படுவதில்லையென இம்மதம் நிறுவுகின்றது. மேலும் இம்மதத்தில் பெண்களுக்கும் ஆண்களோடொத்த உரிமைகள் உண்டு.

ஒவ்வொரு முஸ்லிமும் தன்னிலேயே ஒரு கோயிலாக இருக்கின்றான். ஒவ்வொருவரும் தம்முடைய மார்க்கத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்ய உரிமை பெற்றவராக இருக்கின்றார். இதனாலேயே, இம்மார்க்கத்திற் புரோகிதர் என ஒரு தனிப்பட்ட வகுப்பார் ஒதுக்கி வைக்கப்படவில்லை. மக்களுக்கும் ஆண்டவனுக்கும் இடையே நடுவர் எவரும் தேவையில்லை. மதத்தைப் பொறுத்த அளவில் ஞானம் எய்தியிருக்கும் எவரும் எப்படிப்பட்ட லௌகிக வைதீக செயல்களையும் செய்யத் தகுதியுள்ளவர். இவ்விடத்தில் இஸ்லாத்தின் சிறப்பியல்பு ஒன்று பெறப்படுகின்றது. ஏனைய சமயங்களிற் போல இஸ்லாத்தில் ஆண்டவனுக்கும் அடியாருக்குமிடையில் எவரேனும் தூதுசெல்வதில்லை. ஆண்டவனே ஒவ்வொருவருடைய விண்ணப்பத்தையும் செவிமடுத்து, அவரவர்க்குரிய மன்னிப்பை அளித்துவிடுகின்றான்.

"ஏ, என் அடியார்களே ! உங்களுக்கு தீமையைப் பயக்கக் கூடிய தவறான வழியில் நீங்கள் செல்ல நேரிட்டால், ஆண்டவன் அருள் கிட்டுமோ என ஏக்கங் கொள்ளாதீர்; ஏனெனில், ஆண்டவன் நிச்சயமாக எல்லாப் பாவங்களையும், அடியோடு மன்னிக்கின்றான். அவன் மன்னிப்பு அளிப்பவனாகவும் அன்பு நிறைந்தவனாகவும் இருக்கின்றான்" என்று

திருக் குர்ஆன் இதனை நன்கு விளக்குகின்றது. எனவே, அவர வர் செயல்களின் நன்மை தீமைகளுக்கு அவரவரே காலாகக் கருதப்படுகின்றனர். ஒருவனுடைய சுமையை மற்றொருவன் சுமக்கமுடியாதென்று இவ்வுண்மையைத் திருக்குர்ஆன் மேலும் வற்புறுத்துகின்றது. ஆகவே, ஒருவருடைய பாபத் துக்காக இன்னொருவர் பிராயச்சித்தம் செய்ய முடியாது; அவரவர் தத்தம் ஈடேற்றத்திற்குத் தாமே வழிதேடிக் கொள்ளுதல் வேண்டும்.

இத்தகைய இஸ்லாம் மார்க்கத்தை இவ்வுலகில் இறுதியாக நிலைநாட்டியவர் முகம்மது நபி ஆவர். இப்பெரு நபியைத்தான் இம்மதத்தினர் வழிகாட்டியாகப் பின்பற்று கின்றனர். இறுதி நபியாகிய இவரே ஏகதெய்வக் கொள்கையை இவ்வுலகில் இனி எக்காலத்திலும் எவராலும் அசைக்கமுடியாதபடி அவ்வளவு அழுத்தமாய் அமைத்திருக் கிறார். நபிகள் நாயகம் ஆண்டவனின் அடியாரே யொழிய தேவ அவதாரப் புருஷர் அல்லர். இறைவனின் ஆணையைப் பெற்ற இறைவனின் தூதராகவே நபிகள் திலகம் விளங்கு கின்றார். இத்தகைய நபியவர்களைக் கொண்ட இஸ்லாம், தூய்மையான கடவுள் உண்மைகளை ஒன்றுசேர்த்து, எல்லாக் காலத்துக்கும் எல்லாத் தேசத்துக்கும் எல்லாச் சாதியினருக் கும் பொருத்தமான மதமாக நிலவுகின்றது. இதன் வேத மாகிய திருக் குர்ஆன், கடந்த பதின்மூன்று நூற்றாண்டு களாக ஓர் எழுத்தேனும் மாறுபடாமல் அன்றுபோல் இன்றும் ஒரேதன்மையதாய் இருந்துவருகின்றது.

நபிகள் நாயகம் ஒரு சாதாரண மனிதன்தான். ஆனால், உலகிலுள்ள மனித சமுகத்தின் மூன்றிலொரு மக்கள் தொகையினால் பதின்மூன்று நூற்றாண்டுகளாக மகான் எனக் கருதப்பட்டவர் இவரே. ஏனைய தீர்க்கதரிசிகளைவிட இவர் உயரிய நிலை பெறுகின்றார். ஏனெனில் மற்றவர்களிடத்தில் மதத் தொடர்பான புதுமைகளைக் காண்கின்றோம். ஆனால்,

நபிகள் நாயகத்தை ஒரு சிறுபிள்ளையாகவும் திக்கற்ற இளைஞனாகவும், இடையராகவும், தொழிலாளியாகவும், வணிகனாகவும், பிரபுவாகவும், நண்பனாகவும், அரசனாகவும், வீரனாகவும் காண்கின்றோம். வேறு எந்தத் தீர்க்கதரிசியும் இவ்வாறு எல்லாத்துறையிலும் அனுபவம் பெற்றுப் பின்னர் உபதேசிக்க முன்வரவில்லை. அவர் உண்மையில் ஒரு மனிதனாகவும் நபியாகவும் இருக்கின்றார். அவர் ஒரு புதிய மதத்தை நிறுவவில்லை; தம்முடைய முன்னோர் கூறிப்போனதையே உபதேசித்தார். ஆண்டவனுக்கு முற்றிலும் அடிபணிந்து நடக்கவும், அவனைத் தமது நாளாந்த வாழ்க்கையிற் புகுத்திக் கொள்ளவும் கூடியவராயிருந்தார்.

மேலும் நபிபெருமானின் வரலாறு சரித்திரச்சான்றுடையதாய் இலங்குகின்றது. அவர் வரலாறு தொடர்பான உண்மைகள் சந்தேகிப்பதற்கில்லை. அவருடைய நடை ஒழுக்கம் முதலியன போற்றுதற்குரியனவாயுள்ளன. கிறித்தவ நாடுகளுக்கே ஒரு நடுக்கத்தைக் கொடுக்கக்கூடியவராயிருந்த நபிகள் நாயகத்தின் வரலாற்றிற் சந்தேகம் ஒன்றுமில்லை. பிற சமயக் குரவரின் வரலாறு சிலரினால் சந்தேகிக்கக் கூடியவையாயும் நிராகரிக்கக் கூடியனவாயும் அமைந்திருப்பதுபோல் நபிபெருமானின் வரலாற்றில் ஒன்றுமில்லை. பேராசிரியர் பாஸ்வொர்த் சிமிது என்பவர், ''இஸ்லாத்தில் எல்லாம் வேறுவிதமாய்க் காணப்படுகின்றன. பொய்க்கதைகளும், உண்மைக்கும் இயற்கைக்கும் மாறானவையும் அங்கு கிடையா; குர்ஆனில் நபிகள் நாயகம் கூறிய கூற்றுக்கள் கூட்டாமலும் குறைக்காமலும் அப்படியே காணப்படுகின்றன'' என்று கூறியுள்ளார்.

இஸ்லாத்தின் அனுட்டானக் கொள்கைகள் ஐந்தாகும். அல்லாஹுத் ஆலாவை ஏகதெய்வமாக ஏற்றுக்கொள்ளுதல், நாள்தோறும் ஐந்து வேளையும் தொழுதல், ரமலான் மாதத்தில் நோன்பு நோற்றல், சகாத்து என்னும் ஏழைவரி

கொடுத்தல், ஹஜ்ஜுக்குச் செல்லுதல் என்பனவே இக் கொள்கைகள். முதன்முதலாக இஸ்லாத்தில் ஈமான் கொண்டவர், ''அல்லாஹுத் ஆலாவைத்தவிர மெய்யாக வணக்கத்துக்குப் பாத்திரவான் வேறு யாருமில்லை என அறுதியிட்டுக் கூறுகின்றேன்; அவன் ஒப்பற்றவன்; அவனுக்கு இணை யாருமில்லை, மெய்யாக முகம்மது நபியவர்கள் (சல்) அவனுடைய அடியாரும் திருத்தூதருமாவார்களென்றும் அறுதியிட்டுக் கூறுகின்றேன்'' என்று மன உறுதியுடன் நாவாரச் சொல்ல வேண்டும்.

இரண்டாவதாக, தினம் ஐந்து காலை தொழுது கொள்ளல் வேண்டும். தொழுகைக்குத் தூய்மை மிக வேண்டற்பாலது. தூய உடம்பே தூய ஆத்மாவுக்கு இருப்பிடமாக அமையும்; எனவே, புறத்தூய்மையாகிய உடல்தூய்மையும் உடைத்தூய்மையும், மனத்தூய்மைக்கும் ஆத்மதூய்மைக்கும் இன்றியமையா அடிப்படைகளாகக் கொள்ளப்படுகின்றன. இஸ்லாத்தில் புறத்தூய்மையைப் பற்றி விரிவாகவும் நுட்பமாகவும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. புறத்தூய்மை இஸ்லாத்திற் கூறப்பட்டிருப்பதுபோல அவ்வளவு விரிவாக வேறு எச் சமயத்திலும் கூறப்படவில்லை.

தொழுகைக்கு அழைக்கும் விதத்திலும் சிறப்புக் காணப்படுகின்றது. பற்பல சமயத்தவரும் மேளம் முதலிய வாத்தியங்களை முழங்குவதாலும், சங்கை ஊதுவதனாலும், மணியை அடிப்பதனாலும் தத்தம் பூசைக் காலத்தைத் தெரியப்படுத்துகின்றனர். இஸ்லாத்தில் ஆண்டவனின் உண்மையையும் தொழுகையின் பெருமையும் கூறித் தொழுகைக்கு அழைப்பார்கள். இத்தகைய சிறந்த அழைப்பு வேறெந்த மதத்திலும் இல்லை. உலக அலுவல்களில் ஈடுபட்டிருப்போர் தொழுகை வேளையை மறவாமல் இருப்பதற்கும், அதை அறிந்தும் அலட்சியமாய் இல்லாமலிருப்பதற்கும், கூடித் தொழுவதன் பயனைப் பெறுவதற்கும் இத்தகைய அழைப்பு

வேண்டப்படுகின்றது. தூங்கினவரையும் இது தட்டி எழுப்பும். இக்காரணத்தினலேயே ''தொழுகையானது தூக்கத்திலும் மிகமேலானது'' என்னும் ஒலியும் இருமுறை செய்யப்படுகின்றது. இவ்வாறு பாங்கு சொல்லுதல் முற்காலத்தில் பட்டணத்தின் பலபகுதிகளிலிருந்து கூறப்பட்டது.

''இவ்வேதத்தில் உங்களுக்காக வெளியிடப்பட்டிருப்பதை ஓதித் தொழுகையை நிலைநிறுத்துங்கள். உறுதியாகவே தொழுகையானது கெட்ட செயல்களிலிருந்தும் தீமையிலிருந்தும் ஒருவரை அப்பால் அகற்றிவைக்கின்றது. நிச்சயமாகவே அல்லாவைத் தொழுவது மிக மேலானது'' எனத் திருக்குர்ஆன் தொழுகையின் பெருமையை விளக்குகின்றது. ஒரு நாளில் ஐந்து வேளைத் தொழுகையும், ஆத்மாவின் ஐந்து வேளை உணவாக இருக்கின்றன. அவை மக்களுடைய நாளாந்த அலுவல்களில் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டுகின்றன; பாவங்களைப் போக்குவதுடன் தூய்மைத் தன்மையில் விருப்பத்தை உண்டாக்குகின்றன, எனவே, இஸ்லாத்தில் தொழுகை என்பது மனிதனின் ஆத்மார்த்தத்தை முன்னுக்குக் கொண்டுவருவதற்கே அமைக்கப்பட்டுள்ளது.

மக்களின் உள்ளத்தில் தோன்றும் வேண்டுகோளை வெளிப்படுத்துவதே தொழுகையின் சிறப்பான நோக்கம். ஒருவர் தம்முடைய பணிவை இறைவனுடைய முன்னிலையில் தாழ்மையுடன் வெளிப்படுத்தித், தம்முடைய ஆத்ம ஆற்றலை வெளிக்காட்டி, தம்முடைய உள்ளத்தில் ஊறிக் கிடக்கும் விருப்பத்தை இறைவனிடம் அறிவிக்கும் பொருட்டே தொழுகை அவசியமானதொன்றாகின்றது. ஏனைய சமயங்களிற்போலவே இஸ்லாத்திலும் தொழுகையானது, அதாவது கடவுள் வணக்கம், மிக மேலானதொன்றாகக் கொள்ளப்படுகின்றது. மக்களுடைய உயிரைப் பக்குவப்படுத்துவதனல் எவ்வளவு சிறப்பான நிலையை எய்தமுடியுமோ,

அவ்வளவு சிறப்பான நிலையைப் பெறுவதற்குத் தொழுகை துணையாக அமைகின்றது. இறைவனின் உறவைப் பெறுவதற் கேற்ற மனப்பரிபக்குவத்தைத் தொழுகையாலேதான் பெற முடியும். இத்தகைய தொடர்புக்கு இது சிறந்த வழியாக இருக்கின்றது; ஆத்ம ஈடேற்றத்திற்குச் சிறப்பாக அமைகின் றது.

இஸ்லாமியரைத் தவிர ஏனையோர் கடவுள் வணக்கத் திற்காகப் பொதுவான ஒரு நாளைச் சிறப்பாக ஏற்படுத்தி.அந் நாளில் வேறு அலுவல்களை ஒதுக்கிவிட்டுத் தெய்வவணக்கம் செய்யவேண்டுமென ஏற்படுத்தியுள்ளனர்; ஆனல் இஸ்லாமி யர் மட்டும் மக்களுடைய நாளாந்த அலுவல்களுக்கிடையே ஐந்துவேளைத் தொழுகையைப் புகுத்திக் கடவுள் வணக்கத் திற்கெனப் புதிய முறைப்பாட்டினை ஏற்படுத்தியுள்ளனர். இதனுலேயே இஸ்லாத்தில் ஓய்வுநாள் என ஒருநாள் ஒதுக்கப் படவில்லை. முஸ்லிம்கள் நாள்தோறும் தாம் செய்துவரும் அலுவல்களில் அதிக கவனத்தைச் செலுத்தியிருக்கும் வேளை யிலும் உலக காரியங்களிலிருந்து உள்ளத்தை அகற்றி இறை வனிடத்திற் செலுத்தப் பழகிக்கொள்ளவேண்டுமென்பதே இஸ்லாத்தில் வேண்டப்படுவது.

இஸ்லாத்தில் லௌகிகம் வேறு வைதிகம் வேறு என்ற வேற்றுமை பாராட்டப்படுவதில்லை. வைதிகத்தொடர் பாகவே உலககாரியங்கள் யாவும் இச்சமயத்தில் நடைபெற் றுவருகின்றன. இதனுலேயே இஸ்லாத்தில் சன்னியாசம் என்பது இல்லை. உலக அலுவல்களுக்கிடையே ஒருவர் செய்யும் வைதிக முயற்சிகளினுலேயே ஆண்டவனுடன் தொடர்புகொள்ளலாமென இச்சமயம் ஏற்படுத்தியிருப்பத னுல், வாழ்க்கை முழுவதும் துறவுமேற்கொண்டு சன்னியாசி யாக இருந்து இறைவனை அடையவேண்டிய கவலை முஸ்லிம் களுக்கு இல்லை. இல்லற வாழ்க்கை நடத்தும்போதே உண்மை

யான தொழுகையினுல், துறவற வாழ்க்கை நடத்துவோர் எய்தக்கூடிய நன்மையிலும் பன்மடங்கு அதிகமான மேன்மையை எய்தி, இறைவனின் அருளை மிக இலகுவாகப் பெறலாமென்பதை இஸ்லாம் நிறுவுகின்றது.

இஸ்லாத்தில் மூன்ருவது அனுட்டானக் கொள்கையாக அமைந்துள்ளது நோன்பு நோற்பது. இது ஒவ்வொரு சமயத்திலும் ஒருவிதியாக அமைந்தபோதும், இஸ்லாத்தில் ஒரு கடமையாக விதிக்கப்பட்டுள்ளது. ரமலானில் நோன்பு நோற்றல் ஒரு திவ்வியமான கொள்கை. ரமலான் நாட்களில் ஒரு முஸ்லிம் உலகவாழ்க்கையில் ஈடுபட்டுக்கொண்டே பிரார்த்தனையில் காலங்கழிக்கின்ருர். அவர் அந்நாட்களில் பகலிலே தூங்கவோ, சோம்பேறியாய் இருக்கவோ, பயனற்றவற்றைப் பேசவோ முடியாது. இம்முப்பது நாள் நோன்பிற்கும் மற்றைய மதங்களிற் காணப்படும் நோன்பிற்கும் சிறப்பான ஒரு வேற்றுமை உண்டு. ஏனைய மதத்தினர் துன்பம் ஏற்படும்போது அதனை நீக்குவதற்கும், சினங்கொண்ட தெய்வத்தைச் சாந்தி செய்வதற்கும், இறந்தோரின் ஆவிக்குத் திருப்தி அளிப்பதற்கும் பிராயச்சித்தமாக நோன்பு நோற்பது வழக்கம். ஆனுல் இஸ்லாத்தில், மக்களின் சன்மார்க்க மேன்மையின் பொருட்டும் ஆத்ம ஞான விருத்திக்குமே இந்த முப்பதுநாள் நோன்பு அமைக்கப்பட்டுள்ளது.

''நீங்கள் உங்களைத் தீமையிலிருந்தும் காத்துக் கொள்ளும் பொருட்டு நோன்பானது உங்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது'' எனத் திருமறை கூறுகின்றது. தொழுகை முதலிய கடமைகளைப்போல இந்நோன்பும் ஆத்ம தூய்மைக்காகவே வகுக்கப்பட்டுள்ளது. தீய குணங்களைப் போக்கி நற்குணங்களை மேற்கொள்வதற்காகவே நோன்பு ஒரு வழியாக உள்ளது. எனவே, இஸ்லாத்தில் நோன்பானது உண்டியை ஒடுக்குவது மட்டுமன்று; ஐம்புலன்களின்

தீமைகளை அடக்குவதாகும். இதுவே, நோன்பு நோற்றலின் அடிப்படை நோக்கம். ஆத்ம தூய்மைக்கு இவ்வித நோன்பும் அவசியம் வேண்டப்படுகின்றது. இறைவனுடைய கட்டளைக்குக் கட்டுப்பட்டு நோன்பு செய்யப் பழகிக் கொண்டால் இறைவனுடைய ஏவலுக்குத் தலைசாய்க்க வேண்டுமென்னும் அடக்கமான பழக்கமும் எளிதில் உண்டாகின்றது.

"சகாத்தைக் கொடுங்கள்" என்னும் பொருள் அடிக்கடி திருக்குர்ஆனிற் கூறப்படுகின்றது. இது நான்காவது கடமையாகும். இஃது ஒருவிதமான கட்டாய ஏழை விகிதமாகும்; நண்பர்களையும் உறவினர்களையும் அடுத்துள்ளோரையும் வறுமையினின்று நீக்குகின்றது. இறைவன் அருளியதிலிருந்து ஒரு பகுதியை நல்வழியிற் செலவு செய்தல் என்பதே இதன் கருத்து. சுருங்கச் சொல்லின், எம்முடைய உடல் பொருள் உயிர் ஆகிய யாவற்றையும் அல்லாவின் வழியில், அவனுடைய படைப்புக்களின் நன்மைக்காகச் செலவு செய்தல் என்பதே இதன் அடிப்படை நோக்கமாகும். இது, எல்லா உயிர்களிடத்தும் அன்பு பாராட்டுதல் என்னும் பெரிய அகன்ற சிந்தனையையே விளக்கிக்காட்டுகின்றது.

மக்களுக்குப் பயனளிக்கக் கூடிய மற்றும் பல கொள்கைகளைப்போல, கொடையையும் இம்மதம் சட்டதிட்டங்களுடன் ஒழுங்காக நிலை நிறுத்தியுள்ளது. ஈகை கட்டாயம் என்பதும், அதனை இன்ன இன்ன விதமாகவே செய்யவேண்டுமென்பதும் இஸ்லாத்திலேயே தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய சகோதரத்துவத்தில் ஒருவர் சேர விரும்பின், அவர் தம்முடைய சகோதர கூட்டத்திலுள்ள ஏழைகளுக்குத் தமது செல்வத்திலிருந்து ஒருபகுதியை ஆண்டுக்கொருமுறை பங்கிட்டுக் கொடுக்க விரும்பினாலொழிய ஒரு காலமும் அவ்வாறு சேரமுடியாது. இவ்வாறு

ஏழை விகிதமாகக் கொடுக்கவேண்டிய சகாத்தொகை யானது, அவரவரின் சில வகைப்பட்ட சொத்திலிருந்து நாற்பதில் ஒரு பங்காயிருக்கும். தொழுகைக்குப் பின் சகாத்துக் குறிப்பிடப்பட்டிருப்பதன் காரணம், உண்மையான தொழுகையால் இறைவனுடைய படைப்புக்களிடத்து அன்பு பாராட்டாமல் இருக்க முடியாதென்பதே. இதனாலேயே திருக்குர்ஆன் முழுவதிலும் தொழுகையுடன் சகாத்து எப்பொழுதும் சேர்த்துக்கூறப்படுகின்றது. தொழுகை இல்லாதவனுக்கு ஈமான் இல்லை; சகாத்துக் கொடுக்காதவனுக்குத் தொழுகையில்லை என்பது நபிகள் நாயகத்தின் திருவாக்கியமாகும்.

''அந்த வீட்டை நோக்கி அல்லாவுக்காக ஹஜ்ஜு யாத்திரை செய்வது, அவ்யாத்திரைசெய்வதற்குரிய வலிமை யுள்ள ஒவ்வொரு மனிதனின் கடமையாகும்'' என்று, ஐந்தாவது கடமையாகிய திருமக்கா யாத்திரையின் அவசியத்தைத் திருக்குர்ஆன் வற்புறுத்துகின்றது. ஏக தெய்வமாக அல்லாவை ஒத்துக்கொள்வதும், நாள்தோறும் ஐந்து வேளையும் தொழுவதும், ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பதும், சகாத்தென்னும் ஏழைவரி கொடுத்தலும் இஸ்லாத்தின் முதல் நான்கு கடமைகளெனக் கண்டோம். இக்கடமை ஒவ்வொன்றும், ஒன்றே கடவுள் என்ற கொள்கை யையும் இஸ்லாமிய சகோதரத்துவத்தையுமே அடிப்படை யாகக்கொண்டது. கடவுளிடத்தும் மக்களிடத்தும் நடந்து கொள்ள வேண்டிய கடமைகள் இவை.

எனவே, மக்கள் யாவரும் ஒரே சகோதரத்துவத்துடன் ஒன்றுகூடி வாழவேண்டுமென்பதே இஸ்லாத்தின் சிறந்த போதனையாக இருக்கின்றது. இதனை வழக்கில் கொண்டு வந்து விருத்தி செய்வதற்கே முதல் நான்கு கடமைகளும் விதிக்கப்பட்டுள்ளன. அந்தச்சகோதரத்துவத்தை இன்னும்

அதிக விசாலமாக விருத்திசெய்வதற்கே ஐந்தாவது கடமை யாகிய திருமக்காயாத்திரையும் அமைக்கப்பட்டுள்ளது. ஹஜ்ஜு யாத்திரையின் நோக்கங்கள் பல; அவற்றுள் முக்கிய மானது சகோதரவொற்றுமையே.

இந்த யாத்திரையிற் போகக்கூடிய பணவசதியும், மக்கள்வசதியும் ஏற்பட்டு, உடல் நிலையால் உயிருக்குத் தீங்கு நேரிடக் கூடாமலிருக்குமாயின், அப்படிப்பட்ட ஒவ்வொரு முஸ்லிமும் தன்னுடைய வாழ்நாளில் ஒருமுறையேனும் மக்காவுக்குப் போய் வரவேண்டியது இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையாகும். மக்காவுக்குச் சென்றதும் அங்கு செய்ய வேண்டிய சடங்குகளில் முதன்மையானது இஹ்ராம் கட்டிக்கொள்வது. அதாவது, பழைய உடைகளைக் களைந்து, நீராடி, எல்லோரும் ஒரே விதமான இரண்டு தையலில்லாத துணியை மட்டும் அணிந்து, தங்கள் தலையைத் திறந்து வைத்துக்கொள்ளவேண்டும். இஃது இஸ்லாத்தின் சிறப்பியல் பொன்றைக் காட்டுகின்றது. இவ்வாறு எல்லா மக்களும், ஆண்களாயினும் பெண்களாயினும், ஒரே விதமான நிலையி லிருப்பதானது, ஏழை பணக்காரன், அரசன் அடிமை, முதலாளி கூலி என்னும் மேன்மை தாழ்மை யில்லாமலும், வெள்ளை மனிதர் கறுப்பு மனிதர் என்னும் நிறவேற்றுமை இல்லாமலும் யாவரையும் ஒரே நிலையுள்ளவராக ஆக்கிவிடு கின்றது. நிலையினால் ஏற்படும் மேன்மைதாழ்மை, நிறத்தினால் உண்டாகும் சாதிவேற்றுமை, குலப்பெருமையால் முளைக்கும் இறுமாப்பு முதலியவற்றை இந்த யாத்திரை அடியோடு அகற்றிவிடுகின்றது. எனவே, யாத்திரை முடியும் வரை யாவரும் அங்கு எவ்வகை வேற்றுமையும் பாராட் டாது ஒன்றாகவே இருக்கின்றனர்.

மக்கட்பிறவி எடுத்தவர் யாவரும் கடவுள் முன்னிலை யில் ஒரே தன்மையுடையவர் என்று முதன்முதல் உபதேசித்து

அதனை அனுட்டித்துக்காட்டியவர் நபிகள் நாயகம் அவர்களே. மற்றைய மதங்களைச் சேர்ந்தவர்களின் கோயில் களிலும் குடும்பவாழ்க்கையிலும் சமுகத்திலும் சாதிவேறு பாடும் நிறவேற்றுமையும் தீண்டாமையும் கொடுங்கோ லாட்சி செலுத்துவதுபோல இஸ்லாத்திலில்லை. இறைவனது சன்னிதானத்தில் வந்து நிற்கும் பாவனையாக அந்த அரபாத்தில் வந்து குழுமியுள்ள இலட்சகோடி முஸ்லிங்களும், எந்தத் தேசத்திலிருந்து வந்தபோதும், ஒருவரோடொருவர் தோளோடு தோள் முட்ட உறவு பாராட்டி ஒரேசகோதரத் துவத்தில் ஈடுபட்டு நிற்கின்றனர், உலகிலுள்ள மக்கள் யாவரும் ஒரேதன்மையுடைய ஒரேசாதியினரே என்னும் உண்மையை அந்த அற்புதம் வாய்ந்த அரபாத்து மைதானம் வற்புறுத்துகின்றது.

ஒவ்வொரு முஸ்லிமும் தன்னுடைய ஆத்மஞான வழியில் முயற்சி செய்து கொண்டே போய் இறுதியில் ஹஜ்ஜென்னும் ஐந்தாவது கடமையைச் செய்கின்றான். இவ் வுலகவாழ்க்கையிற் காணப்படும் பக்திமார்க்கத்தில் சிறந்த சிகரமாக விளங்குகின்றது இந்த யாத்திரை. இதன் பயனுகப் பரத்தின் கண் கருத்துச் செல்லும். இத்தகைய பக்குவத்தை அடைந்தவரே ஹஜ்ஜு யாத்திரையின் முழுப்பயனையும் அடைந்த ஹாஜீகளாவர். இத்தகைய சிறந்த அனுட்டானக் கொள்கைகளைக்கொண்டு திகழ்கின்றது இஸ்லாம்.

# தோற்றமும் வளர்ச்சியும்

முகம்மது நபி (சல்) அவர்கள் தோன்றிய ஒரு நூற்ருண்டுக்குள் அவர் அடியார்கள் அத்துலாந்திக்குப் பெருங் கடற் கரைகளிலிருந்து சீன தேசம் வரை பேரரசு ஒன்றனை-உரோமப் பேரரசிலும் மிகப்பெரிய பேரரசொன்றனை-நிறுவி விட்டார்கள். அன்று அறபு நாட்டிலிருந்து தோன்றிய இஸ்லாமிய இனமானது அக்காலத்து நாகரிக உலகை வென்று அடக்கியதோடமையாது, இன்று ஏறக்குறைய அறுபதுகோடி மக்கள் தழுவும் இஸ்லாம் சமயத்தை உலகிற்கு அளித்தது. கடந்த பதினன்கு நூற்ருண்டில் பல இனங்களைச் சேர்ந்த மக்கள்பல-மொழிகளைப் பேசும் மக்கள்-இச்சமயத்தைப் பின் பற்றி நாளுக்குநாள் தொகையிற் பெருகிவிட்டார்கள்.

உலக மக்கட்டொகுதியில் நான்கிலொரு பகுதியினர் இன்று இஸ்லாமியராகத் திகழ்கின்றனர். உலகின் எல்லாத் திக்குகளிலும் நாள்தோறும் இருபத்துநான்கு மணி நேரத்திலும் 'அல்லாஹு அக்பர்' எனத் தொடங்கும் தொழுகை அழைப்பின் குரல் கேட்கப்படுகின்றது. இஸ்லாமியர் பேரரசு ஒன்றனை நிறுவியதோடு அமையவில்லை. கலையையும் பண்பாட்டையும் உலகிற்கு அளித்தனர். இவர்கள் ஆதிக்கம் பரவிய நாடுகளில் வாழ்ந்த மக்கள் தமது பழைய சமயங்களைக் கைவிட்டு, இஸ்லாமியக் கலைகளையும், வாழ்க்கை முறைகளையும் பண்பாட்டினையும் பின்பற்றினர்.

பழைய பண்பாட்டிற்கு உரிமைக்காரராகிய இவர்கள், தமது பண்பாட்டின்படி ஒழுகுவதோடு நின்றுவிடவில்லை; கிரேக்க உரோம நாகரிகம் முதலியவற்றையும் நுகர்ந்து அனுபவித்து, இன்றைய மேனுட்டு நாகரிக வளர்ச்சிக்கும்

காலாக விளங்கினர். இக்கால மானிட முன்னேற்றத்திற்கு, மத்திய வரலாற்று மக்களில், இஸ்லாமிய மக்களைப்போல் வேறு எந்த இனமும் துணைசெய்யவில்லை. மேலும், இவரது மொழியே இடைக்காலத்திற் பல நூற்றாண்டுகளாக அறிவுத் துறையிலும், பண்பாட்டிலும் சிந்தனை உலகிலும் சிறந்த மொழியாக நிலவி வந்தது. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டி லிருந்து நான்கு நூற்றாண்டுவரை சமயம், வரலாறு, வைத்தியம், பூகோளம், வானநூல் தொடர்பான ஆராய்ச்சி களும் நூல்களும் அறபு மொழியிலேயே ஆக்கப்பெற்றன.

இவ்வாறு உலகப் பண்பாட்டினையும் வரலாற்றினையும் மாற்றி அமைத்த இஸ்லாமியரின் சரித்திரம் அறபு நாட்டி லிருந்து தொடங்குகின்றது. அறபு நாடு ஆசியாக்கண்டத்தின் தென்மேற்குப் பாகமாயுள்ள தீபகற்பம். இத்தீபகற்பத்தின் நிலப்பரப்பு அதிகமாக இருந்தபோதும், எழுபது இலட்சத்திற்குக் குறைந்த மக்களே அங்கு வாழ்கின்றனர். வடக்கு எல்லையாகச் சீரியாப் பாலைவனத்தையும் கிழக்கு எல்லையாகப் பாரசீகக் கடலையும், தெற்கு எல்லையாக இந்து மகா சமுத்திரத்தையும், மேற்கு எல்லையாகச் செங்கடலையும் அடக்கிய அறபு நாடு பல பிரிவுகளைக் கொண்டது. வடக்கே யுள்ள பகுதி மலைப்பிரதேசமாகும். இப்பகுதியில் பல காலமாக மக்கள் குடியேறியிருக்கின்றனர். தென்பகுதியி லுள்ள ஹிஜாஸ் என்னும் மாகாணத்திலேயே மக்கா மதீனா முதலிய நகரங்கள் இருக்கின்றன. மக்காவுக்குச் செல்லும் யாத்திரிகர் கப்பல்கள் தங்கும் ஜித்தாத்துறைமுகப் பட்டினம் செங்கடற்கரையோரமாகவுள்ளது. ஹிஜாஸ் மாகாணத்திற்கு மேற்கு உள்ளதே செங்கடல்; சூயஸ் கால் வாயிலிருந்து இந்து மகாசமுத்திரம் வரை பரவியுள்ள மலைத் தொடர் இம்மாகாணத்திற்கு வடக்கே உள்ளது.

எமன் மாகாணம் அறபு நாட்டின் தென்மேற்குப் பகுதியில் உள்ளது. எமன், ஹிஜாஸ் என்னும் இரு

மாகாணங்களும் சேர்ந்து திஹாமா என அழைக்கப்படுதலும் உண்டு. அறபிக் கடலோரமாக எமன் மாகாணத்திற்குக் கிழக்கில் ஹத்ரமவ்த் என்ற பகுதியுண்டு, அதற்குக் கிழக்குப்பக்கமாக உள்ளதே உம்மான் என்னும் பகுதி. ஹிஜாஸ் மலைத் தொடரிலிருந்து கிழக்கே அஹ்ஸா பாலைவனம் பாரசீகக்கடல் முதலிய கிழக்கெல்லைகள் வரையுள்ள நிலப்பரப்பே நஜத் பீடபூமி. இத்தகைய நாட்டிலேயே இஸ்லாம் தோன்றியது.

பழங்காலத்திலிருந்து அறபு நாட்டிற் பல இனத்தவர் வாழ்ந்து, அதன்மேல், அவர்களது சால்பும் பண்பாடும் அங்கிருந்து எகிப்து நாட்டிற்கும் இருக்கு நாட்டிற்கும் பரவின. குறிப்பாக, அறேபியாவின் தென்பகுதியில் இப்பொழுது காணப்படும் இடிந்த அரண்மனைகளும் பாழ்பட்ட கோயில்களும் உடைந்த அணைக்கட்டுக்களும் நீர் நிலையங்களும் இதற்குச் சான்று பகருகின்றன. இருக்கு நாட்டிலிருந்து வந்த ஒரு புதிய இனத்தவர் இப்பண்பாட்டின் அழிவிற்குக் காரணமாக இருந்தனர். இவர்கள் கஹ்தான் என்பவரின் சந்ததியினர். இவர்கள் எமன், ஹத்ரமவ்த் என்னும் பகுதிகளிற் குடியேறி அங்கு இஸ்லாம் தோன்றிய காலம் வரை வாழ்ந்தனர்.

அறேபியாவில் இறுதியாகக் குடியேறிய இனத்தவரே இஸ்மாயீல் சந்ததியினர். இப்றுஹீம் நபியின் மகனே இஸ்மாயீல் நபி. இவர் மக்காவிற் குடியேறினர். இவர் சந்ததியினர் ஹிஜாஸ் மாகாணத்திற் பரவி, அதன் பின், அறபு நாட்டின் பெருமைக்குக் காலாக விளங்கினர். இக் காலத்தில் அறபியர் பின்பற்றிய சமயம் ஹனீபீ மார்க்கம் எனப்படும். அவர்கள் அல்லாஹ்வை மட்டும் தொழுதனர். அல்லாஹ்வின் வணக்கத்திற்கு மக்காமாநகரில் இஸ்மாயீல் நபியாற் கட்டப்பட்ட பள்ளியாகிய காபாவைத் தூய்மையானதாகக் கொண்டனர். அதனைத் தவாபு செய்து (சுற்றி) வந்தனர். எனினும், இவர்களிடையே முன்னூற்று அறுபது

தேவதைகள் இருந்தன எனக் கூறுவர். மிருக பலியும் நரபலியும் இவர்களிடையே இருந்தன எனவும் தெரிகின்றது. முஷ்றிக்குகளைத் தவிர அறபு நாட்டிற் சில யூதர்களும் கிறித்தவரும் இருந்தனர். சீரியாவிலிருந்து வந்து, முதலில் யத்ரீப், கைபர் என்னும் இடங்களிற் குடியேறிய யூதர் பின் அறேபியா முழுவதிலும் பரவினர். கிறித்தமதம் எமன் மாகாணத்திலுள்ள நஜ்ருன் என்னுமிடத்திலிருந்தே பரவியது.எனினும், அறேபியர் பெயரளவிலேயே யூதராகவும் கிறித்தவராகவும் இருந்தனர்.

இவ்வாறு, விக்கிரக வணக்கம் அகன்று ஆழமாய் வேரூன்றிக் கிடந்த அறபு நாட்டிலேயே கி. பி. 571-ம் ஆண்டில் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் பிறந்தார்.அறபிய குடும்பங்களிலே சிறந்து விளங்கிய ஹாஷிம் குடும்பத்தில், குறைஷி குலத்திலே பிறந்தவர் நபிபெருமான். இவரின் தகப்பனாகிய அப்துல்லாஹ் இவர் பிறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்பே இறந்துவிட்டார். இவர் தமது தாயாகிய ஆமீனவையும் தமது ஆறுவது வயதில் இழந்துவிட்டார். இவருக்கு எட்டாவது வயது வரை இவரது பாட்டனார் அப்துல் முத்தலிப் இவரை வளர்த்து வந்தார். அதன் பின், பாட்டனார் இறந்துபட, அவரின் பெரிய தந்தையாகிய அபூத் தாலிப் அவரை இருபத்தைந்தாவது வயதுவரை ஆதரித்து வந்தனர்.

சிறுவயதிலிருந்தே வாய்மையுடைமை, தீமையின்மை,தூய ஒழுக்கம், கட்டுப்பாடான வாழ்க்கை, கண்ணிய உணர்ச்சி, உதவி மனப்பான்மை, கடமை உணர்ச்சி முதலிய குணங்களிலே தலைசிறந்து விளங்கியமையால் 'அல் அமீன்' (நம்பிக்கைக்குரியவர்) என்னும் இணையில்லாப் பட்டத்தை மக்கள் அவருக்கு அளித்தனர். அவருக்கு வயது இருபத்தைந்து ஆகியபோது, மக்காமாநகரில் செல்வச் சீமாட்டியாய் விளங்கிய கதீஜா (றலி) என்னும் விதவைப் பெண்ணைத்

திருமணம் செய்தார். மணம் முடிப்பதற்கு முன்பு கதீஜாப் பிராட்டியின் வணிகத் தலைவராய்ப் பணியாற்றி வந்தார் நபிகள் நாயகம். வணிகத்தில் நம்பிக்கையுடன் நடந்து நல்ல இலாபத்தையும் காண்பித்தமையால், அவரது யோக்கியப் பொறுப்பிலும் வணிக வாய்மையிலும் தூய ஒழுக்கத்திலும் பெருமதிப்புக்கொண்ட கதீஜா (றலி) அவர்கள் அவரையே தமது நாற்பதாவது வயதில் திருமணம் செய்தார்.

திருமணத்தின் பின் கதீஜாப் பெருமாட்டியின் செல்வத்தினின்று ஏழை மக்களுக்கு மிகவும் தாராளமாய்க் கொடுத்து வந்தனர். இவ்வாறு ஒழுகிவரும் காலத்தில், அறேபிய மக்களிடையே காணப்பட்டு வந்த விக்கிரக வழிபாடும் பல்வேறு விதத்தீநெறி ஒழுக்கங்களும் இப் பெரியாரின் உள்ளத்தை உறுத்தத் தொடங்கின. எனவே, நபி பெருமான் மக்காவைச் சூழ்ந்துள்ள மலைக்குகைகளுக்கு அடிக்கடி சென்று, நீண்ட நேரம் தனியாகத் தியானம் செய்வதுண்டு. இவ்வாறு ஒழுகிவரும் காலத்தில் அவரது நாற்பதாவது வயதில், ஹிரு மலைக் குகையிற் சென்று தியானம் செய்யும்போது, ஒரு றமலான் மாத இரவில் அல்லாஹுத்தஆலாவின் ஞான ஒளி தனக்குரிய முழுப் பிரகாசத்துடன் நபிபெருமான்மீது வந்து இறங்குவதாயிற்று

தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அம்மா பெருங் கடமையை நிறைவேற்றக்கூடிய ஆற்றல் தமக்குண்டோ என அவர் முதலில் அஞ்சினர். இறுதியில், சத்தியமே வெற்றி யடையும் என உறுதிகொண்டு, மதப் பிரசாரம் செய்யத் தொடங்கினர். அக்காலத்தில் இஸ்லாத்தைத் தழுவிய பெரியார்கள் 'ஸாபிகீன் அவ்வலீன்' எனக் குறிப்பிடப்படுவர். முதன் முதலில் இச்சமயத்தில் நம்பிக்கை கொண்டவர் கதீஜா (றலி) அவர்களே. அதன்மேற் பெருமானின் நெருங்கிய நண்பர்களும், அவர் வீட்டிலிருந்தவர்களும் சேர்ந்து

கொண்டனர். வீட்டுக்கோர் உபதேசமும் ஊருக்கு வேறு உபதேசமும் செய்யும் இற்றைநாள் தலேவர்போல நபிகள் திலகம் இருக்கவில்லேயென்பதை இது காட்டுகின்றது. நண்பர்களும் வீட்டாரும் முழு நம்பிக்கையுடன் இவர் மதத்தைத் தழுவியது இவரது தூய்மையையும் மேன்மையையும் மெய்ம்மையையும் விளக்குகின்றது.

முதன் முதலில் குறைஷியர் நபிபெருமானே ஏளனம் செய்தனர்; பின்பு அவமதித்தனர். பித்தன், சூனியக்காரன் என்றெல்லாம் ஒதுக்கினர். அப்படியிருந்தும், இரண்டிரண்டாக, மும்மூன்ருக, முதல் நான்கு ஆண்டுகளுக்கிடையில் நாற்பது பேர் வரை சேர்ந்துவிட்டனர். இதனேக் கண்ணுற்ற எதிரிகளின் இம்சையும் நாளுக்குநாள் பெருகிக் கொண்டு வந்தது. தொடக்கத்தில் நபிகள் பெருமானின் அடிமைகள் துன்புறுத்தப்பட்டார்கள். நாளடைவில் நபிகள் நாயகம் பல இன்னல்களுக்கு ஆளாயினர். எனினும் இன்னும் பலர் இச்சமயத்தைத் தழுவிக் கொண்டே வந்தனர். பொதுவான இடத்தில் ஒன்று கூடவோ வழிபாடு நடத்தவோ முடியாத போதும், மதப் பிரசாரம் வலுப்பெற்றது. எதிரிகளும் இடையூறுகளேப் பெருக்கிக் கொண்டனர். ஆனல், இஸ்லாத்தை விட்டு ஒருவரேனும் விக்கிரக வணக்கத்தை மீண்டும் பின்பற்றவில்லே,

விக்கிரக வழிபாட்டிற்கும், பல தெய்வக் கொள்கைக்கும், மக்காவின் தலேமைக்கும் பெருந்தீங்கு ஏற்படக் கூடுமென்பதைக் கண்ட குறைஷியர் இஸ்லாத்தை வேருடன் களேந்தெறிய முயற்சி செய்தனர். நபிகள் திலகத்திற்குப் பொன்னும் பெண்ணும் பதவியும் அளிப்பதாகத் தூதுவரை அனுப்பினர். நபிகள் பெருமான் உடன்படவில்லே. இஸ்லாமியப் பிரசாரத்தை அடியோடு நிறுத்தாதுவிடின், நாட்டிற் கலகம் ஏற்படும் என அபூத் தாலிபைப் பயமுறுத்தினர். எந்தவித இடையூறு

ஏற்பட்டாலும், எதிரிகள் எத்தகைய இன்னலைச் செய்தாலும், தாம் தமது இயக்கத்தைக் கைவிடப்போவதில்லையென முகம்மது நபி (சல்) அவர்கள் உறுதி கொண்டார்.

குறைஷியரின் கொடுமை இன்னும் பன்மடங்கு வேகத்துடன் தலைவிரித்துத் தாண்டவம் ஆடிற்று. முஸ்லிம்கள் படும் துன்பத்தைக் கண்ட பெருமானுர் உள்ளம் புண்பட்டு அவர்களை அபிசீனியாவுக்குப் போகும்படியும், பிறகு இறைவன் வகுத்த வழி ஒழுகலாம் எனவும் கூறியருளினுர். எனவே, நபிப்பட்டம் எய்திய ஐந்தாம் ஆண்டில் செங்கடல் கடந்து, பத்து ஆண்களும் ஐந்து பெண்களும், அபிசீனியா நாட்டு மன்னர் நஜ்ஜாஷீ என்னும் கிறித்தவ எதியோப்பிய மன்னனிடம் அடைக்கலம் புகுந்தனர். அதற்குப் பின்பும் இஸ்லாத்தைத் தழுவுவோர் அங்கு சென்றுகொண்டேயிருந்தனர். சிறு குழந்தைகளைத் தவிர, எண்பத்துமூன்று ஆண்களும் பதினேழு பெண்களுமாக நூறு முஸ்லிம்கள் வரை அபிசீனியாவுக்குச் சென்றுவிட்டனர்.

முஸ்லிம்கள் அபிசீனியாவில் அமைதியாக வாழ்வதைக் கண்ட குறைஷிகள் பொருமை கொண்டு, தூதுக் குழு ஒன்றனை அங்கு அனுப்பி, அம்முஸ்லிம்களைத் திருப்பிக் கொண்டு வருமாறு கட்டளையிட்டனர். ஆனுல் நஜ்ஜாஷீ இவர்களைத் தூதர்களிடம் ஒப்படைக்க மறுத்துவிட்டனர். இதனைக் கண்ணுற்ற மற்ற மக்கள், மிகவும் ஆத்திரங் கொண்டு, மக்காவில் எஞ்சியிருந்த நபிகள் திலகத்தையும் ஏனைய முஸ்லிம்களையும் அதிகம் துன்புறுத்தினர். இதனைப் பொறுக்கமுடியாது, நபிகள் பெருமானின் சிற்றப்பனுகிய ஹம்ஸா என்பவரும் இஸ்லாத்தைத் தழுவினுர் முகம்மதைக் கொல்லுவதற்கு ஏவப்பட்ட உமர் என்பவரும் - பின்னுல் உலகப் புகழ் பெற்று இரண்டாவது கலிபாவாக விளங்கிய பெரியார் - இஸ்லாத்தைத் தாமாகவே தழுவிக்கொண்டார்.

முஸ்லிம்களுக்குப் பெரும் விரோதியராயிருந்த இவ்விருவரும் இஸ்லாத்தைப் பின்பற்றியதால் இஸ்லாத்துக்குச் செல்வாக்கு ஏற்படத் தொடங்கியது. முஸ்லிம்கள் வெளிப் படையாகத் தொழத் தொடங்கினர்.

தாம் செய்த முயற்சிகள் பயனற்றுப் போவதைக் கண்ட குறைஷியர் இறுதியாக ஒரு வழி வகுத்து, ஒரு சங்கமாய்க் கூடி, முஸ்லிம்களையும் ஹாஷிம் குடும்ப மக்களையும் பகிஷ்கரிக்கும் இயக்கத்தைத் தொடக்கி, 'ஷிப் அபூ தாலிப்' என்னும் பகுதியில் இவர்களை ஒதுக்கி வைத்தனர். அங்கு மூன்ருண்டுவரை வறுமைப் பிணியால் வருந்தி இன்னல்பல அனுபவித்தனர். யாத்திரைக் காலங்களில் மட்டுமே கட்டுப்பாடு சிறிது தளர்க்கப்பட்டது. இவற்ருல் இக்காலத்தில் இஸ்லாத்தின் வளர்ச்சி தடைப் பட்டது. இறுதியிற் சிலர் இவர்கள் படும் துன்பத்தைச் சகிக்க முடியாமல், கட்டுப்பாட்டு உடன்படிக்கையைக் கிழித் தெறிந்தனர். ஹாஷீம் குடும்பத்தாரும் மக்காவிற்கு மீண்டும் வந்து அங்கு வாழத்தொடங்கினர்.

அதன்பின், நபித்துவம் கிடைத்த பத்தாம் ஆண்டில், நபிகள் திலகத்தின் பெரிய தந்தையும் பாதுகாவலருமாகிய அபூதாலிப் இறந்துவிட்டார். இம்மரணத்தின்பின் மூன்று நாட்கழித்து முகம்மது நபியின் உண்மைப் பக்தரும், வாழ்க் கைத்துணையுமாகிய கதீஜா (றலி) அவர்களும் இறந்து விட்டார். இவற்ருல் நபி பெருமானுக்குப் பக்கபலம் குறைந் திருப்பதைக் கண்ட எதிரிகள் பல வகையில் அவரைத் துன் புறுத்தத் தொடங்கினர்.

மக்கா மக்கள் இஸ்லாத்திற் சேருவார்கள் என்ற நம்பிக்கையில்லாததனுல் நபிகள் நாயகம் வேறு திசையில் தமது சமயத்தைப் பரப்ப எண்ணினுர்; மக்கா நகருக்கு அண்மையிலுள்ள தாயிபு என்னும் நகர் சென்று

இஸ்லாத்தின் சிறப்புக்களை விளக்கிக் கூறினர். அதனை அவர்கள் பொருட்படுத்தவில்லை. அடிமைகளைத் தூண்டிக் கல்லெறிந்தனர். தங்குவதற்கு இடங்கொடாது அடித்துத் துரத்தினர். நபிகள் திலகம் மிகுந்த மனவேதனையுடன் மக்காவுக்குத் திரும்பிவந்து சேர்ந்தனர், அதற்குப்பின் யாத்திரை காலத்தில் வெளியூர்களிலிருந்து அங்கு வந்து சென்ற மக்களுக்கு இஸ்லாமிய பிரசாரஞ் செய்தனர். மதீனவிலிருந்து மக்காவிற்கு வந்த அறுவர் 620 ல் இஸ்லாத்திற் சேர்ந்துகொண்டனர்.

அவர்கள் மதீனவுக்குத் திரும்பிச் சென்று இஸ்லாமியப் பிரசாரஞ் செய்து கி. பி. 621 ல் ஹஜ்ஜுக் காலத்தில் வேறு அறுவருடன் வந்து, நபிகள் திலகமிடம் உறுதி மொழி கூறினர். அகபா என அழைக்கப்படும் குன்றில் இவ்வுறுதி மொழி செய்யப்பட்டமையால் இது அகபா முதல் உறுதி மொழி எனப்படும். இவர்கள் மதீனவுக்குச் சென்ற பிறகு, நபிகள் பெருமான் முஸ்அப் பின் உமைர் என்பவரை மதீனவுக்கு அனுப்பினர். அப்பெரியாரின் முயற்சியால் மதீன நகரிற் பலர் முஸ்லிம்களாயினர். அடுத்த ஆண்டிலே எழுபத்தைந்து ஆண்களும் பெண்களுமாய் மக்காவிற்கு வந்து, ஹஜ்ஜை முடித்துக்கொண்டு நபிகள் நாயகத்தை அடைந்து தங்கள் ஊருக்கு அவரை வருமாறும் தங்கள் உயிரைக் கொடுத்தேனும் அவரைப் பாதுகாப்பதாகவும் உறுதி மொழி கூறினர். இது இரண்டாம் அகபா உறுதி மொழி எனப்படும். இவ்வாறு நபிகள் திலகத்திற்கும் மக்காவிலிருந்த முஸ்லிம்களுக்கும் உதவி செய்வதாகவும் புகலிடம் கொடுப்பதாகவும் உறுதி கொடுத்தவர்களுக்கு அன்ஸார் (உதவியாளர்) என்ற பெயர் இடப்பட்டது. இஸ்லாமிய வரலாற்றில் அன்றுமுதல் மதீன முஸ்லிம்களை அன்ஸார் என்றே அழைத்தனர். இந்த உறுதி மொழிக்குப் பின் புதிய முஸ்லிம்கள் ஐம்பதிற்கு மேற்பட்டவர் மதீனவுக்கு அனுப்பப்பட்டனர். நபி பெருமானும்

அவருடைய இருபெருந் தோழராகிய ஹஜ்ரத் அபூபக்கரும் ஹஜ்ரத் அலி என்பவருமே மக்காவில் தங்கியிருந்தனர்.

நபிகள் நாயகத்தை மதீனா மக்கள் பின்பற்றுவதையும் மதீனாவில் முஸ்லிம்களின் செல்வாக்கு அதிகரிப்பதையும் கண்ட மக்கா வாசிகள் திகிலடைந்து நபிகள் பெருமானை மதீனாவிற்குப் போகாமல் தடுப்பதற்கு அவரைக் கொலை செய்வதே சிறந்த வழி எனத் திட்டமிட்டனர். இதனை அறிந்த நபிகள் நாயகம் தம் படுக்கையில் அபூத்தாலியின் மகன் அலீ (றலி) என்பவரை உறங்கச் செய்துவிட்டு, அபூபக்கர் (றலி) என்பவருடன், இரவிரவாக வெளியே சென்று, மக்காவுக்கு அப்பாலுள்ள வெளியில் 'தௌர்' என்னும் மலைக்குன்றின்மீது ஏறி அங்குள்ள குகை ஒன்றிலே தங்கினார். மூன்று நாட்களுக்குப் பின் அக்குகையிலிருந்து புறப்பட்டு, 622 ம் ஆண்டு புரட்டாதி மாதம் இருபதாம் நாள் தமது ஐம்பத்து மூன்றும் வயதில் மதீனாவுக்கு அருகாமையிலுள்ள குபா என்னுமிடத்திற் போய்ச் சேர்ந்தார். இதுதான் நபிகள் திலகத்தின் வரலாற்றில் ''ஹிஜறத்'' என்று பெரிதாகப் போற்றப்படுகின்றது; இதிலிருந்தே முஸ்லிம்களின் ஹிஜ்றியாண்டும் கணிக்கப்படுகின்றது.

இவ்வாறு பதின்மூன்று ஆண்டுகளாக நபிகள் பெருமான், தோழமையிலே பயிற்சி பெற்ற முந்நூறு தோழருடன் மக்கா நகரில் பல துன்பங்களைச் சகித்தார். தங்கள் வீட்டையும் பிறப்பகத்தையும் உற்றார் உறவினரையும் துறந்து அகதிகளாக அவர்கள் இவருடன் மக்காவைவிட்டு மதீனா சென்றார்கள் என்பது, இவரின் ஆன்ம வெற்றிக்குச் சான்றாகும். அக்காலத்திலே அஞ்ஞானத்தில் மூழ்கியிருந்த அறபிய மக்களை ஆத்மீகத் துறையில் ஈடுபடச் செய்து பணி செய்து கிடப்பதே தம் கடன் என்ற இன்ப நிலையை அடையச் செய்த பெருமை நபிகள் நாயகத்திற்கே உரியது. மூடநம்பிக்கையிலும் கொடூரச் செயல்களிலும் ஆழ்ந்து கிடந்த மக்கா

நகர மக்களிடம் பதின்மூன்று ஆண்டுகளில் அற்புதமான மாற்றத்தைக் காண்கிறோம். சில நூறு மக்கள் விக்கிரக வழிபாட்டைக் கைவிட்டு, ஒரே இறைவனை வணங்கத் தொடங்கினர். இறைவன் கட்டளைகளைப் பின்பற்றி வாழ்க்கை நடத்தினர். ஆன்ம ஒருமைப்பாட்டுடன் இறைவனைத் தொழுதனர். எனவே, பெருமானார் மக்காவில் தங்கியிருந்த காலப்பகுதி இஸ்லாமிய வரலாற்றிலே சிறந்த தோரிடம் வகிக்கின்றது.

நபிகள் திலகம் குபாவில் நான்கு நாட்கள் தங்கினர். அவ்வாறு தங்கும்போதே மஸ்ஜித் குபா என அழைக்கப்படும் பள்ளிவாசலுக்கும் அத்திவாரம் போட்டனர். அதன்பின், 624 ம் ஆண்டு அங்கிருந்து புறப்பட்டு மதீனா வந்து சேர்ந்தார். மக்காவிலிருந்து மதீனாவுக்கு நாடு கடந்து வந்தவர்களாகிய முஹாஜிர்களை மதீனாவிலுள்ள அன்ஸார்கள் பெரிதும் ஆதரித்து, அவர்களுக்குப் பலவிதத்திலும் துணையாக இருந்தனர்.

தாம் மதீனாவில் முதன்முதல் தங்கிய இடத்திற் பள்ளிவாசல் கட்டி, அங்கிருந்து பிரசங்கம் செய்து வந்தார் முகம்மது நபி (சல்). இப்பள்ளிவாசல் மஸ்ஜித் நபவீ என வழங்கும். மதீனாவில் இஸ்லாம் தழைத்தோங்குவதைக்கண்ட மக்காக் குறைஷியர் மதீனாவின் மீது படையெடுக்க ஏற்பாடு செய்தனர். 624 ம் ஆண்டில், மதீனாவுக்கும் மக்காவுக்கும் இடையேயுள்ள பத்றென்னும் இடத்தில் இரு பகுதிப் படைகளும் நேருக்கு நேர் மோதின. ஆயிரம் வரையுள்ள குறைஷியரை ஆயுதம் எதுவுமில்லாத முந்நூற்றுப் பதின்மூன்று முஸ்லிம்கள் முறியடித்தனர். முஸ்லிம்களில் பதினான்கு பேரும் குறைஷிகளில் அநேக தலைவரும் கொல்லப்பட்டனர். தொண்ணூற்றுக்கு மேற்பட்டவர் கைது செய்யப்பட்டனர். ஆனால், இக்கைதிகள், மரியாதையுடன் நடாத்தப்பட்டனர்.

இப்போரிற் பல தலைவர் கொல்லப்பட்டமையால் அபூ ஸுப்யான் பின் ஜறப் என்பவர் குறைஷிகளின் தலைவரானார். அடுத்த ஆண்டில் மூவாயிரம் வீரருடன் புறப்பட்டு, மதீனாவுக்கு வடக்கேயுள்ள உஹத் என்னும் மலை யடிவாரத்தில் எழுநூறு முஸ்லிம்களுடன் போர்தொடுத்தார். எதிரிகளை முஸ்லிம்கள் தோற்கடித்தனர். ஆனால் எதிரிகள் தோல்வியடைந்ததைக் கண்ட வில்வீரர் கீழேயுள்ள சம வெளிக்குவர, எதிரிகள் மீண்டும் பின்புறமாய் வந்து தாக்கினர். போர் தொடர்ந்து நடைபெற்றது. நபிகள் நாயகம் (சல்) ஒரு குழியில் விழுந்து எதிரிகள் எறிந்த கற்களால் இரு பற்களை இழந்தார். அப்போது முகம்மது இறந்துவிட்டார் என்ற பொய்ச் செய்தியை எதிரிகள் பரப்பினர். அதன் விளைவாக முஸ்லிம்கள் அவ்வெதிரிகளாலே தாக்கப்பட்டு, ஓட்டம்பிடித்தனர். பிறகு நபிகள் நாயகம்(சல்) வேறு சில முஸ்லிம்களுடன் குன்று ஒன்றின்மீது ஏறித் தப்பிக் கொண்டார். எதிரிகளும் ஒன்றும் செய்ய முடியாது மக்காவுக்குச் திரும்பிச் சென்றுவிட்டனர்.

இரண்டு ஆண்டுகளுக்குப்பின் குறைஷியர்கள், அறபுக் கூட்டத்தினர் யாவரையும் மதீனாவிலுள்ள முஸ்லிம்களுக்கு மாறாகத் தூண்டி, மறுபடியும் போருக்கு அடுக்குச் செய்தனர். இப்போரில் அறபு நாட்டுக் கூட்டத்தினர் பலர் பங்குபெற்ற காரணத்தால் இப்போர் அஹ்ஸாப் போர் (கோத்திரங்கள் போர்) எனப்படும். மதீனா நகர யூதரும் இவர்களுடன் சேர்ந்துகொண்டனர். இருபத்தையாயிரம் கொண்ட படை ஹி. 5 ல் மதீனா நகரை முற்றுகையிட்டது. நபிகள் நாயகம் மூவாயிரம் முஸ்லிம் வீரருடன் சென்று மதீனாவைச் சுற்றி ஓர் அகழி வெட்டிப் போருக்கு ஆயத்தமாக இருந்தனர். எனவே இப்போர் அகழிப் போர் எனவும் வழங்கும். எதிரிகள் இவ் வகழியைத் தாண்ட இயலாது, ஒரு மாதம் வரை முற்றுகை நடத்தி இறுதியில் ஒரு நாள் விடியுமுன் மக்காவுக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர்.

அதன்மேல், ஹி. 6 ல் நபிகள் நாயகமும் ஆயிரத்தைஞ் ஞூறு தோழரும் திருமக்காவுக்கு ஹஜ்ஜு செய்யப் புறப் பட்டனர். மக்காவுக்கு அண்மையிலுள்ள ஹுதையிய்யா என்னும் இடத்தில் குறைஷியர் இவர்களை மறித்து மேலே செல்லவிடாது தடுத்தனர். ஈற்றில் நபிகள் திலகம் குறைஷி யருடன் உடன்படிக்கை ஒன்று செய்தனர். எனினும், இவ் வுடன்படிக்கை எழுதப்பட்டு ஈராண்டுக்கிடையில் குறைஷியரின் நேசக் கூட்டத்தினர் சிலர் முஸ்லிம்களின் நேசக் கூட்டத்தினரைத் தாக்கினர். அதே நேரத்திற் குறைஷியரும் முஸ்லிம்களைத் தாக்கினர். எனவே, பெருமானுர் மக்காவின்மீது படையெடுக்கத் துணிந்தார்.

கி.பி. 630 ல், ஹிஜ்றி எட்டாம் ஆண்டில், பத்தாயிரம் வீரருடன் இரகசியமாகப் புறப்பட்டு, மக்காவுக்கு அண்மை யிலுள்ள மாருல்லஹரான் என்னுமிடத்தில் வந்து தங்கினுர். முஸ்லிம்கள் இவ்வாறு திடீரெனப் படையெடுத்து வருவார்கள் எனக் குறைஷிகள் எதிர்பார்க்கவில்லை. எனவே, மக்கா வாசிகள் ஒன்றுஞ் செய்ய இயலாது வாளா இருந்தனர். நபிகள் நாயகம் (சல்) அந்நகரைக் கைப்பற்றி அங்குள்ள யாவருக்கும் மன்னிப்பு அளித்தனர். இம்மன்னிப்பினுல் இஸ்லாத்தின் சென்மப் பகைவரின் உள்ளங்களையும் வெற்றி கொண்டார். அறபு நாடு முழுவதும் எதிர்த்து நின்றும், அவ் வெதிர்ப்பு தன்னந்தனியாய் நின்ற ஒருவரின் சத்தியத்தால் முறியடிக்கப்பட்டதைக்கண்ட மக்கா மக்கள் திரள்திரளாக வந்து இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினர். ஒருசிலர் இஸ்லாத்தைத் தழுவாமலிருந்தனர். தழுவவேண்டுமென அவர்களை நபிகள் பெருமான் வற்புறுத்தவில்லை. அவர் விரும்பியிருந்தால் மக்கா நகரைக் கைப்பற்றிய அந்நாளில் எல்லோரையும் பலவந்தமாக இஸ்லாத்தைக் கைப்பற்றச் செய்திருக்கலாம்; ஆனுற் செய்யவில்லை. இஃது அவரின் சால்பினை மேம்படுத்துகின்றது.

இஸ்லாத்தின் வரலாற்றிலே மக்கா வெற்றியானது சிறந்த இடம் வகிக்கின்றது. அறபியர் அனைவரின் மார்க்கத் தலைவராகிய குறைஷிகள் இஸ்லாத்தைத் தழுவியதும், அறபு நாடு முற்றிலும் விக்கிரக வழிபாடு நீங்கியது. கத்தியின்றி இரத்தமின்றி அடைந்த இவ்வெற்றி உலக வரலாற்றிலேயே தனிச்சிறப்புள்ள வெற்றியாகும்; ஒப்புவமையற்ற நிகழ்ச்சியாகும். நபிகள் நாயகத்தின் பிறப்பிடமாகிய மக்காமாநகரம், ஆண்டவனின் வேத வெளிப்பாடு முதலில் வெளியான நகரம், முதன்முதலாக இஸ்லாமிய பிரசாரம் செய்யப்பட்ட நகரம், பதின்மூன்று ஆண்டுகள் துன்புறுத்தியதும் போதாது வெளியேறும்படி செய்த நகரம் இவ்வெற்றியின் பயனாக இஸ்லாமிய மக்கள் அனைவரும் புனிதமாகக் கொண்டாடும் நகராக மாறியது.

தமது புனிதமான குறிக்கோளில் பெருமானார் நம்பிக்கை கொண்டிருந்தமைக்கும் இவ்வெற்றி ஓர் அறிகுறியாகும். தமது திருத்தூதில் அவருக்கு இருந்த நம்பிக்கையையும், அதில் வெற்றிகிடைக்குமென்ற உறுதியையும் மக்கா வெற்றி வற்புறுத்துகின்றது. இஸ்லாம் சமயத்தை உயர்த்தி வைத்தது வாளல்ல; இறைவன் மேலும், தமது தூதிலும் பெருமானுக்கு இருந்த முழு நம்பிக்கையே.

ஹிஜ்றி ஒன்பதாம் ஆண்டில், அறபு நாட்டின் வடமேற்கிலே, அக்கால உரோம இராச்சியத்தின் மாகாணமாய் இருந்த சீறியா நாட்டு எல்லையில், பெருஞ்சேனை முஸ்லிம்களுக்கு மாறாகத் திரட்டப்படும் செய்தி நபிகள் பெருமானுக்கு எட்டியது. ஒன்பதினாயிரம் வீரர் கொண்ட படையுடன் புறப்பட்டு தபூக் என்னும் ஊரிற் சென்று தங்கினார். எதிரிகள் ஜிஸ்யா கொடுக்க உடன்பட்டதனால், உரோமர்மீது படை எடாது திரும்பினார். இதுவே, நபிகள் நாயகம் கலந்துகொண்ட இறுதிப்போர்.

மக்கா வெற்றிக்குப் பிறகு காபாவிலிருந்த விக்கிரகங்கள் அகற்றப்பட்டபோதும், முஸ்லிம்கள் வணங்கும் அதே இடத்தில் விக்கிரக வணக்கத்தாரும் வந்து தமது பழைய முறைப்படி வணங்கினர். ஒரே இடத்தில் ஒரே தெய்வ வணக்கமும் பல தெய்வ வணக்கமும் இருப்பதைக் கண்ட பெருமானார், ஹி. ஒன்பதாம் ஆண்டில் ஹஜ்ஜுக் காலத்தில் மக்காவிற் பிரகடனம் ஒன்றைப் படிக்கச் செய்தார். அதன் படி இனி விக்கிரக வணக்கத்தார் காபாவுக்கு வந்து ஹஜ்ஜு செய்யலாகாதென்றும், ஆடையில்லாது நிர்வாணமாய் இனி எவரும் காபாவைச் சுற்றி வலம் வரலாகாதென்றும் கட்டளை பிறக்கப்பட்டது. இதன் பயனாக அடுத்த ஆண்டிற்குள் அறபு நாட்டில் விக்கிரக வணக்கம் ஒழிந்தது.

பத்தாம் ஹிஜ்றி ஆண்டுத் தொடக்கத்தில் அறபு நாட்டு மக்கள் உள்ளத்தில் ஒரே தெய்வக் கொள்கை நிலைத்து விட்டது; இஸ்லாமிய உலகு ஒரே அணியில், ஒரே இறைவனை, ஒரே தூதரைப் பின்பற்றி வளர்ந்தது. இதனால் நபிகள் நாயகத்தின் குறிக்கோளும் முற்றுப் பெற்றதெனலாம். தாம் உயிருடன் இருக்கும்போதே தமது குறிக்கோளின் வெற்றியை அடைந்தவர் இப்பெருமான் ஒருவரே. பாலைவனத்தின் மூலையிலே, ஒரு சில மனிதரின் உதவி கொண்டு நிலையான சமுதாயப் புரட்சியை மிகக் குறுகிய கால எல்லையுட் சாதித்து, பல இனம் பல சமயம் என்றிருந்த மக்களை ஒரே இனமாக இஸ்லாத்தில் ஒன்றுசேர்த்து, தமது இலட்சியத்தில் வெற்றி பெற்றவர் நபிகள் நாயகமவர்களே. இவரின் தூது நிறைவு பெற்றதாக அமைந்துள்ளது இறுதி ஹஜ் யாத்திரை.

எந்த நகரிலிருந்து இரவிரவாக ஒளித்தோடினாரோ, அதே நகரிற் பத்து ஆண்டுகளுக்குப் பின், 632 ல், ஒன்றேகால் இலட்சம் முஸ்லிம்களுடன் சென்று, இறுதி ஹஜ்ஜை நிறைவேற்றினார். அப்போது ஆற்றிய சொற்பொழிவில் ஒரே

தெய்வக் கொள்கையையும், ஒரே சகோதரப்பிணைப்பையும், பெண்களின் உயர்வையும், அடிமைகளின் மேன்மையையும், அயலாருடனும் உறவினர் நண்பருடனும் நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும் எடுத்துக்கூறினுர். இறுதியாகத் தமது அறுபத்து மூன்ருவது வயதில் (632 ல்) இறைவனது திருவடி நீழலை அடைந்தனர்.

முகம்மது நபியின் தூது முடிவடைந்தது. மிகக் குறுகிய கால எல்லையாகிய இருபத்து மூன்று ஆண்டுகளில் வரலாற்றிலே கண்டறியாத சீர்திருத்தத்தைச் செய்த பெருமை இவருக்கே உரியது. மிகவும் ஆழமான பாதலப் படுகுழியிலே சிக்கிக் கிடந்த மக்கட்கூட்டத்தை – மூட நம்பிக்கை, கொடிய பழக்க வழக்கம், தீய ஒழுக்கம் முதலிய வற்றிற் படிந்து கிடந்த மக்கட் சமுதாயத்தை-மிகவும் உயரிய வழியிற் கொண்டு செலுத்தி அதில் மாபெரும் வெற்றி அடைந்தவர் நபிகள் திலகம் (சல்). அவரின் முயற்சியால் விக்கிரகத்தின் அடிச்சுவடே அவ்வறபு நாடு முழுவதும் இல்லாமல் மறைந்துவிட்டது. ஓர் அக்கினிக் குண்டத்தின் விளிம்பிலேயிருந்து வந்தது என்ற சொல்லக்கூடிய முறையில் பிணக்குகளும் போர்ச் சச்சரவுகளும் நிறைந்திருந்த பல்வேறு திறத்து அறபு மக்களை நபிகள் நாயகம் (சல்) ஒன்று சேர்த்து, ஒரே கட்டுப்பாடுள்ள இனமாக அமைத்து, புத்துயிர் அளித்து, இவ்வுலகிற்குப் பண்பாட்டினையும் நல்கக் கூடிய கூட்டமாக ஆக்கிவிட்டார்.

நபிகள் நாயகம் (சல்) நிறுவிய இஸ்லாமிய இராச்சியம் கடந்த பதினன்கு நூற்ருண்டுகளாக எல்லா எதிர்ப்புக் களையும் உதறித் தள்ளிச் சிறிதும் நிலைதளராது நிலைபெற்று விட்டது. தேசம் நிறம் இனம் ஆகிய வேறுபாடில்லாது, அறுபது கோடி முஸ்லிம்கள் ஒரே சகோதரத்துவத்துடன் நபிகள் நாயகம் (சல்) இறுதியாக நிறுவிய சமயத்தை இன்று பின்பற்றுகிருர்கள்.

தனிப்பட்ட சிலரின் சமயக் கொள்கைகளைக்கொண்ட ஒரு தாபனமாக இஸ்லாம் நின்றுவிடவில்லை; சொந்த அரசியல்முறை, சட்டம், தாபனம் முதலியவற்றைக்கொண்ட தனிப்பட்ட சமுதாயத்தையும் நிறுவியது. பலமும் ஆற்றலும் கொண்ட ஓர் அரசாங்கத்தையும், தொண்டர்களையும் படைகளையும் உற்சாகமூட்டக்கூடிய சமுதாயத்தையும் கொண்ட இப்புதிய சமுதாயம், மேற்கு அறேபியா முழுவதையும் அடிமைப்படுத்தி வேறு புதிய இடங்களைக் கைப்பற்றுவதற்கு அதிக காலம் செல்லவில்லை. வடக்குக் கிழக்கு அறேபியாவை ஆணைக்கு உட்படுத்தி, கிழக்கு உரோம இராச்சியம் பாரசீக இராச்சியம் ஆகியவற்றின் எல்லைப்புற நாடுகளைக் கைபற்றுமளவுக்கு இஸ்லாமிய ஆட்சி பரவிற்று. முகம்மது நபி (சல்) இறந்து ஆறு ஆண்டுகள் கழியுமுன், சீறியாவும் இருக்கும் மதீனாவிற்குக் கப்பங்கட்டின. அதன்பின் நான்கு ஆண்டுகளுள் எகிப்தும் புதிய முஸ்லிம் இராச்சியத்துடன் சேர்க்கப்பட்டது.

ஒரு நூற்றாண்டுக்குள் மொறொக்கோ, ஸ்பெயின் பிரான்சு, கொன்ஸ்தாந்திநோப்பிள்வரையும், மத்யாசியா ஊடாகச் சிந்து நதிவரை பரவிய அருபிய இராச்சியத்திற்கு முன்னோடியாக அமைந்த இவ்வெற்றிகள், இஸ்லாம் பலம் வாய்ந்த, தன்னம்பிக்கையுடைய, ஆதிக்கம் செலுத்தும் மதம் என்பதை வலியுறுத்தின. இதனாலேயே இம்மதம் தனது சமுதாயத்திலுள்ள வேற்றுமைகளைப்பொறுத்து, மற்றச் சமயத்துச் சமுகத்தினரை வருத்தாது, தனக்குத் தேய்வு ஏற்படும் காலங்களில் அதனைப் பண்புடன் ஏற்றுச் சமாளித்தது.

வெற்றிகளும் இவர்களுக்கு ஒழுங்கான முறையிலேயே அமைந்தன; தாம் கைப்பற்றிய இடங்களில் அழிவுச் சின்னங்களை விட்டுச்செல்லாது, புதிய மக்கட் கூட்டத்தையும்

பண்பாட்டையும் உருவாக்கக்கூடிய வழிகளையே இவர் வகுத்தனர். முகம்மது நபி (சல்) அவர்கள் விட்டுச் சென்ற சட்டமும் அரசும் இப்படைகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பெரிதும் உதவின. நாகரிகம் படைத்த வெளியுலகிலே, அழிவுத் தொழிலில் ஈடுபடும் மக்கட் கூட்டத்தின் மூட நம்பிக்கையின் கொள்கலமாக இஸ்லாம் தோன்றவில்லை. கிழக்கு உரோமரின் கிறித்தவத்தையும் பாரசீகரின் சொரூஸ்றியனிசத்தையும் ஒரே நிலையிலிருந்து அறைகூவக் கூடிய ஆற்றல் அதற்கிருந்தது.

இவர்களாற் கைப்பற்றப்பட்ட நாட்டு மக்களுக்கு, அருபியரின் ஆதிக்கம் ஆட்சியாளர் மாற்றமாகவே தொடக்கத்தில் இருந்தது. அவர்கள் வாழ்க்கைத் தொடர்பிலும் சமுதாயத் தாபனங்களிலும் இதனுல் ஒருவகை முறிவும் ஏற்படவில்லை. சமயப் பொருமை, பலாத்கார மதமாற்றம் முதலியன இருக்கவும் இல்லை. ஆனுற் சிறிது சிறிதாக இஸ்லாம் மேற்கு ஆசியாவின் பழைய சமுதாய அமைப்பினையும் எகிப்தின் பழைய சமுதாய அமைப்பினையும் மாற்றி அமைக்கத் தொடங்கியது. புதிதாகக் கைப்பற்றப்பட்ட பிரதேசங்கள் அறேபியப் படைவீரரின் தலைமைப்பீடமாக மட்டும் அமையவில்லை; புதிய சமயப் பிரசாரம் செய்யும் நிலையங்களாகவும் அவை அமைந்தன.

ஆனுல், இவ்வாறு பிற நாடுகளைக் கைப்பற்ற முன், ஒருவர் தலைமையில் அறபு நாடு முழுவதும் ஒற்றுமைப்பட வேண்டியிருந்தது. முகம்மது நபி (சல்) அவர்களின் உரிமைக் காரர் யார், நபிகள் நாயகத்திற்குப்பின் யார் தலைமைப் பீடத்திலிருந்து ஆணை செலுத்துவது என்ற பிரச்சினை எழுந்தது. ஈற்றில் முகம்மது நபி (சல்) அவர்களின் பெண் கொடுத்த மாமனும், நபிகள் திலகத்தின் சமயத்தை முதன் முதற் பின்பற்றிய நால்வருள் ஒருவருமாகிய அபூபக்கர் (றலி) தலைவராகத் தெரியப்பட்டார். இஸ்லாத்தில் ஒற்றுமை

ஏற்பட்டு, இஸ்லாம் பரவுவதற்குரிய ஒழுங்குகள் செய்யப் பட்டன.

முதலிற் சீறியா கைப்பற்றப்பட்டது. அபூபக்கர் (றலி) அவர்களின் படைத்தலைவரான காலித் இப்னுவலீத் அறேபிய படைகளை ஒருமுகமாகத் திரட்டினுர். சீறியாவின் தலைநகரான தமஸ்கஸ் ஆறுமாத முற்றுகையின்பின் கைக்கொள்ளப் பட்டது. சீறியாவின் மற்றைய நகரங்களும் இஸ்லாமிய ஆட்சிக்கு உட்பட்டன. 636 ல் சீறியா முழுவதும் இஸ்லாமி யருக்கு உரியதாயிற்று. மிக விரைவாகவும் இலகுவாகவும் கிட்டிய வெற்றி, புதிதாக உருப்பட்டுக்கொண்டுவந்த இஸ்லாமிய இராச்சியத்திற்கு நம்பிக்கையையும் பலத்தையும் அளித்தது.

637 ல் அறேபியர் பாரசீகருக்கு எதிராகப் படை யெடுத்தனர்; இருக்கு நாடு கைப்பற்றப்பட்டது. இருக்கு எல்லையைத் தாண்டிப் பாரசீகத்திற்குச் சென்றபோது பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. எனினும், பத்தாண்டில் இங்கும் வெற்றிகண்டனர். 643 ல் இஸ்லாமியர் இந்தியாவின் எல்லையை அண்டினர்.

கிழக்கே காலித் என்பவரின் தலைமையில் படை யெடுப்பு வெற்றிகரமாக நடந்தேறிக்கொண்டிருந்தபோது, மேற்கே சென்ற முஸ்லிம்களும் முன்னேறிச் சென்றனர். நைல் ஆற்றின் பள்ளத்தாக்குகளைக் கைப்பற்ற முயற்சி செய்தனர். கேந்திரமான இடத்தில் எகிப்து இருந்தது. செழிப்பான பூமியை அது பெற்றிருந்தது. அதன் தலைநகரான அலக்ஸாந்திரியா பைசாந்தியக் கடற்படையின் அடித்தளமா யிருந்தது. வட ஆபிரிக்க நாடுகளுக்கு அந்நாடு வாயிலாக அமைந்திருந்தது. இக்காரணங்களினுல், இஸ்லாமியர் எகிப்து தேசத்தையும் ஆசையோடு நோக்கினர். அமிர் இபினு அல்ஆஸ் என்பவர் 649 ல் நாலாயிரம் படைவீரருடன் அப்

பக்கம் நோக்கிச் சென்றார்; பகைவரை விரட்டி அடித்து, முற்றுகை செய்து, வெற்றி கண்டனர். அல்லாஹு அக்பர் என்ற வெற்றிக் குரலே எங்கும் கேட்டது. அலக்சாந்திரி யாவை முற்றுகையிட இருபதினாயிரம் பேர் திரண்டனர். இவர்களை ஐம்பதினாயிரம் பேர் கொண்ட படை எதிர்த்தது. அப்படைக்குத் துணையாகப் பைசாந்தியக் கடற்படையும் இருந்தது. எனினும், ஓராண்டுக்கிடையில் எகிப்தின் தலை நகரைக் கைப்பற்றினர். ஹெலியோபோலிஸ் என்னும் இடத்தில் அமிர் பாடிவீடு அமைத்த பகுதி புதிய தலைநக ராயிற்று. அதுவே இன்று பழைய கெயிரோ என வழங்குவது. ஆங்கு அமிர் கட்டி எழுப்பிய பள்ளிவாசலே எகிப்திலுள்ள பழைய இஸ்லாமியப் பள்ளியாகும். அப்பள்ளி இன்றும் நிலைத்திருக்கின்றது.

இவ்வாறு சீறியா பாரசீகம் எகிப்து ஆகிய தேசங்களைக் கைப்பற்றியபோது உலகத்தேயுள்ள மிகப் பழைய நாகரிகத்தின் இருப்பிடங்களுக்கு அவர்கள் உரிமைக்கார ராயினர். கலை, தத்துவம், வைத்தியம், விஞ்ஞானம், இலக்கியம், அரசியல் ஆகிய துறைகளிற் பழைய அறேபியர் பிறருக்குப் போதிக்கக்கூடியதொன்றும் பெற்றிருக்கவில்லை; அவர்கள் இவை யாவற்றையும் தாம் கற்றுக்கொள்ளவேண்டி யிருந்தது. தாம் கைப்பற்றிய தேசங்களின் சிறந்த நாகரிகப் பண்புகளைத் தமதாக்கிக்கொண்டனர். சீறியரும் பாரசீகரும் எகிப்தியரும் தமது கலைகளையும் கலாச்சாரங்களையும் தம்மை ஆண்ட இஸ்லாமியரிடையே பரப்பினர்.

முதல் இரு கலிபாக்களுள் 632 தொடக்கம் 634 வரை அரசு செய்த அபூபக்கர் (றலி) நபிகள் நாயகம் (சல்) அவர்கள் கட்டிய பள்ளியிலிருந்து அரசாங்க அலுவல்கள் யாவற்றையும் கவனித்து, நீதிக்கும் நிதானத்திற்கும் புகழ் பெற்றார். இரண்டாவது கலிபாவாகிய உமர் (றலி) 634 தொடக்கம் 644 வரை ஆட்சி செய்தார். ஆதி இஸ்லாத்தில் முகம்மது நபி (சல்)

அவர்களுக்கு அடுத்ததாக உமர் (றலி) அவர்களின் பெயர் பெரிதும் பாராட்டப்படுகின்றது. கலிபாவுக்கிருக்கவேண்டிய நற்பண்புகள்யாவும் பெற்ற பெரியராக அவர் கொள்ளப் படுவர். அவருக்குப் பின் உதுமான் (றலி) என்பவர் பன்னீ ராண்டு அரசு செலுத்தினர் (644–656). அடுத்து அரசுகட்டி லேறிய அலி (றலி) என்பவருக்கு (656-661) மாறுக ஒரு கட்சி தோன்றி, இஸ்லாமியப் பேரரசை இடையிடையே வலிகுன்றச் செய்த அரசவழிப் போர்களுக்கு வித்திட்டது.

சீறியாவின் தேசாதிபதியாகிய முஆவியா (றலி) கலிபா வுக்குரிய உரிமையை அபகரித்தார். அவர் ஆட்சியிலிருந்து கலிபா, அரச வழி உரிமையதாக அமையத் தொடங்கியது. முப்பெரும் அரச வழிகள் தோன்றின. உமயாத் கலிபா வழி அவற்றுள் ஒன்று. அதனை 661 ல் தமஸ்கஸில் முஆவியா தொடக்கிவைத்தார். 750 தொடங்கி 1258 வரை பக்தாதில் நிலவிய அப்பாசியவழி, இரண்டாவதாகும். கெய்ரோவி லிருந்து 909 தொடக்கம் 1171 வரை ஆண்ட பாத்திமியர் அரசவழி மூன்றுவதாகும். ஸ்பெயின் தேசத்திலும் உமயாத் கலிபா வழியின் கிளை ஒன்று 929 ல் இருந்து 1031 வரை குர்துபாவைத் தலைநகராகக்கொண்டு அரசு செய்தது.

அரசியற் பரிபாலனத்திற் சிறந்த ஆற்றல் படைத்த வராக முஆவியா விளங்கினர். கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்கும் முஸ்லிம் சமுதாயத்தை உருவாக்கிய பெருமை அவருக்கு உரியது. முஸ்லிம் போர்ப்படையும் ஆணைக்கு உட்பட்டு நடக்கும் ஒழுங்கான படையாக விளங்கியது. சமாதான முறைகள் கைகூடாத சந்தர்ப்பத்திலேயே அவர் போர் தொடுத்தார். பகைவரையும் அரசியல் எதிரிகளையும் சாந்த குணத்தாலும், பொறுமையாலும் அடக்கத்தாலும் பணியவைத்தார்.

சீறியா இருக்கு பாரசீகம் எகிப்து ஆகிய தேசங்களைக் கைப்பற்றியதோடு இஸ்லாமியப் பேரரசின் வளர்ச்சி முதற் கட்டம் முடிகின்றது. ஸ்பானிய தேசத்தின்மேற் படையெடுப்பதுடன் அடுத்த கட்டம் தொடங்குகின்றது. மத்திய காலப் படையெடுப்பு வரலாற்றிலே, ஸ்பானிய தேசத்தைக் கைப்பற்றியது தனி இடம்பெற வேண்டும். இவ்வளவு விரைவாகவும் முற்றாகவும் வேறொரு தேசமும் அக்காலப் பகுதியிற் கொள்ளப்படவில்லை. 699 தொடங்கி வட ஆபிரிக்காவின் தேசாதிபதியாக இருந்த மூசா என்பவர் 711 ல் ஏழாயிரம் பேர் கொண்ட படையுடன் தாரிக் என்பவரை ஸ்பானிய தேசத்திற்கு அனுப்பினார். தாரிக்குத் தன் பெயரை உலக வரலாற்றிலே பொறிப்பதற்குக் காலாக இருந்த பெருங் கற்பாறைக்கு அண்மையில் இறங்கினார். நாட்டைக் கைப்பற்றாமல் திரும்பிப் போவதில்லை என்ற வைராக்கியத்தோடு தான் வந்து இறங்கிய கப்பல்களை எரித்த வரலாறு யாவரும் அறிந்ததே. இக்கற்பாறையே ஜபால் (மலை) தாரிக்கென வழங்கும். இதே இப்போது ஜிபிறோல்ரர் கற்பாறை என விளங்குகின்றது. 711 ம் ஆண்டு ஜுலை மாதம் 19 ம் நாள் சலாதோ நதியின் முகத்துவாரத்தில் றொத்தொறிக்கு மன்னனோடு நடந்த போரில் தாரிக்கு வெற்றி பெற்றார். அதன்பின் ஸ்பானிய தேசத்திற்கு ஊடாக இஸ்லாமியர் வெற்றியுலாச் செய்தனர். செவில், எல்விறோ, குர்துபா, மலகா, தொலேதோ போன்ற நகரங்கள் இஸ்லாமிய ஆட்சிக்குத் தலை சாய்ந்தன. சிறிய படையெடுப்போடு 711 ல் படைத்தலைவராகப் புறப்பட்ட தாரிக்கு, சில மாதங்களுள் ஸ்பானிய தேசத்தின் அரைப்பகுதிக்குத் தலைவராகிவிட்டார்.

தனது படை வீரனின் முன்னேற்றத்திற் பொறாமை கொண்ட மூசா தானும் 712 ல் பத்தாயிரம் வீரருடன் புறப்பட்டு வந்து மெதீனா சீதோனியா காமோனா செவில்

மெரிதா போன்ற நகரங்களைக் கைப்பற்றினர். ஸ்பெயின் தேசம் அல் அண்டலுஸ் என்னும் அறபுப் பெயருடன் கலிபாவின் மாகாணமாக அமைந்தது. இஸ்லாத்தின் முதலாம் அரசியல் வழியின் புகழ் உச்ச நிலையை அடைந்து விட்டது.

இதற்குள் வட அறேபிய இனத்தவருக்கும் தென் அறேபிய இனத்தவருக்கும் ஏற்பட்டிருந்த பிளவு அதிகரிக்க உமயாத் அரச வழியின் அதிகாரம் குன்றத் தொடங்கிற்று. 747 ல் அப்பாசியா உமயாத் தலைவருக்கு மாறாக வெளிப் படையாகக் கிளர்ச்சி செய்து, உமயாத் வழியினர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளியிட்டனர். அப்பாசியர் வட ஆபிரிக்காவையோ ஸ்பானிய தேசத்தையோ ஒருகாலமும் அடக்கி ஆளாத போதும், அடுத்த ஐந்து நூற்றாண்டில், 1288 வரை இஸ்லாமிய உலகின் கிழக்குப் பகுதியை ஆட்சி செய்தனர். அப்பாசிய அரசர் ஆட்சியிலேயே இஸ்லாமிய கலாச்சாரம் பொற்காலத்தைக் கண்டதென்பர். பக்தாத் அப்பாசியரின் படைப்பு என்று கூறினால் அது மிகையாகாது.

தைகிரிஸ் நதியின் மேற்குக் கரையில் அமைக்கப்பட்ட இந்நகர் உருவத்தில் வட்டமாக அமைந்தமையால், வட்ட நகர் என அழைக்கப்பட்டது. கலிபாவின் அரண்மனை நகர மத்தியில் கட்டப்பட்டது. அவ்வரண்மனைக் கொலுமண்ட பத்தின் கும்மட்டம் நூற்று முப்பது அடி உயரமானது. அரண்மனைக்கு அருகே பெரிய பள்ளிவாசல் நிறுவப்பட்டது. பக்தாத்தில் நகர அமைப்பு, சுகாதார வசதி, கண்காணிப்பு ஏற்பாடு, தெரு விளக்குகள் யாவும் இருந்தன.

கீழைத் தேசங்களிலிருந்து கருத்துக்களும் கொள்கை களும் பரவுவதற்குப் பக்தாத் வழி செய்தது. இஸ்லாத்திற் பாரசீகப் பாதிப்பு ஏற்பட்டது; விஞ்ஞானத்துறையிலும் கல்வித்துறையிலும் புதிய யுகம் தோன்றியது. இரண்டே

இரண்டு துறையில் மட்டும் ஒரு மாற்றமும் ஏற்படவில்லை; இஸ்லாமே தேசியச் சமயமாய் நிலவியது. தேசியப் பத்திரங்கள் யாவும் அறபு மொழியிலேயே பொறிக்கப் பட்டன. ஹாரூன் அல் றஷீத் (786-809) ஆட்சிக் காலத்தில் அளவிடமுடியாத செல்வம் படைத்த நகராகவும், பல்நாட்டு முக்கியத்துவம் பெற்ற நகராகவும் பக்தாத் விளங்கிற்று. இஸ்லாமிய இராச்சியத்தின் செழிப்பிற்கு ஏற்ற முறையில் பிரபையோடு விளங்கிய இத்தலைநகர் உலகில் இணையற்ற நகராகக் கருதப்பட்டது.

ஹாரூவின் வள்ளற்றன்மையும் அவருக்குப் பின் ஆண்ட கலிபாக்களின் பரந்த மனப்பான்மையும் கலைஞருக்கு ஊக்கம் அளித்தன. புலவர்கள், இசைவல்லுநர், பாடகர், நாட்டியக் கலைஞர், களியாட்டு வல்லுநர் போன்றோர் பலர் இத்தலைநகருக்கு வந்து சேர்ந்தனர். அபூநவாஸ் என்னும் புலவர் அக்கால அரண்மனை வாழ்க்கையைச் சிறந்த செய்யுட்களிற் பாடியுள்ளார். துறைமுக ஓரமாகப் பலவகை ஓடங்களும், நாவாய்களும் இருந்தன. சீனு, இந்தியா, மலாயா, துருக்கி, ருஷ்யா, ஆபிரிக்கா, எகிப்து, சீறியா, பாரசீகம் போன்ற தேசங்களிலிருந்து, பட்டு வாசனைத் திரவியம் இரத்தினம் துணி கண்ணாடி அரிசி தானியம் பழவகை எனப் பொருட்கள் பல வந்து இறங்கின. தூரகிழக்குத் தேசங்களுக்கும் ஐரோப்பாவிற்கும் ஆபிரிக்காவிற்கும் பல பொருட்கள் ஏற்றுமதியாயின. ஆயிரத்தொரு இரவுகள் என்னும் கதைத் தொகுதியிற் கூறப்படும் சிந்துபாத் மாலுமியின் பிரயாணங்கள் முஸ்லிம் வணிகரின் கப்பற் பிரயாணங்களைப்பற்றிய உண்மைச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டவையே.

உலக வரலாற்றிலே பக்தாதின் சரித்திரம் மிகவும் சிறந்து விளங்குவதற்குக் காரணம், அக்காலத்து இஸ்லாமிய உலகில் ஏற்பட்ட அறிவு எழுச்சியே. முக்கியமாகக் கிரேக்க

பாதிப்பினால் உண்டான இவ்வெழுச்சி, பாரசீகம் சங்கதம் சீறிய கிரேக்கம் போன்ற மொழிகளிலிருந்து அறபு மொழியிற் பல மொழிபெயர்ப்புக்களை அளித்தது. எழுபத்தைந்து ஆண்டு எல்லையுள் அரிஸ்தோட்டிலின் முக்கிய தத்துவ நூல்கள், பாரசீக இந்திய விஞ்ஞான நூல்கள் போன்ற வற்றை அறபு பேசும் மக்கள் பெற்றுவிட்டனர்.

அறிவு இலக்கியம், கணிதம் ஆகிய துறைகளில் இந்தியா, இஸ்லாமியருக்குத் தூண்டுகோலாயிருந்தது. 773ல் இந்திய யாத்திரிகர் ஒருவர் வானசாத்திர நூல் ஒன்றனைப் பக்தாதுக்குக் கொண்டுவந்தனர். இந்நூலைக் கலிபாவின் ஆணைப்படி அல்பஸாறி அறபில் மொழிபெயர்த்தார். பேர்போன அல்-குவாறிஸிமி என்பவர் பிரபலம் பெற்ற தமது வானசாத்திர அட்டவணையை அல்பஸாறியின் நூலைப் பின்பற்றி வகுத்தார் மேலே குறிப்பிட்ட இந்திய யாத்திரிகர் கொண்டுவந்த கணித சாத்திர நூலையும் அறபு மொழியிலே தழுவிக்கொண்டனர்.

எனினும், முஸ்லிம்கள் வாழ்க்கையில் கிரேக்கப் பண்பாட்டு ஆதிக்கமே பெரிதும் காணப்பட்டது. அல்மாமூன் என்னும் கலிபாக் காலத்தில் கிரேக்க ஆதிக்கம் உச்சநிலையை அடைந்தது. புகழ்பெற்ற 'அறிவு இல்லம்' எனப்படும் கல்வி நிலையம் ஒன்றனை 830 ல் மாமூன் நிறுவினார். நூல்நிலையம், புலவர் சங்கம், மொழிபெயர்ப்பு நிலையம் ஆகியனவற்றைக் கொண்டு விளங்கியது இவ்வறிவு இல்லம். மாமூன் காலத்திலும் அதற்குப் பின்பும் மொழிபெயர்ப்பு ஆக்கப் பணிகள் அங்கேயே நடைபெற்றன. ஹுனைன் இபினு இஷஹாக் என்பவரே (809-873) மொழிபெயர்ப்பாளருட் பெரிதும் கொண்டாடப்படுபவர். அவர் அக்காலப் பகுதியில் வாழ்ந்த அறிஞருள் தலைசிறந்து விளங்கினார். கலென், ஹிப்பொக்கிறற்றேஸ், தியோஸ்கொறிதேஸ், பிளேற்றோ,

அரிஸ்தோட்டில் என்போரின் நூல்கள் பலவற்றை ஹுனைன் அறபு மொழியில் அமைத்தார்.

மிக விரைவில், மொழிபெயர்ப்போடு நில்லாது, முஸ்லிம்கள் தாமே இத்துறைகளில் எழுதவும் தொடங்கினர். இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன் செய்யுள் மொழியாக இருந்த அறபு, முகம்மது நபி (சல்) அவர்களுக்குப் பின் வெளிப்பாட்டு மொழியாகவும் சமய மொழியாகவும் இருந்த அறபு, பத்தாம் நூற்றாண்டு வரையில், விஞ்ஞானக் கருத்துக்களை உணர்த்தும் மொழியாகவும் தத்துவ ஞானக் கொள்கைகளை வெளியிடும் மொழியாகவும் விருத்தியடைந்து விட்டது.

இவ்வாறு பக்தாதில், முஸ்லிம் இராச்சியத்தின் கிழக்குக் கிளை பொற்காலத்தை எய்தியபோது மேற்கே ஸ்பானிய தேசத்திலும் அதன் கிளை சீருடன் விளங்கிக் கிறித்துவ பண்பாட்டையும் பாதித்தது.

750ல் தமஸ்கஸில் உமயாத் கலிபாக்கள் வேரோடழிக்கப்பட்டபோது அப்துல் றஹ்மான் என்பவர் ஒளித்தோடி, ஸ்பானிய தேசத்தை அடைந்து, அங்கு உமயாத் அரச வழி ஆட்சியை நிறுவினர். யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட இஸ்லாமிய கலிபாக்களின் அதிகாரத்தைத் தகர்த்தெறிந்த முதல் மாகாணம் ஸ்பெயின் ஆகும். அப்துல் றஹ்மான் தனது இராச்சியத்தின் நகரங்களை அழகுபடுத்தித் தலைநகருக்குத் தூய்மையான நீர் அளிப்பதற்கு நீர்நிலை ஒன்றனைக் கட்டி, தலைநகரைச் சுற்றிச் சுவர் ஒன்றனை அமைத்துத் தமக்கென ஓர் அரண்மனையையும் பூங்காவையும் குர்துபாவுக்கு வெளியே கட்டி எழுப்பினர். பைத்துல் முகத்தஸ்ஸிலும் மக்காவிலும் உள்ள பள்ளிகளுக்கு இணையாக குர்துபாவில் 788ல் அப்துல் றஹ்மான் பெரிய பள்ளிவாசல் ஒன்றனை நிறுவினர். அவருக்குப் பின்வந்தோரால் பெருப்பிக்

கப்பட்ட இப்பள்ளி மிக விரைவில் மேற்கத்திய இஸ்லாத்தின் பள்ளியாக அமைந்தது.

அப்துல் றஹ்மானின் அரண்மனை ஐரோப்பிய நாடுகளிலுள்ள பளபளப்பான அரண்மனைகளுள் ஒன்ருக இருந்தது. பைசாந்தியச் சக்கரவர்த்தியின் தூதுவரும் செருமானி, இத்தாலி, பிரான்சு ஆகிய தேசங்களின் தூதுவரும் அங்கு காணப்பட்டனர். அதன் தலைநகராகிய குர்துபா, அரைக்கோடி குடிகளையும் எழுநூறு பள்ளிகளையும் முந்நூறு நீராடும் நிலைகளையும் கொண்டு விளங்கியது. மூன்ரும் அப்துல் றஹ்மான் ஆட்சிக்காலத்திலும் (912-962) அவருக்குப்பின் ஆண்ட இரு கலிபாக்களின் காலத்திலும் முஸ்லிம் ஆட்சி மேற்கே உச்ச நிலையை அடைந்தது. இக்காலப் பகுதியில், அதாவது பத்தாம் நூற்ருண்டில், ஐரோப்பாவின் மிகப் பண்பட்ட நகராகக் குர்துபா விளங்கியது. பல தேசங்களிலும் அதன் புகழ் பரவியது. அங்கு வந்த யாத்திரிகர்களின் வியப்பையும் மதிப்பையும் அந்நகர் ஈட்டியது.

உமயாத்கலிபாக்கள் ஆட்சியில் ஸ்பெயின் செல்வம் படைத்த நாடாக இருந்தது. குர்துபாவில் பதின்மூவாயிரம் நெசவுக்காரர் இருந்தனர். தோற் கைத்தொழில் அங்கு செழிப்படைந்திருந்தது. தோலைப் பதனிடும் கலை ஸ்பெயினில் இருந்தே மொறெக்கோவுக்கும், பின் பிரான்சுக்கும் இங்கிலாந்திற்கும் பரவியது. குர்துபாவில் மட்டுமல்ல, மலகா, அல்மேரியா போன்ற இடங்களிலும் கம்பிளியிலும் பட்டிலும் நெசவு வேலைகள் நடைபெற்றன. கண்ணுடி, பித்தளை, இரும்பு, இரத்தினம் போன்ற பொருட்களுக்கு ஸ்பெயின் பேர்போனது. இரும்பிலும் மற்றும் உலோகங்களிலும் பொன் வெள்ளி ஆகியவற்றைப் பதித்துப் பூமெட்டுக்களில் அலங்கார வேலைப்பாடு செய்யும் வழக்கம் ஸ்பெயின் நாடுகளிற் பரவியது. மேற்கு ஆசிய நாடுகளி

லிருந்து விவசாய முறைகள் ஸ்பானிய அறபியராற் கைக் கொள்ளப்பட்டன. விவசாயத்தில் ஏற்பட்ட வளர்ச்சி அறேபியர் ஸ்பானிய தேசத்திற்கு அளித்த நிலைபேருன நன்மைகளுள் ஒன்று.

கலைத்துறையிலும் இக்காலப் பகுதி புகழுடன் விளங்கியது. மூன்றும் அப்துல் றஹ்மானுக்குப் பின் அரசு செய்த அல்-ஹக்கம் கல்வி அறிவு படைத்தவர். எனவே, கலைஞர்களை ஆதரித்தார். கல்விமான்களுக்கு ஏராளமான நன்கொடை அளித்ததோடு தலைநகரில் இருபத்தேழு இலவசக் கல்லூரிகளையும் நிறுவினுர். மூன்றும் அப்துல் றஹ்மாஞல் பிரதானப் பள்ளியில் நிறுவப்பட்ட குர்துபாப் பல்கலைக் கழகம், அல் ஹக்கம் ஆட்சியில் உலகக் கலைக்கூடங்களிற் சிறந்த இடம் வகித்தது. ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா ஆகிய பகுதிகளில் இருந்து மாணவர் அங்கு வந்து சேர்ந்தனர். சர் ஐசக் நியூட்டன் போன்ற மாமேதைகள் அங்கு வந்து பயின்றனர். கீழைத் தேசங்களில் இருந்து வந்து பேராசிரியர்கள் அங்கு கடமையாற்றினர். அவர்களின் சம்பளத்திற்கு அல்-ஹக்கம் மானியங்களை ஒதுக்கிவைத்தார். மிகப் பெரிய நூல்நிலையம் ஒன்றும் தலைநகரில் அமைக்கப்பட்டது. 400,000 நூல்களுக்கு மேல் இந்நிலையத்தில் ஒழுங்கான முறையில் வைக்கப்பட்டிருந்தன. கிறித்தவ ஐரோப்பாவில் ஒரு சிலரே கல்வி பயின்றிருந்த காலத்தில் முஸ்லிம்கள் அறிவுத் துறையில் இவ்வளவு வளர்ச்சியடைந்திருந்தமை வியக்கத்தக்கதே.

கி. பி. 713 க்குள் அறபியா சீறியா, எகிப்து, வட ஆபிரிக்கா, ஸ்பெயின் ஆகிய நாடுகளை இஸ்லாமியர் தம்மடிப் படுத்தியபோதும், இந்தியாவைக் கைப்பற்றப் பல ஆண்டுகள் சென்றன. கி. பி. 633, 647, 662 ஆகிய ஆண்டுகளில் இந்தியாவிற்குப் படையெடுத்து வந்தபோதும், 711 ல் தான் சிந்து நாட்டின் மீது குறிப்பிடத்தக்க படையெடுப்பு

நிகழ்ந்தது. முகம்மது காசிம் என்பான் சிந்து நாட்டைக் கைப்பற்றும் நோக்கத்தோடு, முதலில் தெய்புல் என்னும் இடத்தைத் தனது ஆட்சிக்கு உட்படுத்தி அதன்பின் நடந்த பெரும்போரில் முல்தானைக் கைப்பற்றி, கன்னியாகுப்லுத்தை முற்றுகையிட முயலும்போது இறந்தான். அவனுக்குப் பின் ஜூமெய்து என்பவனும் படையெடுத்து வந்ததாகக் கூறுவர். ஜூமெய்துக்குப்பின் சிந்து நாட்டில் அறபியரின் வலி மெலியத் தொடங்கிற்று. எனவே, அறபியரின் சிந்துப் படையெடுப்புப் பயனற்ற வெற்றியாய் முடிந்தது.

அறபியர் இந்தியாவில் தம் நிலைபெற்ற ஆட்சியை நிறுவ முடியாமைக்குப் பல காரணங்கள் இருந்தன. காசிமுக்குப்பின் வந்தோர் யாவரும் அவனுடைய வீரமும் திறமும் பெருந்தன்மையும் வாய்ந்தவரல்லர். சிறிது காலஞ் சென்றபின்னர் கலிபாக்கள் சிந்து நாட்டை அறவே மறந்தனர். சிந்து நாடு வளம் குறைந்த நாடாகையால், அதில் வரும் வருவாயைக்கொண்டு படையைப் பெருக்கிப் பிறநாடுகளைக் கொள்ளுதல் இயலாதாயிற்று. அத்துடன் சிந்து நாட்டுக்கும் கீழை இந்தியச் செழிப்பு நிலத்துக்கும் இடையே விரிந்து கிடந்த பாலைவனம் இயற்கைத் தடையாயிற்று.

அறபியரின் இந்திய ஆட்சி அக்கால இந்திய நாட்டினரின் வாழ்க்கையையோ கலைகளையோ மாற்றாத போதும், இந்தியக் கலைகளும் அறிவியல் நூல்களும் கருத்துக்களும் அவர்தம் பரந்த பேரரசிற் பரவி, பின் ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்றன. 'அறபி எண்கள்' எனப்படும் எண்களை இந்தியரிடமிருந்து கடன்வாங்கியதோடு, அறபியர், இந்திய வானநூற் கருத்துக்களையும் மருத்துவ நூற் கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டனர். ஓர் அறபிய அறிஞன் காசியிற் பத்தாண்டு வான நூல் பயின்றான். சரகசம்ஹிதம் என்னும் மருத்துவ நூலும் பஞ்சதந்திரம்

என்னும் அரசியல் நூலும் அறபு மொழியில் மொழிபெயர்க் கப்பெற்றன. பல இந்திய அறிஞர் பக்தாத்துக்குச் சென்று அங்கு கலிபாக்களால் ஆதரிக்கப்பெற்றனர் என்பது முன்பு காட்டப்பட்டது.

பத்துப் பதினொராம் நூற்றுண்டுகளில் கஸ்னித் துருக்க மன்னர் இந்தியாவின் பல பாகங்களிலும் இஸ்லாத்தைப் பரப்பினர். அவர்களுட் சிறந்தவர் மகுமூது என்பவர், அவரது இந்தியப் படையெடுப்புக்கள் பன்னிரண்டென்பர். கி. பி. 1000 ல் அவருடைய முதற் படையெடுப்புத் தொடங்கிற்று. கி. பி. 1026 ல் கடைசிப் படையெடுப்பு முடிந்து. அதன்பின் நான்கு ஆண்டுகள் சென்று அவர் இறந்தார். மகுமூது ஒயாப் போரினல் தான் தன் தந்தை யிடம் பெற்ற நாட்டின் எல்லையைப் பரப்பினுர். அவர் பெரும் புலமை வாய்ந்தவர். பல புலவர் அவர் அவையில் இருந்தனர். மகுமூதுக்குக் கல்வியிலும் கட்டட அமைப்பிலும் இருந்த பேருணர்ச்சி அவர் கஸ்னியில் எடுத்த பள்ளிவாச லாலும் கல்லூரியாலும் சுவடி நிலையத்தாலும் நன்கு புலப்படும்.

மகுமூது இறந்தபின் 1182 வரை அமைதி நிலவிற்று. கூரை ஆண்டுவந்த ஷம்பசுபானி குலத்து அதிகாரிகள் ஆக்கம் வளர்ந்துகொண்டு வந்தது. இவர்களுள் சியாசுதீன் முகம்மது என்பவர் பேர்போன மன்னர். இவர் 1192 ல் இந்தியாவின் மேற் படையெடுத்து, தரெளரி என்னும் இடத்தில் பிருதிவிராஜனை வென்று கொன்றுர். முகம்மது அரசியல் அறிவு மிகுதியாக வாய்க்கப்பெற்றவர். எனினும், 1206 ல் கொல்லப்பட்டார். முகமதுவின் மறைவுக்குப்பின் கூரை அரசரின் ஆதிக்கம் குன்றத் தொடங்கியது முகமதுவின் தலைவர்களுள் ஒருவனுகிய குத்புஇன் ஐபாக் என்பவன் ஆட்சியைக் கைப்பற்றித் தில்லிச் சுல்தான் என்னும் பட்டத்

துடன் ஆட்சி செய்யத் தொடங்கினன். அவனுடன் தில்லி இராச்சியம் உருப்பெற்று வளர்ந்தது,

தில்லியிலிருந்து ஆண்ட இருபத்தாறு துருக்கிய மன்னருட் சிலரே இங்கு குறிப்பிடற்குரியவர். குத்புதீன் 1210 ல் இறந்ததும், அவரின் மருமகன் இல்துத்மிஷ் அரசு கட்டிலேறினர். குழப்பங்களை அடக்கி ஆட்சியை நிலைநிறுத்த இருபது ஆண்டுகள் சென்றன. 1236 ல் இவ்வரசன் இறந்த போது, நாட்டிலே பத்தாண்டுகளாகத் தொடர்ந்து அமைதி யின்மை நிலவிற்று. இப்பத்தாண்டில் அரசு செய்த ஐவருள் றஸியா என்னும் இராணியும் ஒருவர். அதன்மேல் 1246 ல் நாசிருதீன் மகுமூத் தனது அடிமைகளுள் ஒருவனுகிய பலீபன் என்பவனின் துணைகொண்டு 1266 வரை ஆண்டான், நாசிருதீன் காலத்தில் அதிகாரம் பலீபனின் கையிலேயே இருந்தது. எனவே, நாசிருதீன் இறந்தபோது பலீபன் அரசுரிமை பெற்று 1287 வரை ஆட்சி செய்தான். 1287 ல் பலீபன் ஆட்சி முடிவுறுகின்றது. குழப்பம் மீண்டும் ஏற்பட்டு 1290 ல் ஜலாலுதீன் அரசனுனன். ஆறு ஆண்டில் அவ்வரசன் ஆட்சியும் குலைந்தது.

அவன் மருகன் அலாவுதீனின் ஆட்சி பலவகையிற் சிறந்து விளங்குகின்றது. இந்து அரசரின் ஆட்சி அவன் காலத்தில் வேரோடு அறுக்கப்பட்டது. மலிக் கபூரின் தலைமையில் 1310ல் தென்னிந்தியாவும் கைப்பற்றப்பட்டது. இராமேஸ்வரம் வரையும் இஸ்லாமிய படைகள் சென்று, தென்னகத்தை முஸ்லிம் ஆட்சிக்கு உட்படுத்தின. 1316 ல் அலாவுதீன் ஆட்சி சீர்குலைந்தது. ஒன்பது ஆண்டுகளாகக் குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டு, 1325 ல் முகமது இபினு துக்லக் எனப் பெயரிய மன்னன் குழப்பங்களை அடக்கி, தன் ஆட்சியை நிலைநாட்டினன். அறபு மொழியிலும் பாரசீகத் திலும் நல்ல பாண்டித்தியம் பெற்றிருந்த இவ்வரசன் தேவை யற்ற திட்டங்களில் இறங்கித் தனக்கும் தன் இராச்சி

யத்திற்கும் அழிவைத் தேடிக்கொண்டான். இபுன் பத்துத்தா எனப் பெயரிய இஸ்லாமிய யாத்திரிகர் இவன் அரண் மனைக்குச் சென்று இவனைப்பற்றிய குறிப்புக்கள் பலவற்றைத் தந்திருக்கின்ருர். நாட்டிற் பணப் பஞ்சம் ஏற்பட்டுக் குழப்பங்கள் எங்கும் பரவின. இவன் ஆட்சியும் முடிவுற்றது.

இவன்பின் ஆண்ட பிரோஷ்ஷா (1351–1388) தன் முன் ஆட்சி செய்தவரிலும் குணமுடையவனுகத் திகழ்ந்தான். படையெடுப்புக்களில் வருவாயைக் கரைக்காது செல்வத்தைப் பெருக்குவதில் கவனம் செலுத்திஞன். விவசாயம் வளர்ச்சியடைந்தது. வேலையில்லாப்பிரச்சினை ஓரளவு தீர்க்கப்பட்டது. இருநூறு நகரங்கள், நாற்பது பள்ளி வாசல்கள், முப்பது கல்லூரிகள், முப்பது நீர்நிலைகள், ஐம்பது அணைக்கட்டுகள், நூறு வைத்தியசாலைகள், நூற்றைம்பது பாலங்கள் முதலியவற்றைக் கட்டி அளித்தான், பிரோஷ்ஷா 1388 ல் இறந்தான். அவனுக்குப்பின் ஆறு அரசர் ஆண்டனர். 1398 ல் தில்லியில் மொங்கோலர் வந்து சேர்ந்தனர். இவர்கள் மதத்தில் இஸ்லாமியர். இவர்களுள் ஒருவனுன தீமூர் தில்லிக்குப் படையெடுத்து வந்து, அதனைக் கைப்பற்றிக் கங்கைவரை சென்று, ஆறுமாதங்களுக்குப்பின் இந்தியாவை விட்டு நீங்கிஞன். அவனுடைய படை யெடுப்பால் இந்தியாவில் துருக்கிய இராச்சியம் முற்ருக அழிந்தொழிந்தது.

1335 முதல் 1378 வரை தில்லியில் வேறுபட்ட முஸ்லிம் ஆட்சி தென்னிந்தியாவில் நிலவியது. சுல்தான் ஜலாலுத்தீன் அஸன் ஷா மதுரையிலிருந்து தென்னகத்தை ஆண்டுவந்தார். அவர் இபினு பத்துத்தாவுக்குத் தன்மகளை மனைவியாக அளித்தார்.

இந்தியாவில் நிலவிய துருக்கிய ஆட்சியின் தொடக்கத்தில் இந்துக்களுக்கும் இஸ்லாமியருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படாத போதும், காலஞ் செல்லச் செல்ல இந்நிலை மாறியது. அரசியல் நிர்வாகத்திற்கு இந்துக்களே நியமிக்கப்பட்டனர். பல இடங்களிலே இந்துத் தலைவர்கள் இஸ்லாமியர் ஆட்சியை ஒப்புக் கொண்ட வரை தாம் நினைத்தவாறு ஆட்சி செய்தனர். முஸ்லிம்கள் இந்தியப் பெண்களை மணம் முடிக்கும் வழக்கம் பரவியது. இந்திய மக்கள் ஓரளவு இஸ்லாத்தைத் தழுவத் தொடங்கினர்.

முஸ்லிம் உடைகளும் சடங்குமுறைகளும் இந்திய மக்கள் வாழ்க்கையில் இடம் பெற்றன. உறுது என்ற மொழியின் தோற்றமும் இந்து முஸ்லிம் தொடர்பினால் உண்டாயிற்று. எனினும், அரண்மனை மொழியாகப் பாரசீகமே அமைந்திருந்தது. ஆலாவுதீனின் அரண்மனையிலிருந்த அமீர் குஷ்ரு என்னும் புலவர் இக்காலப்பகுதிக்குரிய சிறந்த அறிஞருள் ஒருவர். இந்துக்களின் கடவுட் கொள்கையோடு ஓரளவு ஒத்திருந்த சூபித்துவக் கொள்கைகளும் பரவின. சாடீ, ஜலாலுதீன் றூமி, ஹாபிஸ் போன்ற புலவர்களும் இம்மார்க்கத்திற்குரிய புகழ் பெற்ற புலவர்கள்.

அடுத்து, இந்தியாவில் மோகலாய ஆட்சி நிலைபெற்ற வரலாறு நோக்கற்பாலது. பாபர் என்பவன் இந்தியாவைக் கைப்பற்றியதோடு இந்தியாவில் மோகலாய ஆட்சி தொடங்குகின்றது. இருபத்தோராவது வயதில் துருக்கித்தானிலிருந்து கலைபட்டபோது, கிழக்கு அப்கானிஸ்தானின் முக்கிய அரணான காபுல் என்னும் பகுதியின் அரசைக் கைப்பற்றி, அங்கிருந்து அவன் ஆண்டான். 1526 ம் தில்லி மேற் படையெடுத்து, சுல்தான் இப்ருஹீமைத் தோற்கடித்து, முதலில் தில்லியையும், அடுத்து அக்ராவையும் கைப்பற்றினான். உடனே தில்லிச் சுல்தானாகத் தன்னைப் பிரகடனம்

செய்து கொண்டான். அதன் பின், இந்தியாவில் மோகலாய ஆட்சியைப் பலப்படுதுவதிற் கருத்தைச் செலுத்தினுன். இராஜ்புத்திர அரசரின் எதிர்ப்பு அதிகரித்துக் கொண்டு வந்தது. 1527 இல் கானுவா என்னும் இடத்தில் நடந்த போரில் அவர்களேத் தோற்கடித்தான். இப்போருடன் மோகலாய ஆட்சி தில்லியில் நிலேபெற்றுவிட்டது.

1530 ல் பாபர் இறந்ததும் அவன் மக்களில் ஒருவனுகிய ஹுமாயூன் அரசு கட்டிலேறினுன். இவ்வரசனின் மகனே அக்பர். 1556 ல் ஹுமாயூன் இறந்தபோது அக்பருக்கு வயது பதின்மூன்ருகும். பாரசீக சூபி மார்க்கத்தவனுகிய பைராம் கான் என்பவனின் பாதுகாப்பில் அக்பர் சில காலம் ஆட்சி செய்தார். ஆனுல் 1560 இல் இருந்து, தாமே ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தினுர். இந்துக்களேயும் முஸ்லிம்களேயும் ஒன்று சேர்த்து, இந்திய இராச்சியம் ஒன்றனே நிறுவும் பணியில் அக்பர் ஈடுபட்டார். இந்நோக்குடன் இராஜ்புத்திரத் தலேவராகிய ராஜா பிகார் மால் என்பவரின் மகளே மனேவியாக ஏற்ருர். ராஜாபிகார் மாலும், அவன் மகன் சிங் என்பவனும், மருமகன் பகவான் தாசும், மோகல் பிரபுக்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். அக்பரின் மகன் ஜகங்கீரும் இராஜ்புத்திரப் பெண் ஒருத்தியை இந்து முறைப்படித் தம்மனேவியாகக் கொண்டார். இவ்வாறு இந்துக்களேயும் அணேத்துச் சென்றதினுல் வட இந்தியா முழுவதும் மோகலாய ஆட்சிக்கு உட்பட்டது. அக்பர் அமைத்த அரசியல் நிர்வாகமே இன்று இந்தியாவில் வழக்கிலிருந்து வருகின்றது. சமயப் பொறுமையும் அக்பரின் சிறந்த குணங்களுள் ஒன்ருகும்.

அக்பருக்குப் பின் அவர் மகன் ஜஹாங்கீர் ஆட்சி செலுத்தினுர். அவர் மனேவி நூர்ஜஹான் என்னும் பாரசீகப் பெண், ஆட்சியிற் பெரும்பங்கு எடுத்துக் கொண்டாள்.

இவ்வரசன் காலத்திலே கடற்கரைப் பகுதிகளில் ஒல்லாந்த வணிகரும் ஆங்கிலேய வணிகரும் குடியேறினர்; ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பு ஏற்பட்டது. ஜஹாங்கீரின் மகன் ஷாஹ் ஜஹான் காலத்தில் கலைகள் வளர்ச்சி அடைந்தன. அவர் காலத்துச் சிற்பக்கலையின் எடுத்துக்காட்டே உலகப் புகழ்பெற்ற தாஜ்மகால் என்னும் கட்டடம்.

*1658*ல் ஔரங்கசீப் அரசரானார். இஸ்லாமியச் சட்டமுறைப்படி அவர் இராச்சியத்தை அமைக்க முற்பட்டார். இதனால் மோகலாய ஆட்சியின் வீழ்ச்சிக்கு வழிகோலினார். இராச்சியம் முஸ்லிம்களுக்காகவே என்ற எண்ணம் வெறுப்புணர்ச்சியைப் பரவச் செய்தது. அரசியல் அதிகாரிகளில் நம்பிக்கை கொள்ளாது தாமே யாவற்றையும் நடத்தி வந்தமையால், ஈற்றில் தாமே படைகளைத் திரட்டித் தலைமை தாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. கலைகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன.

ஔரங்கசீப் இறந்து ஐம்பது ஆண்டுக்குள் மோகலாய அரசு சீர்குலைந்தது. எல்லா மாகாணங்களும் தனித்தியங்க முயன்றன. தெற்கிலும் வடக்கிலும் இருந்த முஸ்லிம் அரசுகளுக்கிடையே குஜராத் தொடங்கி ஒரிசா வரை மராத்தியர் ஆட்சி செலுத்தி வந்தனர். *1739*ல் பாரசீக மன்னனாகிய முகமது ஷாஹ் தில்லியைக் கைப்பற்றிக் கொள்ளையடித்ததோடு மோகலாய ஆட்சியின் இறுதிவரலாறு தொடங்குகின்றது. *1857* ல் ஏற்பட்ட இந்தியக் கலகத்தோடு மோகலாய அரசரின் ஆட்சிமுற்றாக முடிவடைகின்றது. இவ்வாட்சி, சால்புடைய கலைகள் சிறந்த காலப்பகுதியாக விளங்கியது.

# ஈழமும் முஸ்லிம்களும்

ஈழத்தில் இன்று பல இனத்தவர் பல மதத்தவர் பல நாடுகளைச் சேர்ந்தவர் வாழ்கின்றனர். ஈழ நாட்டு மக்கள் என்ற முறையில் இவர் அனைவரும் ஈழத்துப் பழங்குடி மக்களே. வேடர்களைத் தவிர்த்து ஏனையோர் ஈழத்தில் வந்து குடியேறியவரே. அனைவரும் பழங்குடி மக்களெனினும் ஒரு சாரார் முதன் முதலிலும், அவர்களைத் தொடர்ந்து வேறொரு சாராரும், இன்னொரு சாரார் பிற்காலத்திலும் வந்து குடியேறினர். இவ்வாறு வந்து குடியேறி இன்று ஈழ மக்கள் என வாழ்வோரிற் பெரும்பான்மையானோர் சிங்கள மக்கள். சிறுபான்மையினருள் பெருந்தொகையினர் தமிழ் மக்கள். இரண்டாவது சிறுபான்மைச் சமுகத்தினர் முஸ்லிம் மக்கள்.

ஈழத்து முஸ்லிம் மக்களை இலங்கைச் சோனகர், இந்தியச் சோனகர், மலாயர் என முப்பெரும் பிரிவினராகப் பிரிப்பர். ஆங்கிலத்தில் 'மூர்' என்றும் சிங்கள பாளி மொழிகளில் முறையே 'யவன' 'யொான்' என்றும் இலங்கைச் சோனகர் அழைக்கப்படுவர். இலங்கைச் சோனகரை 'மரக்கல மினிசு' என்றும், இந்தியச் சோனகரை 'ஹம்பங்காரயா' என்றும் சிங்கள மக்கள் அழைப்பதும் உண்டு. 'கப்ப லோட்டிகள்' என்பதே 'மரக்கலமினிசு' என்பதன் பொருளாகும். மரக்கலங்களிலே வந்தமையும், மரக்கலங்களிலே வணிகம் செய்தமையும் இப்பெயர் வழங்குவதற்குக் காரணமாய் அமைந்திருக்கலாம். இந்தியச் சோனகரை 'ஹம்பங்காரயா' எனச் சிங்களத்திலும், சம்மாங்காரர் எனத் தமிழிலும் அழைப்பது. அவர்கள் வியாபாரிகள் என்பதைக் குறிக்கின்றது. 'ஹம்பங்' என்பது மலாயா முதலிய பிரதேசங்களில் வழக்கிலுள்ள ஒருவகைப் படகு.

ஈழத்துச் சோனகரின் மூதாதையர் அறபியர் என்பதே பலரின் முடிபு. கலீபா அப்துல் மாலிக் பின் மர்லான் என்பவர் எட்டாம் நூற்றுண்டில் அறேபிய ஆட்சி பீடத்தில் அமர்ந்த போது, கொடுங்கோலாட்சி செய்தனர். அவர் ஹாசீம் கிளையைச் சேர்ந்த அறபியருள் ஒரு பகுதியினரை அறேபியாவிலிருந்து நாடுகடத்தினர். அவர்கள் யூபிரட்டிஸ் ஆற்றைக் கடந்து, தெற்கே சென்று, இந்தியக் குடாநாட்டின் தென் பகுதியில் உள்ள கொங்கன் பிரதேசத்திலும் இலங்கையிலும் மலாக்காவிலும் குடியேறினர். இலங்கைக்கு வந்த கூட்டத்தினர் ஈழத்தின் வடகிழக்கு, வடக்கு, மேற்குக் கரையோரங்களில் எட்டுப் பிரிவாகப் பிரிந்து குடியேறினர். அவர்கள் அவ்வாறு குடியேறிய பகுதிகள் திருகோணமலை, யாழ்ப்பாணம், மாந்தோட்டம், மன்னுர், குதிரமலை, புத்தளம், கொழும்பு, பார்பரின் (வேர்விலை) காலி முதலியனவாம். மாந்தோட்ட மன்னுர்ப் பகுதிகளிற் குடியேறிய முஸ்லிம் மக்கள் முத்துக்குளிப்பு முதலிய தொழில்களைத் தமதாக்கிக்கொண்டனர்.

சிறந்த ஓர் அறபியை நினைவுகூருமுகமாகக் கி.பி. 848ல் அமைக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றனைக் கொழும்பில் ஒல்லாந்த அதிகாரி ஒருவர் கண்டெடுத்தார். அவ்வறபி காலிது இபினு அபூபக்கயா என்பவர். ஹாரூன் அல் றஷீதின் ஆட்சியில் ஈழத்து முஸ்லிம் மக்களின் மதப்பற்று குன்றியிருந்தமையால், மதப்பற்றை ஏற்படுத்துவதற்காகப் பக்தாதிலிருந்து அவர் இங்கு அனுப்பப்பட்டார் எனக் கொள்ளப்படுகின்றது.

கி. பி. 838 ஆம் ஆண்டிற் பிறந்த அறபியப் பூமி சாத்திர ஆசிரியராகிய தாபரி என்பவர். இலங்கையைப் பற்றிக் குறிப்பிடும்போது முஸ்லிம் மக்களிடையே பாவா ஆதமலை என வழங்கும் சிவனெளி பாதமலையைப்பற்றிக் கூறுகின்றார்.

எத்ரிஸி என்பவர் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தமது பூமிசாத்திரத்தில், அக்காலத்து மன்னனின் ஆலோசக ராக நான்கு பௌத்தரும் நான்கு மூஸ்லிம்களும் நான்கு கிறித்தவரும் நான்கு யூதரும் இருந்தனர் என்று எடுத்துக் காட்டியுள்ளார். அந்நூற்றாண்டில் வணிகத்துறையில் உச்ச நிலையை அடைந்திருந்த அறபியர் ஈழத்து அரசரின் நன் மதிப்பைப் பெற்றிருந்தனர். அரசரின் அமைச்சர் குழுவில் அவர்களுக்கு இடம் அளிக்கப்பட்டது. முஸ்லிம் அறிஞரையும் வணிகரையும் கப்பலோட்டிகளையும் கொண்ட நீதி மன்றங் களை மன்னர் அனுமதியுடன் நிறுவினர். பக்தாதுக் கலிபாக் களும் இலங்கை மன்னருக்குப் பரிசில் அனுப்பி, இலங்கை வாழ் முஸ்லிம்களைப்பற்றி அக்கறை காட்டினர். எனவே இலங்கைச் சோனகரின் மூதாதையர் எட்டாம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த அறபியரெனக் கொள்வர்.

ஈழத்து முஸ்லிம்களின் மூதாதையரான அறபியர் ஈழத்திற்கு வருவதற்கு வியாபாரமே முக்கிய காரணமாகும். இலங்கையிலுள்ள வாசனைத் திரவியங்கள் முதலியவற்றை மேற்கு நாடுகளுக்குக் கொண்டு செல்வதும், இலங்கைக்குத் தேவையான பொருட்களைப் பிறநாடுகளிலிருந்து கொண்டு வருவதும் பொருள் வருவாய் தருவதாய் இருந்தன. எனவே, தலைசிறந்த வணிகராய்த் திகழ்ந்த அறபியர் இத்துறையில் பெரிதும் ஈடுபட்டனர். இலங்கையை ஆட்சி செய்த மன்னரும் அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதோடு நில்லாது, இடையூறின்றி வணிகம் செய்ய வழிவகுத்துங் கொடுத்தனர். திரைகட லோடித் திரவியந்தேடிய அறபியர், கப்பலோட்டும் கலையை மேல்நாட்டுக்குக் கொண்டுசென்றனர். அக்கலையை மேனாட்ட வர்க்குப் போதித்தனர். எனவே, கப்பலோட்டிகளாகிய அறபியர் இலங்கையிற் குடியேறி, இலங்கையின் பொருளா தாரத்தையும் விருத்தி செய்தனர்.

இலங்கைச் சோனகரின் மூதாதையர் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பதை இலங்கையின் மேற்குக் கரையோரப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பன்னிரண்டாம் நூற்ருண்டுக்குரிய எகிப்து மன்னரின் நாணயங்கள் உறுதிப் படுத்துகின்றன. எட்டாம் நூற்ருண்டிலிருந்து பதினைந்தாம் நூற்ருண்டுவரை பாரசீகரும் அருபியரும் ஈழத்தின் செல்வங் கொழிக்கும் வணிகத்தைத் தமதாக்கிக்கொண்டனர். அக்காலத்தில் கண்டியோடு நேரடியான தொடர்புள்ள துறைமுகப் பட்டினமாக விளங்கியது புத்தளமே. எனவே, இலங்கைச் சோனகர் அதனைத் தமது கேந்திர நிலையமாக அமைத்துக்கொண்டனர். அவர்களை அங்கிருந்து அகற்ற ஒருவராலும் முடியவில்லை. கொழும்பும் சோனகரின் வணிகத்துக்குச் சிறந்த இடமாக விளங்கியது. இபினு பத்தூத்தா என்ற மொரொக்கோத் தேசசஞ்சாரி கொழும்பு வெளி நாட்டு வர்த்தகரின் துறைமுகமாக விளங்கியது என்றும், வியாபாரிகள் முஸ்லிம்கள் என்றும் தமது நூலிற் குறிப்பிட்டுள்ளார். கார்ணல் யூல் என்பவரும், தமது நூலிற் கொழும்பை விவரிக்கும்பொழுது கொழும்பு, அபிசீனியர் குடியேறிய பகுதி என்றும், சோனகரின் வணிகத்தின் நடு நிலையமாக விளங்கியதென்றும், தமது நூலில் ஆதாரங் காட்டி நிறுவுகின்ருர்.

இன்றும் சில கிராமங்களில் வியாபாரம் அங்குள்ள சில முக்கிய சோனகக் குடும்பங்களிடையே பரம்பரை பரம்பரையாக இருந்து வருகின்றது. இதனுலேயே சிங்களவர் சோனகரை மரியாதையாக அழைக்கும்போது 'முதலாளி' என அழைப்பர்; முதலை ஆள்பவன் என்பது இதன் பொருள். எனவே, பொருளாதார வளர்ச்சியில் முஸ்லிம்கள் முக்கிய இடம் வகித்தனர். இதனுலேயே பல அறபுச் சொற்கள் தமிழ்மூலமாகச் சிங்களத்திலும் புகுந்தன. அவற்றுள் ஒன்று 'தண்டல்' என்பது. 'தண்டல்' என்ருல் படகுத்தலைவன்

எனப் பொருள்படும். இது உறுதுவிலுள்ள 'தண்டேல்' என்பதுடன் தொடர்புடையது. இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பொருளாதாரத் துறையில் மிக முக்கிய பங்கு கொண்ட சோனக வியாபாரி தண்டல் என அழைக்கப்பட்டதில் வியப்பில்லை. பல படகுகள் உள்ள முஸ்லிம் எப்பொழுதும் தண்டல் என்றே தன்னைக்கருதி வந்தான். பின்னர் ஒரு பிரதேசத்தில் வாழ்ந்த முக்கியமான மனிதர் இப்பெயரால் அழைக்கப்பட்டனர். இப்பொழுது இப்பெயர் முஸ்லிம் மக்களிடையே வழக்கற்றிருப்பது முஸ்லிம் வியாபாரி தனது முன்னைய இடத்தை இழந்தமையைக் காட்டுகின்றது. எனினும் மீன்பிடிக்கச் செல்லும் பல படகுகளை உடைய சிங்கள முதலாளி தன்னைத் 'தண்டல்' என வழங்குவதை இன்றுங் காணலாம்.

வணிகத்தில் ஈடுபட்ட சோனகரின் வாழ்க்கை கிராம மக்களுக்கே ஒரு முன்மாதிரியாக இருந்தது. முஸ்லிம் வியாபாரி நேர்மையாக நடந்தமையாலேயே அவனிடம் வணிகம் நிலைத்தது. அவன் எல்லா விஷயங்களிலும் நடுநிலைமை வகித்தான். நியாயமற்ற முறையில் பயன்பெற அவன் முயலவில்லை. எனவே, சோனகர் வாழ்ந்த கிராமத்தின் நேர்மை முறை சோனகரின் பொருளாதாரத்திலே சுற்றிப் பின்னப்பட்டிருந்தது.

இவ்விடத்திற் குறிப்பிட வேண்டியதொன்று உண்டு. இஸ்லாமியர் ஈழத்திற்கு வந்தபோது பாதைகளும், வாகனங்களும், புகைவண்டிப் பாதைகளும், புகைவண்டிகளும் கிடையா. எனவே, அவர்கள் ஒரு போக்குவரத்து முறையை இந்நாட்டிற் புகுத்திவிட்டனர். இம்முறை 'தவளம்' எனப்படும். ஒன்றோடொன்று தொடர்பில்லாத கிராமங்களைத் தொடர்புபடுத்தவும், அத்தகைய கிராமங்களுக்குப் பண்டங்களைக் கொண்டுசெல்லவும் தவளப்போக்குவரத்து முறை பயன்படுத்தப்பட்டது. இம்முறையினால்

மாடுகளின்மேல் வைத்துக் கட்டப்பட்ட சுமைகளைக் கிராமம் கிராமமாக எடுத்துச் செல்லக் கூடியதாய் இருந்தது. இத்தகைய மாடுகள் தவள மாடுகள் என அழைக்கப் பட்டன. உள்நாட்டு வணிகத்துக்குத் தேவைப்பட்ட உப்பு, சாரம், உடை, செம்புப்பாத்திரங்கள், உணவுப் பொருட்கள் முதலியவற்றைக் கொண்டு செல்வதற்கு இம்முறை பயன் பட்டது. எனவே, போக்குவரத்துச் சாதனங்கள் சோனகரின் கையிலேயே தங்கியிருந்தன. நெடுந்தூரப் பிரயாணத்துக்குத் தவள முறையை எவ்வாறு உபயோகிக்கலாமென ஈழத்து மக்களுக்குக் காட்டிக்கொடுத்த பெருமை சோனகருக்கே உரியது. ஒல்லாந்தர் பின்னர் புகுத்திய மாட்டு வண்டிக்குச் சோனகரின் தவள முறையே முன்னோடியாக இருந்தது; சோனகரின் முறையை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் தம்முறையைப் புகுத்தினர்.

ஈழத்தின் பொருளாதார விருத்திக்கு இன்று மாணிக் கக்கல் வியாபாரமும் பெரிதும் பயன்படுகின்றது. இவ்வியா பாரம் சோனகரிடமேயே பெரும்பாலும் தங்கியிருக்கின்றது மாணிக்கக்கல் வியாபாரத்தின் நடுநிலையம் இரத்தினபுரி. சோனகர் களுகங்கையின் ஆற்றங்கரை ஓரத்திலே புதைந்து கிடக்கும் மாணிக்கங்களைத் தேடிச் சென்று தோண்டி எடுத்து இலங்கைக்கு எவ்வளவோ பொருள் வருவாயை அளித்திருக் கின்றனர். 1890 ம் ஆண்டில் மாணிக்கக்கல் வியாபார மூலமாக ஓரிலட்சம் ரூபா வருவாய் இலங்கைக்குக் கிடைத்தது. 1958 ம் ஆண்டில் 2,85,846 கிறுத்து மாணிக் கக்கற்கள் ஏற்றுமதியாய், 15,35,952 ரூபா வருவாய் கிடைத்தது. இயற்கையின் செல்வங்களை ஆற்றுப்படுக்கை யிலிருந்து தேடி எடுத்து, மெருகிட்டு, ஈழநாட்டின் பொரு ளாதாரத்தை விருத்தி செய்திருக்கின்றனர் இஸ்லாமிய மக்கள்.

பதினாறும் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த போத்துக்கேயர், முஸ்லிம்களே தமக்குப் போட்டியாக இருக்கும் பலம் வாய்ந்த எதிரிகளென உணர்ந்தனர். எனவே, இலங்கையைக் கைப்பற்றியபின் போர்த்துகேயரும், அவர்களுக்குப் பின் ஒல்லாந்தரும் முஸ்லிம்களின் வியாபார அபிவிருத்தியைத் தடுக்க நடவடிக்கை எடுத்தனர். இதனால் வணிகத்தில் முஸ்லிம்களுக்கிருந்த செல்வாக்குக் குறையத் தொடங்கியது. இஸ்லாமிய சமயத்திலும் கைவைக்கத் தொடங்கினர். அவர்களின் ஆக்கிரமிப்புக்களின் விளைவாகக் கடற்கரைப் பிரதேசங்களிலும் உள்ளூர்களிலுமிருந்த முஸ்லிம் பள்ளிவாசல்கள் பல அழிக்கப்பட்டன; சில தீக்கிரையாகின. அவை இருந்த இடங்களின் அடையாளங்களைக்கூட இப்போது காணமுடியவில்லை. இதனாற் பழங்காலச் சோனகரின் கட்டடக்கலைச் சின்னங்கள் கூட இப்பொழுது கிடைக்கவில்லை.

எனினும், அத்தகைய பழம் பள்ளிவாசல் ஒன்றைப் பற்றிச் சில குறிப்புக்கள் உள. போத்துக்கேயரால் அழிக்கப்பட்ட மிகப் பழமையான அப்பள்ளிவாசல் நல்லூரில் இருந்தது. அதன் சிற்ப முறை நூற்றுக்கு நூறு அறபுச் சிற்ப முறையாக இருந்ததெனக் கூறுவர். ஒரே முறையில் ஆயிரம் பேர் ஒருங்கே இருந்து தொழக்கூடிய இடவசதி அங்கிருந்தது. போத்துக்கேயர் அழித்த இன்னொரு பள்ளிவாசல் கொழும்புத் துறைமுகத்துக்கு அண்மையில் இருந்தது. ஈழத்து முஸ்லிம் மக்களின் மதப்பற்றுக்குன்றியிருந்த காலத்து பக்தாதிலிருந்து ஹாரூன் அல்றஷீதின் ஆட்சியின்போது இபுனு பக்காயா என்பவர் மதப்பற்றை ஏற்படுத்த ஈழத்துக்கு அனுப்பப்பட்ட வரலாறு முன்பு கூறப்பட்டது. அவர் நிறுவிய பள்ளிவாசலே இதுவாகும். இப்பள்ளிவாசல் பல வகையிற் பயன்பட்டது. தொழுகைக்குரிய இடமாகவும் சமய சித்தாந்த போதனை நிலையமாகவும், திருக்குர்ஆன் மனப்பாடம்

செய்யும் பயிற்சிக் கூடமாகவும், ஏகதெய்வக் கொள்கைப் போதனைச் சாலையாகவும் இப்பள்ளிவாசல் பயன்படுத்தப் பட்டது. இங்கு பயிற்றப்பட்டவரே விவாகப் பதிவுகார ராகவும் கதீபுகளாகவும் நியமிக்கப்பட்டனர். இங்கு பயிற்சி பெற்றோரின் வழித்தோன்றல்களே பிரித்தானியர் காலத்தில் முஸ்லிம் விவாகத்தொடர்பான சட்டங்களைத் தொகுப்பதில் பிரித்தானிய தேசாதிபதிக்குத் துணையாக இருந்தனர். அத்தகைய சட்டங்களையே முஸ்லிம் மக்கள் இன்றும் பின்பற்றி வருகின்றனர்.

பிறநாட்டவரால் அழிக்கப்படாது இன்று ஈழத்தில் நிலவும் பள்ளிவாசல்களில் ஒன்று வேர்விலையிலுள்ள கெச்சிமலைப் பள்ளிவாசலாகும். பதினைந்தாம் நூற்றுண்டில் அலெக்சாண்டிரியாவில் (கி. பி. 1474 ல்) அமைக்கப்பட்ட சுல்தான் அல் அஷ்ரப் கய்யதானியின் பள்ளிவாசலை இது பெரிதும் ஒத்திருந்தபோதும், அங்கு உள்ளதுபோல உருவ அலங்காரங்களும் அழகிய மாடங்களும் கோபுரங்களும் இங்கு இல்லை. அத்துடன் மூன்று பக்கங்களில் கடலாலும் ஒரு பக்கத்தில் தரையாலும் சூழப்பட்ட இப்பள்ளிவாசலில் தரைப்பக்கத்துக்கு எதிரேயுள்ள பக்கவாயிலும் கதவுகளும் தென் இந்திய முறையில் அமைக்கப்பட்டுள்ளன. கறுவாக் காட்டில் கண் ஆசுப்பத்திரிச் சந்தியிலுள்ள மஸ்ஜித், தெவட்ட மரத்தடி மஸ்ஜித் என வழங்கும். அங்கு செய்கு உஸ்மான் வலியுல்லாவின் கல்லறை உள்ளது இந்த மஸ்ஜிதை பத்தொன்பதாம் நூற்றுண்டில் கி. பி. நெய்னு மரிக்கார் என்பவர் தமது சொந்தச்செலவிற் கட்டுவித்தார். இரு மாடிகள் உள்ள பள்ளியின் கிழக்குப் பகுதி தில்லியி லுள்ள மொகலாய வாயில் அமைந்த முறையில் அமைக்கப் பட்டுள்ளது. சிறு கோபுரங்கள் கி. பி. 1363 ல் சீறியாவில் அமைக்கப்பட்ட சுல்தான் ஹஸனின் மஸ்ஜிதில் உள்ள வற்றைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. கல்லறையுள்ள



வேர்விலை

கெச்சிமலைப் பள்ளிவாசல் (பக்கம் 64)

அறையும் குத்து விளக்குள்ள தொழுமிடமும் எகிப்தில் உள்ள முகம்மதலி பள்ளிவாசலின் அழகிய வளைமாடங்களின் பிரதிகளாகக் காட்சியளிக்கின்றன. இங்கு சோனக சிற்ப முறைக்கே சிறப்பான அலங்காரங்களும் உள.

இரத்தினபுரியிலுள்ள ஜன்னத் பள்ளிவாசல் ஈழத்திலுள்ள வனப்புமிக்க பள்ளிவாசல்களில் ஒன்று. கெய்ரோவில் கி. பி. 1304 ல் நிறுவப்பட்ட காலாவூனின் கல்லறைக் கூடத்து அம்சங்கள் சிலவற்றையும் பள்ளிவாசலின் அம்சங்கள் சிலவற்றையும் இப்பள்ளிவாசலிற் காணலாம். புத்தளத்திலுள்ள பள்ளிவாசல் அபுல் அப்பாஸ் அல்மொர்சியின் எகிப்துப் பள்ளிவாசலை ஒத்தது. கொழும்பு மருதானை ஜிமாப் பள்ளிவாசலின் முகத் தோற்றம் அறபு முறையிலோ இஸ்லாமிய முறையிலோ அமையவில்லை. எனினும் அதன் வனப்புமிக்க மேல்வளைவுகள் கி. பி. 1504 ல் கெய்ரோவில் அமைக்கப்பட்ட சுல்தானுல் கூரியின் பள்ளிவாசலில் உள்ளனவற்றை ஒத்திருக்கின்றனவெனச் சிலர் கொள்கின்றனர். கொழும்பிலுள்ள காதிரியர்ப் பள்ளிவாசல் இஸ்லாமியச் சிற்ப முறைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. கவர்ச்சியான வளைமாடத்தின் முடியும், கோபுர வடிவிலமைந்த தொழுமிடமும் மூரிஷ் – சோனகச்சிற்ப முறையில் அமைந்துள்ளன. அதன் வளைமாடங்கள் கி பி. 972 ல் கெய்ரோவில் நிர்மாணிக்கப்பட்ட அல் அஸ்ஹர் பள்ளிவாசலைப் பெரிதும் ஒத்திருக்கின்றன.

புத்த கோயில்களிலும் இஸ்லாமியச் சிற்பக்கலைச் சாயலைக் காணலாம். பதினெட்டாம் நூற்றுண்டில் கண்டி தெல்தேனியா வீதியில் கட்டப்பட்ட புத்த கோயில் கற்களினுல் அமைக்கப்பட்டு, கல்மண்டபம் என்ற பொருளில், சிங்களத்தில் 'கல்மடுவ' என வழங்குகின்றது. அங்குள்ள யன்னல்களில் மூன்று பிறைக்கோடும், பிரதான கதவில் ஐந்து பிறைக்கோடும் இருக்கின்றன. அவை முற்றிலும் அறபு

முறையிலே அமைந்துள்ளன. அதன் சிற்ப வேலையிலிருந்தும் கட்டுவேலையிலிருந்தும் சோனகரே அதனைக் கட்டினரெனத் தெரிகின்றது. அக்காலத்திற் கண்டி இராச்சியத்தில், அதுவும் சிறப்பாகத் தும்பறைப் பகுதியில், சோனகர் பெருமளவில் வாழ்ந்தனர். யப்பஹுவாக் கோட்டை வாசலிலுள்ள யன்னல்களும் இஸ்லாமியச் சிற்பச் சாயலைக் காட்டுகின்றன. நாயக்க மன்னர் காலத்துக் கண்டிச் சிற்பவேலைகளிலும் அருபியச் சிற்பத்தின் செல்வாக்கினைக் காணலாம்.

வைத்தியக் கலை விருத்திக்கும் இஸ்லாமியர் தொண்டாற்றியிருக்கின்றனர். சிங்கள மன்னர் முஸ்லிம் வைத்தியர்களுக்குப் போதிய மதிப்பு அளித்து, அரச சலுகையாகக் காணியையும் விசேட நன்கொடையாகக் கொடுத்தனர். பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயர் ஆட்சியில், முஸ்லிம் சமுகத்தவர் ஒருவர் வைத்திய இலாகாவில் நாட்டு வைத்தியத்திற்குத் தலைவராகக் கொள்ளப்பட்டார். அக்காலத்தில் இலங்கையின் முதல் நீதிபதியாகவும் மன்னரின் இலங்கை ஆலோசனைச்சபைத் தலைவராகவும் இருந்த சேர் அலெக்சாண்டர் ஜொன்ஸ்டன் என்பவரே இவரை நியமித்தார். சேர் அலெக்சாண்டர் இங்கிலாந்திற்கு அனுப்பிய செய்தியொன்றில் இவர் குடும்பத்தில் நாட்டு வைத்திய நூல்கள் பரம்பரை பரம்பரையாக இருந்து வருகின்றனவெனவும், மருந்து மூலிகைகளின் விபரங்களை இவரிடமிருந்து பெறலாமெனவும் குறிப்பிட்டுள்ளார். பேராதனையிலுள்ள அரச பூந்தோட்டம் அந்த முஸ்லிம் வைத்தியரின் முயற்சியாலேயே 1810 ம் ஆண்டில் நிறுவப்பட்டதென்றும், அத்தோட்டத்திற் சிறப்பாக மருந்துச் செடிகளையும் வேறு செடிகளையும் மரங்களையும் கொடிகளையும் இலங்கையின் வியாபாரத்திற்காகவோ, உணவுக்காகவோ பயன்படும் காய்கறிகளையும் உண்டாக்கும் நோக்கத்துடனேயே அவர் அத்துறையில் முயற்சி செய்தாரென்றும் அச்செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்தில் இஸ்லாமியருக்குச் சொந்தமான கிராமிய நடனங்கள் உள. கழியாட்டம் அல்லது கழிக்கம்பாட்டம் என்பது அவற்றுள் ஒன்று. இது கோலாட்டம் போன்றது. இதிற் பெரும்பாலும் ஆண்களே பங்குபற்றுவர். ஆறு ஏழு பேர் சேர்ந்து கழி அடிக்க, ஒருவர் தாளம் போடுவர். பாட்டைப் பாடுபவரும் அவரே. கழி அடிப்போர், கழி அடித்து ஆடுவர். அத்துடன் பல்லவியைச் சேர்ந்து பாடுவர். முஸ்லிம் மக்கள் விழாக்காலத்திலும் பொழுது போக்கும் வேளையிலும் இவ்வாட்டத்தை விரும்பி ஆடுவர். கழி என்பது கோல் என்று பொருள்படும்.

முஸ்லிம் மக்களின் வாழ்க்கை அம்சங்கள் இன்ன முறையில் அமைய வேண்டுமென இஸ்லாம் விரிவாக அமைத்துள்ளது. அதன்படியே ஈழத்து முஸ்லிம்களும் தமது வாழ்க்கையை நடத்துகின்றனர். எனினும், சிற்சில சந்தர்ப்பங்களில் இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு முரணாகாத முறையில் சூழலுக்கு ஏற்ப அவர்கள் வாழ்க்கை அமைந்துள்ளது. உதாரணமாகத் தமிழ் நாட்டுப் பழக்கவழக்கங்கள் சிலவற்றைச் சமய அனுட்டானங்கள் போல இஸ்லாமியப் பொதுமக்கள் பின்பற்றி வருகின்றனர். முஸ்லிம் திருமணங்களில் தமிழ் ஆசாரங்கள் கலந்துள்ளன. முகம்மது நபி (சல்) அவர்கள் போதித்த இஸ்லாம் மதம், 'மஹர்' என்ற பணம் செலுத்துகை முக்கியமானது என வகுத்துள்ளது. அதாவது, மணமகன் தான் மணஞ்செய்யும் மணமகளுக்குக் குறிப்பிட்ட ஒரு தொகை பணத்தை மஹர்ப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். இவ்வாறு மணமகட் பணமாகக் கொடுப்பது மணமகனின் கடமையாகும். எனினும் இப்பொழுது சீதனம் கொடுக்கும் வழக்கம் மலிந்து கிடக்கின்றது. இது முஸ்லிம்களிடையே பரவிய தமிழ் நாட்டு வழக்கமாகும். ஆலாத்தி எடுத்தல், தாலி கட்டுதல், மணமகன் அளிக்கும் கூறையைப் பெற்று மணமகளுக்கு அணிவித்தல், பாற்சோறு அருந்துதல் முதலியனவும் தமிழரிடமிருந்து பெற்ற வழக்கமுறைகளாம்.

முஸ்லிம் விழாக்களிற் குத்துவிளக்குகள் முக்கிய இடம் பெறுகின்றன. முஸ்லிம் வீடுகளில் நடைபெறும் கந்தூரி அன்னதான வைபவங்களிற் குத்து விளக்குத் தனி இடம் வகிக்கின்றது. தலைப்பந்தியிற் குத்து விளக்கு எரித்தல் சாதாரண வழக்காகும். இதுவும் தமிழ் நாட்டுப் பழக்கமே யாகும். சிங்கள மக்கள் வாழ்க்கையிலும் இஸ்லாமியச் செல்வாக்கைக் காணலாம். சிங்களவரின் துப்பாக்கி போன்ற ஆயுதங்களிலும், அவர்களின் உடையிலும் இதனை நன்கு அறியலாம். சிங்களவர் வீடுகளில் அணியும் சாரம் முஸ்லிம் மக்களிடமிருந்து பெற்ற உடையே.

போத்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஈழத்திற்கு வந்ததன் பயனாக இஸ்லாமியரின் முன்னேற்றம் பல துறைகளிலும் தடைப்பட்டது. முஸ்லிம் மக்கள் தம் மதத்தைக் கைவிட்டு மேனாட்டவரின் சமயத்தைக் கடைப்பிடித்திருந்தால் கல்வியில் முன்னேறியிருப்பர். ஆனால், முஸ்லிம்களுக்குச் சமயம் உயிர்போன்றது. அவர்கள் மதமாற்றத்தை விரும்ப வில்லை; இதன் பயனாகக் கல்வித்துறையிற் பிற்போக்கடைந் தனர். இந்நிலையை ஓரளவு சீர்ப்படுத்தியவர் அருபிபாஷா என்று அழைக்கப்பட்ட எகிப்து வீரராகிய அஹ்மது ஒறபி எல் மிஸ்ரி என்பவரே. அவர் அவருடைய காலத்தில் எகிப்தை அயல் நாட்டவரின் ஆதிக்கத்திலிருந்து அகற்றி, எகிப்திய ரிடம் ஒப்படைக்க முயன்றார். அம்முயற்சியிலே தோல்வி யடைந்து, எகிப்திலிருந்து நாடு கடத்தப்பட்டு, இலங்கைக்கு வந்து, இலங்கையில் 1883 ம் ஆண்டிலிருந்து 1901 ம் ஆண்டு வரை வாழ்ந்தார், அவரின் இலங்கை வாழ்வு முஸ்லிம் மக்களின் கல்வி முன்னேற்றத்திற்குப் பெரிதும் துணையாக இருந்தது. இன்று சாஹிறாக் கல்லூரி என்று அழைக்கப்படும் புகழ் பெற்ற முஸ்லிம் கல்லூரி அவரின் முயற்சியாலேயே 1892 ம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதன் பயனாக முஸ்லிம் மக்களின் கல்வி விருத்தி அடைந்துகொண்டே வந்திருக்கின்றது.

ஈழத்து இஸ்லாமியரின் வாழ்க்கையிலே அறபு மொழிக்கு முதலிடம் அளிக்கப்படுகின்றது. அடுத்த மொழி தமிழ் எனக்கருதப்படுகிறது. ஈழத்தில் தமிழ் மொழியிலே இஸ்லாமிய அடிப்படையிலே எழுந்த நூல்கள் பல. ஈழத்து இஸ்லாமியரும் தமிழுக்குத் தனிப் பெருந் தொண்டு செய் திருக்கின்றனர். கவிதைகள் புனைந்தும், வசன நூல்கள் இயற்றியும் சமயக் கிரந்தங்கள் எழுதியும், இசையோடு தொடர்புடைய பாடல்கள் பலவற்றை யாத்தும் பணி செய்திருக்கின்றூர்கள்.

முஸ்லிம்கள் முதன்முதற் குடியேறிய இடங்களுள் ஒன்று வேர்விலை. இவ்விடத்திற்கு அணித்தாயுள்ள மக்கூனில் வாழ்ந்தவர் அப்துல் ஹமீது மரைக்கார்.இவர் செய்கு அஷ்றப் வலியுல்லா என்பவர் பேரில் இரு தோத்திரப் பாடல்களைப் பாடியுள்ளார். அப்பாடல்கள் தோத்திரப் புஞ்சத்தில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று இறைவனிடத்துக் குறை இரங்கும் முனாஜாத்துப் பாடல். இந்த முனாஜாத்துப் பாடல் செய்கு அஷறப் வலியுல்லா பேரிற் பாடப்பட்டது. வேர்விலைக் கடற்கரையோரமாகவுள்ள கெச்சிமலை முஸ்லிம் மக்கள் யாத்திரை செய்யும் திருத்தலங்களுள் ஒன்று. திருத் தலம் என்பதினுற் கெச்சிமலை பாடல்பெற்ற திருத்தலமாய் விளங்குகின்றது. இத்தலத்தின் மீது பாடப்பட்ட ஒன்பது செய்யுட்கள் கெச்சிமலைத் தேவாரம் என வழங்குகின்றன. தோத்திரப் புஞ்சத்தில் இடம் பெற்றுள்ள கெச்சிமலைத் தேவாரத்திற் கெச்சிமலையிற் சமாதியுற்றிருக்கும் செய்கு அஷறப் வலியுல்லா புகழ்ந்து பாடப்பட்டுள்ளார்.

வேர்விலைக்குப் புகழ் தேடிக் கொடுத்த இன்னெரு ஞானி செய்கு முஸ்தபா ஒலியுல்லா என்பவர். தூய இஸ்லாமிய முறையிலிருந்து பிறழாது வாழ்ந்த இப் பெரியாரின் வாழ்க்கையைப் பொருளாக வைத்துப் பல புலவர் பாடினர். குழந்தை மரிக்கார் என்று அழைக்கப்பட்ட

இந்த ஞானியைப்பற்றி ஈழத்துச் சிறந்த இஸ்லாமியப் புலவருள் ஒருவராகிய அகமது லெப்பை மரிக்கார் உபாத்தி யாயர் பல பாடல்கள் பாடியுள்ளார். வேர்விலையைச் சேர்ந்த இப்புலவர் நினைத்தவுடன் பாடும் ஆற்றல் படைத்தவர். மதப் போதகராகவும் ஞானியாகவும் தலைசிறந்த நூலாசிரிய ராகவும் விளங்கிய செய்கு முஸ்தபா ஒலியுல்லாவைப் புகழ்ந்து பாடிய கும்மிப் பாடலும் உண்டு.

இஸ்லாமிய அடிப்படையிலே தமிழ் நூல்கள் இயற்றிய முஸ்லிம் புலவர்களுள் தலைசிறந்து விளங்கியவர் யாழ்ப்பாணத்து சு. அசனு லெப்பை என்பவர். தமிழ், அறபு, ஆங்கிலம் ஆகிய மொழிகளிற் பாண்டித்தியம் பெற்ற இப் புலவர் பாடிய பாடல்கள் யாவும், புகழ்ப்பாவணி என்ற பெயருடன் வெளியிடப்பட்டுள்ளன. திருப்புகழ், முனாஜாத்து, ஆசிரிய விருத்தம் முதலியன அந்நூலில் இடம்பெற்றுள்ளன. முகம்மது நபி (சல்) அவர்களைப் புகழ்ந்து பாடப்பட்ட திருப் புகழ் நவரத்தினத் திருப்புகழ் என வழங்கும்.

கண்டிப் பள்ளியிலுள்ள கல்லறையுள் அடங்கி இருப்பவர் ஷியாபுதீன் வலியுல்லா என்னும் முஸ்லிம் ஞானி. இதனுற் கண்டி மாநகரம் முஸ்லிம் மக்களின் திருத்தலங்களுள் ஒன்ருகக் கொள்ளப்படுகின்றது. திருப்புத்தூரைச் சேர்ந்த அப்துல் காதிறுப் புலவர் இக்கல்லறையில் அடங்கிய ஞானியைப் பாட்டுடைத் தலைவராக அமைத்துக் கண்டி பதிற்றுப் பத்தந்தாதி பாடியுள்ளார். இதே பொருளில் வேருெரு புலவர் கலம்பக உறுப்புக்கள் அமையக் கண்டிக் கலம்பகம் என்ற நூலைப் பாடியுள்ளார்.

இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகளை விளக்கும் நோக்கமாக வினுவிடை முறையில் அமைந்துள்ள நூல் சன்மார்க்க இலகுபோத வினுவிடையாகும். யாழ்ப்பாணத்துச் செய்யிது முகம்மது பலூல் என்ற புலவரின் மாணவரான

மீரான் முகிய்யித்தீன் என்பவர் ஆறுமுக நாவலர் எழுதிய வினுவிடையை முன்மாதிரியாகக்கொண்டு இந் நூலே இயற்றியுள்ளார்.

கீழ்க்கரையைச் சேர்ந்த ஆ. க. அப்துல் கமீது என்பவர் இஸ்லாமிய அடிப்படையில் ஆசாரக் கோவை என்ற நூலே இயற்றுவதற்குக், கற்பிட்டியைச் சேர்ந்த முகம்மது தம்பி மரைக்கார் பொருள் உதவி செய்தார். இதனுல் ஆசாரக் கோவையில் ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும் முகம்மது தம்பி மரைக்கார் தமக்கு உதவி செய்தமையை அந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கையிலுள்ள செய்திகளே உள்ளபடியே எடுத்துக் காட்டுவன நாடோடிப் பாடல்கள். நாடு முழுவதிலும் உயிருடன் உலவும் பாடல்கள் இவை. இந்நாட்டுப்பாடல்கள் ஈழத்து வாழும் இஸ்லாமியரிடையே பல இடங்களில் வழங்கி வருகின்றன. தமிழிலுள்ள இப்பாக்கள் இஸ்லாமிய மக்களின் எண்ணக் கருத்துக்களே, உள்ளத்துடிப்புக்களே, கலேப்பண்பை, வாழ்க்கை முறையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. இப் பாடல்களில் ஓசையும் இனிமையும் கருத்தாழமும் மலிந்து கிடக்கின்றன. நாடோறும் நிகழும் நிகழ்ச்சிகளே நாம் இவர்கள் இலக்கியத்திற் காண்கிருேம். ஈழத்தில் இஸ்லாமியர் நடமாடத் தொடங்கிய காலம் முதல் இப் பாடல்கள் பிறந்து வளர்ந்து வருகின்றன. ஈழத்தில் இஸ்லாமியர் வாழும் மூலே முடுக்குகளிலும் வயல் வெளி களிலும் இப்பாடல்கள் உலாவுகின்றன. இஸ்லாமியர் வாழ்க்கையோடு ஒன்றுபட்டுள்ள தமிழ் மொழியின் பல துறைகளே இப்பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. பொருள் நிறைந்து, நெஞ்சை அள்ளும் தன்மை வாய்ந்தனவாய், அவர்கள் நாவிலே பல்லாண்டு காலமாகத் தவழும் இந் நாடோடிப் பாடல்கள், இஸ்லாமியரின் தாய்மொழி வளத்தையும் ஈடுபாட்டையும் உலகறிய எடுத்து விளம்பும் சான்றுகளாக என்றென்றும் விளங்கும்.

# புவியியலும் வர்த்தகமும்

புவியியற் கொள்கை வரலாற்றிலும் புவியியல் அறிவு வரலாற்றிலும் இஸ்லாமியர் ஆற்றிய தொண்டு சிறப்புடையது. பத்தாம் நூற்றூண்டு ஐரோப்பா ஆபிரிக்கா மேற்கு ஆசியா ஆகிய நாடுகளின் அரசியல் நிலையை ஒரு படமாக வரைந்தால் 'குடியேறிய உலகத்தின்' பெரும்பகுதி இஸ்லாமிய அரசியல் அல்லது இஸ்லாமிய நாகரிகம் இருந்த நாடுகளாகவே காட்சியளிக்கும். அவற்றிற்கிடையே நெருங்கிய அரசியல் ஒற்றுமை இல்லாதபோதும், அவை பொது மதம் பொதுப்பண்பாடு முதலியவற்றல் இணைக்கப் பட்டிருந்தன. அம்மக்கள் - இஸ்லாமியரும் மற்றோரும் - மக்காவை மத மைதானமாகவும் பக்தாதைப் பண்பாட்டு அரசியல் மைதானமாகவும் கொண்ட ஒரு பரந்த சாம்ராச்சியத்தின் மக்களாகத் தம்மைக் கருதினர்.

மதீனுவில் தொடக்கப்பட்ட படையெடுப்புக்களால் மூன்று நூற்றூண்டாக வளர்ச்சி அடைந்த இச்சாம்ராச்சியத்தின் நடுவில் அருபியா இருந்தது. மேற்கே எகிப்தும், ஆபிரிக்காவின் மேற்குக் கரை முழுவதும், ஏறத்தாழ ஸ்பெயின் முழுவதும், சிசிலி, கிறீத் தீவுகளும் இதில் அடங்கியிருந்தன. வடக்கே சீறியா, ஆர்மீனியா முதலியன இஸ்லாத்திற்கு உட்பட்டிருந்தன. கிழக்கே மெசப்பொத்தேனியா, இறுக், பாரசீகம், ஆப்கானிஸ்தான் முதலியன இஸ்லாத்திற்குச் சொந்தமாய் இருந்தன. எட்டாம் நூற்றூண்டிலேயே இந்து நதியைக் கடந்து அதன் அடிவாரப் பகுதியையும் சிந்துவையும் தமதாக்கிக்கொண்டனர்.

இவ்வாறு சமயத்தாலும் அரசியலாலும் ஒன்ருக இணேக்கப் பட்ட பரந்த வல்லரசாக இஸ்லாமிய அரசு அன்றைய உலகிலே திகழ்ந்தது.

இஸ்லாமியர் பரந்த சாம்ராச்சியம் ஒன்றனை நிறுவிய தோடு அமையவில்லே; இந்தியா, ஈரான், கிரேக்கம், உரோம், பாரசீகம், எகிப்து போன்ற இடங்களிலிருந்து தாம் பெற்ற அறிவைப் பயன்படுத்திச் சிறந்த பண்பாட்டையும் உலகிற்கு அளித்தனர்.

அப்பாசிய கலிபாக்கள் காலத்தில், பல்வகைப் பண் பாட்டுப் பாதிப்புகளால், இஸ்லாமிய பண்பாடு உருப்படத் தொடங்குவதைக் காணலாம். அல்மாமூன் ஆட்சி தொடங்கி விஞ்ஞானம் உட்பட எல்லாத் துறைகளிலும் விருத்தியைக் காண்கின்ருேம். பைத்துல் ஹிக்மாஹ் என்ற பெயருடன் விளங்கிய மொழிபெயர்ப்பு நிலேயம் ஹாரூன் அல் றஷீத் காலத்திலேயே நிறுவப்பட்டு, இந்து, கிறித்தவ, யூத, இஸ்லாமிய மொழிபெயர்ப்பாளர் பலர் பணி செய்யும் நிலேயமாக விளங்கியது. இவற்றின் பலனுல் புவியியற் சாத்திர வளர்ச்சியிலும் விருத்தி ஏற்பட்டது.

அறபியர் வாழ்ந்த சூழ்நிலே புவியியல் தொடர்பான விஷயங்களில் அவர்களேக் கவனத்தைச் செலுத்தச் செய்தது. நிலேயான நட்சத்திரங்கள், கிரகங்களின் இயக்கம், பருவத்தின் மாற்றங்கள் முதலியவற்றைப்பற்றிய அறிவு அவர்களுக்குத் தேவைப்பட்டது. அகன்ற வனுந்தரப் பரப்பிற் பிரயாணஞ் செய்வதற்கு இத்தகைய அறிவு இன்றி யமையாததாய் இருந்தது. வனுந்தர மக்களின் செல்வங் களாகிய மாடு ஆடுகளே மேய்ச்சற் பூமியைத் தேடி அடிக்கடி இடத்துக்கிடம் கொண்டுபோக வேண்டியிருந்தது. வனுந் தரத்திற்குரிய செடிவகைகள் விலங்கினங்கள் முதலியன வற்றைப்பற்றி அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள்.

இவற்றைப்பற்றிச் செய்யுளாகவும் வாய்மொழியாகவும் செய்திகளைப் பரப்பி வந்தனர். எனவே, புவியியல் வளர்ச்சி தொடர்பான விஷயங்களில் அவர்களுக்கு ஈடுபாடிருந்தது.

இஸ்லாமிய அரசியல் ஆதிக்கம் பரந்து, அதன் பயனாகச் சகோதரத்துவக் கொள்கைகள் நிலைபெற்றதன் பயனாக, இஸ்லாமியர் வாழும் வேறுபட்ட நாடுகள் பற்றிய செய்திகளிலும் மக்கள் கவனம் செலுத்தினர். ஆண்டு தோறும் மக்காவில் ஹஜ் யாத்திரையின்போது மக்கள் ஒன்றுகூடியதும், இத்தகைய செய்திகளை அறிவதற்கு அனு கூலமாயும் தூண்டுகோலாயுமிருந்தது. ஹஜ் யாத்திரை முஸ்லிம் மக்களின் கட்டாயக் கடமைகளுள் ஒன்றாக இருந்தமையால், உலகத்தில் எல்லா மூலைமுடுக்குகளிலுமிருந்து யாத்திரிகர் மக்காவுக்கு ஆண்டுதோறும் வந்துகொண்டே இருந்தனர். எனவே ஹஜ் யாத்திரை சமய ஒற்றுமையைப் பலப்படுத்துவதோடு அமையாது இஸ்லாமிய நாடுகளுக் கிடையே உள்ள வணிகத்தொடர்பையும் வலுவடையச் செய்து, உலகத்தின் பலபாகங்களைப்பற்றிய அறிவை இஸ்லாமியரிடையே பரப்பியது. ஒரே சமயத்தைத் தழுவிய பல்வேறுபட்ட சமுதாய அமைப்பினர் ஒரே இடத்திற் கூடியது, கருத்துக்களை பரிமாறுவதற்கும் யாத்திரை அனுப வங்களை எடுத்துக் கூறுவதற்கும் வசதியளித்தது. இன்று அறிஞர்கள் கல்விக்கு எவ்வாறு பிறநாடுகள் செல்கின்றார் களோ, அவ்வாறே அக்கால அறிஞர்களுக்கு இவ் யாத்திரைகள் அமைந்தன. ஹஜ் யாத்திரையின் பயனாக பிரயாண வழிகளைப் பற்றிய பல தொகுப்புக்கள் தோன்றின. வெவ்வேறுநாடுகளிலிருந்து மக்காவுக்குச் சென்ற பாதைகள் அமைப்புப்பற்றிய குறிப்புக்களை இவற்றிற் காணலாம்.

தபாற் சேவை முறையைக் கைக்கொண்டதன் காரணமாகவும், பரந்த இராச்சியத்தை நிறுவியதன் பயனாக வழிகளும் போக்குவரத்துச் சாதனங்களும் விருத்தி

யடைந்ததன் காரணமாகவும் பாதைகள் பற்றிய நூல்கள் பல தோன்றின. சிலர் இஸ்லாமிய நாடுகளிற் பல ஆண்டு களாகப் பிரயாணஞ் செய்தனர்; இன்னும் சிலர் இஸ்லாமிய நாடுகளல்லாத தூரத்து நாடுகளுக்குச் சென்றனர். இவ்விரு பகுதியினரும் தம் அனுபவங்களைக்கொண்டு சிறந்த யாத்திரை நூல்கள் எழுதினர். இவர்களைவிடக் கப்பலோட்டி களும் வணிகரும் தங்கள் அனுபவங்களை எழுத்திற் பொறித்துச் சென்றனர். இவற்றில் அரிய பூகோளச் செய்திகளைப்பற்றிய பல விபரங்களுடன் விரிவாக எழுதிய பூகோள நூல்களும் உண்டு.

புவியியல் விஷயங்கள்பற்றி முஸ்லிம்களால் எழுதப் பட்டவற்றுள் மிகப் பழையவை ஹிஷாம் முகம்மது அல் கல்பி [Hisham Muhammad al - Kalbi (820)] எழுதிய பத்து நூல்களே. இந்நூல்களின் சில பகுதிகளே இப்பொழுது கிடைத்துள்ளபோதும், இஸ்லாமிய காலத்துக்கு முன்னுள்ள பகுதிப் புவியியல்பற்றி எழுதிய ஆசிரியருள் இவர் சிறந்த வராகக் கருதப்படுகிறுர். இஸ்லாமிய பூகோள சாத்திரத் திற்கு அடிகோலிக் கொடுத்தது அல் குவாறிசிமி(Al Khwarizimi) எழுதிய 'பூமியின் உருவம்' என்னும் நூலாகும். ஒன்பதாம் நூற்றூண்டின் முதற் பகுதியில் எழுதப்பட்ட இந்நூலின் ஆசிரியர் அல்மாமூன் காலத்தவர். இக்கலிபாவின் ஆணைக் கிணங்கப் பலஅறிஞரால் தயாரிக்கப்பட்ட உலகப் படத் தோடு தொடர்புடையது இந்நூல். இந்நூலிற் பல புவியியற் பெயர்களைவிடப் பழைய பெயர்களும் பல காணப்படுகின்றன.

ஒன்பதாம் நூற்றூண்டின் பிற்பகுதியில் பல நாடுகளைப் பற்றிய குறிப்புக்களைக்கொண்ட நூல்கள் வெளிவந்தன. இபின் குறுதாத்பிஹ் (Ibn Khurdadbih) எழுதிய 'பாதைகளும் இராச்சியங்களும்' ('Routes and Kingdoms') என்னும் நூல் இவற்றுள் மேன்மையானது. முக்கிய அறபிய வணிகப் பாதைகளைப்பற்றிக் கூறுவதோடு, தூரத்துப் பிரதேசங்

களாகிய சீனு, கொறெயா, யப்பான் போன்ற இடங்களைப் பற்றி விபரங்களையும் கொண்டுள்ளது. அல் - யாகூபி (Al yaqubi) தாம் எழுதிய 'நாடுகளைப்பற்றிய நூல்' இல் இஸ்லாத்துக்குரிய நாடுகளின் அரசியல்பற்றியும் தல விவரங்களைப்பற்றியும் கூறி, அந்நாடுகளுக்குச் செல்லும் வழிகளையும் வருணிக்கின்றார். இந்நூல் ஒன்றிலேயே ஈருனுக்கு ஊடாகச் செல்லும் பெருவழிகளைப்பற்றிய விபரங்களைக் காணலாம்.

பத்தாம் நூற்றுண்டிலே தோன்றிய புவியியல் நூல்கள், முந்திய நூல்களைப் பின்பற்றி எழுந்தபோதும் ஒன்பதாம் நூற்றுண்டுக்குப் பின் பெறப்பட்ட இஸ்லாமிய நாடுகளைப்பற்றிக் குறிப்புக்களையும் சேர்த்திருக்கின்றன. இந் நூல்கள் இஸ்லாமிய நாடுகளில்லாத பிற நாடுகளைப்பற்றி அதிகம் கூறவில்லை. ஆனுல் பூகோள விஷயங்களை ஒழுங்காக ஆராய்கின்றன; படங்கள் பலவற்றை இணைத்தும் இருக் கின்றன. இவ்வாறு இணைக்கப்பட்ட படங்களுள் முதற் படம் உலகப் படமாகும். உலகம் வட்டமாகவுள்ள இப்படத்தின் நடுவில் மக்கா மாநகர் அமைந்துள்ளது.

இத்தகைய புவியில் நூலை முதன் முதல் எழுதியவர் அல் பால்கி (Al-Balkhi) என்பவர். இவர் சாமானிய அரச மரபில், அம்மரபு அரசர் சபையிலிருந்த சிறந்த அறிவாளி. இவர் இயற்றிய நூல் இப்போது கிடைக்காதபோதும், இவர் நிறுவிய முறைகளை விரிவாக எடுத்துக் கூறியே பிற்காலத்து முக்கிய புவியியல் நூல்கள் அமைந்தன. அல் இஷ்டக்கிறி (Al Istakhri) இபின் ஹௌக்கல் (Ibn Hawqual) அல் மக்திசி (Al Maqdisi) போன்ருேரின் நூல்களே இவை. அல் இஷ்டக் கிறியின் நூல்களிற் படங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இபின் ஹௌக்கல் இஸ்லாமிய நாடுகளில் முப்பதாண்டு பிரயாணஞ் செய்து, அதனுற் பெற்ற அனுபவத்தையும்

அறிவையும் கொண்டு நூல் இயற்றினார். சிறந்த புவியியல் ஆசிரியராகப் போற்றப்படுபவர் அல் மக்திசி. தான் சென்ற நாட்டு மக்களின் தொழில் வாழ்க்கை முறை முதலியவற்றை இவர் நன்கு கவனித்திருக்கின்றார். அத்துடன் அந்நாடுகளின் இலக்கியங்களைப் படித்திருக்கின்றார். நாடுகள், மக்கள் பழக்கவழக்கம், உற்பத்திப் பொருட்கள், தனிப்பட்ட மாகாணங்கள் முதலியனபற்றி இவர் விவரித்திருப்பவை இடைக்கால அறபிய இலக்கியத்தில் மிகச் சிறந்தவை எனக் கருதப்படுகின்றன.

இக்காலத்தில் எழுந்த வேறு புவியியல் நூல்கள் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தைப்பற்றியே கூறுகின்றன. இவற்றுள் அதிகம் புகழ் பெற்றவை, அருபியக் குடாநாட்டைப்பற்றி அல் - ஹம்தானி (Al - Hamdani) என்பவரும், இந்தியாவைப் பற்றி அல் - பிறூனி (Al - Biruni) என்பவரும் எழுதிய நூல்களே. அல்–பிறூனி சிறந்த விஞ்ஞானியாகக் கொள்ளப் படுவர். இஸ்லாமிய அறிஞருள் அவருக்குத் தனியிடமுண்டு. கிதாப் - அல் - ஹிந்த் (Kitab-al-Hind) என்ற பெயரில் அவர் வெளியிட்ட நூல், பிரதேச புவியியலில் அதிகம் குறிப்பிடத் தக்க நூலாக விளங்குகின்றது. அல்–மசூதி எழுதிய நூலும் சிறப்பிடம் பெறுகின்றது, அவர் இஸ்லாமிய உலகம் எங்கணும் சுற்றுலாச் செய்து, பல பூகோள விபரங்களைத் திரட்டி நூல் எழுதினார். அவற்றுள், 956 ல் வெளிவந்த இரு நூல்கள் இன்றும் நூல் வடிவிலுள்ளன. இந்தியா, இலங்கை, சீனா போன்ற இடங்களுக்கும் இவர் சென்றாரெனக் தெரிகின்றது. இவர் தம் காலத்து வழக்கிலிருந்த புவியியல் நூல்கள் பலவற்றைப் பயன்படுத்தியுள்ளார் என்பது, இவர் குறிப்பிடும் நூல்களின் பெயரிலிருந்து அறியக் கிடக்கின்றது. இவரது ஆழ்ந்த அவதானம், பரந்த அனுபவம், அகன்ற அறிவு ஆகியன இந்நூல்களிற் பிரதிபலிக்கின்றன.

பத்தாம் நூற்றுண்டின் இறுதியில் எழுதப்பட்டு, அண்மையிற் கண்டுபிடிக்கப்பட்ட 'உலகத்துப் பிரதேசங்கள்' (Regions of the World) என்னும் நூல் முக்கியம் வாய்ந்தது. பாரசீகத்தில் எழுதப்பட்ட இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்தியா, திபெற்று, சீனு, தேக்கிஸ்தான், கௌக்கஸஸ், ஸ்பெயின், கிழக்கு ஐரோப்பா போன்ற தூரத்துப் பிரதேசங்களின் புவியியல் வரலாற்றை இதிற் காணலாம்.

பாரசீக யாத்திரிகர் நாசிறி குஷ்று (Nasiri - Khusrau) இக்காலத்துக்குரியவர். எகிப்து, மக்கா போன்ற இடங் களுக்குச் சென்ற இவ்வறிஞர் பாரசீகத்தில் தமது நூலை எழுதினர். ஸ்பானிய தேசத்திலிருந்தும் பலர் பல இடங் களுக்குச் சென்று, நுண்ணிதாகப் பலவற்றை அவதானித்து. அதிக பொருள் கொண்ட நூல்களை எழுதினர். அல் - பக்றி (Al Bakri) அவர்களில் ஒருவர். அவருடைய பிரமாண்டமான நூலில் ஆபிரிக்காவைப்பற்றிய பகுதி மட்டும் குறிப்புகளுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பாதைகளைப்பற்றி – அதுவும் சிறப்பாகக் கரையோரப் பாதைகள், துறைமுகங்கள் முதலி யனபற்றி – விரிவாக இதிற் கூறப்பட்டுள்ளது.

மேற்கு நாடுகளில் அதிகம் கொண்டாடப்படும் முஸ்லிம் புவியியல் ஆசிரியர் அல் - இதிரிசி (Al-Idrisi) என்பவரே. அவர் ஐரோப்பிய நாடுகளிற் பிரயாணஞ் செய்தமையும் சிசிலி தேசத்துக் கிறித்தவ அரசனுகிய இரண்டாம் ரேஜர் அரசசபையிற் பல ஆண்டு தங்கியிருந்த மையும், அவர் பெயர் மேற்கு நாடுகளிற் பரவுவதற்குக் காலாக இருந்தன. இஸ்லாமிய நாடுகளிலும் ஐரோப்பா விலும் பல ஆண்டு சுற்றுலாச் செய்து, அதன் மேல் ரேஜரின் வேண்டுகோளுக்கிணங்கி, அவன் அவையிலேயே தங்கி, சிறந்த புவியியல் நூலை ஆக்கிக்கொடுத்தார். கிறித்தவ

நாடுகளிலும் முஸ்லிம் புவியியல் ஆசிரியருக்கு இருந்த மதிப்பு இதனுல் நன்கு பெறப்படுகின்றது. இவ்வாசிரியர் நூலின் முகவுரையில் அரசன் பல திசைகளிலும் பெறக்கூடிய செய்திகளைத் திரட்ட முயன்ருன் என்றும், பெரிய உலகப் படம் ஒன்றனை வரையக் கட்டளை இட்டான் என்றும் குறிப் பிடுகின்ருர். அல் இதிரிசியின் நூலில் எழுபது படங்கள் உண்டு. அவையே ஒருவிதத்தில் நூலின் முக்கிய பகுதி. நூற் பகுதி படங்களுக்கு விளக்கமாக அமைந்துள்ளது. பழைய புவியியலும் புதிய புவியியலும் ஒன்ருேடொன்று கலந்து விளங்குவதற்கு இந்நூல் தக்க சான்ருகும்.

அல் - இதிரிசிக்குப் பின் தோன்றிய புவியியல் ஆசிரியர்கள் தமது நூல்களிற் சொந்தக் கருத்துக்களுக்கு இடம் கொடுக்கவில்லை. பெரும்பாலான நூல்கள் பிரயாணி களின் குறிப்புக்களாகவே இருந்தன. இவர்களுட் பிரசித்தி பெற்றவர் 1192 ல் மக்காவுக்கும் மெசொப்பத்தேமியா வுக்கும் சென்ற ஸ்பானிய புவியியல் ஆசிரியர் இபின் சுபைர் (Ibn Jubair) என்பவர். மத்தியதரைப் பிரதேசத்தி லுள்ள முஸ்லிம் நாடுகளின் புவியியல், கலாச்சார வர்த்தக வளர்ச்சி ஆகிய பற்றிய செய்திகளை இந்நூலிற் காணலாம். இவரது நூலைப் பிற்காலப் புவியியல் ஆசிரியர் பலர் பயன் படுத்தினர். இபின் சயித் (Ibn Said) என்பவர் எழுதிய நூல் ஆபிரிக்காவைப்பற்றி முஸ்லிம்களுக்கிருந்த அறிவு பெருகிக் கொண்டு வந்ததென்பதனைக் காட்டுகின்றது. பிரதான நகர்கள் இடங்கள் ஆகியவற்றின் பூகோள நிலையை இந்நூல் காட்டுகின்றது-

யாக்கூற் (Yaqut) என்பவர் 1228 ல் வெளியிட்ட புவி யியல் அகராதி அரிய தொகுப்பு நூலாகும். புவியியற் பெயர்கள் யாவும் அகரவரிசையில் தொகுக்கப்பட்டுள்ளன அல் - கஸ்வினி (Al Quazwini) என்பவரின் தொகுப்பு நூலும் இத்தகையதே. 'அறபு இலக்கியத்தின் பிளினி' என இவர்

கொள்ளப்படுவார். இவர் புவியியல் நூலும் அண்டவியல் நூலும் எழுதினர். அண்டவியல் தெய்விகப் பொருட்களைப் பற்றியும் தரைப் பொருட்களைப்பற்றியும் கூறுகின்றது. மலைகள், தீவுகள், கடல்கள், ஆறுகள் போன்றவற்றின் விவரங்களும் இதில் உண்டு. புவியியல் நூலில் தான் சென்ற நாடுகளைப்பற்றிய செய்திகளைத் தருகின்றார். செருமானிய தேசங்களைப்பற்றியும் குறிப்பிடுகின்றார். இவரிற் சிறந்த ஆசிரியர் அல்-திமிஸ்கி (Al-Dimishqi) என்பவர். வேறு ஆசிரியர் இதுவரை தராத புதிய இடங்களின் பெயர்களைத் தருகின்றார். தென்னிந்தியக் கரையோரப் பகுதிகளைப்பற்றி இவர் கூறிய செய்திகள் பெரிதும் போற்றப்படுகின்றன. அதிகமான இடங்களின் பெயர்களை இதிற் காணலாம்.

இபின் பத்துத்தாவின் பிரயாண நூல் மிகவும் முக்கியம் வாய்ந்தது. 1325 ம் ஆண்டு தமது இருபத்திரண்டாவது வயதிற் புறப்பட்டு, முப்பதாண்டுகள் சுற்றலாச் சென்று, ஈற்றில் மொறெக்கோவிற்குத் திரும்பிவந்து, அபு இனன் சுல்தானின் அவையில் இபின் ஜுஸைக்குத் தன் பிரயாணம்பற்றிக் கூற, அவன் அதனை எழுத்திற் பொறித்தான். ஈழம், சீனு, கொன்ஸ்தாந்திநோப்பிள் ஆகிய இடங்களுக்கும், தன் காலத்தாண்ட ஒவ்வொரு முஸ்லிம் அரசனின் நாடுகளுக்கும் சென்ற இடைக்காலப் பிரயாணி இவர் ஒருவரேயாவர். இவர் சுற்றிவந்த பிரதேசம் 75,000 கட்டைகளிருக்குமெனக் கொள்ளப்படுகின்றது. பல்வகைப்பட்ட இயற்கைச் சூழ்நிலைகள், தூரத்து நாடுகளின் விளை பொருள்கள், ஏற்றுமதிப் பொருள்கள், துறைமுகங்கள், கடற்பாதைகள் ஆகியனபற்றிய விவரங்களும் அவற்றின் முக்கியத்துவம்பற்றிய அறிவும் இவர் நூலாற் பெறப்படுகின்றன. மாலைத்தீவுகள் பற்றி இவர் கொடுத்திருக்கும் செய்திகள் சிறந்தனவெனக் கொள்ளப்படுகின்றன. இபின் பத்துத்தாவின் கடற்பிரயாணங்களும், கப்பற் போக்கு

வரத்துப்பற்றிய குறிப்புக்களும் ஒருண்மையை எடுத்துக் காட்டுகின்றன; செங்கடல், அரபிக்கடல், இந்திய சமுத்திரம், சீன சமுத்திரம் ஆகியவற்றில் நடைபெற்ற கடற்போக்கு வரத்து முஸ்லிம்கள் கையிலேயே பெரும்பாலும் இருந்தது.

துருக்கியரின் எழுச்சியாலும், மேற்காசியாவிலும் தென்கிழக்கைரோப்பாவிலும் அவர்களுக்கிருந்த அரசியல் ஆதிக்கத்தாலும், பதினைந்தாம் நூற்றாண்டு தொடக்கம் துருக்கியிலிருந்தே புவியியல் நூல்கள் தோன்றின; புவியியல் விஷயங்கள்பற்றிய ஐரோப்பியர் கொள்கைகளும் கலந்தன. அரசர் ஆதரவில் முந்திய புவியியல் ஆசிரியர்களின் ஏடுகள் சேகரிக்கப்பட்டு, பிரதிசெய்யப்பட்டன; படங்களும் வரையப்பட்டன.

எனினும், இஸ்லாமியப் புவியியல் நூல்கள் இடைக் கால ஐரோப்பியர் கருத்துக்களை நேரில் அதிகம் பாதித்தன வெனத் தெரியவில்லை. அன்றேல், இஸ்லாமிய வானசாத்திர ஆசிரியரின் புவியியல் இலக்கியங்கள் இடைக்கால ஐரோப்பிய சாத்திரத்தில் நேரான தாக்கலை விளைவித்தன. கிறித்தவ அறிஞர் அறபிய சாத்திர இலக்கியத்தைப் பயின்றனர். உலகம் உருண்டை என்ற இஸ்லாமியக் கொள்கையை அவர்கள் உயிருடன் வளர்த்தனர். இலத்தீன் மொழியில் வான சாத்திர அட்டவணைகள் தோன்றின. ஏழு கால நிலை என்ற பிரிவையும் சிலர் ஏற்றுக்கொண்டனர். கண்டுபிடிக்கப் பட்ட உலகத்தின் உருண்டைப் பாதிக்கு ஒரு நடு மையம் உண்டு என்ற இஸ்லாமியக் கொள்கையையும் அவர்கள் ஏற்றுக்கொண்டனர். அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு இஸ்லாமிய புவியியற் கொள்கைகளும் காலாக இருந்தன எனலாம்.

அடுத்து, இஸ்லாமியரின் முந்நீர் வழக்கு கவனித்தற் குரியது. ஒன்பதாம் நூற்றாண்டில் அவர்களது கடற் போக்கு

வரத்து மிகவும் பரந்திருந்தது. இந்திய சமுத்திரத்தில் ஏற்பட்ட இஸ்லாமியக் கப்பற் போக்குவரத்து, ஆசியா விலும் ஆபிரிக்காவிலுமுள்ள இஸ்லாமல்லாத கடற்கரைப் பகுதிகளோடு கொண்ட வர்த்தகத் தொடர்பினுல் முக்கியத்துவம் பெற்றது. ஆனுல் மத்தியதரைப் பகுதியில் இஸ்லாமுக்குட்பட்ட பகுதிகளோடேயே வர்த்தகப் போக்கு வரத்து இருந்தது. எனவே இந்திய சமுத்திரத்திலேயே இஸ்லாமியக் கடற் போக்குவரத்து மேலோங்கி வளரக்கூடிய தாயிருந்தது. இஸ்லாத்தின் எழுச்சியாலும் இருக்கில் அதன் அரசியல் ஆதிக்கம் நிறுவப்பட்டதனுலும், கடற்போக்கு வரத்தில் துணிச்சலோடு இஸ்லாமியர் ஈடுபட்டனர். பத்தாம் நூற்றூண்டின் நடுப்பகுதியில் சீனுவின் கடற்கரைப் பட்டின மாகிய கன்ரன் வரை இஸ்லாமியர் கப்பல்கள் சென்றன. இஸ்லாமிய வணிகர்குழு அந்நகரில் இருந்து வணிகம் நடத்தியது. ஈழத்துத் துறைமுகங்களுக்கும் மேற்கு இந்தியத் துறைமுகங்களுக்கும் இஸ்லாமியர் கப்பல்கள் அடிக்கடி போய்க்கொண்டிருந்தன. ஆபிரிக்காவின் கிழக்குக் கடற் கரைப் பகுதியில், பத்தாம் நூற்றூண்டின் தொடக்கத்தில், பொன்னுக்குப் பெயர்போன சுபலா என்னும் நாடுவரை கப்பல்கள் சென்றன.

பாரசீகக் குடாக் கடலேச் சுற்றியிருந்த இஸ்லாமியக் கப்பற் போக்குவரத்தே பிற்காலத்தில் அக்கடல் வழியாகச் சென்று ஆதிக்கம் செலுத்திய துருக்கியர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோருக்கு வழி காட்டியது. வஸ்கொடகாமா, 1498 ல் ஆபிரிக்காவைச் சுற்றிவந்து ஆபிரிக்காவின் கிழக்குக் கடற்கரையிலுள்ள மலிந்தி என்னும் நாட்டை அடைந்தபோது, அறபியக் கப்பலோட்டியே இந்தியாவிற்குச் செல்லும் வழியைக் காட்டிக்கொடுத்தான். இவன் பெயர் அகமது இபின் மஜீத் என்றும், இவனிடம் நல்ல கடற் படமும் கடற் பிரயாணத்திற்குரிய கருவிகளும் இருந்தனவென்றும் அறிஞர் கூறுவர்.

மத்தியதரைப் பகுதியில் இஸ்லாமியத் துறைமுகங்களோடேயே வணிகம் நடந்தது. சிலுவைப்போர்த் தொடக்கத்திலிருந்து மத்தியதரைப் பகுதி இஸ்லாமியரின் கப்பற் போக்குவரத்துக்கேயுரியது என்ற நிலை மாறியது. ஸ்பெயின் பெரும்பகுதி, சிசிலித்தீவு, இத்தாலியக் கடற்கரைப் பகுதி முதலியவற்றை இஸ்லாம் இழந்துவிட்டது; அதே காலத்தில் ஜெனோவா, பிசா போன்ற இத்தாலியத் துறைமுகங்கள் விருத்தியடையத் தொடங்கின. இதற்கு முன் முஸ்லிம்கள் ஆணையில் மாலுமிகளாகவும் அடிமைகளாகவும் கடற்போக்குவரத்துச் செய்த கிறித்தவர்கள் இப்பொழுது தாமாகவே இதில் ஈடுபட்டனர். ஒரு காலத்திற் கடற் பிரயாணத்தில் இஸ்லாமியரின் ஆதிக்கம் அதிகம் இருந்தது என்பதை இன்று வழக்கிலுள்ள கப்பற் போக்குவரத்துக்குரிய சொற்களிலிருந்து அறியலாம். அட்மிறல் (Admiral) கேபிள் (Cable), அவறேஜ் (Average) ஷல்லொப் (Shallop) பாக் (Barque) மொன்சூன் (Monsoon) போன்ற சொற்கள் அறபுச் சொற்களின் திரிபுகளே.

மெசப்பொத்தேனியாவின் பெரிய நீர்வழிகள் பாரசீகக் குடாவையும் கிழக்கு இஸ்லாமிய சாம்ராச்சியத்தின் மையமாகிய பக்தாத்தையும் தொடுத்துவைத்தன. இதனால் இந்தியச் சமுத்திரத்தின் கடற்போக்குவரத்து உலக வர்த்தகத்துக்குக் கருவியாகிற்று. இவ்வழியாகப் பக்தாத்தின் பெரும் வணிகர் சீனாவிலிருந்து பட்டு, இந்தியாவிலிருந்து வாசனைத் திரவியம், வெவ்வேறு வித மரம், தேங்காய், தகரம் முதலியவற்றைப் பெற்றனர். இப்பண்டங்கள் யாவும் அக்காலத்தில் அந்நாடுகளுடன் நேரடித் தொடர்பில்லாத ஐரோப்பாவுக்கு இஸ்லாமிய நாடுகளிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டன.

கடல் மார்க்கத்திலும், ''பாலைவனக்கப்பலால்'' தரைமார்க்கமாக நடந்த வர்த்தகமே இஸ்லாமியரிடையே பெருவழக்காயிருந்தது. முகம்மது நபி (சல்) தோன்றமுன்பே

வியாபாரிகள் ஒட்டகங்களில் ஆசியாவுக்கும் ஆபிரிக்காவுக்கும் சென்றிருந்தபோதும், ஒட்டகம் மூலம் வணிகம் செய்வதை இஸ்லாத்துடன் தொடர்புபடுத்துவதே வழக்கமாகிவிட்டது. இப்பொழுது சீறிய வனாந்தரம், அறேபியா, பாரசீகம், சகாரா முதலிய இடங்களில் நடந்துவரும் மோட்டார்ப் போக்குவரத்து, மத்திய ஆசியாவிலுள்ள புகைவண்டிப் பிரயாணம், சென்ற சில ஆண்டுகளில் தாபிக்கப்பட்ட ஆகாய விமானச் சேவை ஆகிய யாவும் ஒட்டகங்கள் கடந்த பாதைகளைப் பின்பற்றியவையே.

இஸ்லாமியச் சாம்ராச்சியம் செழிப்புற்றிருந்த காலத்தில் இஸ்லாமிய நாடுகளிடையே போக்குவரத்தும் வர்த்தகமும் ஒட்டகங்கள் உதவியோடேயே நடந்து வந்தன. அதே நேரத்தில் வேறு தரைமார்க்கப் பாதைகளும் சாம்ராச்சியத்திலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றன; இவற்றில் முதலாவது இந்தியாவுக்கும் சீனுவுக்கும் சென்றது; இரண்டாவது ருஷ்யாவின் மத்திய பகுதிக்கும், தென் பகுதிக்கும் சென்றது. மூன்ருவதே ஆபிரிக்காவுக்குச் சென்ற வர்த்தக வழி. இந்தியர்வுக்கும் சீனுவுக்கும் கடல் மார்க்க மாகவும் செல்லக்கூடியதாய் இருந்தமையால், இந்நாடு களுக்குச் சென்ற தரைப் பாதை மற்றைய இருபெருந் தரைப்பாதைகளைப் போல முக்கியத்துவம் பெறவில்லை. மேலும் இந்தியாவிற்குப் போகும் வழி அப்கானிஸ்தானின் மலைகளுக்கூடாகச் சென்றமையால், போக்குவரத்து வில்லங் கமாக இருந்தது. சீனுவோடு வணிகம் நடத்துவதற்கு துருக்கியர் குடியேறிய பிரதேசங்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. சீனுவின் முக்கிய பொருளாகிய பட்டு, பழைய காலத்திற் பாரசீகத்திலும் செய்யப்பட்டது. அத்துடன், பதினெராம் நூற்ருண்டின் பின் அரசியல் நிலை சீனுவுக்குச் செல்லும் தரை மார்க்கத்தை மேலும் அசாத்திய மாக்கிற்று.

வட பகுதிகளில் இஸ்லாமிய வர்த்தகத்தின் செல்வாக்கை எடுத்துக்காட்டுவதற்குத் தொகையான பல இஸ்லாமிய நாணயங்கள் ஆதாரமாக உள்ளன. இந் நாணயங்கள் ருஷ்யாவின் பல பாகங்களிலும், பின்லாந்து, சுவீடன், நோர்வே முதலிய இடங்களிலும், பிரித்தானியாவின் சில பாகங்களிலும், ஐஸ்லாந்திலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. வொல்காவின் மத்திய பகுதியிலும் காசான் மாகாணத்திலும் கண்டெடுக்கப்பட்டுள்ள நாணயங்கள் பால்ரிக் மாகாணங்களிற் கண்டெடுக்கப்பட்ட நாணயங்களிலும் தொகையில் எவ்வளவோ கூடுதலாக இருக்கின்றன. இந்நாணயங்கள் ஏழாம் நூற்றுண்டின் இறுதியிலிருந்து பதினெராம் நூற்றுண்டின் தொடக்கம் வரையுள்ள காலப் பகுதிக்கு உரியன. இவ்வளவு பரந்த பிரதேசத்தில் நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டிருப்பது இஸ்லாமிய கலாசாரச் செல்வாக்கின் அறிகுறியாக உள்ளது. அத்துடன் வடமேற்குப் பகுதிகளில் வசித்த மக்களிடமிருந்து பல்கேரியச் சந்தைகளிற் பல பண்டங்களை முஸ்லிம்கள் வாங்கினர் என்பதையும் இது நிரூபிக்கின்றது. இவர்களுள் ஸ்கண்டிநேவிய ருஷ்யரே முக்கியமானவர்.

அல்-மக்டிசீ போன்ற புவியியல் நூல்களிலிருந்து நரி மயிர், பொறி மூயல் மயிர், ஆட்டு மயிர், மெழுகு, அம்புகள், மரப்பட்டை, மயிர்த் தொப்பிகள், மீன்பிசின், மீன்பல், பதம்பண்ணிய குதிரைத்தோல், தேன், வாள், கேடயம், பலதரப்பட்ட கால்நடைகள் முதலிய பொருட்களை இஸ்லாமிய வியாபாரிகள் வாங்கியதாக அறிகின்ருேம். சிலாவோனிய மக்களிடமிருந்து பல அடிமைகள் பெறப்பட்டனர். ஸ்பெயினிலிருந்தும் அடிமைகள் தருவிக்கப்பட்டனர். இப்படிப் பல நாடுகளிலிருந்தும் அடிமைகளை இறக்குமதி செய்தது, இஸ்லாமிய கலாச்சாரப்பேறுகளை ஐரோப்பாவிற் பரப்புவதற்குப் பெரிதும் உதவியாயிருந்தது.

இந்தப் பரந்த இஸ்லாமிய பல்கேரிய வர்த்தகத்தைவிட- இதற்குச் செருமானியிலும் ஆதாரங்கள் கிடைத்துள்ளன. கஸ்பியன் கடலுக்கு அருகே இருந்த காசார் சாம்ராச்சியத் துடனும் வர்த்தகத்தொடர்பு இருந்தது. இவ்வர்த்தகத்தினால் அதிக பொருட்கள் விற்க வாங்கப்படவில்லை; எனினும், காசார் சாம்ராச்சியம் இஸ்லாத்திற்கும் பைசாந்திய சாம் ராச்சியத்திற்கும் இடைப்பட்டிருந்தமையாற் பல இஸ்லாமிய கீழைத்தேயப் பொருட்கள் கிறித்தவ நாடுகளுக்குச் சென்று சேர்வதற்கு இவ்வர்த்தகம் பெரிதும் உதவியது.

ஆபிரிக்கத் தரைமார்க்க வர்த்தகம் கிழக்குப்பிரதேசம் மேற்குப் பிரதேசம் என இரு பிரிவாக அமைந்திருந்தது. இரு பிரதேசங்களிலும் பிரதான இறக்குமதி பொன்னாக இருந்தது. அஸ்வானுக்குக் கிழக்கே உள்ள பூஜா நாட்டில், இஸ்லாமிய பிரதேசத்திற்கு அப்பால், அல் - அல்லாகி என்னும் பெரிய வர்த்தக நிலையம் இருந்தது. பொற் சுரங்கங்கள் உள்ள பிர தேச வர்த்தக நிலையம் இது. மேற்கு ஆபிரிக்காவில், பொன் பூமியாகிய கானாவுடன் துரிதமான வர்த்தகம் நடந்தது. மொரொக்கோ, அல்ஜீரியா, தியூனிசியா ஆகியவிடங்களிலுள்ள முஸ்லிம் வியாபாரிகள் பலமாதமாகத் தெற்கே பிரயாணஞ் செய்து, பெரும்பாலும் ஔடகோஷ்ட் என்ற பாலைவனப் பசுந்தரை ஊடாகச் சென்றனர். இப்பிரதேசங்களில் நடந்த வியாபாரத்தின் முக்கியத்துவத்தை நிரூபிப்பதற்கு இபின் ஹௌக்கல் என்ற புவியியல் ஆசிரியர், தென் மொரொக்கோ விலுள்ள சிஜில்மாசா என்னும் நகரில் வாழ்ந்த வியாபாரி ஒருவர் பெயரில் 42,000 தினார்க்காசுக்கு எழுதப்பட்ட காசோலை ஒன்றனை ஔட கோஷ்டில் பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் கண்டதாகக் கூறுவர். (காசோலைக்கு அறபுச் சொல் 'ஷக்' என்பது. இதிலிருந்தே இன்று வழக்கிலுள்ள 'செக்' என்னும் சொல் பிறந்தது.) இதற்கு முந்திய ஒன்பதாம் நூற்றாண்டில் இதிலும் கூடுதலான வியாபாரம் நடந்ததென

வும் கூறுவர். பத்தாம் நூற்றுண்டுக்குப் பின்னரும் ஆபிரிக்கா வுடன் முஸ்லிம்கள் வேறு நாட்டவரின் போட்டியின்றி வணிகம் நடத்தினர்.

இஸ்லாத்திற்கும் கிறித்தவ ஐரோப்பிய நாடுகளுக்கு மிடையே நடந்த வர்த்தகம் மேலே கூறப்பட்ட ஆபிரிக்க வணிகத்திலும் குறைந்ததாகவே இருந்தது. நேரான வர்த்தகத் தொடர்பு இருக்கவில்லையென்று கூறலாம். இருந்த சிறிதளவு வர்த்தகமும் யூத வர்த்தகர் கையிலேயே இருந்தது. அக்காலத்து யூதர் பெரும்பாலும் வர்த்தகராகவே இருந்தனர்; அவர்களே இரு பிரதேசங்களிலும் சுதந்திரமாக வியாபாரம் செய்யக் கூடியவராயிருந்தனர். இபின் குற்றடாட்பேஹ் என்பவர், தென் பிரான்சிலிருந்து யூதர் கடல் கடந்து எகிப்து அடைந்து அங்கிருந்து கால் நடையாகச் சுவெசுக்குச் சென்று, அதன் மேற் கப்பல் வழியாக இந்தியா சென்றனரென்றும், மற்றவர்கள் தரை மார்க்கமாகச் சியூற்ருவிலிருந்து எகிப்துக்கும் சீறியாவிலிருந்து இந்து நதிக்கும் சென்றனர் என்றும் கூறுவர். இவர்கள் அடிக்கடி கொன்ஸ்தாந்திநோப்பிளுக்குச் சென்றனர்.

இம்முறையில் இஸ்லாமிய நாடுகள் ஐரோப்பாவிலிருந்து அடிமைகள், உரோமங்கள், படைக்கலம் முதலியவற்றைப் பெற்றன. அதே வியாபாரிகள் கற்பூரம், கறுவா, கஸ்தூரி முதலிய கீழைத் தேயப் பொருட்களை ஐரோப்பாவிற்குக் கொண்டுசென்றனர். பைசாந்திய எல்லைப் புறத்திலிருந்த திறெபிஸோன்ட் (Trebizond) நகரமும் பத்தாம் நூற்றுண்டில் இஸ்லாமிய கிரேக்க வியாபார நிலையமாக விளங்கியது. அங்கு பல இஸ்லாமிய வியாபாரிகள் வசித்தனர். பைசாந்திய அரசாங்கமும், அவர்களிடம் சுங்கவரி விதிப்பதனுற் பெரும் வருவாய் பெற்றது. ஸ்பானிய எல்லைப் புறத்திலும் நேரடியான வியாபாரத் தொடர்பு இருந்தது.

எனவே, கிறித்தவ உலகிற்கும் இஸ்லாமிய உலகிற்கும் வர்த்தகத் தொடர்பு அதிகம் இருக்கவில்லையெனக் கூறலாம். எட்டாம் நூற்றுண்டு தொடக்கம் இத்தாலிய நகரங்களிலும் கொன்ஸ்தாந்திநோப்பிளிலும் முஸ்லிம் பிரயாணிகளும் வர்த்தகர்களும் காணப்பட்டனர் என்பது உண்மையே. ஆனல், இத்தொடர்புகள் பதினேராம் நூற்றுண்டிலிருந்து விருத்தியடைந்த பரந்த வர்த்தகத்தின் வித்துக்களே. அந்நூற்றுண்டிலிருந்து ஐரோப்பிய மக்களிடையே பண்பாட்டுச் சிறப்பு இயல்புகளைப் பரப்புவதற்கு உகந்த பலம் வாய்ந்த சாதனமாக இவ்வணிகம் அமைந்தது. ஐரோப்பிய மக்களும், தமது மன்னர்களின் ஆதரவுடன் இத்தகைய கலை இணைப்பாற் பயனடைய ஆவலாயிருந்தனர்.

இத்தகைய தொடர்பினல், இஸ்லாமிய உலகம் ஐந்து நூற்றுண்டாக உருவாக்கிய வியாபார அபிவிருத்தி ஐரோப்பாவிற்குப் பயனை அளித்தது. மிகத் தூரத்தேயிருந்து சீன, இந்தியா, ஆபிரிக்கா ஆகிய இடங்களிற் பெறப்பட்ட பொருட்களை அளித்ததோடு இஸ்லாம் நின்றுவிடவில்லை; இஸ்லாமிய நாடுகளிலுள்ள இயற்கைப் பொருட்களையும் தொழிற் பொருட்களையும் இஸ்லாம் ஐரோப்பாவிற்கு ஈந்தது. நெசவுத் தொழிற் பொருட்களைப்பற்றி முதலிற் குறிப்பிடவேண்டும். இப்பொழுது வழக்கிலுள்ள பல பெயர்கள் இஸ்லாமிய நாடுகளிலிருந்து முதன் முதல் எவ்விதத் துணிகள் ஏற்றுமதியாயின என்பதைக் காட்டுகின்றன. மசிலின் (மோசலில் இருந்து) தமஸ்க் (தமஸ்கஸில் இருந்து) ஆகியனவும் கோஸ், கொட்டன், சட்டின் போன்ற அறபிய அல்லது பாரசீகப் பெயர்களைக் கொண்டனவும் இதற்கு உதாரணங்கள். கீழைத் தேயக் கம்பளங்களும் அக்காலத்திலே இறக்குமதியாயின.

இடைக்காலச் செருமானியச் சக்கரவர்த்திகளின் அரசியல் அங்கிகளில் அறபு எழுத்துக்கள் பொறிக்கப்பட்

டிருந்தன என்பது குறிக்கற்பாலது. இயற்கை உற்பத்திப் பொருட்களின் பெயரிலிருந்து அவை ஐரோப்பிய நாடுகளுக்கு. இஸ்லாமிய நாடுகளிலிருந்து முதன் முதல் இறக்குமதி செய்யப்பட்டனவென அறியலாம். ஆரஞ்சு, லெமன், அப்றிக்கொற் போன்ற பழவகைகள், பிஞஷ் ஆட்டிச்சோக்ஸ் போன்ற காய்கறிகள், சப்றன் (மஞ்சள்) போன்றவை இவ்வியற்கை உற்பத்திப் பொருட்களுட் சில. இரத்தினக் கற்களின் பெயர்களும் (லப்பிஸ் லசுலி) இசைக் கருவிகளின் பெயர்களும் (லூற், கீதார்) இங்ஙனமே. காகிதம் எப்படிச் செய்வது என்பதனையும் ஐரோப்பியர் இஸ்லாமியரிடமிருந்தே 12-ம் நூற்றுண்டிற் கற்றுக் கொண்டனர்.

இஸ்லாமிய வணிகமும் வணிக மரபுகளும் கிறித்தவ நாடுகளின் வர்த்தக வளர்ச்சியில் ஒரு காலத்திற் பரந்த செல்வாக்குப் பெற்றிருந்தன என்பதற்கு அந்நாட்டு மொழிகளிலுள்ள வர்த்தகச் சொற்களே தக்க சான்று பகருகின்றன. உதாரணமாக, ஸ்ரேலிங் (Sterling) என்ற சொல்லில் பழைய கிரேக்கச் சொல்லாகிய ஸ்ரேற்றர் என்பதன் உருவம் காணப்பட்டபோதும் ஆங்கிலேய மொழியில் அச்சொல் அறபு மொழி மூலமே வந்து இடம் பெற்றது. திரபிக் (Traffic) என்ற சொல்லும் பங்கீடு என்ற பொருள் கொண்ட தப்ரிக் (Tafriq) என்னும் அறபுச் சொல்லிலிருந்தே பெறப்பட்டது. அறிக்கை என்ற பொருளில் வரும் தரீப் (tarif) என்னும் அறபுச் சொல்லே 'தரிப்' (Tariff) என ஆங்கிலத்தில் அமைந்துள்ளது. றிஸ்க் (risk) ரெயர் (tare) கலிபர் (calibre) போன்ற சொற்களும் அறபுச் சொற்களின் உருவ மாற்றங்களே. நாளாந்த வழக்கிலுள்ள 'மகசீன்' (Magazine) என்னும் சொல்லும் பண்டகசாலே என்ற பொருளேயுடைய அறபுச் சொல்லாகிய 'மக்ஹாசிம்' (makkazim) என்பதே. ஆங்கிலத்திலுள்ள செக் (cheque)

என்னும் சொல் அறபுச் சொல்லாகிய 'ஷக்' என்பதே யென முன்பு காட்டினேம். காசோலையைக் குறிக்கும் செருமானியச் சொல்லாகிய 'வெச்சல்' உம், (wechsel) ஒல்லாந்தச் சொல்லாகிய 'விஸ்ஸெல்' உம் (wissel) அறபுச் சொற்களே. கூட்டுப்பங்குக் கழகம் என்ற கருத்துக்கூட முஸ்லிம் வர்த்தகரும் கிறித்தவ இத்தாலிய வர்த்தகரும் கொண்ட பங்கு அமைப்பிலிருந்தே உருவானது.

பெருவழக்கிலுள்ள டொவேன் (douane) என்னும் சொல்லும் மத்தியதரைப் பிரதேசத்து வெவ்வேறு துறை முகங்களில் ஒழுங்கான வர்த்தக இணைப்பு ஏற்பட்ட காலத்தை நினைவூட்டுகின்றது. மேற்கத்திய நாடுகளின் வர்த்தக ஒழுங்கையும் இத்தொடர்பு அதிகம் பாதித்துள்ள தென்பது யாவரும் அறிந்ததே. இஸ்லாமிய அரசருடன் அவர்கள் ஒப்பந்தங்களைச் செய்ததும், கீழைத்தேயத் துறை முகங்களில் அவர்கள் தங்கள் பிரதிநிதிகளை நியமித்ததும் இன்று பன்னாட்டு வணிகத்தை இயக்கும் சட்டங்களின் வளர்ச்சியில் முக்கிய கட்டங்களாம்.

புவியியல் வர்த்தகத் துறைகளில் இஸ்லாமியரிட மிருந்து ஐரோப்பியர் பெற்ற கலாச்சார நன்மைகள், பதினொராம் நூற்றாண்டு தொடக்கம் இருந்த நெருங்கிய தொடர்பின் அடிப்படையிலேயே பெறப்பட்டன. ஐரோப்பியரிலும் பார்க்க இஸ்லாமியர் மிக உன்னத நிலையில் இருந்தமையைப் பத்தாம் நூற்றாண்டு போல வேறெந்த நூற்றாண்டும் எடுத்துக்காட்டாது. அக்காலத்திலேதான் இஸ்லாம் செழிப்பில் உச்சநிலையை அடைந்திருந்தது; ஐரோப்பா கேவலமான நிலையில் ஸ்தம்பித்து நின்றது.

# கலைகள்.

மனித உள்ளத்தில் உணர்ச்சியை உண்டாக்கி இன்பமும் அழகும் அளிப்பது கலையாகும். கலை என்பது அளவும் பொருத்தமும் உடையது; உள்ளத்திற்கு மகிழ்ச்சி கொடுப்பது; உள்ளத்தைத் தன் வயமாக்குவது. மனிதன் தன் அறிவினாலும் மனோபாவத்தினாலும் கற்பனையினாலும் கலைகளை அமைத்து, அவற்றின் மூலமாக உணர்ச்சியையும் அழகையும் இன்பத்தையும் பெறுகிறான். கலையாற்றல் கண்ணைக்கவரும் ஓவியமாக வெளிப்படலாம்; சிற்பமாக உருக்கொள்ளலாம்; கண்ணையும் கருத்தையும் தன் வயமாக்கும் அழகிய கட்டடமாக வெளிப்படலாம்; பிறவாகவும் காட்சியளிக்கலாம்.

அழகுணர்ச்சி உள்ளத்திருந்து எழும் உணர்ச்சிகள் அனைத்திற்கும் காரணமாகி, நற்கலையின் உயிரெனத் திகழ்கின்றது. பொருளை உண்டாக்கும் அவா, ஒன்றனைப் பார்த்து அதனைப் போலச் செய்யும் அவா, உள்ளத்தில் மிதமிஞ்சிக் குவியும் மனவேறுபாடுகளை மட்டுப்படுத்தும் வெளிப்பாடுகள், இயற்கையின் மாய ஆற்றலை அடக்கி வசப்படுத்துவதற்கான அவா, அழகில் ஈடுபடும் அவா ஆகிய அனைத்தும் மனிதனை எண்ணிறந்த செயல்களுக்குத் தூண்டும் கருவியாக அமைந்துள்ளன. இவையனைத்துமே காலந்தோறும் இடந்தோறும் கலை விருத்திக்குக் காலாகவிருந்தன.

மனிதன் தன் தேவைக்கு இன்றியமையாதவற்றை அழகு செய்தான். இயற்கையிற் கண்டவற்றை, கற்பனையிற் கருதியவற்றை, கனவிற் கண்டு மகிழ்ந்தவற்றை கலைகளாக ஆக்கி மகிழ்ந்தான். இக்கலைகளுள் கட்டடக் கலை மக்கள்

மனவளர்ச்சிக்கேற்ப வளர்ந்து வந்திருக்கின்றது. கட்டடங்கள் நாடுதோறும் காலத்திற்கேற்ப வேற்றுமைப்படுகின்ற நாகரிக நிலைகளைப் பெற்றிருப்பினும், தத்தமக்கு அமைந்த பண்பாட்டு நெறியில் வளர்ந்து வந்திருக்கின்றன. எனினும், அவை அயல்நாடுகளின் கட்டடக்கலைப் பண்பாடுகளோடு கலவாத தூய்மை உடையன என்று கூற இயலாது. அயல்நாட்டாரின் கூட்டுறவால் கலைகளின் பண்பாட்டில் கலப்பு ஏற்படுதல் இயல்பே.

இஸ்லாம் ஒரு புதிய கட்டடக்கலையை உருவாக்கவில்லையென்றும், இஸ்லாத்தை ஏற்ற நாடுகளில் அக்கலை முன்பேயிருந்ததென்றும் அறிஞர் சிலர் சொல்வர். பரந்து கிடந்த இஸ்லாமிய சாம்ராச்சியத்திலுள்ள மக்கட் கூட்டம் ஒவ்வொன்றும் இக்கலையை உருவாக்கத் துணையாயிருந்த போதும், இக்கூட்டம் யாவற்றையும் ஒன்ருய் இணைத்த இஸ்லாத்திற்கும், அச்சமயத்தை ஏற்ற அறபியருக்குமே இக்கலை ஆக்கத்திற் பெரும் பங்குண்டு. எல்லாத் தேசங்களையும், மக்களையும், பண்பாட்டையும் அணைக்கும் சகோதரத்துவக் கொள்கை, இஸ்லாமும் பிறவுமாகிய கலையம்சங்கள் பலவற்றை ஒன்றியணைத்துத் தனிப்பட்ட இஸ்லாமியக் கலையொன்றை உருவாக்க ஏதுவாயிருந்தது. அறபியர் தொடக்கத்தில் தமக்கென ஒரு சிறந்த கட்டடக்கலையைக் கொண்டிராதபோதும், இயற்கையாகவே கலையுணர்வு மிக்கவராயும் பிறருடைய சிறந்த கலை அம்சங்களை ஏற்றுக்கொள்ளும் பரந்த மனப்பான்மை உடையராயும் இருந்தனர். தாம் கைப்பற்றிய நாடுகளிற் காணப்பட்ட கலைகளைத் தழுவித் தமது கட்டடங்களை அமைத்தனர். எனவே அவர்களின் கட்டடங்களிற் பல கலைமுறைகளின் சாயலைக் காணலாம்.

தொடக்கத்தில் கட்டடக் கலையில் அறபியருக்கு அதிக ஈடுபாடு இல்லாதபோதும், பல நூற்ருண்டுகளில் இஸ்லாமியக் கட்டடக்கலை ஒரு தனிப்பண்பைப் பெற்று

விட்டது. பலமுறைப்பட்ட கட்டடங்களை ஒன்றுபடுத்தி, அதற்கொரு தனிப் பண்பை அளித்தது இஸ்லாம் மதமே. பொதுவாக எந்நாட்டிலும் சமயமே கட்டடக்கலையின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் காலாக இருந்திருக்கின்றது. இறை வழிபாட்டிற்கெனக் கோயில்களும் கோபுரங்களும் மண்டபங்களும் அமைக்கவேண்டுமென்னும் அவாவே, யாவரும் போற்றும் வியத்தகு கட்டடங்கள் தோன்றுவதற்கு முக்கிய காரணமாயிருந்தன. இறை வணக்கத்திற்கு அமைக்கும் கட்டடம் பிற கட்டடங்களிலும் சிறந்ததாக இருக்கவேண்டும் என்பதனுல், கட்டடக்கலை வளர்ச்சி யடையக் கூடியதாயிருந்தது. இதனுலேயே, கட்டடக்கலையில் அழகையும் உயர்வையும் நாம் காணக்கூடியதாயிருக்கின்றது. எல்லா நாடுகளிலும் தெய்வ வழிபாட்டுக் கட்டடங்கள் மற்றக் கட்டடங்களிலும் சிறப்பும் அழகும் மிக்கனவாக இருப்பதற்குக் காரணம் இதுவேயாகும். சமயத்திற்கு அடுத்த படியாகக் காதலும் சிறந்த கட்டடங்கள் அமைவதற்குக் காரணமாயிருந்தது. அவ்வாறு காதலிற் கனிந்தெழுந்த கட்டடமே தாஜ்மஹால்.

மசூதிகளே இஸ்லாமியரின் பிரதான கட்டடங்கள். இவையாவும் மக்காவிலும் மதீனுவிலும் உள்ள பள்ளிவாசல் களைப் பின்பற்றியே எழுந்தன. இடத்திற்கிடம் இவை வேறுபட்டபோதும், முக்கிய அம்சங்களில் ஒற்றுமை காணப் பட்டது. மக்காவிற்கு வருடா வருடம் இஸ்லாமியர் யாத்திரை செய்தது இதற்குக் காரணமாக இருக்கலாம். அங்கு பல நாடுகளிலிருந்தும் வந்து கூடும் மக்கள் அங்கு பெறப்படும் கட்டடக் கருத்துக்களையும் பிறவற்றையும் தம் முடன் கொண்டு சென்று அந்நாடுகளிற் பரப்பினர். இதன் காரணமாகப் பள்ளிவாசல்கள் பெரும்பாலும் தம்முள் ஒத்திருந்தன.

622 ல் மதீனாவில் முகம்மது கட்டிய முதல் மசூதியைப் பார்த்தே பின்பு பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன. செங்கல் லாலும் கல்லாலும் சதுரமாகக் கட்டப்பட்ட இப்பள்ளி வாசல் நான்கு பக்கமும் சுவரால் சூழப்பட்டுக் கூரையற்ற திறந்த சதுக்கமாயிருந்தது.இந்தச் சாதாரண கட்டடத்திற்கு வேறெங்கிருந்தும் சிற்ப அம்சங்கள் கடன் வாங்கும் தேவை யிருக்கவில்லை. அடுத்த பள்ளிவாசல் கூபா என்ற இடத்தில் 639 ல் கட்டப்பட்டது. பளிங்குக் கற்றூண்களில் நிறுத்தப் பட்ட கூரையை இது உடையதாயிருந்தது. இத்தூண்களின் பளிங்குக் கற்கள் ஒரு பாரசீக அரசன் மாளிகையிலிருந்து கொண்டுவரப்பட்டன. இப்பள்ளியும் சதுரவடிவமானது. ஆனால் இதைச் சுற்றிச் சுவருக்குப் பதிலாக ஓர் அகழி இருந்தது. 642 ல் ஒரு சிறு பள்ளிவாசல் கெய்ரோவிற் கட்டப்பட்டது. இதில் 'மிம்பர்' என்னும் உயர் பீடம் இணைக்கப்பட்டது. தொழுகையை நடத்தும் இமாமைச் சுற்றி 'மக்சூரா' என்னும் மரத்தாற் செய்யப்பட்ட மறைப்புத் தோன்றியது. அதன் பின் 'கிப்லா' வை உணர்த் துவதற்கு 'மிஹ்ராப்' என்னும் நீண்ட அரைவட்ட வடிவ மொன்று சுவரிலே தோண்டப்பட்டது. ஆகவே முதற்பள்ளி வாசல் தோன்றிய எண்பது அல்லது தொண்ணூறு ஆண்டு களில் ஒரு மசூதிக்கு வேண்டிய முக்கிய உறுப்புக்கள் யாவும் தோன்றிவிட்டன. இவற்றோடு தொழுகைக்கு முன் சுத்தி செய்வதற்காக நீர்த்தேக்கமும், பிரதான மண்டபத்தைச் சுற்றித் தூண்களும் சேர்க்கப்பட்டன.

இஸ்லாமியக் கட்டடக்கலையிற் சிறந்து விளங்கும் மினறெற்று (Minaret) என்னும் நெடிய அழகிய மாடத் தூபிகள் 673 ல் முஆவியா என்னும் கலிபாவின் காலத்தில் தோன்றின. இவை பள்ளிவாசல்களுடன் இணைக்கப்பட்ட தற்குக் காரணம் உண்டு. தொழுகை வேளையை உரத்த குரலில் ஒருவர் கூவி அழைப்பது இஸ்லாமிய வழக்கம்.



கெய்ரோ

இபுனு தூலூ மசூதி (பக்கம் 94)

மாடவில் வரிசை

அதனே ஓர் உயர்ந்த இடத்திலிருந்து நிகழ்த்திஞல் வெகு தூரத்திற்குக் கேட்குமாகையால், மசூதியில் மினறெற்றுக்கள் அமைக்கப்பட்டன.


மொசெய்க்கு(Mosaic) என்னும் வருணக் கண்ணுடியைப் பதிக்கும் முறையை 684 ல் இபினு அல் சுபைர் என்பவர் தொடக்கிவைத்தார். எசீதுவின் முற்றுகையின் பொழுது எரிந்த இறைவனின் இல்லமாகிய கஃபாவை அவர் புதுப்பித்துக்கட்டியபோது அவ்வகை வண்ண வேலேப்பாடுகளேச் செய்தார்.

இஸ்லாமியக் கட்டடக்கலே வளர்ச்சியில் அடுத்ததாக இடம்பெறுவது குப்பத் - அல் - ஷக்ரு என்ற கற் கும்மட்டம் (Dome of the Rock). இக்கட்டடத்திலே தனிச் சிறப்புப் பொருந்திய உறுப்புக்களாய கும்மட்டம் (Dome) தூண் மண்டபம் போன்றவை அமைந்துள்ளன. இது தூய கருங்கல் ஒன்றனே நடுவில் வைத்துக் கட்டப்பட்டுள்ளது, இக்கல்லிலிருந்தே நபிகள் நாயகம் (சல்) அவர்கள் இறை தரிசனத்திற்குச் சென்ருர் (மிஹ்ருஜ்) எனக் கூறுவர். இதனேக் கட்டியவர் கலிபா அப்துல் மாலிக் என்பவர். எண்கோண அடித்தளத்தையுடைய இக்கட்டடத்தின் நடுவில் வட்டமான அடித்தளத்தையும் மேலே கும்மட்டத்தையும் கொண்ட மண்டபம் ஒன்று அமைந்துள்ளது. இம்மண்டபத்தை நான்கு உதைகால்களும் பன்னிரண்டு அழகிய தூண்களும் தாங்கி நிற்கின்றன. இதனிடையே வில்போன்ற மாடவில்லுக்கள் (Arches) அமைந்துள்ளன. இதனேத் தொடர்ந்து கட்டடத்தின் உட்பகுதியில் வருணம் தீட்டுதல், சுவரின் வெளிப்பாகத்திலும் அடித்தளத்திலும் அழகிற்காகச் சலவைக் கற்களேப் பதித்தல், கதவுகளிலும் பலகணிகளிலும் வெண்கலக் குமிழ் முதலியவற்றைப் பொருத்துதல், பலகணி முதலியவற்றில் வண்ணம் பூசுதல் சித்திரம் செதுக்கப்பட்ட விட்டங்களேப் பயன்படுத்தல் முதலிய அம்சங்கள் தோன்றின.

714ல் அல்வாலித் என்பவரால் கட்டப்பட்ட தமஸ்கஸ் பள்ளிவாசல் அடுத்ததாகக் குறிப்பிடப்பட வேண்டியது. மேலைத்தேசக் கட்டடக் கலையிற் புரட்சி உண்டாக்கிய கலையம்சமாகிய குதிரைலாட மாடவில்லுக்கள் ( Horse Shoe arches ) இப்பள்ளிவாசலிலேயே முதன் முதல் தோன்றின. இவை பிற்காலத்திற் பலவகையான கூரிய மாடவில்லுக்களாகத் தோன்றின.

இஸ்லாமியக் கலையில் இடம் பெற்றுள்ள அலங்கார வேலைப்பாடுகள் யாவும் வடிவ கணித இயல்பின, மிக நுட்ப மான வடிவகணிதக் கற் செதுக்கு அணிவேலையும் இதன் சிறப்பியல்புகளில் ஒன்று. திருக்குர்ஆன் தொடர்களையே அலங்காரத்திற்குப் பெருமளவு பயன்படுத்தினர். பொன், விலையுயர்ந்த கற்கள் முதலியனவற்றையும் இழைத்தனர். கட்டட அலங்காரத்தில் மனித உருவங்களையும் மிருகங்களின் தோற்றங்களையும் உபயோகித்தல் இஸ்லாமிய கோட்பாடு களுக்கு முரண்பட்டதாகையால் அரபெஸ்க் (Arabesque) என்னும் அழகுபடுத்துங் கலையை உலகிற்கு அளித்தனர்.

இஸ்லாமியர் பள்ளிவாசல்கள் கட்டுவதோடு அமையாது, அரண்மனைகள் சமாதிகள் மடங்கள் மாடங்கள் கோட்டைகள் போன்றவற்றையும் கட்டி, அவற்றிலும் இஸ்லாமிய மரபைத் தோற்றுவித்தனர். ஒன்பதாம் நூற்றுண்டு தொடக்கம் பன்னிரண்டாம் நூற்றுண்டுவரை இராணுவக்கட்டடங்கள் பல எழுந்தன. சிலுவைப்போர் வீரர் சீறியாவிலும் எகிப்திலுமுள்ள கோட்டைகளைப் பார்த்தே பல கருத்துக்களைத் தாம் அமைத்தனர் என்பது யாவருக்கும் உடன்பாடன முடிவு. உதாரணமாகப் பகைவர்மீது கல் அம்பு கொதிநீர் கொதி எண்ணெய் முதலியவற்றை வீசக் கூடிய வெளியைப் போதிகைக்கட்டைகளுக்கிடையே கள்ளக் கதவுடன் அமைக்கும் முறை (machicolation) இஸ்லாமியர்



தமஸ்கஸ் பள்ளிவாசல்

(குதிரைலாட மாடவில்லுக்கள் பக்கம் 96)

கட்டிய கோட்டைகளின் அமைப்பிலிருந்தே ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவியது.


கோட்டையமைப்பில் ஐரோப்பியர் இஸ்லாமியரிட மிருந்து கற்றுக்கொண்ட இன்னேரம்சம் சுவர்களின் வாயிலாகக் கோட்டைக்குள் நுழைவதற்கு அமைக்கும் செங்கோண வாயில் அல்லது வளைவான வாயிலாகும். கோட்டை வாயிலை அடைந்த பகைவர் உள்ளே நடப்பதைப் பார்க்கவோ உள்ளே அம்பு எய்யவோ இத்தகைய வாயில்கள் தடையாயிருந்தன. பக்தாத், கெய்ரோ, அலெப்போ ஆகிய இடங்களிலுள்ள கோட்டை அரண்களில் இத்தகைய வாயில்கள் அமைக்கப்பட்டன.

அடுத்து, இந்தியாவில் இஸ்லாமியக் கட்டடங்கள் எவ்வாறு அமைந்தன என நோக்குதல் தகும். இந்தியாவிற்கு வந்த துருக்கியர் மாடவில் கும்மட்டம் மினறெற்று என்னும் கட்டடக்கலை உறுப்புக்களை இந்தியக்கலையுடன் சேர்த்துக் கட்டடங்களைக் கட்டினர். தென் ஆசியக் கருத்துக்களும் இந்துக் கருத்துக்களும் சேர்ந்து உருவானதே இந்தோ - இஸ்லாமியக் கட்டடக்கலை. இதனலேயே, இடத்துக்கு ஏற்றவாறு பரந்தவேறுபட்ட கட்டட முறைகள் இடத்துக் கிடம் கையாளப்பட்டன. இக்காலப் பகுதிக்குரிய பண்பு களுக்கு எடுத்துக்காட்டாயும் பழையதாயுமுள்ளது குத்புத்தீன் கட்டிய குவத் - உல் - இஸ்லாம் அல்லது இஸ்லாத்தின் பராக்கிரமப் பள்ளி ஆகும். 1193 ல் தில்லி கைப்பற்றப்பட்டமையை நினைவுபடுத்துவதற்காகக் கட்டப் பட்டது இது. இப்பள்ளியோடு பிற்காலத்திற் சேர்க்கப்பட்ட 'குத்துப் மினர்' என்னும் கோபுரம் 238 அடி உயரமுள்ளது. பல காத தூரத்திலிருந்து இதன் முடியைக் காணலாம். அடித்தளத்திலிருந்து நுனிவரை படிப்படியாகக் கூம்பிக் கொண்டு செல்லும் ஐந்து மார்டிகளைக்கொண்ட இத்தகைய கட்டடம் போன்றது உலகில் வேறில்லை என்று

பேர்குசன் போன்ற அறிஞர் கருதுவர். துக்லாக் ஷாவின் சமாதியும் குறிப்பிடத்தக்கது. அரண்செய்யப்பட்ட கோட்டையில், முன்பு செயற்கைத் தடாகமாக இருந்த இடத்தில், தனியே தோற்றப் பொலிவுடன் இக்கட்டடம் விளங்குகின்றது.

மொகலாய ஆட்சியோடு இந்தியக் கட்டடக்கலை புதிய தோற்றம் பெறுகின்றது. துருக்கிய சுல்தான்மாரின் கட்டடங்களிற் காணப்பட்ட கரடு முரடான பண்பு மொகலாய ஆட்சிப் பகுதியில் பாரசீகப் பாதிப்பினால் மிருதுவாகி அழகு செய்யப்பட்டது. குமிழ்வடிவமான கும்மட்டம், மென்மையான தூண்களின் மேல் மூலையிலுள்ள வில் மச்சு மண்டபம் (Cupolas), வில் வளைவாயுள்ள உயர்ந்த கோபுர வாயில்கள் ஆகியனவே மொகலாயக் கட்டங்களின் முக்கியமான பண்புகள். பாபர் என்னும் அரசன் கொன்ஸ்தாந்திநோபிள் போன்ற இஸ்லாமியக் கலைப் பீடங்களிலிருந்து கட்டடக் கலைஞரை வரவழைத்து, இந்தியத் தொழிலாளரையுங்கொண்டு கட்டடங்களைக் கட்டினான். எனினும் அக்பர் காலத்திருந்தே மொகலாயக் கட்டடக்கலை வளர்ச்சியடைந்தது. 'பத்பூர் சிக்றி' என்னும் நகரத்தின் அமைப்பே அக்பரின் கட்டட வேலைகளிற் சிறந்தது. 1601 ல், இந்நகரின் தெற்குப் பக்கத்தில், காண் டேஷைக் கைப்பற்றியதன் நினைவாகக் கட்டப்பட்ட 'புலந்தரவாசா' எனப்படும் உயர்வாயில் இந்தியா முழுவதிலுமுள்ள மிகப் பூரணமான கட்டட வேலையெனக் கொள்ளப்படுகின்றது.

ஷா ஜஹான் காலத்திலே மொகலாயக் கட்டடக்கலை உச்ச நிலையை அடைந்தது. அக்காலக் கட்டடங்கள் அதிக அலங்காரமான நுண்ணிதான பளிங்கு வேலைப்பாடுகளைக் கொண்டவை. 1632 ல் தொடங்கி 1647 ல் கட்டி முடிந்த தாஜ் மஹாலே ஷா ஜஹானின் சிறந்த கட்டடம். நாள்



இஸ்லாமியருக்கே சிறப்பாக உரிய
கோட்டை அமைப்பு (பக்கம் 96)

தோறும் இருபதினாயிரம் தொழிலாளர் இக்கட்டட வேலைக்குப் பயன்படுத்தப்பட்டனர். தாஜ்மகாலை 'அதிசயங் களிலதிசயம்' என்றும், 'உலக அதிசயங்களின் கடைசி அதிசயம்' என்றும் கொள்வர்.

தாஜ்மஹால் அமைந்துள்ள மேடையின் தளம் கறுப்பும் வெண்மையுமான சலவைக் கற்களால் அமைக்கப் பட்டுள்ளது; கணந்தோறும் வேற்றுமைப்பட்டுத் தோன்றும் சித்திரங்களை அமைத்துக்காட்டும் அக்கற்றளத்தின் அதிசயத்தை அளவிட்டுரைக்க இயலாது. ஒவ்வொரு கல்லிலும் காணப்படும் தனித்தனிப் பூவேலையும் அவற்றிலே தோன்றும் சித்திர வேலைப்பாடுகளும் ஒப்பற்றவை.


இம்மேடையைச் சூழ ஈரடி உயரத்திற் கைப்பிடி சுவர்கள் இருக்கின்றன. இவையாவும் வெண்சலவைக் கற்களாற் கட்டப்பட்டவை. இவற்றின் முடிவில் நான்கு மூலைகளிலும் வட்டமான வடிவத்திலே கட்டிய எழுப்பிய நான்கு கோபுரங்கள் உண்டு. நான்கு கோபுரங்களும் மூன்று மாடங்களோடு காட்சியளிக்கின்றன. கோபுரங்களின் உச்சியில் எட்டுத் தூண்களோடு உபரிகைகள் தோன்று கின்றன. உபரிகைதோறும் அமைந்துள்ள தூண்களின்மீது மேலை நாட்டவர் தொப்பி வடிவத்தில் அமைந்த ஒரு கூரையும், அதற்குமேல் கூராக அமைந்த ஒரு தூபியும் காணப்படுகின்றன. இந்நான்கு கோபுரங்களும் கல்லறையி லுள்ள அரசியைக் காக்கும் நான்கு தெய்வமகளிரென விளங்குகின்றன.

இம்மேடையின் நடுவில் நூற்றெண்பத்தாறு அடிச் சதுரக் கல்லறை மாளிகை அமைந்திருக்கின்றது. இம்மாளி கையைச் சூழ்ந்து பல மாடிகள் இருக்கின்றன. இம்மாடி களின் நடுவில் முப்பத்தெட்டு அடி குறுக்கு விட்டமும், எண்பதடி உயரமும் உடைய அரைப்பந்து வடிவமான நடு

விமானம் உண்டு. இவ்விமானத்தைப் பொன் மயமான பிறை சூழ்ந்திருக்கின்றது. இப்பொன் பிறை நிலமட்டத்திலிருந்து இரு நூற்றறுபது அடி உயரத்தில் உண்டு.

இக்கல்லறை மாளிகையின் நடுக்கூடம் அறுபதடி குறுக்கு அளவுடைய எண்கோண வடிவமான ஓர் அறை யாகும். இக்கூடத்திற்கு வரும் வழிகள் நூற்றுமுப்பது அடி நீளமுள்ளவை. இந்த எண் கோணவடிவமான கூடத்தைச் சூழ எட்டறைகள் உண்டு. இவ்வறைகளிலிருந்து வரும் வாயில்கள் கூடத்தின் பக்கமாய்ச் செல்வதற்கு அமைந்தவை. விண்ணுலகம் அடைந்த ஷாஜஹானின் ஆன்மாவுக்கும், அவருடைய காதலி மும்தாஜின் ஆன்மாவுக்கும் எப்பொழுதும் சாந்தி அளிக்கும் நோக்கத்தோடு வேளை தவருமல் திருக்குர்ஆன் ஓதும் முல்லாக்கள் இவ்வறைகளில் வாழ்ந்து வந்தனரெனக் கூறுவர். இக்கூடத்தின் வாயில்கள் முட்டையின் வளைவிலே அமைந்திருந்தன; பதினெட்டடி உயரம் வாய்ந்திருந்தன. ஒவ்வொரு வாயிலின் தலைப்பாகத் திலும் அரை முட்டை வடிவமாக அமைந்த யன்னல்கள் இருந்தன.

இந்நடுக்கூடமும் அதன் வாயில்களும் கதவுகளும் யன்னல்களும் தளமும் அதைச் சுற்றியுள்ள அறைகளும் யாவும் அதிசயமான சித்திரவேலைப்பாடுகளோடு காணப்படு கின்றன. ஷாஜகானின் காலத்தில் இம்மாளிகையின் சுவர் களிலும் கதவுகளிலும் அரிய நவமணிகள் பதிப்பிக்கப்பட் டிருந்தனவெனக் கூறுவர். இப்பொழுது அம்மணிகள் இருந்த இடங்களிலே பல நிறக் கண்ணுடிகளே காணப்படுகின்றன. நடுக்கூடத்தில் இரு சமாதிகள் உள. ஒன்று ஷாஜஹா னுடையது; மற்றது மும்தாஜ் மஹாலுடையது. மேலே உள்ள சமாதிகளுக்குக் கீழே இருக்கும் அறைகளிலேயே காதலர் இருவரின் உடல் அடங்கிய பேழைகள் இருக் கின்றன. அவற்றை இஸ்லாமியரல்லாதோர் பார்ப்பதரிது.



தாஜ் மஹால் (பக்கம் 100)

ஷா ஜஹான் காலத்தில் தாஜ் மஹால் எவ்வளவோ அழகு வாய்ந்ததாக இருந்திருக்கவேண்டும். கலேப்பற்று அற்றவரும் கொள்ளேக்காரரும் இக்காதற் கோயிலின் அலங் காரங்கள் யாவற்றையும் களவாடிச் சென்றுவிட்டனர். அவ் வாருயினும், அதன் இயற்கையழகு இன்னும் குறையாம லிருக்கின்றது. முழு மதியின் வெண்ணிலவு வீசும் இரவிலே, ஆக்ரா நகரின் பெரிய மாளிகை ஒன்றின் மேல்மாடிகளில் ஏறி நின்று தாஜ் மஹாலேப் பார்க்கின், வானோர் மண்ணுலகில் எழுப்பிய காதல் மாளிகையோவெனத் தோன்றும் என அறிஞர் கூறுவர். பாரதநாட்டு உத்தமப் பெண்களின் ஒருத்தி யாகிய மும்தாஜ் பேகம் என்பவளேக் காதலித்த அரசனுகிய ஷா ஜஹானின் உளக் கோயிலிற் குடிகொண்ட காதல் தெய்வத்தின் இருப்பிடமே தாஜ்மஹால். உலகிலே ஈடற்றும் பாரதநாட்டுச் சிற்பக்கலேக்குச் சிகரமாகவும் விளங்கும் தாஜ் மஹால், காதலரின் மனம் ஒன்றிய நிலேயைப் பாரத நாட்டார் எவ்வளவாக மதித்தனர் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இஸ்லாம் நமக்களித்த கட்டடச் செல்வங்கள் யாவற்றிலும் மகுடமாய், விண்ணுல கத்தின் பேரரசிபோலப் பேரழகு வாய்ந்ததாய்த் துலங்குவது தாஜ் மஹாலேயாம்.

இப்போதுள்ள இஸ்லாமியக் கட்டடங்களில் மேலே கூறிய அம்சங்கள் யாவும் முற்றுக வளர்ச்சியுற்று ஒருங்கே அமைந்திருக்கின்றன. பள்ளிவாசல்களில் வழக்கமாகத் திறந்த மண்டபமும், அதனேச் சுற்றித் தூண்வரிசையும், தலே வாயிலில் மாடத்தூபியும் இருக்கும். வடிவுகணித அலங்கார வேலேப்பாடுகளும், கற்செதுக்கு அணிவேலேயும் நிறைந் திருக்கும். நெடிய அழகான மாடத்தூபிகளும் பலவகைப் பட்ட கூரிய குதிரைலாட வடிவமான மாடவில்லுக்களும், பலகணித் துவாரங்களும், கும்மட்டங்களும் அழகுபெற அமைந்திருக்கும். அதன் அளவு, உருவ அமைப்பு, வருணப்

பூச்சு, பல்வகைப் பாகங்களும் ஒன்றோடொன்று பொருத்தப் பட்டிருக்குந் தன்மை முதலியன கவர்ச்சிவாய்ந்தன. இஸ்லாமியக்கலை வெறும் கட்டடக்கலை மட்டுமன்று; தொழில் நுட்பம் அழகு கற்பனை ஆகிய மூன்றும் சேர்ந்த ஒரு சிற்பக்கலை எனலாம்.

அழகுக் கலைகளுள் ஓவியமும் ஒன்றாகும். வாழ்க்கைக்கு அழகும் தூய்மையும் அளித்து மாக்களை மக்களாக்கும் ஆற்றல் இதற்குண்டு. கித்தான்துணி, சுவர், மரப்பலகை, காகிதம் போன்ற தட்டையானதும் சமமானதுமான ஒரு பரப்பின்மீது வண்ணம் குழைத்து துகிலிகை கொண்டு உருவம் வரைந்து நிறமும் தோற்றமும் உயிரும் அளித்தலே ஓவியமாகும். இயற்கையிலும் வாழ்க்கையிலும் காணும் பொருள்களையும் காட்சிகளையும் பெறும் அனுபவங்களையும் உள்ளக் கிளர்ச்சியும் அழகுணர்ச்சியும் தோன்ற, வண்ணங் கொண்டு ஒன்றன்மீது வரையும்போது ஓவியம் விழுமிய தொரு கலையாகின்றது.

உள்ளத்தின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு என் றென்றும் இன்பத்தினை அளிக்கவல்ல ஓவியக்கலை ஒவ்வோர் இனத்தவருக்கும் ஒவ்வொருவிதமாகப் பரிணமிக்கின்றது. அவர்களின் தனிப்பண்பே இதற்குக் காரணம். மனிதனின் தனிப்பண்பை வெளியிடும் சாதனமாகிய இக்கலையை இஸ்லாமியரும் வளர்த்துள்ளனர். இஸ்லாமிய சமயம் உயிருள்ள பொருள்களை வரைவதையும் சிற்பங்களாக அமைப்பதையும் கண்டித்தபோதும், மனிதனுக்கு இயல்பாக வுள்ள அழகுணர்ச்சியை அது ஒடுக்கிவிடவில்லை. வைதிக முஸ்லிம் மக்கள் திருக்குர்ஆனின் மூல பாடங்களை ஏடுகளிற் பிரதி செய்யும்போது, அளவு பொருத்தம் இயைபு ஒழுங்கு ஆகிய ஓவிய இலக்கணங்களுக்கேற்ப ஏட்டில் தங்கள் கையெழுத்துக்களை மணிமணியாகப் பொறித்துத் தங்கள்

அழகுணர்ச்சியை வெளிப்படுத்தினர். இவ்விதமாக ஏடுகளிற் பிரதி செய்தல் கலிகிரபி (Calligraphy) எனப்படும்.

உயிருள்ள பொருள்களை வண்ணம் வரைவதிலும் இதுவே சிறந்ததென்றும், சமய நூல்களையும் சித்தர் மொழிகளையும் மகாகவிகள் கூற்றுக்களையும் இவ்வாறு பிரதி செய்வது ஆத்ம ஈடேற்றத்திற்குரிய வழியென்றும் அவர்கள் கருதினர். நாளடைவில், இப்பிரதிகளில் இடையிடையே சிறு விளக்கப்படங்களைச் சேர்த்தனர். இவ்விளக்கப்படங்கள் மினியேச்சர்ஸ் (Miniatures) எனப்படும். இவ்விளக்கப்படங்களிற் சில முகம்மது நபி (சல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றையும் பெயர்பெற்ற இஸ்லாமியப் பெரியார்களின் வரலாற்றையும் அழகுபடச் சித்திரித்தன. இங்ஙனம் பிரதி செய்யும் கலையும், ஏட்டுப் பிரதிகளிற் சிறிது விளக்கப் படங்கள் வரையும் கலையும் மென்மேலும் வளர்ச்சியுற்றன.

உயிருள்ள பொருள்களை வரையக்கூடாதென்ற தடை இஸ்லாமியர் ஆட்சி செய்த எல்லா நாடுகளிலும் இருந்து வந்தது. 13 ம் நூற்ருண்டின் நடுப்பகுதியில் பாரசீகத்திலும் துருக்கிஸ்தானிலும் மங்கோலியர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் படம் வரையும் கலை உயிர்பெற்றது. மங்கோலியர் தாம் படையெடுத்த நாடுகளிற் கலைச்சின்னங்களை அழிக்காமற் பாதுகாத்தனர். தொழிலாளிகளையும் சிற்பிகளையும் கைது செய்து தங்கள் சொந்த நாட்டுக்குக் கொண்டு சென்றனர். இந்தியா, திபேத்து, சீனுப்போன்ற நாடுகளிலுள்ள கலைஞருடன் தொடர்புகொண்டனர். தைமூர் பரம்பரை அரசரின் ஆதரவில் ஓவியக்கலை வளமுற்றது. இந்திய ஓவியக் கலையின் மரபு பாரசீகத்திலும் துருக்கிஸ்தானிலும் பரவியது. இவற்றின் பயனுகப் பாரசீகத்தில் ஒரு புதிய ஓவியக் கலையும் தோன்றியது. பதினைந்தாம் நூற்ருண்டின் இறுதியில் பிஜாத் என்னும் ஓவியன் புதிய ஓவிய மரபைத் தொடக்கி வைத்தான். இதன் பயனுகப் பாரசீக ஓவியர் இயற்கை

யையும் மிருகங்களையும் கூர்ந்து கவனித்து அவற்றை வரைந்தனர்.

இந்தியாவில் மொகலாய மன்னர் ஆண்டு வந்த காலத்தில் பிஜாத்தின் கலை மரபைச் சார்ந்தவரே இந்தியாவில் மொகலாய ஓவிய மரபைத் தொடக்கி வைத்தனர். பாபர் காலத்திலும் அவன் மகன் ஆட்சியிலும்இந்தப் பாரசீக ஓவிய மரபே பெரும்பாலும் கையாளப்பட்டது. அக்பரின் காலம் ஓவியக் கலை வளர்ச்சிக்கு ஏற்றதாக அமைந்தது. பாரசீக மரபைச் சார்ந்த கலைஞர் அயல்நாடுகளிலிருந்து அழைக்கப்பட்டனர். அவர்களுடன் சேர்ந்து இந்திய ஓவியக் கலைஞரும் ஓவியம் வரைந்தனர். குவாஜா அப்துஸ் சமாத், மீர் சையது அலி போன்ற இஸ்லாமிய ஓவியர்களும், தஸ்வாநாத், பசாவன், சேசு. ஜகன், தாரா, அரிவம்சன், முகுந்தன், ராமன் போன்ற இந்திய ஓவியர்களும் அக்பரால் ஆதரிக்கப்பட்டனர். பாரசீகக் கவி நிஜாமியின் கவிதைகள் அம்சாவின் கதைகள் போன்ற நூல்களுக்கு விளக்கப் படங்களை வரைந்தும், வரலாற்றை விளக்கும் படங்களை வரைந்தும், அரண்மனைச் சுவர்களிலும் மாளிகைச் சுவர் களிலும் கதையோவியங்கள் தீட்டியும், உருவப்படங்கள் வரைந்தும் இவ்வோவியர் கலையை வளர்த்தனர். அக்பரின் உருவப்படமும் பிரபுக்களின் உருவப்படங்களும் வரையப் பட்டன. இப்படங்களைப் பின்பு ஒரு நூலாக ஒருங்கே சேர்த்தனர். அக்பர் பாரசீக இந்து சீன ஓவியக்கலைகளின் சிறந்த இயல்புகளை ஒருங்கே தொகுக்க எடுத்த முயற்சியால் மொகலாய ஓவியம் என அறிஞர் சிறப்பாகக் குறிப்பிடும் ஓர் ஓவிய மரபு உண்டாயிற்று. இந்து ஓவியரும் இஸ்லாமிய ஓவியருஞ் சேர்ந்து தொழில் செய்தமையாலேயே இருவித மரபுகளுக்கும் கூட்டுறவு ஏற்பட்டு, இருமுறைகளும் கலப்புற்று ஓவியக்கலை புத்துயிரும் புத்துருவும் பெற்றது.

ஜஹாங்கீர் காலத்தில் மொகலாய ஓவியக்கலை வளர்ச்சி உச்சநிலை அடைந்தது. உள்ளதை உள்ளபடியே சித்திரித்த அக்கால ஓவியக்கலை ஐரேனிய, இந்திய, ஐரோப்பியக் கலப்பைப் பெற்றிருந்தது. இத்தாலிய ஓவியக் கலைஞராலே தீட்டப்பட்ட படங்கள் பல நாட்டிற் பரவின. இவற்றை ஜஹாங்கீர் பெரிதும் விரும்பிப் பெற்று,சிலவற்றைப் பிரதி செய்வித்துத் தன் கோடைக்கால அரண்மனையில் தொங்கவிட்டிருந்தான். தொமஸ் ரூே போன்ற ஆங்கிலேயர் பல ஐரோப்பிய ஓவியப்படங்களை அவனுக்குப் பரிசிலாக அளித்தனர். அபுல் ஹசன் மன்சூர் போன்ற ஓவியக்கலைஞர் அவனின் ஆதரவைப் பெரிதும் பெற்றிருந்தனர். அக்காலக் கலைஞர் அரண்மனை வாழ்க்கை, தர்பார் காட்சிகள், வரலாற்று நிகழ்ச்சிகள், போர்க்காட்கிகள், வேட்டைக் காட்சிகள் போன்றவற்றை வரைந்தனர். அரசர், இளவரசர், விதூஷகர், தாசிகள், முனிவர், துறவிகள் போன்றோரின் உருவங்களையும் தீட்டினர்.

முகச்சாடையிலிருந்தே பண்புகள் புலப்படுமாறு வரைவதில் இவர்கள் தேர்ந்தவர்கள். பலரகமான வேலைப்பாடு பொருந்திய ஆடை ஆபரணங்களையும், பட்டுச் சமுக்காளங்கள் பொற்சிங்காதனங்கள் போன்றவற்றையும் இவர் அழகாக வரைந்தனர். இவர்களின் கூர்ந்து அவதானிக்கும் பண்பையும், கூரிய புத்தியையும் ஆற்றலையும் இவ்வோவியங்களிலிருந்து அறியலாம். இவற்றின் சிறப்பைக் கண்டு இவை தீட்டப்பட்ட காலத்திலிருந்த ஒல்லாந்த ஓவியக் கலைஞரான இரெம் பிராண்ட் என்பவர் இப்படங்களைச் சேர்த்தும் பிரதிசெய்தும் போற்றினர்.

வேட்டையில் அதிக விருப்பமுடையவன் ஜஹாங்கீர். எனவே வேட்டைக்காட்சிகள் பல ஓவியரால் தீட்டப்பட்டன. அரசாங்க விலங்குக் காட்சிச் சாலையிலிருந்த பல விலங்குகளையும் பறவைகளையும் நேரே பார்த்து வரையும்படி

செய்தான். கோவாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பறவை களும் விலங்குகளும் அபூர்வமானவை. அவற்றுள் ஒன்ருகிய துருக்கி வான்கோழியையும், லைலி – மஜ்னூன் என்ற செல்லப் பெயரோடு ஜஹாங்கீர் வளர்த்து வந்த இரு சாராப் பறவைகளையும் ஓவியக் கலைஞஞகிய மன்சூர் நேரில் வைத்து வரைந்தான். இப்படங்கள் இன்று கல்கத்தாச் சித்திர சாலையில் உள. மன்சூர் பறவைகளையும் பூக்களையும் வரைவதில் பெரும் ஆற்றல் பெற்றிருந்தான். மனேகரன் என்னும் கலைஞன் கறுப்புக் கலைமான்களை வரைந்தான். அவற்றுள் ஒன்று மற்ற மான்களை மயக்கிப் பிடிக்கப் பழக்கப் பட்ட மாஞகும். அது தயங்குவதையும், காவற்காரன் முத்தமிடும் பாவனையில் அதனை மெல்ல நடத்திச் செல்வ தையும் மனேகரன் மிகவும் சிறப்புறத் தீட்டியுள்ளான். இவ்வாறு உள்ளதை உள்ளவாறு தீட்டும் பண்பு ஜஹாங்கீர் காலத்திலிருந்துவந்தது. இவை சமயத் தொடர்பற்றவை. கைத்திறமையே இவற்றின் முழுச்சிறப்பும். இவ்வகை ஓவியமே காலஞ் செல்லச் செல்ல நாடெங்கும் பரவியது.

இசைக்கலை நுண்கலைகளுள் தலைசிறந்த ஒரு கலையாகும். முஸ்லிம்கள் இசைக்கலையெனக் கருதியவற்றின் எடுத்துக் காட்டுக்கள் 'ஆயிரத்தோர் இரவுகள்' என்ற நூலிற் பிரதிபலிக்கின்றன. பிறப்பு முதல் இறப்புவரை எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் பயன்படுத்தக்கூடிய முறையில் முஸ்லிம் களின் இசைக்கலை அமைந்துள்ளது. இஸ்லாம் இசை வகைகளை ஒரு முகமாக ஏற்றுக்கொள்ளாதபோதும், ஆத்மீகத் துறையில் இசையின் பயனை நன்கு அறிந்திருந்தது. முஸ்லிம் ஞானிகளாகிய சூபியாக்கள் தத்தம் அனுபவங்களை இசைமூலம் வெளிப்படுத்தினர். ஏனையோர் தத்தம் சமயக் கடமைகளை நிறைவேற்ற இசையைப் பயன்படுத்தினர். 'ஆயிரத்தோர் இரவுகள்' என்ற கதையிலிருந்து இசை சிலருக்கு உணவாகவும் சிலருக்கு மருந்தாகவும் பயன்பட்ட

தென அறியலாம். இசைக் கருவிகள் சிலவற்றின் பெயரை ஒப்புநோக்கி இசைக்கலைக்கு முஸ்லிம்கள் ஆற்றிய தொண்டைச் சிலர் மதிப்பிடுவர். யாழ் என்ற பொருளில் ஆங்கிலத்தில் வழங்கும் லூட் (Lute) என்னும் கருவி 'அல்' 'ஊக்' என்ற அறபுச் சொல்லிலிருந்தே வந்ததென ஆராய்ச்சியாளர் கொள்வர். இசைக்கலை, இசைக்கலை வரலாறு, பாடல்களின் தொகுப்பு, இசைக் கருவிகள், இசைவாணரின் வரலாறு முதலியவற்றைக் கூறும் நூல்கள் பல அறபு மொழியில் இருக்கின்றன.

இயலும் இசையும் கூடியதே நாடகம். இஸ்லாம் உலகிற் பரவமுன் அறபு மக்களிடையே நாடகம் இருந்ததோவெனக் கூற இயலாது. அக்காலத்திற் சில நாட்டுக் கூத்துக்கள் இருந்தனவெனக் கூறப்படுகின்றது. ஆனால் அவை அமைந்த அடிப்படை, அவற்றின் பொருள், அவை ஆடப்பட்ட வகை முதலியபற்றி ஒன்றுந் தெரியவில்லை. இசை வல்லுநர், இசை அமைப்பாளர், இசை ஆசிரியர் முதலியோர் முஸ்லிம்களிடையே இருந்தபோதும், நாடக ஆசிரியரோ நாடக அமைப்பாளரோ இருந்தனரெனத் தெரியவில்லை.

ஒரு முஸ்லிம், ஆணோ பெண்ணோ, தான் அல்லாத வேறொருவர் வேஷம் தரிப்பது இஸ்லாமிய சமயக் கோட்பாட்டுக்கு மாறானதெனக் கொள்ளப்பட்டது. ஓர் ஆண் ஒரு பெண்ணின் வேஷம் பூண்டு நடிக்கும்போது ஒரு பெண்ணுக்குரிய உடைகளை அணிய வேண்டிய நிலை பொதுவாக ஏற்படும். பெண் ஆண்வேஷம் கொள்வதும் அத்தகையதே. ஒரு பெண் அணிந்த ஆணுக்குரிய ஆடையை ஆண் அணியக் கூடாதென்பது இஸ்லாத்தின் கட்டளையாகும். ஆண் பெண் கலந்துறவாடும் பழக்கமுமில்லாததனால், பெண்கள் நாடகத்திற் கதாபாத்திரங்களை ஏற்கவில்லை. இக்குறையை நீக்க ஆண்களே பெண் வேஷம் தரிக்கலாமென்றால், இஸ்லாம் அதனையும் அனுமதிக்கவில்லை. எனவே, நாடகக் கலையின் வளர்ச்சி இஸ்லாத்தில் இடம் பெறவில்லை.

எனினும், முஸ்லிம் உலகில் நிழலாட்டமென்னும் நிழற் காட்சிகள் முக்கிய இடம் பெற்றிருந்தன. திருவிழாக் காலத்தில் இவ்வாட்டங்கள் நடப்பதுண்டு. இதில் வகை வகையான கதைகளைச் சித்திரிப்பார்கள். சீறியா எகிப்து போன்ற இடங்களிற் சென்ற நூற்றுண்டின் பிற்பகுதியிற் கூட இவை காட்டப்பட்டன.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் நாடகங்களைப்பற்றிய அறிகுறி முஸ்லிம்களிடையே தோன்றிற்று. பாரசீகத்திலும் துருக்கியிலும் நாடகங்கள் சில எழுதப்பட்டன. ஆனுல், அவற்றிலும் முஸ்லிம்கள் நடிக்க வில்லை. எழுதியவரே முஸ்லிம்கள்; நடித்தவர் அர்மேனியரும் யூதருமே. இப்பொழுது இந்நிலை மாறிவிட்டது. அக்கால இஸ்லாமியர் சமய வளர்ச்சியையும் ஆத்மீக வளர்ச்சி யையுமே முக்கியமானவையெனக் கருதினர். பொழுது போக்கையும், உல்லாச வாழ்க்கையையும் அவர்கள் விரும்பாமை அவர்களிடையே நாடகக் கலை பேணப்படாத தற்குரிய காரணங்களில் ஒன்றெனலாம்.

இன்று இந்நிலை மாறி வருகின்றது. திரைப்படங்களும் சஞ்சிகைகளும் நாடகங்களும் இம்மாற்றத்திற்குக் காலாக இருந்திருக்கின்றன. இன்று முஸ்லிம்கள் நாடகத்தை விரும்பு கிறுர்கள்; நாடகங்களிற் பங்குபற்றுகிறுர்கள்; நாடகப் போட்டிகளிற் கலந்துகொள்கின்றன. இஸ்லாமியக் கலைக் கழகங்கள் நாடகப் போட்டிகள் நடத்திப் பரிசில்கள் வழங்கு கின்றன. கல்லூரிகளில் நடைபெறுங் கொண்டாட்டங்களில் இஸ்லாமிய நாடகங்கள் ஆடப்படுகின்றன. இஸ்லாமிய சமய ஒழுக்கங்களை மக்கள் உள்ளத்திற் பதியச் செய்யக்கூடிய முறையில் உருவாக்கப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை இஸ்லாமிய நாடகங்களின் அடிப்படையாக அமைகின்றன. இஸ்லாமியரிடையே வழங்கிவரும் இஸ்லாத்திற்கொவ்வாத வற்றை இஸ்லாமியர் உள்ளத்திருந்து அகற்றுவதற்குப்

பயன்படத்தக்க முறையில் எழுதப்படும் நாடகங்களும் உண்டு. காலத்துக்குகந்த சீர் திருத்தக் கொள்கைகளை அடிப் படையாகக்கொண்டு இஸ்லாமிய நாடகங்கள் எழுதப்படு கின்றன.

இந்நாட்களில் இஸ்லாமிய நாடகங்கள் அதிகந் தோன்றுவதற்கு நாளிதழ்களும் சஞ்சிகைகளும் துணை செய்கின்றன. முஸ்லிம் நாட்டுப் பாடல்களும் நாடகங்கள் உருப்பெறுவதற்குப் பயன்படுகின்றன. நாட்டுப் பாடற் பொருளையும் பாத்திரங்களையும் கொண்டு முஸ்லிம் நாடகங்கள் தோன்றியுள்ளன. பிற மொழிகளிற் பிறர் பண்பாட்டைத் தழுவி எழுந்த நாடகங்களை இஸ்லாமியப் பெயர் புனைந்து, இஸ்லாமிய மெருகூட்டி இஸ்லாமியர் போற்றியும் வருகின்றனர். இவ்வாறு காலத்திற்கேற்றவாறு ஒழுகி நாடகக்கலையை இன்று இஸ்லாமியர் வளர்த்து வருகின்றனர்.

மேலைத் தேசத்தவர் அறியாத பல பழைய கைத் தொழில் மரபுகள் இஸ்லாமியரிடம் இருந்தன. பொதுத் தேவைக்கோ சடங்குகளுக்கோ செய்யப்பட்ட பொருட்கள் யாவும் அலங்கார வேலைப்பாடுகள் பெற்றிருந்தன. அலங்கார அமைப்பு, இஸ்லாமியர் கலை உலகிற்கு அளித்த சிறப்பென அறிஞர் கொள்வர். இஸ்லாமிய அணிகளிலும் பொருட் களிலும் அறபு எழுத்துக்கள் பாவிப்பதும் குறிப்பிடத்தக்கது. திருக்குர்ஆனிலிருந்து ஒரு பகுதி, கவிஞர் ஒருவரின் படைப்பி லிருந்து பொருத்தமான ஒரு பாடல், வந்தனக் கூற்று, வாழ்த்து முதலியன இவர்கள் செய்த பொருட்களில் பொறிக்கப்பட்டிருக்கும். இஸ்லாமிய ஆதிக்கம் பரவியுள்ள இடங்களில் அறபு எழுத்தும் பரவியிருப்பதைக் காணலாம். அறபு எழுத்து திருக்குர்ஆன் பொறிக்கப்பட்ட எழுத் தாகையால், இஸ்லாம் உலகத்தில் அது வணக்கத்துக்குரிய தாகக் கொள்ளப்பட்டது. இதனுல், அறபு எழுத்துக்களுக்கு

அழகு கொடுத்துப் பூரணத்துவம் அளிப்பதில் எழுத்துப் பொறிப்போர் ஒருவரோடொருவர் போட்டியிட்டனர். இதனால் அழகிய எழுத்தில் எழுதப்பட்ட நூல் விலையுயர்ந்த செல்வமாகக் கருதப்பட்டது. ஐரோப்பியக் கைத்தொழிலாளரும் அறபு எழுத்துக்களை அறியத் தொடங்கினர். கிறித்தவ ஐரோப்பாவிற் செய்யப்பட்ட கைப்பணிகளில் அறபு எழுத்தும் இஸ்லாமிய அலங்கார வேலைப்பாடுகளும் இடம் பெறத் தொடங்கின. இஸ்லாமிய தலங்களைத் தரிசிக்கவும், இஸ்லாமிய உலகு அளித்த அறிவு ஞானத்தைப் பெறவும், வர்த்தகத்தைப் பெருக்கவும் முஸ்லிம் நாடுகளுக்குச் சென்றவர்கள் முஸ்லிம் கைப்பணித் திறன் பொருந்திய பொருட்களுடன் திரும்பினர்.

இவ்வாறு சுற்றித் திரிந்த அறிஞரில் ஒருவர் தமது நாட்டிற்குக் கொண்டுவந்த பொருள்களுள் ஒன்று சூரியன் உச்சத்தை அளக்கும் கருவியாகும். தொழுகை வேளையையும் மக்காவின் திசையையும் அறிந்துகொள்வதற்கே இது இஸ்லாமியரால் பாவிக்கப்பட்டது. இப்பொழுது கிடைத்துள்ள இத்தகைய மிகப் பழைய கருவி அகமது மகமுது என்ற இரு சகோதரர் 948 ல் செய்ததாகும். ஐரோப்பியக் கப்பலோட்டிகளுக்கு இவை பெரிதும் பயன்பட்டன. இக்கருவிகளும் சிறந்த வேலைப்பாடு பொருந்திய கலைப் பொருள்களே.

உலோகம் மண் முதலியவற்றால் இஸ்லாமியர் செய்த கைப்பொருள்களும் சிறந்த அலங்கார வேலைப்பாடோடு விளங்குகின்றன. சிமிழ், தட்டம், பேசின், கோப்பை, கூசா, சாடி, ஓடு, கண்ணாடி விளக்கு முதலியன இஸ்லாமியக் கலைஞரின் கைப்பணித் திறனுக்கு உரிய பொருள்கள். நெசவுத் தொழிலிலும் இஸ்லாமியத் தொழிலாளிகள் சிறந்து திகழ்ந்தனர். இடைப்பட்ட காலத்தில் அவர்களே தலைசிறந்த

பட்டுச் சீலைத்துணி வியாபாரிகளாக இருந்தனர். அக்காலத்தில் வழக்கிலிருந்து இன்று வழங்கிவரும் சீலைதுணிப் பெயர்கள் அத்துணிகள் உருப்பட்ட இடங்களையும் அவற்றைப் பெற்ற இடங்களையும் அறிமுகப்படுத்துகின்றன. பஸ்ரியன் (Fustion) தமஸ்க்ஸ் (Damasks) முஸ்லின் (Muslin) பல்டாக்கோ (Baldacco) போன்ற பெயர்கள் புஸ்தாத் (Fustat) தமஸ்கஸ், மோசுல் (Mosul) பக்தாத் ஆகிய இடங்களின் பெயர்த் திரிபுகளே.

கம்பளங்கள் ஐரோப்பாவிற்குக் கீழைத் தேசங்களில் இருந்தே சென்றன. கம்பள நெசவுத் தொழிலில் பாரசீகத் தொழிலாளிகள் பதினாறும் நூற்றாண்டில் உச்சநிலையை எய்தினர். அழகில் ஈடற்ற மெட்டுக்களில் கம்பளங்கள் செய்தனர். தந்தத்திலிருந்து பொருட்கள் செய்வதிலும் முஸ்லிம்கள் பேர் பெற்றிருந்தனர். புத்தக வெளியீட்டிலும் இடைக்கால முஸ்லிம்களின் முயற்சியும் ஆற்றலும் ஐரோப்பியருக்கு வழிகாட்டின. முஸ்லிம் நாடுகளிற் பயன் படுத்தப்பட முன் அச்சுத் தொழில் ஐரோப்பாவிற் பரவி யிருந்தபோதும், அச்சுத் தொழிலுக்கு இன்றியமையாத கடதாசித்தாள்களை ஐரோப்பாவிற் பரப்பியவர் முஸ்லிம்களே. சமர்க்கந்து என்னும் இடத்தை 704 ல் கைப் பற்றியபோது கடதாசித் தாளைப் பற்றி முஸ்லிம்கள் அறிந்தனர். அதனை ஆக்கும் வழிகளை அவர்கள் சீனத்தொழி லாளிகளிடமிருந்து கற்றுக்கொண்டனர். பல அறபு ஏடுகள் கடதாசியில் ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து எழுதப்பட்ட போதும் கிறித்தவ ஐரோப்பாவிற்குப் பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே ஏற்றுமதியாயின. கடதாசி உண்டாக்கும் சாலைகள் ஐரோப்பாவில் ஸ்பெயினிலும் சிசிலியிலுமே முதன் முதல் நிறுவப்பட்டன. அங்கிருந்து இத்தாலிக்கு இத்தொழில் பரவியது. புத்தகங்களைக் கட்டுந் தொழிலிலும் இஸ்லாமிய

பாதிப்பைக் காணலாம். பதினைந்தாம் நூற்றாண்டில் இத்தாலிய அச்சு நிலையங்களில் புத்தகங்களைக் கட்டும்போது முஸ்லிம் முறைப்படி அவற்றைக் கட்டத் தொடங்கினர். நூல் அட்டைகளின் மூலைகளைப் பாதுகாப்பதற்கு இறக்கைகளைப் பாவிக்கும் முறை இஸ்லாமியரிடமிருந்து பெற்றதே. தோல் அட்டைகளை அலங்கரிப்பதிலும் இஸ்லாமியரிடமிருந்து புதிய முறைகளைக் கற்றுக்கொண்டனர்.

இஸ்லாம் தோன்றிய காலத்திலிருந்து மேலைத் தேயப் பக்தியும் அறிவும் வர்த்தகமும் முஸ்லிம்களிடமிருந்து பலவற்றைப் பெற்றுக்கொண்டன. அதுபோலவே கலையைப் பொறுத்த அளவிலும் தொழில் வல்லுநர் பல துறைகளில் இஸ்லாமியரிடமிருந்து பலவற்றைக் கற்றுக்கொண்டனர்.

# விஞ்ஞானமும் சட்டமும் சமுதாயமும்

அல்லாஹ்வின் பெயரால் ஒருவர் தாமாகச் சிந்தனை செய்வதற்கும், கட்டுப்பாடின்றி ஆராய்ச்சி செய்வதற்கும் இஸ்லாத்தில் இடமுண்டு. ஒவ்வொரு முஸ்லிமும் கல்வி தேடுவது சமயக்கடமை என்றும், கல்வி சீனாவில் இருப்பினும் சென்று தேடுக என்றும், ஒரு மணி வேளை சிந்தனை செய்வதும் இறைவன் படைப்புக்களை ஆராய்வதும் ஓராண்டு வணக்கம் செய்வதைவிடச் சிறந்தவை என்றும் திருக்குர்ஆன் பகுத்தறிவின் பெருமையை விளக்குகின்றது.

விஞ்ஞானம் பயில்வதை, அதுவும் சிறப்பாக இயற்கை விஞ்ஞானத்தைப் பயில்வதை, திருக்குர்ஆன் போற்றுகின்றது. அனுமானம் செய்யும் விஞ்ஞான முறையை இன்றைய விஞ்ஞானிகள் பின்பற்றுகின்றனர். அதன் மூலம் புதிதாகப் பலவற்றைக் கண்டுபிடித்திருக்கின்றனர். இந்த அனுமான முறையையே திருக்குர்ஆனும் சாதிக்கின்றது.

வேதிநூலில் முஸ்லிம்கள் பெரும் ஆராய்ச்சிகள் செய்து, அவற்றின் பலனைக் கண்ட முடிபுகளைக் குறித்து வைத்தனர். இதுவரை பிறருக்குத் தெரியாதவாறு இரகசியமாக வைக்கப்பட்டிருந்த விஞ்ஞான அறிவு இவர்கள் முயற்சியால் பிறருக்கும் உதவிற்று. பிற விஞ்ஞானிகளின் முடிபுகளையும் வரவேற்று, அனுமான முறைப்படி ஆறுதலாய் ஆராய்ந்தனர். நடக்கும் ஒவ்வொரு மாற்றத்தையும் குறித்துக்கொண்டனர். இதன் மூலம், இன்றைய வேதிநூலுக்கும் அதன் சாதனைகளுக்கும் அடிப்படையான விவரங்களைப்

பெற்றனர். பூத நூலிலும் இஸ்லாமியர் பெரிய முன்னேற்றம் அடைந்திருந்தனர். பூதநூல் பற்றி ஆராய்ந்து அவற்றின் முடிபுகளை வெளியிட்டனர். கணித நிபுணராகவும் அவர்கள் திகழ்ந்தனர். இன்றுள்ள இயற்கணிதம் (Algebra) கண்டு பிடித்தவர் இஸ்லாமியரே. தாவரவியல் பற்றி அவர்கள் பெரும் ஆராய்ச்சி செய்திருந்தனர். எந்த அறபிய, பாரசீக, துருக்கிய அகராதியும் இதற்குச் சான்று பகரும்.

வைத்தியத் துறையில் இஸ்லாமியர் ஆற்றிய தொண்டு மகத்தானது. கிரேக்கரின் வைத்திய முறையான யூனானி முறையை இஸ்லாமியர் பின்பற்றி, தமது அனுபவபூர்வமான வழிகளால் அதற்கு மதிப்புத் தேடிக் கொடுத்தனர். ஆசியா விலுள்ளோரும் ஐரோப்பாவிலுள்ளோரும் இம்முறையைப் பல நூற்றாண்டாக ஏற்றுப் பின்பற்றினர். இஸ்லாமியரின் முயற்சியும் கல்வியும் கிடையாதிருப்பின், யூனானி முறைக்குக் கிரேக்கர் கொடுத்த அடிப்படைகள் அழிந்திருக்கும். புதிய காற்று, பூரண சுத்தம் ஆகியவற்றின் இன்றியமையாமை யையும் பெருமைகளையும் இஸ்லாமிய வைத்தியரே முதலில் எடுத்துக்காட்டினர். ஆசுப்பத்திரிகள் நிறுவி, அங்கு நோயாளி களை நோய்க்கேற்றவாறு வெவ்வேறிடத்தில் ஒதுக்கி, அந்த வைத்தியசாலைகளைத் தூய்மையாகவும் காற்றோட்டம் உள்ள னவாகவும் அமைத்த பெருமை அவர்களுக்கே உரியது. பதினெட்டாம் நூற்றாண்டில் உலோக நீர் சுரக்கும் சுனைகளின் பெருமையையும், தண்ணீரையும் காற்றையும் மாற்றிக்கொள்வதனால் உண்டாகும் நன்மையையும் பற்றி ஐரோப்பியர் துருக்கியரிடமிருந்தே கற்றுக்கொண்டனர். தொத்து வியாதியைத் தடைசெய்யும் இன்னொக்குலேஷன் பற்றியும் துருக்கியரே ஐரோப்பியருக்குப் பதினெட்டாம் நூற்றாண்டிற் கற்றுக்கொடுத்தனர்.

பழைய அறேபியாவின் சமூக அமைப்பு இரத்த உறவையே அடிப்படையாகக் கொண்டது. பொது

மூதாதையர் வழி வந்த மக்கட் கூட்டத்தினர் பொதுப் பாதுகாப்புக்காக ஒன்று சேர்ந்து நடந்தனர். பொது வழிபாடும் பொதுப் பழக்க வழக்கங்களும் அவர்களை இணைத்தன. ஓர் ஆற்றல் வாய்ந்த சகோதரத்துவத்தை உண்டாக்கிய இரத்த உறவே அவர்களைச் சிறப்பாக ஒன்று படுத்தியது. எனவே, அறேபிய இனத்தை ஒரு பெரும் குடும்பம் எனக் கொள்ளலாம்.

பழைய சமுதாயங்களிற் போலப் பழைய அறேபியாவிலும் சமுகம் தனி மனிதனிற்றங்கவில்லை. மக்கட்டொகுதியையே தழுவியிருந்தது. தனிமனிதன் தன்னளவில் ஒன்றும் செய்ய இயலாது; தனக்குச் சொந்தமான குடும்பத்தின் மூலமே இயங்கவேண்டியிருந்தது. குடும்பமே தன் மக்களின் வாழ்க்கையைச் சமுகத்துறையிலும் சட்டத்துறையிலும் உருப்படுத்தியது. அதே அவர்களின் உரிமைகளைக் கோரியது; அவர்களுக்கு ஏற்பட்ட குறைகளைத் தீர்த்தது; அவர்கள்மேற் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு மறுமொழி அணைத்தது; அவர்கள் மரணத்திற்குப் பின் அவர்கள் சொத்துக்கு உரிமை கொண்டது.

இந்த ஒழுங்குமுறையை முக்கிய அம்சங்களில் இஸ்லாம் மாற்றுமற் போற்றிவந்தது. ஆனல் இரத்த உறவிற்குப் பதிலாக சமய சகோதரத்துவத்தைக்கொண்டது. நபிகள் நாயகம் (சல்) நிறுவிய சமுக அமைப்பில், இஸ்லாத்தைத் தழுவியவர், சமய சகோதரர் அல்லாதோரின் தொடர்புகளை-தமது சொந்த உறவினரைக்கூட - மறக்கவேண்டும். நபிகள் நாயகம் (சல்) காலத்திலிருந்து மனிதன் தனி மனிதனுகக் கணிக்கப்பட்டான். ஆனல், தனி மனிதன் தனது உரிமைகளையும் கடமைகளையுஞ் சமுகத்தோடு தனக்குள்ள தொடர்பினுற் பெருது, தனது சமயத் தொடர்பினுலேயே பெறக்கூடியதாயிருந்தது. இத்தகைய நம்பிக்கைக் கூட்டத் தினரே இஸ்லாமிய சமுகத்தினர். ஏகதெய்வமாகிய

அல்லாஹ் இடம் நம்பிக்கைகொண்டு அவர் போதித்த மொழிப்படி ஒழுகுபவரே இஸ்லாமியர் எனக் கொள்ளப் பட்டனர். இக்கருத்துக்கள் யாவும் திருக்குர்ஆன் வேதத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இத்தகைய அமைப்பில், ஒவ்வொரு முஸ்லிமும் உதவிநாடிய மற்ற ஒவ்வொரு முஸ்லிமுக்கும் துணைசெய்து பாதுகாப்பளிக்க வேண்டுமென்ற கட்டளேப்படி, பரஸ்பர உதவி சட்டக் கடமையாகக்கொள்ளப்பட்டது. ஒரு சுவரி லுள்ள கற்கள் எவ்வாறு ஒன்றையொன்று தாங்கி நிற்கின்றனவோ, அதுபோலவே முஸ்லிம்களும் ஒருவரை யொருவர் தாங்கி நிற்கவேண்டும். பொதுமக்களுக்குரிய சட்டங்களிலும், தனிப்பட்டோருக்குரிய சட்டங்களின் எல்லாத் துறையிலும் இக்கருத்துக்களேக் காணலாம். சகோதரத்துவத்தின் அடிப்படை சமத்துவம். ஆண்டவன் முன்னிலேயில் சமமாக உள்ள முஸ்லிம்கள், தம்மிடையேயும் சமமாகவே காணப்படுகின்றனர். எனவே, சட்டத்தைப் பொறுத்தளவில், எவ்விதச் சட்டமும் இவர்களிடையே வேற்றுமையைப் பாராட்டுவதில்லே; சட்டம் யாவரையும் சமமாகவே கொள்கின்றது. வழக்குப் பரிபாலனத்திலும் நீதி அளிப்பிலும் யாவரும் சமமானவரே. அதனுல், வலியோர் மெலியோர் என்ற பாகுபாடின்றி நீதி வழங்கப் பட்டது. எல்லாச் சட்ட நூற்றொகுதிகளிலும் இவ்விதிகளேக் காணலாம்.

சமத்துவம் கொண்ட மக்கட் சமுகத்தின் தலேவர் இறைவனேயாகும். தனது மக்களிடத்து அல்லாஹ் செலுத்தும் ஆட்சி நேரானது; பிரதிநிதிகளுக்கு அங்கு இடமில்லே. தனது மக்கட் கூட்டத்தின் பாதுகாவலனுகிய அல்லாஹ் தனது மக்களின் அரசனுக விளங்குகிறுர். இஸ்லாத்தில் ஒற்றுமையையும் அமைதியையும் நிலேநாட்டு பவர் இறைவனே. பொது நலத்திற்காக ஆட்சி செய்யும்

அதிகாரியே அல்லாஹ். எனவே, பொதுத் திறைச்சேரி, அல்லாஹ்வின் திறைச்சேரி எனவும், படை 'அல்லாஹ் படை' எனவும், பொதுப்பணியாளர் 'அல்லாஹ் உடைய தொழிலாளிகள்' எனவும் கொள்ளப்பட்டனர்.

இதனாலேயே ஆண்டவனுக்கும் மக்களுக்குமிடையில் வழிபாட்டிலும் நேரான தொடர்பே இருக்கின்றது; நடுவர்களுக்கு அங்கு இடமில்லை. ஆண்டவன் முன்னிலையில் மனிதன் தனியாகவே நிற்கின்றான்; அறிமுகமில்லாமல் எப்போதும் ஆண்டவனிடம் முறையிடலாம்; தனது செயல்களின் வினையைத் தனியாகவே அனுபவிக்கவேண்டும்; தனது வினைகளுக்குத் தனியாகவே விடை அளிக்கவேண்டும். நடுவர்களுக்கும் தூதுவர்களுக்கும் அங்கு இடமேயில்லை.

எல்லாம் அறிந்த நீதிபதியாகிய இறைவன் முன், தனியாகவும் பாதுகாவல் இல்லாமலும் நிற்கும் மனிதன், இறைவனின் ஆணையிலிருந்து தன்னைக் காத்துக்கொள்வதற்கு ஆண்டவனின் கருணைக்குத் தன்னை ஒப்படைப்பதேயொழிய வேறு வழியில்லை. இவ்வாறு பண்புடனும் நம்பிக்கையுடனும் மனிதன் தன்னை ஆண்டவனிடம் ஒப்புவித்தல் உண்மைச் சமயமெனக் கருதப்பட்டது. இறைவனின் ஆற்றலை அறிந்து முற்றாக ஒப்புவித்தல் இஸ்லாத்தின் அறிகுறியாகும்.

சமய அடிப்படையில் இணைக்கப்பட்டு, ஆண்டவன் ஆணைக்கு உட்பட்டுள்ள இச்சகோதரத்துவத்தின் இயல்பு, சட்டத்தைப்பற்றி இஸ்லாமியர் கொண்ட கருத்தை விளக்குகின்றது. இஸ்லாமிய கொள்கையின்படி, இஸ்லாமிய சமுகத்தின் தலைவனும் அரசனும் அல்லாஹ் ஆகையினால், ஆண்டவனின் விருப்பமே சட்டமாகும். இச்சட்டப்படியே அல்லாஹ் தமது மக்களுக்குத் தீர்ப்பளிப்பார். இச்சட்டத்திற்குத் தலைசாய்த்து நடத்தல் சமுகக்கடமையாகவும் சமயக்

கட்டளையாகவும் கொள்ளப்பட்டது. அதனை மீறி நடப்பவர், சட்ட அமைப்பை அலட்சியம் செய்வதோடு பாவத்தைச் செய்பவராகவும் கருதப்படுவர். சட்டமும் சமயமும் பிரிக்க முடியாதவை.

இஸ்லாமிய சட்டம் மனிதனின் தளர்ச்சிக்கும் தடுமாற்றத்திற்கும் வாழ்க்கையின் உண்மையான தேவை களுக்கும் அமைய இயங்குகின்றது. அது மனிதனின் வாழ்க்கையை இலகுவாக்கியதேயொழியக் கடினமாக்க வில்லை. ஒவ்வொரு முஸ்லிமிடமிருந்தும் அவனுல் செய்து முடிக்கக்கூடியதையே அல்லாஹ் எதிர்பார்க்கின்றார். உடலின் வலிமையைக் குன்றச் செய்து, மனிதனின் இயற்கையான அறிவை உள்ளடக்கும் ஒடுக்கத்தை இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை. அளவு மீறுதும், கட்டளைகளை ஏற்றும் ஒழுகு மளவில், ஆண்டவன் அளித்தவற்றுள் நல்லனவற்றை அனுப விக்க வேண்டுமென இச்சமயம் வற்புறுத்துகின்றது.

விவசாயம், வர்த்தகம் போன்ற எல்லாத் தொழில் களுக்கும் இஸ்லாம் மதிப்பளிக்கின்றது; தங்களைப் பராமரிப் பதற்காக மற்றவர்களுக்குப் பாரமாயிருப்பவரை அது கண்டிக்கின்றது. ஒவ்வொருவரும் தம் சொந்த முயற்சியால் தம்மைப் பராமரித்துக்கொள்ளவேண்டுமென் அது விதித் திருக்கின்றது; இதனுல், ஒருவன் மற்றவரில் தங்கியிராது சுதந்திரமாக வாழக்கூடிய முறையில் செய்யும் எத் தொழிலையும் அது இகழவில்லை. இஸ்லாமியச் சட்டம், மனித இயக்கத்திற்குக் கூடிய அளவு கட்டுப்பாடு விதியாது இயங்குகின்றது. சுதந்திரமே சட்டத்தின் அடிப்படை விதி.

சட்டத்தால் எல்லா விவரங்களையும் கவனிக்க முடியாது; சட்டமுக்கியத்துவம் வாய்ந்த சிலவற்றையே அதனுற் கவனிக்க முடியும். ஆனுல், எல்லாச் சட்டங்களும் பொதுமக்களின் நன்மையைக் கருதியே அமைக்கப்

பட்டுள்ளன. மனிதன் ஒழுங்கான வாழ்க்கை நடத்துவதற்கு ஆக்கப்பட்ட விதிகளிற் சில உயிர் வாழ்க்கையைப் பற்றியன. சில உடல் வாழ்க்கையைப் பற்றியன. சமயமும் சட்டமும் வேறுபட்ட விதிகளே; எனினும், ஒன்றிற்கொன்று இன்றி யமையாதவை; மக்கள் பொது நன்மை என்ற நோக்கத் திறல் இணைக்கப்பட்டவை. சமய ஒழுங்கு ஆத்மீக வாழ்வை நல்வழிப்படுத்தி, பேரின்பம் அடைவதற்கு என்ன நம்பிக்கை கொள்ளவேண்டுமென்பதைத் தீர்மானிக்கின்றது. சட்டம் உலகியல் நோக்கங்களுக்காக மக்கள் செயலை ஒழுங்கான முறையில் அமைத்து, சமய ஒழுங்குக்கு உடல்போல விளங்கு கின்றது. மனிதனின் அகவாழ்க்கையே சமயம்; புற வாழ்க்கையில் மனிதனின் செயல்களை ஒழுங்கு படுத்துவதே சட்டம். இச்சட்டங்களிற் சில இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளாகிய தொழுகை, நோன்பு, சகாத்து, யாத்திரை ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதுபற்றிக் குறிப்பிடு கின்றன. இக்கட்டளைகள் ஆண்டவனின் உரிமைகளாகக் கொள்ளப்படுகின்றன; ஏனெனில் இவை மனிதன் தன்னைப் படைத்த இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றியன.

மனிதன் ஆத்மாவை மட்டும் கவனித்தாற் போதாது; உடலையும் கவனிக்க வேண்டியவனாயிருக்கின்றான். எனவேதான் சமுக வாழ்க்கை முக்கியத்துவம் பெறுகின்றது. மனிதன் ஓர் அரசியல் விலங்கு; ஏனெனில், மற்றைய விலங்குகள் போல அவன் தன்னளவில் வாழ முடியாது; மற்றவர்களுடைய உதவியும் தொடர்பும் அவனுக்குத் தேவைப்படுகின்றன. ஆனல், தனிப்பட்டவரின் விருப்பு வெறுப்பு வேறுபட்டவை, தேவைகள் பல விதப்பட்டவை, மனேசக்தியும் ஆற்றலும் எல்லைக்குட்பட்டவை. எனவே, மனிதன் தனது சகோதரரின் துணையை நாடவேண்டியவனாய் இருக்கின்றான். இதனுற் பல்வகைப்பட்ட நோக்கங்கள்,

உறவுகள், பரிமாறல்கள், உருப்படுகின்றன. இவையே சமுகத்தின் தோற்றமும் அடிப்படையும்; இவற்றின் கருவியே பணம்.

சமுக வாழ்வால் ஏற்படும் உறவு சட்ட அமைப்புக்குக் காரணமாகும். அவ்வுறவு பற்றியதே சட்டம். பிள்ளைப் பேற்றின் தேவை ஆண்பெண் இணைப்பை உண்டாக்கு கின்றது. இவ்விணைப்பினுல் குடும்பம் உண்டாகின்றது. இதனுல், திருமணத்தினுல் ஏற்படும் சட்டத் தொடர்புகள் உண்டாகின்றன. தொழிற் பாகுபாடும் தனிமனிதனின் தேவைகளும் சட்டபூர்வமான கொடுக்கல் வாங்கலுக்கு இடமளிக்கின்றன. ஒருவரின் மரணம் உரிமைக்காரர்பற்றிய பிரச்சினையை உண்டாக்குகின்றது. உரிமை, உரிமைப்பங்கு பற்றிய சட்டங்கள் இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கின்றன. இறுதியாகச் சமுக ஒழுங்கின் பாதுகாப்பு தண்டனைச் சட்டங் களுக்கு வழிகோலுகின்றது.

சட்டத்தின் ஒரு பகுதி சமுகத்தைப் பற்றியது; மற்றப் பகுதி தனிமனிதனைப் பற்றியது. தனிப்பட்ட மனிதனைப்பற்றியில்லாதது ஆண்டவன் உரிமை எனக் கொள்ளப்படுகின்றது. சுதந்திரம், ஆதரவு, திருமணம் உறவு, கடுவட்டித்தடை, தண்டனை ஆகியன இறைவன் உரிமைகளில் அடங்கும். இவை பொதுமக்கள் நலத்தைப் பற்றியனவாகையால், இவ்விதிகளை அலட்சியம் செய்ய முடியாது. மற்றப்பகுதி தனிமனிதரின் சொந்த அலுவல் களைப்பற்றியது. அவை மனிதன் உரிமைகள் என வழங்கும்.

சுதந்திரத்தைச் சட்டத்தின் அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், இரண்டு முடிவுகள் கொள்ளலாம். ஒன்று, சுதந்திரத்தின் இயல்பிலேயே அதற்கு எல்லையைக் காணலாம். ஏனெனில் எல்லையற்ற சுதந்திரம் தன்னையே அழித்துவிடும். இவ்வெல்லையே சட்டமாகும். இரண்டு, எந்த

எல்லையும் காரணமின்றி அமைந்ததில்லை. தனி மனிதனின் அல்லது சமுகத்தின் அதிகக் கூடுதலான நன்மையைக் கருதியே இவ்வெல்லை தீர்மானிக்கப்படுகின்றது. இவ்வாறு எல்லை வகுக்காது விட்டாற் சட்டம் மனித சமுதாயத்தை வாழ வைப்பதற்குப் பதிலாக அழித்துவிடும். மனிதன் இவ் வாழ்க்கையில் நேர்மையான ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து, வருங்கால வாழ்க்கைக்குத் தன்னை ஆயத்தப்படுத்தக் கூடிய உரிமைகள் யாவை, கடமைகள் யாவை என்று அறிந்து கொள்வதே சட்ட சாஸ்திரமாகும்.

மக்கள் நன்மைக்குச் சட்டம் எவ்வாறு தேவைப்படு கின்றதோ, அவ்வாறே அவர்களை வழி நடத்தி, வேண்டிய வேளையிற் கீழ்ப்படியச் செய்ய ஒரு தலைவன் அல்லது அரசன் தேவைப்படுகின்றான். எனவே, ஓர் அரச பதவியை (இமாமை அல்லது கலிபாவை) நிறுவச் சட்டத்தை நிலையான முறையில் ஆண்டவன் தாபித்துள்ளார். மேல் அதிகாரத்தை ஆண்டவனே அளிக்க முடியும். ஏனெனில் எந்த மனித னுக்கும் தனது சகோதரர்மீது ஆட்சி செலுத்த உரிமை யில்லை. மனிதரிடையேயுள்ள எவ்வித அதிகாரமும் – தகப்பனுக்கும் மகனுக்குமுள்ள தொடர்பு, எசமானுக்கும் அடிமைக்குமுள்ள தொடர்பு, அரசனுக்கும் பிரசைக்குமுள்ள தொடர்பு – இறைவனின் விருப்பத்திலேயே தங்கியுள்ளது. இறைவனிடமே எல்லா அதிகாரமும் உண்டு. இறைவனே ஒரு சிலரிடத்து மற்றவரின் நன்மைக்காக அவ்வதிகாரங்களிற் சிலவற்றை ஒப்படைக்கின்றார்.

தலைவனின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் ஒவ் வொரு முஸ்லிமின் சமயக் கடமையாகவும் முஸ்லிம் சமுதாயத் தேவையாகவும் இருந்தது. ஏனெனின், நிலையாக நிறுவப்பட்ட அதிகாரம் இல்லாதவிடத்து, மனித சமுதாயம் அழிந்துவிடும்; சமயம் அற்றுவிடும்; வாழ்க்கையே வாழத் தகுதியற்றதாகிவிடும். சமயத்திலே நம்பிக்கையே நீங்கிவிடும். ஒழுங்கான வாழ்க்கையும் நிலையான அமைப்புமே சமயத்தின்

தூண்கள். எனவே, அத்தகைய தலைவனைத் தெரிந்து எடுத்தல் சமயக்கடமையாகும்; ஒவ்வொரு முஸ்லிமும் அதில் ஊக்கம் காட்ட வேண்டும். அத்தகைய கடமையைக் கவனியா திருத்தல் சமுகத்திற்குத் துரோகம்.

இதே முறையில், தலைமைப் பதவி ஒருவருக்கே ஒரே நேரத்தில் உரியதாகும். ஏனெனில், தெய்விகச் சட்டத்தை அமுல்நடத்தும் தலைமையிடத்தில் பிளவு இருக்கக்கூடாது. தலைமை அதிகாரம் ஒருவருக்கு மேற்பட்டோரிடம் இருக்கும் போது சமுகத்தில் அமைதி நிலவ முடியாது.

இந்த ஒரே தலைவனுக்கு அப்பதவிக்கேற்ற ஆத்மீக பலனும் உடற்பலனும் இருத்தல் வேண்டும். உதாரணமாகத் தலைவன் சுதந்திரமுடையவனாக இருத்தல் வேண்டும். கலிபா அடிமையாக இருக்கமுடியாது. ஆண்வர்க்கத்தைச் சேர்ந்தவரே தலைவராகலாம். ஏனெனில், பெண்ணைத் தலைவராக உடைய சமுகம் தழைக்க முடியாது எனக் கொண்டனர். சட்டத்தைக்கொண்டு நடத்தக்கூடிய ஆற்றலும் உடல் நேர்மையும் தலைவனுக்குத் தேவைப் பட்டன. தெய்விகச் சட்ட அறிவு. ஞானம், துணிவு, ஒழுக்கம் முதலிய குணங்களும் தலைவனுக்கு இன்றியமையாதன எனக் கருதினர்,

தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளும் கலிபா தெய்விகச் சட்டம் வகுத்த எல்லைக்குள் தனது அதிகாரத்தைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளார். இதுவே, அவரது கடமைகளில் முதன்மையானதும் முக்கியமானதும். நாட்டின் எல்லைப்பாதுகாப்பு, புறச் சமயத்தார்மீது படையெடுப்பு, உள்நாட்டடுக்காவல், பொதுச் சொத்துப் பரிபாலனம், நீதி வழங்கல் முதலியனவும் கலிபாக்களின் கடமைகளாம்.

தொழுகையை இயக்குவோன் என்ற பொருளில் வரும் இமாம் என்னும் பெயர், தலைவனுக்கே சிறப்பாக உரிய

சிறந்த உரிமை ஒன்றனைக் குறிக்கின்றது. அதுதான் சமயப் பதவி. ஆனால் சமய குரு சம்பந்தமான பண்புகள் அவரிடம் இல்லை. பொது நன்மைக்காகத் தெய்வீகச் சட்டத்தால் நிறுவப்பட்ட பதவியல்லக் கலிபாப் பதவி. இறைவனின் சட்டத்தை பரிபாலித்துப் பாதுகாத்து செயற்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட பொது நம்பிக்கைப் பதவியே அது. கலிபா இஸ்லாமிய சமயக் கூட்டத்தினர் பொறுப்பாளர்.

ஜமாஹ் (திருச்சபை) இமாம் (தலைவன்) என்ற இரு சொற்கள் இஸ்லாத்தின் முழு அரசியல் முறையையும் அரசாங்கம் பற்றிய கருத்தையும் உள்ளடக்கியிருக்கின்றன. தொடக்கத்தில் கலிபாக்கள் நல்ல அரசியலுக்குரிய விதைகளை விதைத்தனர். ஆனால் காலஞ் செல்லச் செல்ல கலிபாக்கள் பற்றிய கருத்துக்கள் மாறின. அதிகாரம் செலுத்துபவன் யாராயினும், அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்று கருதத்தொடங்கினர்.

இஸ்லாமிய சட்டத்தின் மூலத்தை ஆராயும்போது, திருக்குர்ஆனே எல்லாவற்றிற்கும் அடிப்படை என்பது புலனாகும். அதற்கு அடுத்தாற்போல் மரபுகளைக்கொள்ள வேண்டும். முகம்மது நபி (சல்) அவர்களின் செயல்களும் கூற்றுக்களுமே மரபுகள் (ஹடித்). திருக்குர்ஆனின்படி தீர்ப்பதற்கு வெளிப்படையான சட்டங்கள் இல்லாத இடத்து நபிகள் நாயகம் (சல்) அவற்றைப்பற்றித் தீர்ப்புக் கூறினர். சில சந்தர்ப்பங்களிற் சில சூழ்நிலையில் நபியவர்கள் ஒரு விதத்தில் நடந்துகொள்வர். இவையே ஹடித் (மரபுகள்) என வழங்கின. திருத்தூதுவரின் மொழிகள், ஆலோசனைகள், நாளாந்தச் சடங்குகள் முதலியன அவர் காலத்திலோ அவர் மரணத்திற்குப் பின் உடனே ஒன்றுசேர்க்கப்படவில்லை. பிற்பட்ட காலத்தில் இவை அழிந்துபோகாமல் 'இமாம் அல் முஸ்லிம்' 'இமாம் அல் புக்கறி' என்ற தொகுதிகளிற் சேர்க்கப்பட்டு, அதிகார நூல்களாகக் கொள்ளப்பட்டன.

இஸ்லாமிய சட்டத்தின் அடுத்த மூலம் இஜ்மா எனப்படும். மக்கா மதீனு எல்லைக்குட்பட்ட முஸ்லிம்களின் நடவடிக்கைகள் இருந்தபோது, திருக்குர்ஆனும் ஹதீதும் அவர்கள் செயல்களை ஒழுங்கு படுத்தப்போதியனவாக இருந்தன. ஆனுல், அவர்களின் ஆதிக்கம் பரவி, அவர்கள் பிறநாடுகளிற் சென்று குடியேறியபோது, பல பிரச்சினை களைத் தீர்க்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இச்சந்தர்ப்பங் களில் நபிகள் நாயகத்தின் தோழரின் கூட்டுக் கருத்தைச் சட்டமாகக்கொண்டனர். இதுவே இஜ்மா எனப்படும்.

இஸ்லாமிய சாம்ராச்சியம் பரந்து, பல்வகைப்பட்ட பழக்க வழக்கங்களையும் கொண்ட இனத்தவரும் மக்கட் கூட்டத்தவரும் இஸ்லாத்தைத் தழுவியபோது, நபிகள் நாயகத்தின் (சல்) சீஷரின் கூட்டுக் கருத்து எல்லா அலுவல் களுக்கும் உகந்த சட்டமாக அமையவில்லை. எனவே, முஸ்லிம் தத்துவ ஞானிகள் தமது புத்தியையும் தர்க்க சாத்திரத்தையும் கொண்டு தமது காலத்துப் பிரச்சினை களைத் தீர்க்க முயன்றனர். பலர் திருக்குர்ஆனைப் படித்துத் தமது விளக்கத்தைக் கொடுக்க முற்பட்டனர். இவ்விளக்கங் களைக்கொண்ட நூல்கள் பல வெளிவந்தன.

இறுதியாகச் சட்டத்துறையில் இஸ்லாம் சாதித்த வற்றை நோக்கவேண்டும். பொது நோக்கத்திஞலும் பரஸ்பர உதவியிஞலும் இணைக்கப்பட்ட மக்கட் கூட்டமே முஸ்லிம் சமுதாயம். இவ்வாழ்வில் மக்கள் இன்பமாகவும் செழிப்பாகவும் வாழவும் மறுவாழ்வில் பேரின்பமடையவும் வழிவகுத்துக் கொடுப்பதே அரசாங்கத்தின் கடமை. இக் கடமையைச் சட்டம் மூலம் செய்யவேண்டியிருக்கின்றது. சட்ட அமைப்புச் சமுக அமைப்பிலேயே தங்கியுள்ளது. தீமையைத் தடுத்தலே சட்டத்தின் நோக்கம். எனவே, இஸ்லாமிய சட்டத்தில் இந்நோக்கம் கைகூட இரு உண்மைகள் வற்புறுத்தப்படுகின்றன. ஒன்று சமத்துவம்; மற்றது நன்னம்பிக்கை. ‘வெள்ளை மனிதன் கறுப்பு

மனிதனிலும் உயர்ந்தவனல்லன்; கறுப்பு மனிதன் மஞ்சள் நிற மனிதனிலும் மேம்பட்டவனல்லன். ஆண்டவன் முன்னிலையில் யாவரும் சமமானவரே' என்று நபிகள் நாயகம் (சல்) கூறியிருக்கின்றார். எல்லா முஸ்லிம்களையும் சமமாகவே இஸ்லாம் கொள்கின்றது. கிறித்தவ சமுகத்திலே இத்தகைய சிறந்த கொள்கை பரவாத ஒரு காலத்திலே இதனை முகம்மது நபி (சல்) அவர்கள் நிலைநாட்டினார்.

எல்லோருக்கும் சமமாகிய சட்டம் நன்னம்பிக்கையிலேயே தங்கியிருக்கின்றது. முஸ்லிம்கள் தமது வாக்குறுதிகளைப் போற்றவேண்டும். வேறொருவனுக்குரியவற்றைக் கொண்டு அவனின் அனுமதியின்றி, ஒரு முஸ்லிமும் நன்மை பெறக்கூடாது. நம்பிக்கையுள்ளவரிடத்து நேர்மையாக நடக்கவேண்டுமென்றும், காட்டிக்கொடுத்தவரைக் காட்டிக் கொடுக்கக்கூடாதென்றும் முஸ்லிம்கள் சட்டம் வற்புறுத்துகின்றது. மனித உள்ளத்திற்கு இச்சட்டம் முக்கியத்துவம் அளிக்கின்றது; இதனால், சட்டத்தில் என்ன வரையப் பட்டுள்ளது என்பது முக்கியமன்று; நோக்கமே முக்கியமானது. நல்லெண்ணமே இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படை.

சமுக நன்மைக்காக இஸ்லாமிய சட்டம் இயற்றப் பட்டுள்ளதால், அது முற்போக்குடையதாக விளங்குகின்றது. அது மாற்றமுடியாததன்று; தனிமரபில் மட்டும் தங்கியுள்ளதன்று. இலக்கண விதிகள் போலவும் தர்க்க சாத்திரம் போலவும் சட்டம் மாற்றமுடியாததன்று. பொதுவாக நடப்பதையே அது வெளிப்படுத்துகின்றது; சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப அது மாறக்கூடும். சமுகம் உயிருள்ள மக்கட்டொகுதி; எனவே, முடிவிலா மாற்றம் அடைந்துகொண்டே போகின்றது. காலத்துக்கேற்ற மரபின்படி சட்டம் அமையும். இஸ்லாமிய சமுகம் எதனைச் சட்டம் என்று ஏற்றுக்கொள்கின்றதோ அதனை ஆண்டவனும் ஒப்புக் கொள்கின்றார். மரபு எங்கும் ஒரே மாதிரியாக வழங்கும் போதும், நல்லொழுக்கத்திற்கு மாறாக அல்லது பொதுக்

கட்டளைகளுக்கு மாருக இராதபோதும் சட்டத்தைப்போன்ற ஆற்றல் பெற்றுச் சட்டத்தோடு ஒன்றுபடுகின்றது.

கடும் விதிப்படி ஏற்றுக்கொள்ளப்படாதவை பல, தேவை காரணமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. உதாரணமாகக் கடனாளிகளின் நிலையைச் சீர்படுத்த ஈடுவைத்தல், அனுமதிக்கப்படுகின்றது. கடனுக்குக் கொடுத்த பணத்திற்கு வட்டி வாங்குதல் கடும்வட்டி பெறத்தூண்டுமாகையால், சட்டப்படி தடுக்கப்பட்டபோதும், வட்டி பெறுதல் சுற்று வழியாக வழக்கில் இடம் பெற்றுவிட்டது. இவ்வாறு பல விதிகள் வழக்கில் மாற்றமடைகின்றன.

சமுகத்தை ஆளும் அரசன் அல்லது தலைவனே இத்தகைய சட்டத்தைக்கொண்டு நடத்தலாம். அவர் ஒரு பொறுப்பாளியே; மரபு வழிவந்த சட்டத்தைத் தன் அதிகாரம் கொண்டு அவரால் நீக்கமுடியாது. ஒரு சிலரால் மேற்கொள்ளப்படும் வழக்கை எங்கும் பரவச் செய்வதனுல் அதனை நாளடைவில் சட்டமாக்கலாம். அத்துடன், தேவையேற்படின், சந்தர்ப்பத்திற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

சமயம் சட்டத்தை ஒழுக்கத்தோடு பிணைக்கின்றது. பங்கு, கடன், சாட்சிகளின் குணம், எசமானுக்கும் பணியாளுக்குமுள்ள தொடர்பு, வழக்காளிக்கும் எதிரிக்குமுள்ள தொடர்பு முதலியன ஒழுக்க அடிப்படையிலேயே கணிக்கப்படுகின்றன. உதாரணமாக வைப்புப்பணம் ஒருவித உதவியாகக் கொள்ளப்பட்டது. ஏனெனின், அத்தகைய உதவியால் சொந்தக்காரன் தனது சொத்தை அழியாமற் பாதுகாத்துக்கொள்கின்ருன். ஒருவன் தனது சகோதரனுக்குத் துணை செய்தால் ஆண்டவன் அவனுக்குத் துணை செய்வார் என்பது முகம்மது நபி (சல்) கூற்று. தனக்கு வரத் தேவையில்லாத பணத்தை ஒருவன் அறிந்து பெறுவானுயின், இரு குற்றங்களுக்கு ஆளாகிருன். ஆண்டவன் அவனைக்

குற்றவாளியாகக் கணிக்கின்ருர்; தான் பணம் பெறுவதனுல், யாரை ஏமாற்றுகிருனே அவனுக்கும் குற்றம் செயதவனு கின்ருன். தனது கடனைத் தீர்க்க வழியுள்ள ஒருவன் அதனை பிற்போட்டுவந்தால் பெரிய பாவக் குற்றத்திற்கு இலக்கா கின்ருன். 'உனது அயலவனேடு அன்பாக நட; அவனுக்குத் தீங்கு இழைக்காதே. எப்போதும் மனநெகிழ்ச்சியோடு அவனுடன் ஒழுகு. அவன் தீங்கு செய்தால், மன்னித்துவிடு. உனக்கு அவன் நன்மை செய்வதைக் கண்டால், உனது நன்றியை உலகறியச் செய்' என்பது நபிகள் நாயகத்தின் (சல்) திருமொழிகள்.

இதன் பயனுக இஸ்லாத்தில் உரிமையைப் பயன் படுத்தல் கடமையை நிறைவேற்றுவதாகக் கொள்ளப்படு கின்றது. பிழையான வழியிற் சொத்தை அபகரித்தவனிட மிருந்து அதனைத் திருப்பிப் பெறுவோன், சிறந்த கடமை யொன்றையும் நிறைவேற்றுகிருன். ஏனெனில், அவன் ஒன்றுஞ் செய்யாதிருந்திருந்தால், முறையற்ற சொந்தக் காரனைப் பாவத்தில் தொடர்ந்து மூழ்கச் செய்திருப்பான். 'சகோதரன் அநீதியாக நடந்துகொண்டாலும் அவனுக்குத் துணை செய்; அவனுக்கு உதவி செய்வதாவது, அநீதியாக அவன் நடப்பதைத் தடை செய்வதாகும்' என்பது திருத் தூதுவர் வாக்கு. இணக்கமும், விட்டுக்கொடுத்தலும் போற்றற்குரிய செயல்களாகக் கொள்ளப்பட்டன. பழி சாதித்தல் தடுக்கப்பட்டது. கடனுளிக்கெதிராக அல்ல லூட்டும் நடவடிக்கைகள் தொடர்தல் சட்டத்திற்கு விரோதமானது; உரிமையைத் தப்பான வழியில் பயன் படுத்துவதாகும். ஒருவனும் வெளிப்படையாக மற்றவனுக்கு நட்டமேற்படக்கூடிய முறையில் தனது உரிமையைப் பயன் படுத்தக்கூடாது என இஸ்லாம் கூறுகின்றது. இறைவனுக்குப் பங்கில்லாததொன்றில் மனிதனுக்கு உரிமையில்லை. ஒவ் வொருவனுக்கும் அவனுக்கு உரியதைக் கொடுத்து, மற்ற வனுக்குரியதிற் கை வையாதிருக்கவேண்டும் என்னும்

ஆணையே இறைவனின் பங்காகும். இது இஸ்லாமிய சட்டத்தின் சிறந்த பண்புகளில் ஒன்று.

இச்சிறப்பியல்புகள் யாவற்றையும் நோக்கும்போது முஸ்லிம் சட்டம் அக்காலத்திலே வழக்கத்திலிருந்த அநாகரிகச்சட்டங்களிலும் பண்பற்ற கட்டளைகளிலும் பன்மடங்கு சிறந்து விளங்குகின்றது. வரையறுக்கப்பட்ட பங்குடைமை, வர்த்தகச் சட்டம் ஆகிய துறைகளில் இஸ்லாமிய சட்டத்திலிருந்து பிறர் கடன் வாங்கியிருக்கின்றனர். இவற்றைத்தான் நாம் கணிக்காது விட்டாலும், இக்காலத்துச் சட்டக் கொள்கைகளை இஸ்லாமியச் சட்டங்கள் சிலவற்றின் உயர்ந்த ஒழுக்கப் பண்பு பாதித்துள்ளதென்பதை யாவரும் ஒத்துக் கொள்ளவேண்டும்.

---

# இஸ்லாமியர் தமிழ்மொழிக்காற்றிய தொண்டு I

உலகத்திலேயுள்ள தலைசிறந்த சமயங்கள் யாவும் தமிழ் இலக்கியத்தை வளம்படுத்தியுள்ளன. ஒல்காப்புகழ் படைத்த தொல்காப்பியம், உலகப் பொதுமறையாம் திருக்குறள், பெண்ணின் பெருமையை நிலைநாட்டிய சிலப்பதிகாரம், பெருங்காப்பியமாகிய சீவகசிந்தாமணி போன்றவை சமணர் தமிழிற் பாடியவை. புத்த சமயத்தைத் தமிழ் நாட்டிலே நிலை நாட்டப் பாடப்பட்ட மணிமேகலை, ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகக் கருதப்படும் குண்டலகேசி, ஐந்திலக்கணமும் கூறும் வீரசோழியம் முதலியன பௌத்தர் தமிழில் இயற்றிய நூல்கள். பத்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடப்பட்ட தேவார திருவாசகம், நாயன்மார் வரலாற்றைக் கூறும் பெரிய புராணம் போன்றவை சைவத் தமிழ் இலக்கியங்கள். ஆழ்வார்கள் பாடிய நாலாயிரத்திவ்விய பிரபந்தம், உலகத் துக்காவியங்களோடு ஒத்த சிறப்பினதாக விளங்கும் கம்பராமாயணம், வில்லிபுத்தூரார் அருளிய பாரதம் முதலியவை வைணவர் அளித்த செல்வங்கள். தலைசிறந்த காவியங்களுள் ஒன்றாக விளங்கும் தேம்பாவணி, கலம்பகங் களுள் ஒன்றாகிய திருக்காவலூர்க்கலம்பகம் போன்றவை கிறித்தவர் படைத்த இலக்கியங்கள்.

இவர்கள் போலவே, எண்ணிறந்த இஸ்லாமியப் புலவர்கள் மிகச் சிறந்த தமிழ் நூல்கள் பலவற்றைச் சென்ற சில நூற்றாண்டுகளாகத் தமிழில் இயற்றியிருக்கின்றனர்.

நூல் அமைப்பு முறையிலும், நடையிலும், போக்கிலும் இந் நூல்களுக்கும் பேர் பெற்ற தமிழ் இலக்கியங்களுக்கும் அடிப்படையான வேறுபாடு அதிகம் இல்லை. இந்நூல் களுக்குத் தலைவராக அமைவோர் வேறு வேருக இருப்பினும், தமிழ் மரபுக்கு ஒத்தனவாகவும், தமிழ்ப் பண்புக்கு இயைந் தனவாகவும் இவை அமைந்திருக்கின்றன. கற்பனை ஆற்றலிலும், பொருட் சிறப்பிலும், சொல்லழகிலும் கவியமைப்பிலும் இஸ்லாமியப் புலவரின் நூல்களும் அதிக சிறப்புடன் விளங்குகின்றன.

இந்நூல்கள் இஸ்லாமியக் கோட்பாடுகளை அடிப்படை யாகக்கொண்டு, இஸ்லாமிய மக்களுக்குப் பயன்படக்கூடிய முறையில் அமைந்துள்ளன. இவை பெரும்பாலும் அறபு மொழியிலுள்ள இஸ்லாமியரின் முதல் நூல்களைப் பின் பற்றியே எழுதப்பட்டன. இத்தகைய நூல்களிலே தலை சிறந்து விளங்குவது சீருப்புராணம் என்னும் காப்பியமே. முகம்மது நபி (சல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறும் இந்நூல், தமிழ் இலக்கிய மரபுகளைத் தன்னிடத்தே கொண்டு திகழ்கின்றது. நாட்டு நகர வருணனை யாவும் தமிழ்நாட்டைப் பற்றியவையே. இதை இயற்றிய உமறுப் புலவர் எட்டயபுரத்துச் சமத்தான வித்துவான்களுள் ஒருவர். அச்சமத்தானத்தில் பெயர் பெற்ற கடிகைமுத்துப் புலவரின் மாணுக்கனுகக் கொள்ளப்படுவர். அக்காலத்திலே வடதேசத்திலிருந்து எட்டய புரத்துக்கு வந்த வாலைவாரிதி என்ற பண்டித சிகாமணியோடு வாக்குவாதம் செய்து, புகழ் ஈட்டினுர். செத்துங் கொடைகொடுத்த வள்ளலாகிய சீதக் காதி என்னும் சேகப்துல் காதர் மரைக்காயருடன் அடுத்துப்பழகி நட்புக்கொண்டு, அவரைப் புகழ்ந்து பாடிப் பரிசில்பெற்ற கந்தசுவாமிப்புலவர் படிக்காசுப்புலவர் முதலிய புலவர் கூட்டத்தில் புலமைமிக்கவராகத் திகழ்ந்தார்.

சீரு என்ற அறபுச் சொல்லிற்கு வாழ்க்கை வரலாறு என்பது பொருள். ஆகவே, இது நபிகள் நாயகத்தின்

வாழ்க்கை வரலாற்றினைக் கூறும் புராணமாகும். 5027 பாடல்களைக்கொண்ட இந்நூல், 92 படலங்களை உடையது; மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற் காண்டமாகிய விலாதத்துக்காண்டம் கடவுள் வாழ்த்து உட்பட 24 படலங்களையும், 1240 விருத்தங்களையும் கொண்டது. இரண்டாவது காண்டமாகிய நுபுவ்வத்துக் காண்டம் 21 படலங்களையும், 1104 விருத்தங்களையும் கொண்டது. மூன்றாவது காண்டமாகிய ஹிஜ்றத்துக் காண்டத்தில் 47 படலங்களும், 2683 விருத்தங்களும் உண்டு. இப்புராணத்தின் கவிநயம், நடை முதலியன கம்பராமா யணம் போன்றவற்றோடு பெரும்பாலும் ஒத்திருக்கின்றன.

முகம்மது நபி (சல்) அவர்களின் வாழ்க்கை முழு வதையும் சீறாப்புராணம் குறிப்பிடவில்லை. அவர்களின் மறைவைப் பற்றிய குறிப்புக்கள் அதில் இல்லை. நபிகளாரின் இறுதிக்கால வாழ்க்கையைப்பற்றிக் கூறும் நூல் புதுகுஷ்ஷாம் என்னும் காப்பியமாகும். புதுகுஷ்ஷாம் என்ற சொற்றொடர் 'புதுஹ்' 'ஷாம்' என்ற இரு அறபுச் சொற்களாலானது. புதுஹ் என்றால் பிரவேசம் அல்லது வெற்றிப்பிரவேசம் எனப் பொருள்படும். ஷாம் என்பது சீறியா நாட்டைக் குறிக் கின்றது. ஆகவே, சீறியா நாட்டை வெற்றிகொண்ட வரலாற்றைக் கூறுவதே புதுகுஷ்ஷாம் என்னும் காப்பியம். காயற்பட்டினத்தைச் சேர்ந்த மகாவித்துவான் செய்கு அப்துல் காதிறு நயினார் லெப்பை ஆலிம் புலவர் இயற்றிய இந்நூல் முகம்மதிய்யா, ஸித்தீக்கிய்யா, பாறூக்கிய்யா என்ற மூன்று காண்டங்களைக்கொண்டது. முகம்மது நபி (சல்) அவர்களின் வாழ்க்கை இறுதிப் பகுதியைக் கூறுகின்றது முகம்மதிய்யா காண்டம். ஸித்தீக்கிய்யா என்ற காண்டம் முகம்மது நபி (சல்) அவர்களுக்குப் பின் இஸ்லாமிய அரசை நடத்திய அபூபக்கர் (றலி) என்பவரைப்பற்றிக் கூறுகின்றது. சீறியா நாடு முஸ்லிம் பேரரசின் ஒரு மாகாணமாக மாற்றப் பட்ட வரலாற்றை மூன்றாவது காண்டமாகிய பாறூக்கிய்யா கூறுகின்றது.

புதுகுஷ்ஷாம் ஆசிரியர் திருமணிமாலை என்னும் நூலையும் இயற்றியுள்ளார். இப்றுஹீம் நபி(அலை) என்பவரின் வாழ்க்கை வரலாற்றை இந்நூல் கூறுகின்றது. இக்காப்பியத்திலுள்ள நாட்டு நகர வருணனைகளிற் பல உயரிய போதனைகளை ஆசிரியர் புகுத்தியுள்ளார். இவ்வாசிரியர் பாடிய இன்னொரு நூல் குத்புநாயகம் என்னும் முகியித்தீன் புராணம். இஸ்லாத்துக்குப் புத்துயிர் அளித்த பெரியார் முகியித்தீன் ஆண்டவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது இந்நூல். முகியித்தீன் ஆண்டவர் தலைசிறந்த ஞானியாக மக்களாற் கருதப்பட்டவர். நாகூரிற் கல்லறையை உடைய சாகுல் ஹமீது ஆண்டவரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது நாகூர்ப்புராணம். நாகூரைச் சேர்ந்த குலாம் காதிறு நாவலர் இதனை இயற்றினார். இந்நூலுக்கு யாழ்ப்பாணத்து சு. அசனா லெப்பை என்ற புலவர் சிறப்புப்பாயிரம் அளித்துள்ளார்.

தமிழில் இஸ்லாமியரால் இயற்றப்பட்ட வேறுபல பிரபந்த நூல்களும் உள. இவர்கள் செய்த ஆற்றுப்படை நூல்களிற் சிறந்தது மதுரைச் சங்கத்துப் புலவராற்றுப் படை. பரிசில் பெற்ற புலவன் ஒருவனால் இன்னொரு புலவன் மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கு ஆற்றுப் படுத்தப்பட்டுள்ளான். நூலை இயற்றியவர் குலாம் காதிறு நாவலர். இந்நூலிலே தமிழ் நாட்டின் பழமையும் மதுரையின் பெருமையும், மதுரைக்குச் செல்லும் வழியும், இடையிடையே கிடைக்கும் ஊர்திகளும், தமிழ்ச் சங்கத்தின் சிறப்பும், ஆங்கு அமரும் புலவரின் பெருமையும், பாண்டித்துரைத்தேவரின் புகழும் கற்பனை நயத்துடன் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

பிள்ளைத்தமிழ் நூல்களையும் இஸ்லாமியர் இயற்றினர். அவை பெரும்பாலும் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் நூல்களாகவே இருக்கின்றன. அவற்றுள்ளே தலைசிறந்தது நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ். இது நபிகள் நாயகம் (சல்)

அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டுள்ளது; நபிகள் நாயகத்தைக் குழந்தையாகக்கொண்டு, பத்துப் பருவங்களிற் பாடப்பட்டது. செய்யிது அனபியா சாகிபு என்பவர் இதன் ஆசிரியர். இவர் தென்காசியைச் சேர்ந்த வடகரையூர் செயிது மீரு லெப்பையின் மகன். இப்பிள்ளைத் தமிழ் அல்லாஹ் ஒருவனையே புகழ்ந்து அவனது அருளையே நாடுகின்றது. மக்காமாநகரின் இயற்கைக் காட்சிகளை ஆசிரியர் அழகுற வருணித்துள்ளார்.

இன்னொரு பிள்ளைத்தமிழ் நூல் முகியித்தீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ். முகியித்தீன் ஆண்டவரைக் குழந்தையாக வைத்துப்பாடப்பட்டது இந்நூல். நூலை இயற்றியவர் செய்யிது முகியித்தீன் கவிராயர். இப்பிள்ளைத்தமிழில் அல்லாஹ், நபிநாயகம், கலிபாக்கள், வலிமார் முதலிய பலர் சிறப்பிக்கப்படுகின்றனர். அவர்களின் அருள் இந்நூலிற் பாடப்பட்டுள்ள குழந்தைக்குக் கிடைக்கும்படியாக வேண்டப்பட்டுள்ளது. குலாம் காதிறு நாவலரின் மகன் ஆரிபு நாவலர் இயற்றியது நாகூர் பிள்ளைத்தமிழ். இது, நாகூர் ஆண்டவர் எனப் புகழ் பெற்ற சாகுல் ஹமீது ஆண்டவரைக் குழந்தையாகக் கொண்டு பாடப்பட்டது. பெண்பாற் பிள்ளைத்தமிழ் இலக்கணங்கள் ஒருங்கே அமைந்த நூல் பாத்திமா நாயகி பிள்ளைத் தமிழ். நபிகள் நாயகத்தின் மகள் பாத்திமா நாயகியைக் குழந்தையாகக் கொண்டு இந்நூல் பாடப்பட்டது.

தமிழ்ப் பிரபந்தங்களுள் ஒன்று கலம்பகம். இது ஒரு கலவைப் பிரபந்தம். கலம்பகம் என்ற சொல் கலப்பு, அகம் என்ற இரு சொற்களால் ஆனது. பலபாக்களும் துறைகளும் தொடர்பின்றிக் கலத்தலை இப்பிரபந்தம் தன்னகத் துடையது. கலம்பக நூலிலே ஒரு போகு கொச்சகக்கலிப் பாவும் வெண்பாவும் கலித்துறையும் முதற்கவியுறுப்பாக அமைய, இடையிடையே மருட்பா ஆசிரியப்பா கலிப்பா ஆசிரிய விருத்தம் கலிவிருத்தம் கலித்தாழிசை வஞ்சித்துறை முதலியனவும் விரவிவரும். இது பெரும்பான்மை

அகத்திணைச் செய்திகளையும் சிறுபான்மை புறத்திணைச் செய்திகளையும் அவற்றின் துறைகளையும் தன்னகத்தே கொண்டு திகழும். இப்பிரபந்தத்தில் புயவகுப்பு மதங்கு அம்மானை காலம் சம்பிரதம் கார் தவம் குறம் கைக்கிளை தூது ஊசல் முதலிய உறுப்புக்கள் மருவி வரும். கலம்பக இலக்கணம் அமைய இஸ்லாமிய அடிப்படையில் எழுந்த நூல்கள் முஸ்லிம்களிடையே பல வழங்குகின்றன. அவற்றுள் ஒன்று மக்காக் கலம்பகம். முகம்மது நபி (சல்) அவர்கள் பிறந்து வளர்ந்த தலமாகிய திரு மக்காமா நகரின் பெயரால் முகம்மது நபி (சல்) அவர்களைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது இக்கலம்பகம். இதனைச் செய்கப்துல் காதிறு நயினார் லெவ்வை ஆலிம் என்னும் புலவர் இயற்றினார். பதாயிகு கலம்பகம், குவைலீர் கலம்பகம் என்ற கலம்பகங்களும் இஸ்லாமிய அடிப்படையில் இயற்றப்பட்டன. கண்டிக் கலம்பகம் என்ற ஒன்றும் பாடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்ப்பிரபந்த வகைகளுள் ஒன்று அம்மானை. அம்மானையிலுள்ள ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும் அம்மானை என்ற சொற்றொடரைப் பெரும்பாலும் காணலாம். அம்மானை என்னும் விளையாட்டிலிருந்தே இந்நூல் இப்பெயர் பெற்றது. இவ்விளையாட்டு பெண்களுக்கே உரியது. அம்மானை என்பது சிலம்புகள் என்னும் இருகாய்களை வைத்து, ஒன்றைமேலே செலுத்திக் கீழே விழாமற் கையிற் பிடித்துக் கொள்ளும்விளையாட்டு. இஸ்லாமியரின் தமிழ் நூல்களில் அம்மானைப் பாக்களும் பல இருக்கின்றன. அவற்றுள் ஒன்று, நபி அவதார அம்மானை. நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களின் பிறப்பை இந்நூல் கூறுகின்றது. சீறாப்புராணத்தை இயற்றிய உமறுப் புலவரின் மகன் கவிக்களஞ்சியப் புலவர், சீறாப்புராணத்தி லுள்ள நபி அவதாரப்படலத்தை அடிப்படையாகக் கொண்டு, இவ்வம்மானையை யாத்தனர். இந்நூலில் முதற் செய்யுள் வெண்பாவாலானது; ஏனையன கண்ணிகளாய் அமைந்துள்ளன. அம்மானை இலக்கணத்திற்கமையப்

பாடப்பட்ட இன்னொரு நூல் பப்பரத்தியார் அம்மானை, முகம்மது நபி (சல்) அவர்களின் மருமகனாகிய அலிறலியல் லாஹு அன் ஹுவின் வலிமையை இந்நூல் கூறுகின்றது. மதுரை உசை நயினாரின் மகன் செய்யிது மீரூப்புலவர் பாடிய இந்நூலில், தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்கள் ஆளப்பட்டுள்ளன.

இஸ்லாமியரின் தமிழ் நூல்களில் அந்தாதி இனத்தைச் சேர்ந்த நூல்கள் பல இருக்கின்றன. மதீன மாநகரைப் பொருளாகக் கொண்ட திருமதீனத்தந்தாதி அவற்றுள் தலை சிறந்தது. இஸ்லாமிய அரசரின் முதலாவது தலைநகராய்த் திகழ்ந்தது மதீனமாநகர். இந்நகரிலிருந்தே இஸ்லாம் உலகெங்கும் பரவியது. இவ்வந்தாதியை இயற்றியவர் திருச்சிராப்பள்ளியைச் சேந்தவரும் இலக்கண வித்துவான் என்ற புகழ்ப்பெயர் பெற்றவருமாகிய பிச்சை இபுறுகிம் புலவர். நாட்டு நகரக் காட்சிகள் விரிவாக வருணிக்கப் பட்டுள்ள இந்நூலில் அறபுச் சொற்கள் மிகவுங் குறைவு.

புலவராற்றுப்படை ஆசிரியராகிய நாகூர் வித்துவான் குலாம் காதிறு நாவலர் இயற்றியது திருமக்காத் திரிபந்தாதி யாகும். திரிபந்தாதி, அந்தாதி இனத்தில் ஒன்று. முதல் எழுத்தொழிய இரண்டு முதலாகிய எழுத்துக்கள் ஒவ்வொரு அடியிலும் ஒத்திருக்கையில் பொருள் வேறுபட அமைந்த அந்தாதி திரிபந்தாதி எனப்படும். திருமக்கா நகரைப் போற்றிப்பாடும் இந்நூல், யாழ்ப்பாணத்தில் வச்சிர அச்சகத்தில் 1895ஆம் ஆண்டில் வெளிவந்தது. பெரும்பான் மையான செய்யுட்களில் நபிகள் நாயகத்தின் திருப்போத னைகள் பொதிந்திருக்கின்றன. ஏனைய அந்தாதி நூல்களுக்கு உரை உண்டு; இதற்கு இல்லை.

முஸ்லிம் திருத்தலங்களுள் நாகூரும் ஒன்று; நாகூர் நாகை எனவும் வழங்கும். ஒவ்வோராண்டும் பல நாடுகளிலிருந்தும் இஸ்லாமியர் இவ்விடம் வந்து இங்கு நடைபெறும் கந்தூரித்

திருவிழாவிற் கலந்துகொள்வர். இவ்விழாவிற் கலந்து கொண்டால் தமது எண்ணங்கள் நிறைவேறும் என்பது பலர் நம்பிக்கை. நாகூர்ப்பள்ளியில் நாகூர் ஆண்டவர் என்றும், சாகுல் ஹமீது ஒலியுல்லா என்றும், மீருன் சாகிபு ஒலியுல்லா என்றும் பலவாறு அழைக்கப்படும் பெரியார் அடங்கியிருக்கின்ருர். நாகூர் ஆண்டவரைப்பற்றியும் நாகூரைப்பற்றியும் செய்கு அப்துல் காதிறு நயினுர் ஆலிம் என்பவர் நாகையந்தாதியைப் பாடினர். மஸ்தான் சாகிபு பாடலுக்கு ஒருபாவொருபஃதும், வாயுறை வாழ்த்தும் தோத்திரப் பாவும் இயற்றியவர் இவரே. மடக்கு என்னும் சொல்லணி வகைகள் பல இந்நூலில் அமைந்துள்ளன.

இசைத்தமிழின் தொடர்புடைய பிரபந்தங்களையும் இஸ்லாமியர் பாடினர். இலகுவான நடையில் அமைந்துள்ள இப்பிரபந்தங்களை மக்கள் எளிதிற் படித்து இன்புற்றனர். அவற்றுட் சில திருப்புகழ், மாலை, கும்மி, தாலாட்டு, சிந்து, ஏசல், கீர்த்தனை, ஆனந்தக்களிப்பு முதலியன. கடவுளைப் புகழ்ந்து பாடப்படும் பாக்களைத் திருப்புகழ் என்பர். திருப் புகழிலமைந்த பாக்கள் பண்ணமைந்தவை. ஒவ்வொரு பாவும் ஒரு குறிப்பிட்ட சந்தத்திற் பாடற்குரியது. முருகக் கடவுளைப் புகழ்ந்து அருணகிரிநாதர் பாடிய திருப்புகழே பொதுவாகத் திருப்புகழ் எனக் கொள்ளப்படுகின்றது. ஆனுல், முஸ்லிம்களால் இயற்றப்பட்ட திருப்புகழ் நூல் களும்[5] உள. அவை நபிகள் நாயகத்தின் மேற் பாடப் பட்டவை. சொல்லாட்சி பொருட்செறிவு முதலியவற்றில் எல்லாத் திருப்புகழ் நூல்களும் ஒத்திருக்கின்றன. நபிகள் நாயகத்தைப் போற்றிப் பாடிய திருப்புகழ் ஆசிரியர் காயற் பட்டணத்துக் காசீம் புலவர். இவருடைய கவித்திறன், சொல்லாட்சி, பொருட்செறிவு, சந்தப்பா வன்மை முதலியன வற்றை இத்திருப்புகழிலிருந்து அறியலாம். பெரும்பான்மை யான பாடல்கள் திருமக்காமாநகரையும் திருமதீனு மாநக ரையும் திருத்தலங்களாகக் கொண்டு பாடப்பட்டுள்ளன. ஏனைய பாடல்களிற் புனித கஃபா, பாவா ஆதமலை

**(Adam's Peak)** தவுறுமலை முதலிய இஸ்லாமிய திருத்தலங்கள் புகழ்ந்து பாடப்பட்டுள்ளன. இவற்றுள் இலங்கையிலுள்ள ஆதமலை, ஆதம்நபி (அலை) அவர்கள் அங்கு வந்ததனால் அப் பெயர் பெற்றது. அருணகிரிநாதரின் திருப்புகழுக்கும் காசீம் புலவரின் திருப்புகழுக்கும் பல ஒற்றுமைகள் உண்டு.

நபிகள் நாயகம் (சல்) மீது பாடப்பட்ட இன்னொரு திருப்புகழ் நூல் நவரத்தினத் திருப்புகழ். ஈழத்து முஸ்லிம் புலவர்களுள் தலைசிறந்த ஒருவராகிய யாழ்ப்பாணத்து அசனா லெப்பை இந்நூலை இயற்றினார். இவர் தமிழ் அறபு ஆங்கிலம் ஆகிய மொழிகளிற் பாண்டித்தியம் பெற்றவர். நபிகள் நாயகம் திருமக்காவிற் பிறந்து திருமதீனாவுக்குச் சென்று உலகெல்லாம் இஸ்லாத்தைப் பரப்பி, உலகனைத் தையும் ஒரு குடைக்கீழ்க் காப்பாற்றிய பெருமையையும், திருமக்கா, திருமதீனா ஆகிய தலங்களின் புகழையும் பாராட் டியுள்ளார். இயற்கையே மாறுபட்டாலும் மாறுபடாத, உவமைகளால் வருணிக்கமுடியாத, நபிபெருமானின் பண்புகளை ஓசைநயம் பொதிந்த சந்தப் பாக்களினால் திறம் படப் பாடியுள்ளார். இப்பாடல்களில் ஒவ்வொரு அடியிலும் இறுதியில் ஒரே வகையான இரு சீர்கள் இருக்கின்றன. இவை இரண்டும் ஒரே வகையான ஓசையை உடையனவாயினும் இரு வெவ்வேறு கருத்துக்களைக்கொண்டுள்ளன; சிற்சில சமயங்களில் ஒன்றோடொன்று முரண்பட்ட இரு வெவ்வேறு கருத்துக்களை உடையன. முகியித்தீன் ஆண்டவர் பெயரிலும் முகியித்தீன் கவிராயர் என்பவர் ஒரு திருப்புகழ் பாடியிருக் கின்றார்,

பண்ணமைந்த பாடல்களுள் கும்மியும் ஒன்று. கை குவித்துக் கொட்டுதல் கொம்மை எனப்படும். கொம்மை என்பது கிராமிய வழக்கு. கொம்மை என்ற சொல்லிலிருந்தே கும்மி என்ற சொல் வந்ததென்பர். பெண்கள் வட்டமாக நின்று விளையாடும்போது கைகுவித்துக் கொட்டிப் பாடி யாடுவர். இது கும்மியாடல் எனப்படும். இந்தக் கும்மி

யாடலுக்கு ஏற்ற முறையில் பாடப்படும் பாட்டே கும்மிப் பாடல். இப்பாடல்கள் தாளம் சந்தம் முதலியவற்றுடன் பாடப்படும். முஸ்லிம் ஞானிகள், ஞானத்தைப் பொருளாகக் கொண்டு பல கும்மிப்பாடல்கள் பாடியுள்ளனர். இவையே யன்றிப் பெண்கள் பாடும் கும்மிப்பாடல்களும் உள. பெண்கள் தாம் செய்யும் வேலையைக் களைப்புத் தோன்றுமற் செய்வதற்காகக் கும்மிப்பாடல்கள் பாடுவர். நெல்லுக் குத்தும் பொழுது இருவர் மாறி மாறிப் படிக்கும் பாடல் களும் அவ்வகையில் அடங்கும். இவற்றுடன் நில்லாது முஸ்லிம் பெரியாரின் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டும் கும்மிப்பாடல்கள் பாடினர். சீவியச் சரித்திரக் கும்மி என அவை வழங்கும்.

அவற்றுள் முகியித்தீன் நாவலர் இயற்றிய மாப்பிள்ளை லெப்பை ஆலீம் சீவிய சரித்திரக் கும்மியும் ஒன்று. கீழக் கரையைச் சேர்ந்த செய்யிது லெப்பை ஆலீம் என்பவரே மாப்பிள்ளை லெப்பை ஆலிம் என்பவர். மாப்பிள்ளை லெப்பை ஆலிம், தமிழ், பாளி, சங்கதம், இந்துஸ்தானி, பாரசீகம் முதலிய மொழிகளிற் பாண்டித்தியம் பெற்றவர்; அறபு மொழியிலுள்ள பல நூல்களைத் தழுவித் தமிழிற் பல நூல்களை எழுதியவர். இத்தகைய பெரியாரின் தொண்டினை எடுத்துக் கூறுவதே மேலே குறித்த கும்மிப்பாடல். இலங்கை வேர்விலையைச் சேர்ந்த செய்கு முஸ்தபா ஒலியுல்லாவின் வாழ்க்கையையும் அரும்பெருஞ் சேவைகளையும் பொருளா கக்கொண்டு காலிநகர் முகம்மது காசீம் புலவர் செய்கு முஸ்தபா ஒலியுல்லாக் காரண அலங்காரக் கும்மி என்னும் நூலைப் பாடினர்.

குழந்தைகளைத் தொட்டிலிலிட்டு உறங்கச் செய்யத் தாலேலோ என்று முடியும் பாக்களை மக்கள் பாடுவர். இவை தாலாட்டுப்பாடல்கள் என வழங்கும். இத்தகைய பாக்கள் பிள்ளைத்தமிழ் நூல்களில் அடங்கும். இவை ஒருவகைப் பிரபந்தமாகவும் வழங்கும். தாலாட்டுதற்கு ஏற்றதாய்

அமைந்த, பல கண்ணிகளைக் கொண்டது இப்பிரபந்தம். பிரபந்தத் தலைவனுடைய அல்லது தலைவியினுடைய சிறந்த செயல்களையும் புகழையும் இப்பிரபந்தம் பாடும். இஸ்லாமியத் தாய்மார் தமது குழந்தைகள் உறங்குவதற்குத் தமிழ்த் தாலாட்டுப் பாட்டுப் பாடுவர். இத்தகைய இஸ்லாமியத் தாலாட்டுப் பாடல்களுள், ஐந்து தாலாட்டுப் பாடல்களைக் கொண்ட பஞ்சரத்தினத் தாலாட்டும் ஒன்று. இதை இயற்றியவர் மேலைப்பாளையத்துக் காளை அசனலிப் புலவர். இந்நூலில் அடங்கியுள்ள தாலாட்டுப் பாடல்கள் உடற்கூறறியும் ஞானத் தாலாட்டு, சுகானந்தத் தாலாட்டு, மணிமந்திரத் தாலாட்டு, மீறுன் தாலாட்டு, பாலகர் தாலாட்டு என்பன.

உடலின் கூறுகளை அறியும் ஞானத்தினைக் கூறுவது உடற் கூறறியும் ஞானத்தாலாட்டு. இத்தாலாட்டு இஸ்லாமியரல்லாத சித்தராற் பாடப்பட்ட பாடல்களை ஒத்திருக்கின்றது. பட்டினத்தடிகள் பாடிய உடற்கூற்று வண்மை என்ற பாடலுடன் இது ஒற்றுமை உடையது. பாத்திமா நாயகியைப் போற்றிப் புகழ்கின்றது சுகானந்தத் தாலாட்டு. அம்மானைக் கண்ணிகளாலான இத்தாலாட்டு ஒவ்வொரு கண்ணியின் இறுதியிலும் அம்மானை என்பதற்குப் பதிலாகப் பாத்திமத்தே என்ற சொல்லைக்கொண்டுள்ளது. மணிமந்திரத்தாலாட்டு முகியித்தீன் அப்துல் காதிறு பேரிற் பாடப்பட்டது. மீறுன் தாலாட்டு சாகுல் ஹமீது ஆண்டகையைப் புகழ்ந்து பாடப்பட்டது. பாலகர் தாலாட்டு என்பது குழந்தைகளைப் போற்றி இயற்றப்பெற்றது. இதிலுள்ள கண்ணிகள் உறங்கிமுழி என்ற சொற்றொடரைக்கொண்டு முடிகின்றன. அறபு எழுத்திலும் சில தாலாட்டுப் பாடல்கள் எழுதப்பட்டன. அவற்றுள் ஒன்று செய்கு அப்துல் காதிறு லெப்பை ஆலிம் சாகிபு இயற்றிய மஅரிபத்தின் தாலாட்டு. தென்காசியைச் சேர்ந்த இப்புலவர் செய்த இத்தாலாட்டும் ஞானத்தையே பொருளாகக் கொண்டது. பிள்ளைத் தாலாட்டு என ஒரு தாலாட்டும் உண்டு. அதனை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

பாக்கள் மாலைபோற் கோக்கப்பட்டுள்ள நூல் மாலைப் பிரபந்தம் எனப்படும். இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் மாலை இனத்தைச் சேர்ந்த நூல்கள் பல உள. அவற்றைப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதுமொழி மாலை போன்ற நூல்கள் நபிகள் பெருமானின் புகழைப் பாடுபவை. இறசூல் மாலை போன்றவை இஸ்லாமிய விழாக்களில் ஓதப்படுபவை. சில, முஸ்லிம் மக்களின் சமய அறிவை வளர்ப்பதற்கு எழுதப் பட்டவை, இன்னும் சில, முஸ்லிம் மக்கள் கைக்கொள்ள வேண்டிய நன்னெறிகளைப் போதிப்பன. அவர்களின் பொழுதுபோக்குக்காகப் பயன்படுகின்ற நூல்களும் உள. மற்றுஞ் சில, முஸ்லிம் பெரியாரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுபவை. இழவு வீடு போன்ற இடங்களிற் குழுமி இருப்போர் முன்னிலையிற் படிக்கப்படும் மாலை நூல்களும் உள.

மாலை நூல்களுள் தலை சிறந்தது முதுமொழி மாலை. சீறாப்புராணம் இயற்றிய உமறுப்புலவரே அதனைப் பாட முன் இதனைப் பாடினர். இதிலுள்ள ஒவ்வொரு பாட்டிலும் முகம்மது நபி (சல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆழ்ந்த கருத்துடன் சொற்சுவை பொருந்த விளக்கி வைப்பர்.

இழவு வீட்டினை முஸ்லிம்கள் மையத்து வீடு என அழைப்பர். மௌத்தான முஸ்லிம் ஒருவர் அடக்கஞ் செய்யப்பட்டபின் அன்றிரவு தொடங்கி மூன்றிரவு வரை அவரது வீட்டில் உற்றார் உறவினர் அயலார் முதலியோர் கூடுவர். இவ்வாறு கூடுதல் துக்கங் கொண்டாடுதல் அல்லது துக்கங்காத்தல் எனப்படும். இவ்வாறு மையத்து வீட்டில் விடியற்காலைவரை கூடியிருப்போர் பொழுதை வீணாகக் கழிக்காதிருக்கும்பொருட்டுச் சமய போதனைகள் நடை பெறும்; நன்னெறி புகட்டப்படும்; முஸ்லிம் பெரியாரின் சீரிய வாழ்க்கை வரலாறுகள் எடுத்துக்காட்டப்படும்; சீறாப் புராணம் முதலிய நூல்களும் படிக்கப்படும்; புராண உரையும் கூறப்படும்.

இவ்விழவு வீடுகளில் மாலை நூல்களைப் படிப்பதும் உண்டு. அம்மாலை நூல்களுட் பெரும்பாலும் படிக்கப்பட்டுப் பயின்றுவருவது ஒசியத்து மாலை என்பதே. இறக்குந் தறுவாயி லிருக்கும் ஒருவன் தனது உறவினர் முதலியோருக்குக் கடைசியாகக் கூறுவதே ஒசியத்து எனப்படும். தான் இறந்த பின் தனது பொருட்களை எவ்வாறு பிரித்துக் கொடுத்தல் வேண்டும், பிள்ளைகள் எவ்வாறு நடத்தல் வேண்டும் என்ப வற்றைக் கூறுதல் ஒசியத்துச் சொல்லல் எனப்படும். அறபு எழுத்திலுள்ள இந்த ஒசியத்து மாலையை இயற்றியவர் யார் எனத் தெரியாது. நபிகள் நாயகம்(சல்) தமது மகள் பாத்திமா நாயகியிடம் கூறிய ஒசியத்துக்களே இதில் அடங்கியுள்ளன. அவர் இறப்பதற்கு முன் அவரின் மகள் கட்டிலின் தலைமாட்டில் இருந்து கேள்வி கேட்க, அவற்றிற்கு அவர் அளித்த மறுமொழிகளை இம்மாலை கூறுகின்றது.

பக்கீர் மதாறுப்புலவராற் பாடப்பட்டது இராஜமணி மாலை. இவர் இயற்றிய இன்னொரு நூல் முகியித்தீன் மாலை. பக்தாதைச் சேர்ந்த ஜெயிலானியிற் பிறந்த முகியித்தீன் ஆண்டவரின் வாழ்க்கை வரலாற்றையும் இஸ்லாத்தைப் பரப்பி அதனை நல்ல நிலைக்குக் கொண்டுவர அவர் செய்த அரும் பெருஞ் செயல்களையும் இந்நூல் கூறுகின்றது.

இசைத்தமிழில் அடங்கும் இன்னொரு நூல்வகை ஏசல். ஏசல் என்பது ஒருவரை ஒருவர் ஏசிக்கூறும் பாட்டாகும். எட்டிகுடி ஏசல், வள்ளி தெய்வயானை ஏசல் போன்ற ஏசற் பாட்டுக்கள் காதலையே பொருளாகக் கொண்டுள்ளன. ஆனால், இஸ்லாமியரின் தமிழ் ஏசற்பாட்டுக்கள் காதலைப் பற்றியனவல்ல; இஸ்லாமிய கோட்பாடுகளை அடிப்படை யாகக்கொண்டவை. காயற்பட்டணத்து நெய்னு லெப்பை ஆலிம் சாகிபுவின் மகன் அகுமது லெப்பை ஆலிம் சாகிபு என்பவர், தாய்மகளேசல் ஒன்றை இயற்றியுள்ளார். தாய்க்கும் மகளுக்கும் நடந்த வாக்குவாதத்தை இவ்வேசல் கூறுகின்றது. முகியித்தீன் கவிராயரின் பேரர் சாகுல் ஹமீது

புலவர் நபிநாயகம் (சல்) பேரில் ஏசற் கண்ணிகள் இயற்றியுள்ளார். இவ்வேசற் பாட்டில் இரண்டு பெண்களுக்கிடையே பேச்சு நடை பெறுகின்றது. அவர்கள் இருவரும் நபிகள் நாயகத்தின் (சல்) சிறந்த குணங்களைப் புகழ்கின்றனர். இவ்வாசிரியர் முகியித்தீன் ஆண்டவர் பேரில் தாய்மகள் ஏசல் என்று இன்னுமோர் ஏசற்பாட்டை இயற்றியுள்ளார். முகியித்தீன் ஆண்டவரின் சிறந்த குணமும் புகழும் இந்நூலிற் போற்றப்படுகின்றன.

இசைத் தமிழில் அடங்கும் இன்னொரு பாவினம் சிந்து. சிந்துப் பாடல்களைக்கொண்ட பல நூல்கள் முஸ்லிம் மக்களிடையே வழங்கிவருகின்றன. அவற்றுள் ஒன்று தொண்டி நகரத்துச் சீனிக்காதிறு முகியித்தீன் பாடிய நவநீத ரத்நாலங்காரச் சிந்தாகும். இந்நூல் பாசிப்பட்டணத்தில் அடங்கியிருக்கும் நயினு முகம்மது ஒலியுல்லாவைப் புகழ்ந்து கூறுகின்றது; நாகூர் வித்துவான் குலாம் காதிறு நாவலர் உட்படப் பலர் பாடிய சாற்றுக்கவிகளை உடையது. இந்நூலிற் பல மெட்டுக்களிற் பாடக்கூடிய பாடல்கள் உள. அவற்றுள் ஒரு மெட்டு ஒட்டநாடக மெட்டு. ஒரிஸ்ஸாவிலிருந்து தெலுங்கு நாடு வந்து வாழும் ஒட்டர் அல்லது வொட்டர், கள் முதலியன குடித்து மகிழ்வுற்றுப் பாடும்பொழுது பாடும் மெட்டில் ஒட்ட நாடகப் பாக்கள் பாடப்படல் வேண்டும். நொண்டிச் சிந்தும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. நொண்டிச் சிந்து நொண்டி நாடகத்தில் இடம் பெறும். படையிலுள்ள குதிரையொன்றைக் கள்வன் ஒருவன் திருட முயலும்போது, அவன் கால் தறியுண்டு, பின் நல்வழி பெறுவதைச் சிந்துச் செய்யுளாற் புனைந்து கூறுவதே நொண்டி நாடகம்.

நவநீதரத்நாலங்காரத்திலுள்ள நொண்டிச் சிந்து, பாசிப்பட்டணத்து அவுலியாவின் செயல்களைக் கூறுகின்றது. சிங்காரக் கும்மி, கண்ணி, கும்மி, சோபனப்பதம், ஆன்ந்தக் களிப்பு முதலியனவும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. பல

விருத்தங்களும் இந்நூலில் உண்டு. இசையுடன் பாடப்பட்டுக் கேட்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஓசை நயம் பொருந்திய பாக்களைக் கொண்ட இன்னொரு நூல் பூவடிச் சிந்து. மேலைப்பாளையத்துக் காளை ஹசனலிப்புலவர் பாடிய இந்நூலில், நபிபெருமான் பேரிற் பாடிய பூவடிச் சிந்தும், முகியித்தீன் ஆண்டவர் பேரிற் பாடிய பூவடிச் சிந்தும், மீருன் சாகிபு ஆண்டவர் பேரிற் பாடிய பூவடிச் சிந்தும் உள. இப்பெரியார்கள் உலகிற்கு ஆற்றிய தொண்டு இச்சிந்து களுக்குப் பொருளாய் அமைந்துள்ளன. இவர் தமது குருவாகிய செய்கு செய்யிது முகம்மது ஒலியுல்லா பேரிலும் சிந்து பாடியுள்ளார். இந்து சமயத்தவரிடையே வழங்கிய காவடிச் சிந்தைப் படித்து, முஸ்லிம் மக்களுக்கென அத்தகைய சிந்து நூல் பாடவேண்டுமெனக் கொண்டே பூவடிச் சிந்து பாடினர். பூவடிச் சிந்திலுள்ள ஒவ்வொரு பாட்டும் வெவ்வேறுன மெட்டைக் கொண்டது. இம்மெட் டுக்கள் காவடிச் சிந்திலுள்ள மெட்டுக்களைப் பின்பற்றியே அமைக்கப்பட்டன. ஒவ்வொரு பாட்டுக்குரிய மெட்டைக் காவடிச் சிந்திலுள்ள சிந்துக்களின் முதலடியை எடுத்தாண்டு காட்டி, அம்மெட்டிலேயே பாடவேண்டுமென ஆசிரியரே குறிப்பிட்டுள்ளார். மகாவித்துவானும் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவருள் ஒருவருமாகிய கா. ப. செய்குத்தம்பிப் பாவலர் இதற்குச் சாற்றுக்கவி அளித்துள்ளார். வரகவி சுப்பிரமணிய பாரதியும் பூவடிச் சிந்தைப் புகழ்ந்து பாடிய வெண்பா ஒன்று உண்டு.

---

# இஸ்லாமியர் தமிழ்மொழிக்காற்றிய தொண்டு II

சைவரும் வைணவரும் தமிழிற்பாடிய பிரபந்த வகைகள் பாடுவதோடு இஸ்லாமியர் நிற்கவில்லை; பல புதிய பிரபந்த வகைகளையும் தமிழிற் புகுத்தித் தமிழ் அன்னையைப் பொலிவுடன் வாழச் செய்தனர். இத்தகைய புதிய பிரபந்த வகைகளுள் குறிப்பிடத்தக்கவை படைப்போர், முனஜாத், கிஸ்ஸா, மசலா, நாமா என்பவை. இப்பிரபந்தங்கள் மூஸ்லிம் அல்லாத தமிழ்ப் புலவராற் பாடப்படவில்லை.

படைப்போர் போரைப்பற்றிய பிரபந்தம். இவ்வினப் பிரபந்த நூல்களுள் தலைசிறந்தது இறவுசுல்கூல் படைப்போர். சல்கா என்னும் பெண்மனி, முகம்மது நபி (சல்) அவர்களுடைய இயற்கை ஆற்றலை அறிந்து, ஈமான் கொண்டு, இஸ்லாத்தைத் தழுவிய வரலாற்றை இந்நூலிற் குஞ்சுமூசு லெப்பை ஹாஜி ஆலிம்புலவர் எடுத்துக் கூறுகின்றார். ஐந்து படைப்போர் என்பது இன்னொரு படைப்போர் நூல். இஸ்லாமியருக்கும் இஸ்லாமியரல்லா தோருக்குமிடையே நடைபெற்ற ஐந்து போர்களை இந்நூல் கூறுகிறது. இபுனியன் படைப்போர், உச்சிப்படைப்போர், வடோச்சிப் படைப்போர், தாகிப்படைப்போர், இந்திராயன் படைப்போர் என்பன இவ்வைந்து படைப்போரும்.

பூவாறு என்னும் நகரில் வாழ்ந்த செய்யிது முகம்மது என்பவரின் மகன் குஞ்சுமூசு லெப்பை ஹாஜி ஆலிம் புலவராற் பாடப்பட்ட இறவுசுல்கூல் படைப்போர் காப்பிய இலக்கணங்கள் பல அமையப் பாடப்பட்டது. மற்றைய காப்பியங்களிற்போல இப்படைப்போரிலும் நாட்டுப் படலம் நகர்ப்படலம் முதலிய படலங்கள் அமைந்துள்ளன. இந்நூல் சல்காப் படைப்போர் எனவும் வழங்கும். முஸ்லிம் மக்களுக்கும் முஸ்லிம் அல்லாதோருக்குமிடையே நடந்த போரில் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இறவுசுல்கூல் தலைமை தாங்கினன். முஸ்லிம்கள் சார்பாக அலி (றலி), கன்னி சல்கா முதலியோர் படைத்தலைவராகப் போர் செய்தனர். இதனையே இந்நூல் கூறுகின்றது. ஒன்றோடொன்று தொடர்புடைய ஐந்து போர்களைப்பற்றிக் கூறுவது ஐந்து படைப் போர். ஐந்து போரிலும் முஸ்லிம் அல்லாதோருக்குத் தலைமை தாங்கிய இபுனியன், உச்சி, தாகி, வடோச்சி, இந்திராயன் என்பவர்களின் பெயர்களே, இப்படைப்போர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. பூவை மாநகரைச் சேர்ந்த அசன் அலிப்புலவர் இவற்றைப் பாடினர். இப்படைப் போர்கள் அம்மானைக் கண்ணிகளாற் பாடப்பட்டுள்ளன. ஐந்தாவது படைப் போராகிய இந்திராயன் படைப்போரில் முஸ்லிம் அல்லாத ஒருவரை இஸ்லாத்தைப்பற்றிக் கேட்கக் கூடிய கேள்விகளை இந்திராயன் மூலமாகவும், அவற்றிற்கு ஒரு முஸ்லிம் இறுக்கக் கூடிய பதிலை அலி (றலி) வாயிலாகவும் அசன் அலிப்புலவர் கூறுகின்றார்.

முனஜாத்து என்பது அறபு மொழியில் இரகசியம் பேசுதல் எனப்பொருள்படும். வழிபாட்டுப் பிரார்த்தனை என்பதினையும் இது குறிக்கும். அல்லாஹ்வை இரந்து பாடு

தலையும் முனஜாத்து என்பர். பிற்கால வழக்கில் அல்லாஹ்வினிடத்திலும் அவனது திருவருளைப் பெற்ற மகான்கள் ஒருவரிடத்திலும் மன்றாடி வேண்டி நிற்றற் பொருளிற் பாடப்படும் எண்வரையறுக்கப்படாத செய்யுளாக வழங்கியது. இத்தகைய முனஜாத்துப் பாடல்கள் பலவற்றை இஸ்லாமியப் புலவர்கள் பாடியுள்ளனர். முஸ்லிம் மக்களிடையே வழங்கும் நூல்களுள் மிகப்பல, முனஜத்து நூல்களே. இவை பொதுமக்கள் எளிதில் விளங்கக்கூடிய வகையில் அமைந்துள்ளன. வெவ்வேறு பிரபந்தங்கள் பாடிய புலவர்களும் முனஜாத்துப் பாடல்களையும் தமது நூலிற் சேர்த்துள்ளனர்.

மேலைப் பாளயத்தைச் சேர்ந்த மீருன் சாகிபுப் புலவரின் மகன் சாகுல் ஹமீதுப் புலவர் பாடிய ஆனந்த சாஹித்தியம் என்னும் நூலிற் பல முனஜாத்துப் பாக்கள் உள. அவற்றுள் ஒன்று றகுமான் பேரில் முனஜாத்து. றகுமான் என்ற சொல் அல்லாஹ்வையே குறிக்கும். இம் முனஜாத்திற் புலவர் முதலில் அல்லாஹ்வைப் புகழ்ந்து தம் குறைகளைக் கூறி இரக்கின்றார். முதல் இருபத் தொன்பது பாடலும் அறபு அரிச்சுவடியிலுள்ள ஒவ்வொரு எழுத்தையும் முறையே ஒவ்வொரு பாடலிலும் முதல் எழுத்தாய்க் கொண்டுள்ளன. இந்நூலிலுள்ள அடுத்த முனஜாத்துப் பாடல்களாக நபி நாயகத்தின் (சல்) பேரில் முனஜாத்துப் பாடல்கள் அமைந்துள்ளன. சீறப்புராணத்தில் படலங்கள் அமையப்பெற்ற முறையில் இப்பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. ஆற்றங்கரை நாச்சியார் தோத்திர முனஜாத்து, செய்குதுமான லெப்பை சாகிபு பேரில் முனஜாத்து, உதுமான் முகியித்தீன் ஆலிம் பேரில்

முனாஜாத்து முதலியனவும் ஆனந்த சாஹித்தியத்தில் அடங்கியுள்ளன.

நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களுக்கு முன்னர் வாழ்ந்த நபிமார் இருவர் கிலுறு நபி (அலை) அவர்களும், இல்யாசு நபி (அலை) அவர்களும். இவ்விரு வரையும் ஹயாத்து நபி என அழைப்பர். இவர்கள் பேரிற் கிலுறில்யாசு நபிபேரில் முனாஜாத்துப் பாடப்பட்டது. இது, மீருன் சாகிபுப் புலவரின் மகன் சாகுல் கமீதுப் புலவர் பாடிய சங்கீத சிந்தாமணி என்ற நூலில் இடம் பெற்றுள்ளது. மற்றைய முனாஜாத்துக்களில் முனாஜாத்தில் பாடப்பட்ட பெரியார் ஏதாவதொரு சொற்றொடரால் ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும் குறிப்பிடப்படுவர். பாடப்பட்ட பெரியாருடன் உரையாடுவதுபோல அவை அமைந்திருக்கும். இம்முனாஜாத்து அப்படி அமையவில்லை. காஜாமுகினுத்தீன் அவர்கள் பேரில் முனாஜாத்தும் சங்கீத சிந்தாமணியில் இடம் பெற்றுள்ளது.

செய்யிது முகியித்தீன் கவிராஜர் பாடிய நவநீத புஞ்சம் என்னும் நூலில் பல முனாஜாத்துப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவை பெரும்பாலும் முனாஜாத்துப் பதிகங் களாகவே அமைந்துள்ளன. இவற்றுள் முதலாவது றகுமான் பேரில் முனாஜாத்துப் பதிகம். இதில் ஒவ்வொரு செய்யுளும் இரட்டை ஆசிரிய விருத்தமாகப் பாடப்பட்டுள்ளது. றசூலுல்லா பேரில் முனாஜாத்து, முகியித்தீனாண்டகை யவர்கள் பேரிற் பாடப்பட்ட முனாஜாத்து, நாகூர் மீறான் சாஹிபாண்டகையவர்கள் பேரில் முனாஜாத்துப் போன்ற வையும் நவநீதபுஞ்சத்தில் இடம் பெற்றுள்ளன.

கீழக்கரையைச் சேர்ந்த செ. மு. செய்யிது முகம்மது ஆலிம் புலவரும் பல முனாஜாத்துப் பாடல்கள் பாடியுள்ளார். இவர் மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவானாக விளங்கியவர். இவர் பாடிய பன்னிரு முனாஜாத்துக்கள் முனாஜாத்து மாலிகை என வழங்கும். மாலிகை என்றால் தொடுக்கப்பட்ட மாலை என்பது பொருள். இப்பாக்கள் யாவும் சமய அறிவு புகட்டுவனவாய் அமைந்துள்ளன. உதாரணமாக, முகம்மது முஸ்தபா றசூல் (சல்) அவர்களின் பேரில் பாடப்பட்ட முனாஜாத்தில் நபிகள் பெருமானின் பொறுமைக்குணம் பெரிதும் போற்றப்படுகின்றது.

அறபு மொழியிலிருந்து தமிழிற் புகுத்தப்பட்ட அடுத்த பிரபந்தம் கிஸ்ஸா. அறபு மொழியில் இச்சொல் 'கதை சொல்லுதல்' என்னும் பொருள்படும். ஓய்வு நேரத்தைக் கதை அல்லது கிஸ்ஸா சொல்லிக் கழிப்பது அறபு நாட்டு இஸ்லாமியரின் வழக்கமாகும். இத்தகைய கதைகள் பெரும்பாலும் சமயத்தொடர்புடையனவாய் இருந்தன; கேட்பதற்கு ஏற்ற முறையில் நகைச்சுவை பொதிந்திருந்தன. எனவே, பொதுமக்களும் இவற்றை விரும்பிக் கேட்டனர்; பாதுகாத்தும் வந்தனர். இக்கிஸ்ஸாக்கள் தமிழ் நாட்டிலே வாழ்ந்த இஸ்லாமியரிடையேயும் பரவி, அவர்கள் உள்ளத்தையும் கவர்ந்தன. இதன் பயனாகக் கிஸ்ஸாப் பிரபந்தம் தமிழ் மொழியிலும் கையாளப்பட்டது. பல நூல்கள் இவ்வகையில் யாக்கப்பட்டன. யூசுபுநபி கிஸ்ஸா, சைத்தூன் கிஸ்ஸா என்பன குறிப்பிடத்தக்கன.

யூசுபு நபி கிஸ்ஸா வழக்கிற் பெரிதும் பயிலப்பட்டு வருகின்றது. பல கலைகளில் வல்லுனராகிய மதாறு சாகிபுப்

புலவர் இதனை இயற்றினார். முதலாம் நபியாகிய ஆதம் நபி (அலை) அவர்களின் வழித்தோன்றலாகப் பிறந்த யாகூபு நபி (அலை) அவர்களின் பிள்ளைகளுள் ஒருவராகிய யூசுபு நபி அவர்களின் வரலாறு பற்றிய கதையே இந்நூல். இந்நூல் எளிய நடையில் அமைந்துள்ளது. வாலைபாவா சாகிபு அவர்களின் மகனாகிய அப்துல் காதர் சாகிபு இயற்றிய நூலே சைத்தூன் கிஸ்ஸா. இதில் சைத்தூன் என்னும் பெண்ணுக்கும் முகம்மது ஹனிபா என்பவருக்கும் நடந்த போர் கூறப்படுகின்றது. நபிகள் நாயகம் முகம்மது றசூல் (சல்) அவர்களுக்குப் பின் நான்காவது கலிபாவாக ஆண்ட அலி (றலி) அவர்களின் மகனே முஹம்மது ஹனிபா. பாரசீக மொழியிலும் உறுது மொழியிலும் உள்ள கிஸ்ஸாக் கதையைத் 'தமிழில் வெள்ளை மொழியாகவும் கொஞ்சம் வசனமாகவும் கொஞ்சம் கவியாகவும் அனைவரும் வாசித்து இன்புற அருளியது' என நூலாசிரியரே குறிப்பிடுவர்.

மசலா என்ற அறபுச் சொல் கேள்வி என்ற பொருள் கொண்டது. அறபு மொழியிலுள்ள இப்பிரபந்தம் கேள்வி களும் மறுமொழிகளும் கொண்டதாயிருக்கும். இக்கேள்வி களும் மறுமொழிகளும் இஸ்லாமியச் சமயத் தொடர்புடை யனவாகவே பெரும்பாலும் இருக்கும். மசலாவிலுள்ள பொருளை நன்கு கற்றவர் சமயத்தொடர்பான எந்த விதக் கேள்விக்கும் விடையிறுக்கக்கூடிய ஆற்றல் உடையவாரய் இருப்பர். மசலாப் பிரபந்தங்கள் பல தமிழில் இயற்றப் பட்டன. அவற்றுள் ஒன்று நூறு மசலா. நூறு கேள்விகளை உடைய இந்நூலிற் பல புலவர்களாற் பாடப்பட்டவை ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. பகுவீறு என்னும் அரசனின் மகள் மேஹர்பான் கேட்கும் கேள்விகளும் அவற்றிற்கு

அப்பாசு என்பவன் கூறும் பதில்களும் இதில் அடங்கியுள்ளன. இவை இஸ்லாம் மதத்தைப்பற்றிப் பொதுமக்கள் எளிதில் அறிந்துகொள்ளக்கூடியனவாய் அமைந்துள்ளன. அதிசய புராணம் என வழங்கும் ஆயிர மசலா இன்னொரு மசலா நூல். வெள்ளாட்டி மசலாவும் இவ்வகைப் பிரபந்தங்களில் ஒன்று.

மேலே கூறப்பட்ட முனாஜாத்து, கிஸ்ஸா, மசலா ஆகியன அறபுப் பெயர் பெற்ற பிரபந்த வகைகள். நாமா என்பது பாரசீகப் பெயருடன் வழங்கும் பிரபந்தம். நாமே என்று பாரசீகத்தில் வழங்கும் சொல் தமிழில் நாமா என மருவி வழங்குகின்றது. கதை, பொத்தகம், வரலாறு என்பன இச்சொல்லின் பொருள்கள். தமிழிற் பல நாமா நூல்கள் உள. அவற்றுள் மிஃறாஜு நாமா நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மிஃறாஜுக்கேகிய வரலாற்றினைக் கூறுகின்றது. இதனை இயற்றியவர் மதாறு சாகிபுப் புலவர். நூர் நாமா என்னும் நூலை இயற்றியவர் காயற்பட்டணத்தைச் சேர்ந்த செய்யிது அஹமது மரைக்காயர்ப்புலவர். அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தமாகிய தொங்கல் யாப்பில் இந்நாமா இயற்றப்பட்டது. முழு உலகமும் படைக்கப்பட்ட முறையை இந்நூல் கூறுகின்றது. நூர் என்பது ஒளி அல்லது வெளிச்சம் எனப்படும். ஒளியினால் உலகம் படைக்கப்பட்டதென இந் நூல் கூறுகின்றது.

ஞானப்பாக்கள் பாடுபவரை இஸ்லாம் சூபியாக்கள் என அழைக்கின்றது. நபிகள் பெருமானின் உயரிய போதனைகளின் உண்மைக் கருத்துக்களை அறிந்தவர் சூபியாக்கள் எனப்படுவர். இத்தகைய சூபியர் – ஞானிகள் - தமிழ் நாட்டிலும் பலர் வாழ்ந்தனர். இவர்கள் தமிழிற் பத்தி ததும்பும்

பாக்களைப் பாடிச் சென்றனர். இனிமை, சொற்சுவை, பொருட்சுவை செறிந்தனவாக அமைந்துள்ளன அப்பாக்கள். அவற்றிற்கும் இந்துமதச் சித்தரின் பாடல்களுக்கும் நெருங்கிய ஒற்றுமையைக் காணலாம். பத்தி மேலீட்டினாற் பாடப்பட்ட இந்த ஞானப்பாக்கள் முஸ்லிம் தமிழ் இலக்கியத்தில் பெரும்பகுதியாக அமைந்துள்ளன. தமிழ் இஸ்லாமிய ஞானியருள் தலைசிறந்தவர் மூவர். அவருள் குணங்குடியைச் சேர்ந்த சுல்தான் அப்துல் காதிறு லெப்பை ஆலிம் என்ற பெயரையுடைய மஸ்தான் சாகிபு முதன்மையானவர். மஸ்தான் சாகிபு பாடல்கள் தாயுமானவரின் பாடல்களைப் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. இருவரும் ஒரே நிலையிலிருந்து தமது பாடல்களைப் பாடியிருக்கலாம்.

இவர் பதினேழு வயதிலேயே கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினார். பின்னர் கீழக்கரைச் செய்கு அப்துல் காதர் லெப்பை ஆலிம் அவர்களிடம் தவத்தின் இலட்சணத்தையும் தாபதர் இலட்சணத்தையும் படித்துத் தேர்ச்சி பெற்றார். இதன் பயனாக ஹிஜ்றத் ஆயிரத்திருநூற்றிருபத்தெட்டாவது ஆண்டில் உலக ஆசைகளைத் துறந்தார். உறவினால் உண்டான பற்றுக்களை நீக்கினார். யோகியின் வாழ்க்கையை நடத்தினார். இவ்வாறு யோகாப்பியாசங்களில் ஈடுபட்டுக் குணங்குடி மஸ்தான் என்ற குறிப்பை வெளிப்படுத்தினார். பலருக்குக் குருவாகவும் அமைந்தார். முகியித்தீன் ஆண்டவரைக் குருவாகக் கொண்டாரர். நாற்பத்தேழு வயதை எய்திய பொழுது பாக்கள் பாடத் தொடங்கினார். இப்பாக்களையே மஸ்தான் சாகிபு பாடல் தன்னிடத்தே கொண்டுள்ளது.

மஸ்தான் சாகிபு பாடல்களை முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்களாம். முகியித்தீன் சதகம், அகத்தீசன் சதகம்,

கண்ணிப்பாடல்கள் என்பன அப்பிரிவுகள். ஒவ்வொரு பாடலிலும் பல தத்துவார்த்தங்கள் பொதிந்துள்ளன. மஸ்தான் சாகிபு தாம் வாழ்ந்த சூழ்நிலைக்கேற்ப இஸ்லாமிய மதக்கோட்பாடுகளுட் சிலவற்றைத் திருத்தியும் பிற சமயக் கோட்பாடுகளை ஒன்று சேர்த்தும் தமது பாடல்களை இயற்றியுள்ளார்.

அடுத்ததாகக் காலங்குடி மச்சரேகைச் சித்தன் என்ற பொதுப்பெயரால் அழைக்கப்படும் நெய்யிது அப்துல் வாரிது ஆலிம் மவ்லானு ஐதரூஸ் என்பவரின் பத்தி ததும்பும் பாக்கள் உள்ளத்தினை உருக்கும் தன்மையன. தென்காசியிலே பிறந்து தற்கலையிலே மறைந்த தற்கலை பீர்முகம்மது சாகிபு என்பவரும் பல பாமாலைகள் பாடித் தமிழ்நாட்டு இஸ்லாமியரிடையே சமயப்பற்றை உண்டாக்க முயற்சித்தார். இவரின் பாமாலைகள் ஞானப்பாடல்கள் என வழங்கும். அவை யாவன ஞானமணிமாலை, ஞானக்குறம், ஞானரத்தினக் குறவஞ்சி, ஞானசர நூல், ஞானப்பால், ஞானப்பூட்டு, ஞானநடனம் முதலியன.

மேலும் அப்துல் கனிசாகிபுவின் ஞானுந்தரத்தினமும், செய்யிது முகம்மது காதறுவின் ஞானப்பிரசன்னுகரத் தினமும் வாலைமஸ்தான் சாகிபுவின் ஞான வாக்கியமும், செய்கு முகம்மது அப்துல்லா சாகிபுவின் மெஞ்ஞான மனதலங்காரப்புகழ்ச்சியும், செய்யிது அலிவாலை குருமஸ் தானின் ஞான ஒப்பாரியும், இலங்கை வேர்விலையைச் சேர்ந்த செய்கு முஸ்தபாவின் மெய்ஞானத்தூதும் தமிழ்நாட்டு இஸ்லாமிய ஞானியர் பாடலில் அடங்கும். இந்து சமயச்

சித்தரின் பாடல்களையே பெரும்பாலும் கொண்ட சித்தர் ஞானக்கோவை முதலிய நூல்களிலும் இத்தமிழ் நாட்டு இஸ்லாமிய ஞானியரின் பாடல்களைக் காணலாம்.

ஒவ்வொரு முஸ்லிமும் தனது வாழ்க்கையை எவ்வாறு நடத்தவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டும் ஒழுக்க நூல்களும் தமிழில் எழுந்தன. இத்தகைய நூல்களிற் பெரும் பாலன மாலை நூல்கள். அவற்றுள் தலைசிறந்து விளங்குவது அதபுமாலை என்னும் நூல். அதபு என்னும் அறபுச் சொல் ஒழுக்கம் எனப் பொருள்படும். எனவே, ஒழுக்கத்தைக் கூறும் மாலை அதபுமாலை எனப் பெயர் பெற்றது. இந்நூலை இயற்றியவர் காயற்பட்டணத்தைச் சேர்ந்தவரும் காமில் வலி என்ற அறபுச் சிறப்புப் பெயர் பெற்றவருமாகிய சாமு நைனு லெவ்வை ஆலிம் என்பவர். இந்நூலில் இஸ்லாமிய குறிக்கோள்கள் பல எடுத்துக் காட்டப்படுகின்றன. கலிமாவின் வரிசை. ஈமான் கொள்ளும் இயல்பு, தொழுகையின் இன்றியமையாமை, தொழுகையை விட்டோர் அடையும் துன்பம், சகாத்து என்ற கொடையின் சிறப்பு, நோன்பின் இன்றியமையாமை, நோன்பை விட்டோர் படும் துயர், பெண்கள் முஸ்லிம் பெரியாரின் கல்லறைகளுக்குப் போகும் ஊழல், வீட்டு விலங்குகளை நடத்தும் முறைகள் முதலியன விரிவாக எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

இஸ்லாமிய ஒழுக்க முறைகளை வகுத்துரைக்கும் இன்னொரு தமிழ் நூல் அகந்தெளியுமாலை. இஃது இஸ்லாமியக் கோட்பாடுகளையும் ஒழுக்கமுறைகளையும்

முஸ்லிம்களின் உள்ளந்தெளிவு பெறக் கூறுகின்றது. இந்நூலாசிரியர் குருவித்துறையைச் சேர்ந்த முகம்மது கம்சா லெவ்வை என்பவர். இஸ்லாத்தின் ஐம்பெருங் கடமைகளையும் ஈமானின் (நம்பிக்கையின்) அறுபெருங்கோட்பாடுகளையும் ஆசிரியர் விளக்கமாக எடுத்துக்கூறுகிறார். மரணத்தை எவராலும் தடுக்க இயலாது, எல்லோரும் மௌத்தாவது இயற்கை, மௌத்து வரும் இடத்தையோ நேரத்தையோ ஒருவராலும் அறியமுடியாது என்பனவற்றை இயம்புவது மரணத்துலக்கமணிமாலை. இதனை ஈழத்து பகுறுத்தீன் ஹுசைன் என்பவர் பாடினார். இஸ்லாத்தின் கோட்பாடுகளில் முதன்மையான கலிமா என்னும் மூல மந்திரத்தைக் கூறும் நூல் மணிமுத்துமாலை. மனக்கலக்கத்தைத் தெரிவிப்பதாகிய மங்காதீபம் எனவும் இது வழங்கும். இதனை இயற்றியவர் தென்காசியைச் சேர்ந்த மெய்ஞ்ஞானக்குரு செய்கு முகம்மது அப்துல் காதிறு செய்னுத்தீன் சாஅன்சா ஆலிம் சாகிபு என்பவர். முஸ்லிம் மக்களின் அஞ்ஞான இருளை நீக்கும் பொருட்டு செய்கு சுலைமானுல் காதிரிய்யி என்பவர் தங்கப்பாட்டு மாலை என்னும் நூலை இயற்றினர். இது மெய்ஞ்ஞானத்தங்கப் பாட்டு மாலை எனவும் வழங்கும். இம்மாலையிலுள்ள செய்யுட்கள் மும்மூன்று அடிகளாலானவை. இரண்டாமடியின் முற்பகுதியிற் கூறியவற்றையே திருப்பி மூன்றும் அடியிலும் ஆசிரியர் கூறுவர்.

இஸ்லாமியச் சமயத்தைப் பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டும் நூல்களும் உண்டு. இந்நூல்கள் எழுந்திராவிட்டால் தமிழ் நாட்டு இஸ்லாமியர் இஸ்லாமியச் சமய அறிவு இல்லாது தவிக்க வேண்டி இருந்திருக்கும். இச்சமய

நூல்களுள், வேதபுராணத்தைப் பெரிய நூஹுறலியுல் லாவும், மஅரிபத்துமாலையைப் பீர் முகம்மது சாகிபுவும் மீசான் மாலையை இலங்கை வேர்விலையைச் சேர்ந்த செய்கு முஸ்தபாவும் இயற்றினர். இஸ்லாமிய அடிப்படைக் கொள் கைகளின் பல்வேறு பகுதிகளையும் வெவ்வேருக விவரிக்கும் இன்னொரு நூல் சு'அபில் ஈமான் என்ற நூலாகும். சு'அப் என்ற அறபுச் சொல் கொப்பு அல்லது கிளை எனப் பொருள் படும். ஈமான் என்பது நம்பிக்கை. எனவே, ஈமானின் கிளை கள், ஈமானின் பிரிவுகள் என்பது இந்நூற் பெயரின் பொரு ளாகும். அதாவது இந் நூல் இஸ்லாமிய அடிப்படைக் கொள்கையான ஈமான் என்னும் நம்பிக்கையைப் பல துறைகளாகப் பிரித்துக் கூறுகின்றது. இந்நூலிலுள்ள ஆயிரத்துக்குமேற்பட்ட செய்யுட்கள் வெண்பாக்களாகவும் அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தங்களாகவும் அமைந் துள்ளன. அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம் முஸ்லிம் தமிழ்ப்புலவரால் தொங்கல் என்ற பெயராலேயே வழங்கப் படும். தமிழ் எழுத்திலும், அறபு எழுத்திலும் எழுதப் பட்டுள்ள இந்நூலின் ஆசிரியர் தென்னிந்தியாவிலுள்ள மக்கநாடு என்னும் பகுதியில் வாழ்ந்த செய்கு அபூபக்கரின் மகன் ஜெமாலுத்தீன் புலவர் என்பவர். இந் நூலிலுள்ள படலங்கள் கொம்புகள் எனப்பெயரிடப்பட்டு இந் நூல் எழுபத்தேழு கொம்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய ஒழுக்க நெறியினைக் கூறும் தமிழ் இலக்கி யங்களுள் ஆசாரக் கோவை தலை சிறந்தது. இஸ்லாமிய சமய ஆசாரங்களும் ஒழுக்கமுறைகளும் இந்நூலில் மலிந்து கிடக்கின்றன. கீழக்கரை அப்துல் மஜீது இந்நூலை இலங்கைக் கல்பிட்டி முகம்மது தம்பி மரைக்காயரின் வேண்டுகோளுக்

கிணங்கப் பாடினர். இஸ்லாமிய ஒழுக்க நெறிகளைக் கூறும் இன்னொரு நூல் திருநெறிநீதம். இதனைப் பாடியவர் பீர்முகம்மது சாகிபு.

முஸ்லிம் மக்களிடையே வழங்கும் தமிழ் உரைநடை நூல்களைப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். முஸ்லிம் களிடையே நடைபெற்ற உரையாடல்களால் எழுந்தவை ஒரு சில. இஸ்லாத்துக்கும் ஏனைய சமயங்களுக்கும் உண்டாய தர்க்கத்தின் பயனாகத் தோன்றியவை இன்னுஞ் சில. இலக்கி யத்துறையில் வாக்குவாதம் நடைபெற்றதனால் வேறு சில வசன நூல்கள் அறபு மொழியிலிருந்து நேரே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. வேறு சில உறுது மொழியிலிருந்து தமிழில் எழுதப்பட்டன. மற்றுஞ் சில இஸ்லாத்தைப்பற்றி எழுந்த பாரசீக நூல்களைத் தழுவி எழுதப்பட்டன. இன்னுஞ் சில அறபு எழுத்தில் தமிழில் எழுதப்பட்டன. இவ்வசன நூல்கள் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்கின. அறபு மொழிப்பயிற்சி இல்லாத பொதுமக்கள் இஸ்லாத்தைப் பற்றி அறிவதற்கு இந்நூல்கள் பெரிதும் பயன்பட்டன. இவற்றுட் சில இஸ்லாத்துப் பிக்குஹ் சட்டங்களை எடுத்துக் காட்டின.

முஸ்லிம் மக்கள் தமக்கிடையே நடத்திய உரையாட லின் பயனாகத் தோன்றிய வசன நூல்கள் பல. அவற்றுள் ஒன்று, முஸ்லிம் அத்வைத மூல மொழி. இதனை இயற்றி யவர் நெல்லிக்குப்பத்தைச் சேர்ந்த முகம்மது அப்து றகுமான் என்பவர். இந்நூலைச் சிலர் போற்றினர்; சிலர் கண்டித்தனர். இதனால் உரைநடை வளம்பெற்றது. அறபு மொழியிலுள்ள கலீமத்துல் ஹக்கி என்னும் நூலைத்

தழுவியும், துஹ்ற் பத்துல் முர்ஸலா என்னும் இன்னொரு நூலை ஆதாரமாகக்கொண்டும் இந்நூல் எழுதப்பட்டது. இதே போன்று செய்யது அகமது கபீர் என்பவர் உலூமுத்தீன் என்னும் நூலை இயற்றினர். முஸ்லிம் அறபு அறிஞருள் (ஆலிம்களுள்) ஒரு பகுதியினர் இவ்விருநூல் களையுங் கண்டித்து வேறு பல நூல்களை இயற்றினர்.

பஞ்சவரலாற்று விளக்கம் என்னும் நூலைக் காதிறுக் கனிப்புலவர் இயற்றினுர். பஞ்சா என்ற உறுதுச் சொல்லின் பொருள் கைப்பிடி அல்லது நீட்டிய விரற்கை என்பதே. இஸ்லாமிய புத்தாண்டின் முதன்மாதமாகிய முஹறத்தில் சியா முஸ்லிம்கள் எடுத்துச் செல்லும் கைக்குறி விருதுவே பஞ்சா எனப்படும். இவ்வாறு பஞ்சாவை எடுத்துச் செல்லும் வழக்கம் எவ்வாறு பரவியதெனக் கூறி, இவ்வழி பாடு இஸ்லாத்துக்கு முற்றிலும் முரணுனதென ஆசிரியர் நிலை நாட்டியுள்ளார். இதற்கு ஆதாரமாகப் பல அறபு நூல்களை ஆண்டுள்ளார்.

தமிழ் நாட்டு முஸ்லிம்கள் தமது சமயத்தைப் பரவச் செய்யும் பணியில் ஈடுபட்டபோது, பிறசமயக் கண்டனத்தில் ஈடுபட்டனர். இதன்பயனுகப் பல வசன நூல்கள் எழுந்தன. அவைபெரும்பாலும் இஸ்லாத்துக்கும் கிறித்தவத்துக்கு மிடையே நிகழ்ந்த உரையாடல்களாலே எழுந்தன. அவை கிறித்தவ சமயத்திலே உள்ள திரியேகத்துவக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டே நிகழ்ந்தன. பிதா புத்திர ஆவிகளாகிய முத்திறக் கடவுள் தன்மையை மறுத்து எழுத ப்பட்டதே கிறித்து மதத் திரியேகத்துவ மறுப்பு என்னும்

நூல். இதன் ஆசிரியராகிய இராமநாதபுரத்தைச் சேர்ந்த முகம்மது சம்சுத்தீன் இந்நூலிலே திரியேகத்துவக் கொள்கையை மறுப்பதற்குரிய காரணங்களுக்குச் சான்றுகள் காட்டியுள்ளார். சமயத் தர்க்கத்தினுல் எழுந்த இன்னெரு நூல் திரியேகத்துவ நிவாரணம். மூஹைறயுத்தீன் சரீபு சாகிபு, ஷா முகம்மது சியாவுத்தீன் சாகிபு காதிரி ஆகிய இருவர் இந்நூலை இயற்றினர். இஸ்லாத்துக்கும் முகம்மது நபி (சல்) அவர்களுக்கும் எதிராகக் கிறித்தவராற் கேட்கப்பட்ட இருபத்து நான்கு கேள்விகளுக்குரிய பதில்களும், வேறு தமிழ் வசன நூல்களில் வெளிவராதபல அரிய இஸ்லாமிய போதனை களும், இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இத்தகைய வசன நூல்களால் தமிழ் உரைநடை வளம்பெற்றது.

இலக்கியத் தர்க்கங்களாலும் வசனநூல்கள் எழுந்தன. நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களின் பிறப்பைப் பற்றிக் கூறும் சீருப்புராணத்தின் நபியவதாரப் படலத்துக்குக் குலாம் காதிறு நாவலர் உரையெழுதினர். இவர் பாண்டித்துரைத் தேவரால் மதுரையில் நிறுவப்பட்ட நான்காம் சங்கத்தின் தலைமைப் புலவராகத் திகழ்ந்தவர். இவ்வுரையிற் பல பிழைகள் உண்டு எனக் கூறி, இவ்வுரைக்கு மறுப்பாகக் காதிறு அசஞ மரைக்காயர் என்பவர் வேருேர் உரையைச் சீரு நபியவதாரப்படல உரைகடிலகம் என்ற பெயரில் எழுதினர். இதனைக் கண்டித்துக் குலாம் காதிறு நாவலர் சீரு நபியவதாரப்படலம் உரைகடிலக நிராகரணம் என்ற வசனநூலை வெளியிட்டார். இவ்வாறு பல வசன நூல்கள் இலக்கியத் தகராறு காரணமாக எழுந்தன.

அறபு மொழியிற் பொழுதுபோக்குக் கதைகள் பல எழுதப்பட்டுள்ளன. அவற்றுட் சில தமிழில் மொழி பெயர்க்

கப்பட்டுள்ளன. இத்தகைய நூல்களில் ஒன்று, முகம்மது அப்துல்லா லெப்பை மொழி பெயர்த்தெழுதிய காளியாருக்கும் கள்ளனுக்கும் நடந்த கிஸ்ஸா என்பது. இஸ்லாமிய ஞானபோதம், மௌலானா றூமி சீவிய சரித்திரம், சீறு வசனம், பத்துஹூல் மிஸ்று, புத்துகுஷ்ஷாம், முகியித்தீன் ஆண்டவர் சரித்திரம், ஹூர்முஜ் கதை முதலிய வசன நூல்களும் இஸ்லாமியப் பெரியாரால் எழுதப்பட்டன.

இஸ்லாமியச் சட்டத்தைக் கூறும் நூல்களும் தமிழில் எழுதப்பட்டன. முஸ்லிம்களின் சட்ட நூல்களை பிக்ஹூ நூல்கள் என அறபு மொழியில் வழங்குவர். ஒரு முஸ்லிம் பிறந்தது முதல் இறக்கும்வரை பின்பற்றி ஒழுகவேண்டிய முறைகள், ஆட்சி முறை அமைய வேண்டிய வகை, அரசியற் சட்டங்களும் சமுகச் சட்டங்களும் இயற்றப்படும் முறை, அன்றாட அலுவல்களை நடத்தும் வகை, தொழுகைக்கு இன்றியமையாத ஒழுங்குகள் முதலியவற்றைக் கூறும் சட்ட நூல்கள் பல தமிழில் வசன நடையில் அமைக்கப்பட்டன. இந்நூல்கள் பலவற்றின் ஆசிரியராக விளங்கியவர் கீழக் கரையைச் சேர்ந்த செய்யிது முகம்மது ஆலிம் சாகிபு அவர்கள். மாப்பிள்ளை லெப்பை ஆலிம் எனவும் இவர் அழைக் கப்பட்டார். இவர் இயற்றிய நூல்கள் பத்தஹூல் தய்யான், பத்தஹூல் மத்தீன், பத்ஹூஸ்ஸலாம், மஆனி முதலியன.

பைஹுல் றகுமான் என்பது இன்னொரு பிக்ஹூ நூல். இதன் ஆசிரியர் ஹபீபு முகம்மது ஆலிம் என்பவர். தன்பீஹூஸ்ஸாலிக்கீன் என்பது இன்னொரு சட்ட நூல். இந் நூல் யாவும் அறபு எழுத்திலே எழுதப்பட்டன.

தன்பீஹுஸ்ஸாலிக்கீன் என்பது தமிழ் எழுத்திலும் எழுதப் பட்டுள்ளது. தமிழ் எழுத்தில் உள்ள இன்னொரு நூல் தறீக்குல் ஜன்னு. விண்ணுலக வழி என்பது இதன் பொருள். படைப்பு முழுமையை இந்நூலிற் செய்யிது அப்துல் வஹாபு ஆலிம் என்பவர் கூறுகிறுர். யாழ்ப்பாணத்து மீருன் முகியித்தீன் என்பவர் ஆறுமுக நாவலரின் நடையைப் பின்பற்றிச் சன்மார்க்க இலகுபோத விஞவிடை என்னும் நூலை இயற்றினுர்.

இவ்வாறு காப்பியங்கள், பிரபந்தங்கள். சமயப் பாடல்கள், உரைநடைநூல்கள் முதலியவற்றை இயற்றி இஸ்லாமியர் தமிழ் மொழியை வளம்படச் செய்தனர். முஸ்லிம்களே தமது பெரியார்கள் தமிழ் மொழிக்காற்றிய தொண்டு எத்தகையதெனத் தெரியாதிருக்கின்றனர். எண்ணிறந்த இஸ்லாமியர் தலைசிறந்த தமிழ்ப் புலவர்களாக இருந்திருக்கின்றனர் என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர். இக்காலத்திலும் பல முஸ்லிம்கள் தமிழ் மொழியைப் பலதுறைகளிற் பேணி வளர்க்கின்றனர். முஸ்லிம்களின் ஆத்மீக கலாசார வளர்ச்சிக்கு அடிகோலிக்கொடுப்பது தமிழே !

# இந்நூலாக்கத்திற்கு உதவிய நூல்கள்


இஸ்லாம் இணையிலாச் சாந்தி : அல்ஹாஜ பா. தாவூத் ஷா தயாரிப்பு, ஷர் ஜஹான் புக் டெப்போ, சென்னை. மூன்றும் பதிப்பு, 1947.

சீறுப்புராணம் : மொ. அ. ஷா ஹமீது லெப்பை பதிப்பு, ஷாஹமீதிய்யா அச்சியந்திரசாலை, சென்னை, 1929.

நபிநாயகத்தின் திருவாக்கியம் : மிஷ்க்காத்தே ஷரீபின் மொழி பெயர்ப்பு; ஷாஹமீதிய்யா அச்சியந்திரசாலை, சென்னை 1949.

இயக்கியத் தென்றல் : சு. வித்தியானந்தன், தமிழ் மன்றம், கல்ஹின்னை, கண்டி 1953

AHMAD NAFIS : Muslim Contribution to Geography. Muhammad Shraf, Kashmiri Bazar, Lahore, 1947.

ALI AMEER : The Spirit of Islam. Christophers, London. New Edition. Reprint 1946.

ARNOLD, SIR THOMAS W. Painting in Islam. Oxford, 1928.

BRIGGS, M. S. : Mohammadan Architecture in Egypt and Palestine. Oxford, 1924.

BROWN PERCY : Indian Architecture (Islamic Period). Taraporevala Sons & Co. Ltd., Bombay, 1942.

DE LACY O'Leary : Arabic Thought and its Place in History. London, 1926.

DONALDSON, DWIGHT M : Studies in Muslim Ethics. S.P.C.K. London, 1953.

FREDERIC LOUIS : The Art of India. Harry N. Abrams, Inc , New York, 1959.

GIBB, H. A. R. : Mohammedanism. Oxford University Press, 1949.

HELL JOSEPH : The Arab Civilisation. Cambridge, 1926.

HITTI, PHILLIP K : History of the Arabs. Macmillan & Co., Ltd. London, Seventh Edition 1960

HOURANI, GEORGE FADLO : Arab Seafaring in the Indian Ocean. Princeton University Press, 1951.

JENNINGS, SIR IVOR & THAMBIAH, H. W. : The Dominion of Ceylon. Stevens & Sons Ltd., London, 1952.

MAURICE GAUDEFROY – DEMOMBYNES : Muslim Institutions. George Allen & Unwin Ltd., London, Second Impression, 1954

RAWLINSON, H. G. : India, A Short Cultural History. The Crescent Press, London, 1937.

RIVIOIRA, G. T. : Moslem Architecture. Oxford, 1918.

ROY, M. N : The Historical Role of Islam. Renaissance Publishers Private Ltd., Calcutta, Third Impression, 1958.

SIDDIQUI, NURUL HASAN: The City of Taj. Madho Printing Works, Allahabad, 1940.

THE ARAB HERITAGE: Edited. by Nabih Amin Faris. Princeton University Press, New Jersey, 1946.

THE LEGACY OF ISLAM: Edited. by Sir Thomas Arnold and Alfred Guillaume. Oxford University Press. Reprint 1952.

UNITY & VARIETY IN MUSLIM CIVILISATION: Edited by Gustave E. Von Grunebaum. The University of Chicago Press, 1955.

UWISE. M. M.: Muslim Contribution to Tamil Literature. Tamil Manram, Galhinna, Kandy. First Ed. 1953.

# அட்டவணை

[எண்-பக்க எண்]

## அ


அக்பர் 55, 98
அக்ரா 54
அகத்தீசன் சதகம் 151
அகந்தெளியுமாலை 153
அகபா (குன்று) 30, 104
அகமது 110
அகமது லெப்பை ஆலிம் சாகிபு 141
அகமது லெப்பை மரிக்கார் உபாத்தியாயர் 70
அகமது இபின் மஜீத் 82
அகழிப் போர் 33
அச்சுத்தொழில் 111
அசன் அலிப்புலவர் 145
அசனு லெப்பை, சு 70
அட்மிறல் 83
அண்டவியல் நூல் 80
அத்துலாந்திக்கு 22
அதபு (ஒழுக்கம்) 153
அதபு மாலை 153
அதிசய புராணம் 150
அந்தாதி 135
அப்கானிஸ்தான் 54, 84
அப்பாசிய வழி 42, 44, 73
அப்துல் கமீது, ஆ. க. 71
அப்துல் கனி சாகிபு 152
அப்துல் காதர் சாகிபு 149
அப்துல் காதர் லெப்பை ஆலிம் 151
அப்துல் காதிறுப் புலவர் 70
அப்துல் மஜீது 155
அப்துல் மாலிக் பின் மர்லான் 58
அப்துல் முத்தலிப் 25
அப்துல்லாஹ் 25
அப்துல் றஹ்மான் 47
அப்துல் றஹ்மான் III 48
அப்துல் ஹமீது மரைக்கார் 69
அப்பாசு 150
அப்றிக்கொற் (பழவகை) 89
அபிசீனியா 28, 60
அபு இனுன் சுல்தான் 80
அபுல் அப்பாஸ் அல்மொர்சி 65
அபுல் ஹசன் மன்சூர் 105
அபூத் தாலிப் 25, 27, 29, 31
அபூ நாவாஸ் 45
அபூபக்கர் (றலி) 31 39, 40, 41, 131,
அபூஸுப்யான் பின் றஜப் 33
அம்சா 104
அம்மானை 134, 135
அமிர் 41
அமிர் இபினு அல்ஆஸ் 40
அமீர் குஷ்ரு 54
அமீனு 25
அமெரிக்கா 81

அர்மேனியா 108
அரபாத்து 21
அரபெஸ்க் 96
அரிவம்சன் (ஓவியர்) 104
அரிஸ்தோட்டில் 46, 47
அருணகிரிநாதர் 136, 137
அல் அண்டலுஸ் (ஸ்பெயின்) 44
அல் அமீன் (நம்பிக்கைக் குரியவர்) 25
அல் - அல்லாகி (வர்த்தக நிலையம்) 86
அல் - அஸ்ஹர் பள்ளிவாசல் 65
அல் - இதிரி 78, 79
அல் - இஷ்டக்கிறி 76, 77, 185
அல் - கஸ்வினி 79
அல் - குவாறிஸிமி 46, 75
அல் - திமிஸ்கி 80
அல் - பக்றி 78
அல் பஸாறி 46
அல் - பால்கி 76
அல் – பிறூனி 77
அல் - மக்திசி 76, 77, 185
அல் - மசூதி 77
அல் – மாமூன் (கலிபா) 46, 75
அல் மேரியா 48
அல்லாஹ் 9, 10, 13, 14, 15, 19, 22, 24, 26, 41, 113, 116, 117, 118, 133, 145, 146
அல் - யாகூபி 76
அல்வாலித் 96
அல்றக்கம் 49
அல் - ஹம்தானி 77
அலக்ஸாந்திரியா 40, 41, 64
அலாவுதீன் 52
அலிறலியல்லாஹு அன்ஹு 135,
அலீ (றலி) 31, 42, 145, 149
அலெப்போ 97
அவறேஜ் 83
அவுலியா 142
அறபி எண் 50
அறபி பாஷா 68
அறபியர் 24, 25, 26, 31, 39, 40, 41, 44, 48, 49, 58, 59, 60, 73,
அறபிக்கடல் 24, 181
அறபு இலக்கியத்தின் பிளினி (அல்-கஸ்வினி) 79
அறபு எழுத்து 88, 109, 110, 139, 156, 159
அறபு நாடு 22, 23, 24, 25, 34, 35, 36
அறபு மொழி 23, 45, 46, 51, 52, 69, 89, 107, 130, 145, 148, 156, 158, 159
அரூபிய இராச்சியம் 38
அறிவு இல்லம் (கல்வி நிலையம்) 46

அறிவு இலக்கியம் 46
அறேபியா 24, 25, 38, 46, 49, 50, 58, 72, 77, 84, 92, 114
அன்ஸார் (உதவியாளர்) 30, 32
அனுட்டானக் கொள்கைகள் 13, 21
அனுமானம் 113
அஸ்வான் 86
அஹ்மது ஒறபி எஸ் மிஸ்ரி 68
அஹ்யா (பாலைவனம்) 24
அஹ் ஸாப் போர் (கோத்திரங்கள் போர்) 33

ஆ

ஆக்ரா (நகர்) 101
ஆங்கிலேயர் 56
ஆசாரக் கோவை 71, 155
ஆசியா 49, 81, 82,84, 114
ஆசுப்பத்திரி 114
ஆட்டிச்சோக்ஸ் (காய்கறி)89
ஆண்பாற் பிள்ளைத்தமிழ் 132
ஆதம் நபி (அலை) 137, 149
ஆதமலை 136, 137
ஆப்கானிஸ்தான் 72
ஆலிம்கள் 157
ஆபிரிக்கா 45,49,72,78,79, 81, 82, 84, 86, 87, 88
ஆயிரத்தோரிரவுகள் 45
ஆயிரமசாலா 150
ஆர்மீனியா 72
ஆரிபு நாவர் 133
ஆலத்தி 67
ஆலாவுதீன் 54
ஆரஞ்சு (பழவகை) 89
ஆற்றங்கரை நாச்சியர் தோத்திர முனாஜாத்து 146
ஆற்றுப்படை 132
ஆறுமுகநாவலர் 71, 160
ஆனந்தக்களிப்பு 136, 142
ஆனந்தசாகித்தியம் 146,147

இ

இங்கிலாந்து 48
இசை 106, 107
இசைக்கருவிகள் 89, 107
இத்தாலி 48, 83, 88, 105, 111, 112
இந்தியக் கட்டடக்கலை 97,98
இந்தியச்சோனகர் 57
இந்தியா 45, 46, 49, 50, 51, 52, 53, 54, 73, 77, 78, 80, 82, 83, 87, 97, 103
இந்திராயன் 145
இந்திராயன் படைப் போர் 144, 145
இந்து சமுத்திரம் 23, 72,81, 82, 83
இந்தோ - இஸ்லாமியக் கட்டடக் கலை 97
இப்ருஹீம் நபி(அலை) 24,132

இபின் குறுதாத் பிஹ் 75
இபின் சயித் 79
இபின் சுபையர் 79
இபின் ஹௌக்கல் 76
இபின் ஜுஸை 80
இபினு அல் சுபைர் 95
இபுன் பத்துத்தா 53, 60, 80
இபுனியன் 145
இபுனியன் படைப்போர் 145
இபுனு பக்காயர் 63
இமாம் 121, 122, 123
இமாம் அல் புக்கறி 123
இமாம் அல் முஸ்லிம் 123
இயற்கணிதம் 114
இரத்தினபுரி 62, 65
இரத்தினபுரி ஜன்னத் பள்ளிவாசல் 65
இரத்தினம் 45, 48, 89
இராணுவக் கட்டடம் 96
இராமேஸ்வரம் 52
இராஜ் புத்திரர் 55
இராஜமணிமாலை 141
இரும்பு 48
இரெம் பிராண்ட் (ஓவியக் கலைஞர்) 105
இல்துத்மிஷ் 52
இல்யாசு நபி (அலை) 147
இலக்கண வித்துவான் 135
இலங்கைச் சோனகர் 57, 59, 60
இலத்தின் 81
இழவு வீடு 140
இறசூல் மாலை 140
இறவுசுல் கூல் 145
இறவுசுல்கூல் படைப்போர் 144, 145
இருக்கு 24, 38, 40, 43, 72, 82
இன்னெக்குலேஷன் 114
இஹ்ராம் (உடை) 20
இஸ்மாயீல் 24
இஸ்லாத்தின் பராக்கிரமப் பள்ளி 97
இஸ்லாமிய ஞானபோதம் 159
இஜ்மா 124

ஈ

ஈமான் 14, 144, 153, 154, 155,
ஈறுன் 73, 76

உ

உச்சி 145
உச்சிப்படைப்போர் 144, 145
உசைநயினுர், மதுரை 135
உடற்கூற்று வன்மை 139
உடற்கூறறியும் ஞானத் தாலாட்டு 139
உடை 62
உணவுப்பொருள் 62
உதுமான் (றலி) 42

உதுமான் முகியித்தீன் ஆலிம் பேரில் முனாஜாத்து 146, 147
உப்பு 62
உம்மான் 24
உமயாத் கலிபா வழி 42, 44, 47, 48
உமர் (றலி) 28, 41, 42
உமறுப் புலவர் 130, 134, 140
உரைநடை நூல்கள் 156-160
உரோமப் பேரரசு 22, 35, 36, 73
உலகத்துப் பிரதேசங்கள் (புவியியல் நூல்) 78
உலகப் படம் 75, 76, 78
உலூமித்தீன் 157
உலோகங்கள் 48
உள்நாட்டு வணிகம் 62
உறுது 54, 149, 156
உஹத் (ஒரு மலை) 33

எ

எகிப்து 24, 38, 39, 40,41, 45, 49 60. 64, 65, 68, 72, 73, 78, 87, 96, 108
எகிப்துப் பள்ளிவாசல் 65
எட்டிகுடி ஏசல் 14
எத்ரிசி 59
எமன் (ஒரு மாகாணம்) 23, 24, 25
எல்விறு (ஒரு நகர்) 43

ஏ

ஏகதெய்வக் கொள்கை 12, 13, 64, 115
ஏசல் 136, 141

ஐ

ஐந்து படைப்போர் 144
ஐசக் நியூட்டன் 49
ஐரேனியக் கலை 105
ஐரோப்பா 45, 48, 49, 72, 78, 81, 83, 85, 88, 89, 90, 97, 105, 110, & 114
ஐஸ்லாந்து 85

ஒ

ஒசியத்து 141
ஒசியத்துச் சொல்லல் 141
ஒசியத்து மாலை 141
ஒட்டகம் 84
ஒட்டநாடக மெட்டு 142
ஒட்டர் 142
ஒரிசா 56, 142
ஒருபாவொருபஃது 136
ஒல்லாந்தர் 56, 68, 82, 90, 105

ஓ

ஓவியம் 91, 102, 103, 104,

ஔ

ஔறுங்கசீப் 56
ஔடகோஷ்ட் 86

க

கஃபா 95, 136
கட்டடக்கலை 63, 91, 92
கடதாசி 111
கடற்படம் 82
கடற்போக்குவரத்து 81, 82, 83
கடிகைமுத்துப் புலவர் 130
கண்டி 60, 65, 66
கண்டி இராச்சியம் 66
கண்டிக் கலம்பகம் 134
கண்டி பதிற்றுப்பத்தந்தாதி 70
கண்டிப் பள்ளி 70
கண்ணாடி 45, 48
கண்ணி 42
கண்ணிப்பாடல்கள் 152
கணிதம் 46, 114
கதீபுகள் 64
கதீஜா (றலி) 25, 26, 29
கந்தசாமிப் புலவர் 130
கந்தூரி (திருவிழா) 68, 135, 136
கப்பலோட்டிகள் 57, 59, 110
கம்பளம் 88, 111
கம்பிளி 48
கல்பிட்டி முகம்மதுதம்பி மரைக்காயர் 155
கல்மடுவ 65
கல்வி 113
கலம்பகம் 129, 133, 134
கலிகிரபி 103
கலிபா 89
கலிபாக்கள் 41, 42, 44, 45, 47, 50, 51, 121, 122, 123, 133
கலிபா அப்துல் மாலிக் 95
கலிபா அப்துல் மாலிக் பின் மர்லான் 58
கலிமா 153, 154
கலீ மத்துல் ஹக்கி 156
கலுகங்கை (ஆறு) 62
கலென் 46
கழி (கோல்) 67
கழிக்கம்பாட்டம் 67
கழியாட்டம் 67
கற்பிட்டி 71
கறுவாக்காடு 64
கன்ரன் (சீனக்கடற்கரைப் பட்டினம்) 82
கன்னியா குப்லுத் 50
கஹ்தான் 24
கஸ்பியன் கடல் 85
கஸ்னி 51
கஸ்னித் துருக்க மன்னர் 51
காகிதம் 89
காசார் சாம்ராச்சியம் 86
காசான் மாகாணம் 85
காசீம் 136, 137
காசோலை 86, 90
காண்டேஷ் 98
காதிரியாப்பள்ளிவாசல் (கொழும்பு) 65

காதிறு அசனு மரைக்காயர் 158
காதிறு கனிப் புலவர் 157
காப்பியம் 130, 131
காபா (பள்ளிவாசல்) 24, 36, 46
காபுல் 54
காமில் வலி 153
காமோனு (ஒரு நகர்) 43
கார்ணர் யூல் 60
காலங்குடி மச்சரேகைச் சித்தன் 152
கால நிலை 81
காலாவூன் 65
காலி 58
காலி இப்னு வலீத் (படைத்தலைவன்) 40
காலிது இபினு அபூபக்கயா 58
காளியாருக்கும் கள்ளனுக்கும் நடந்த கிஸ்ஸா 159
காவடிச்சிந்து 143
காளை அசனலிப் புலவர் 139, 143
கானு 86
கானுவா (ஓர் இடம்) 55
காஜா முகினுத்தீன் பேரில் முனுஜாத்து 147
கிதாப் – அல் - ஹிந்த் (புவியியல் நூல்) 77
கிப்லா 94
கிராமிய நடனம் 67
கிரேக்கம் 45, 46, 73, 89 114
கிலுறில்யாசு நபிபேரில் முனுஜாத்து 147
கிலுறு நபி (அலை) 147
கிறித்தவர் 25, 47
கிறித்துமதத் திரியேகத்துவ மறுப்பு 157
கிறீற் தீவுகள் 72
கிஸ்ஸா 144, 148, 149, 150
கீதார் (இசைக்கருவி) 90
கீர்த்தனை 136
குஞ்சுமூசு லெப்பை ஹாஜி ஆலிம் புலவர் 144, 145
குண்டலகேசி 129
குணங்குடி சுல்தான் அப்துல் காதிறு லெப்பை ஆலிம் 151
குணங்குடி மஸ்தான் 151
குத்துவிளக்கு 68
குத்துப் மினர் (கோபுரம்) 97
குத்புத்தின் 97
குத்புஇன் ஐபாக் 51
குத்பு நாயகம் 132
குதிரைமலை 58
குதிரை லாட மாடவில் 96, 101
குப்பத் – அல் - ஹக்ரு 95
குபா (ஓர் இடம்) 31, 32
கும்மட்டம் 95, 97, 98, 101
கும்மி 136, 137, 138, 142
கும்மிப்பாடல் 70

குர்துபா 42, 43, 47
குர்துபாப் பல்கலைக்கழகம் 49
குருவித்துறை 154
குருவித்துறை முகம்மது
கம்ஸா லெவ்வை 154
குலாம் காதிறு நாவலர் 132, 133, 135, 142, 158
குவத் - உல் – இஸ்லாம் (பள்ளி) 97
குவாஜா அப்துஸ் சமாத் (ஓவியர்) 104
குவைலீர் கலம்பகம் 134
குழந்தை மரிக்கார் 69
குறைஷி (குலம்) 25
குறைஷியர் 27, 28, 29, 32, 33, 34, 35
குஜராத் 56
கூபா 94
கூர் 51
கூறை 67
கெச்கிமலைத் தேவாரம் 69
கெச்சிமலைப் பள்ளி 64, 69
கெய்ரோ 45, 65, 94, 97
கெய்ரோப்பள்ளிவாசல் 94
கேபிள் 83
கைத்தொழில் 48, 109, 110, 111, 112
கைபர் (ஓர் இடம்) 25
கொங்கன் 58
கொட்டன் 88
கொம்மை 137
கொம்பு (படலம்) 155
கொழும்பு 58, 60, 65
கொறெயா 76
கொன்ஸ்தாந்திநோப்பிள் 138 80, 87, 88
கோட்டைகள் 96, 97
கோபுர வாயில் 98
கோலாட்டம் 67
கோஸ் 88

ச

சகாத்து (ஏழைவரி) 13, 18, 19, 119, 153
சகோதரத்துவம் 115, 116-128
சங்கதம் (வடமொழி) 46
சங்கீத சிந்தாமணி 147
சட்டத்தலைவன் 121, 122, 123,
சட்டம் 64, 114 - 128
சட்டின் 88
சப்றன் (மஞ்சள்) 89
சம்மாங்காரர் 57
சமயமும் சட்டமும் 114-125
சமர்க்கந்து 111
சமுக அமைப்பு 114 - 128
சரகசம்ஹிதம் (மருத்துவ நூல்) 50
சல்கா 144, 145
சல்காப்படைப்போர் 145
சலாதோ (ஓர் ஆறு) 43
சலாம் 9, 10

சன்மார்க்க இலகுபோத
வினாவிடை 70, 160
சன்னியாசம் 16
சாகுல் ஹமீது ஆண்டவர்
132, 133
சாகுல் ஹமீது ஒலியுல்லா 136
சாகுல் ஹமீது புலவர் 141,
142, 145, 147
சாடீ (புலவர்) 54
சாந்தி 9, 10
சாந்தி ஆச்சிரமம் 10
சாந்தி மார்க்கம் 10
சாந்தி மூர்த்தி 10
சாமு நைனா லெவ்வை ஆலிம்
153
சார் அலெக்சாண்டர்
ஜொன்ஸ்டன் 66
சார் ஐசக் நியூட்டன் 49
சாரம் 68
சாஹிராக் கல்லூரி 68
சிங் 55
சிங்காரக்கும்மி 142
சிசிலி 72, 78, 83, 111
சித்தர் 151, 152, 153
சிந்து 136, 142
சிந்து நதி 38, 72
சிந்து நாடு 49, 50, 72
சிந்துபாத் மாலுமி 45
சியாசுதீன் முகம்மது 51
சியா முஸ்லிம்கள் 157
சியூற்று 87
சிலப்பதிகாரம் 129
சிலவோனிய மக்கள் 85
சிலுவைப்போர் 83, 96
சிற்பம் 63, 65, 66, 91
சீதக்காதி 130
சீவகசிந்தாமணி 129
சீறு 130
சீறுப்புராணம் 130, 131,
132, 140, 145, 158
சீறு நபியவதாரப் படல
உரைகடிலகம் 158
சீறு நபியவதாரப் படலம்
உரைகடிலக நிராகரணம்
158
சீறு வசனம் 159
சீறியா 23, 25, 35, 38, 40,
41, 42, 43 45, 49, 64,
72, 84, 87, 96, 108,
131
சீனு 22, 45, 76, 77, 78, 80,
81, 82, 83, 87, 103,
111
சீனிக்காதிறு முகியித்தீன் 142
சு'அப் (கிளை) 155
சு'அபில் ஈமான் 155
சுகானந்தத் தாலாட்டு 139
சுப்பிரமணிய பாரதி 143
சுபலா 82
சுயஸ்கால்வாய் 23
சுல்தான் அப்துல் காதிறு
லெப்பை ஆலிம் 151

சுல்தான் அல் அஷ்ரப்
கய்யதானிப் பள்ளிவாசல் 66
சுல்தான் இபுறுஹீம் 54
சுல்தான் ஹஸனின் மஸ்ஜித் 64
சுல்தானுல் கூரியின் பள்ளிவாசல் 65
சுவீடன் 85
சுவெசு 87
சூபித்துவம் 54
சூபியர் 54, 55, 150, 151
செக் 89
செங்கடல் 23, 81
செங்கோண வாயில் 97
செம்புப் பாத்திரம் 62
செய்கப்துல் காதிறு நயினார் லெவ்வை ஆலிம் 136
செய்கு அப்துல் காதிறு லெப்பை ஆலிம் புலவர் 131, 134, 136
செய்கு அப்துல் காதிறு நயினார் ஆலிம் 136
செய்கு அப்துல் காதிறு லெப்பை ஆலிம் சாகிபு 139
செய்கு அஷ்றப் வலியுல்லா 69
செய்கு அபூபக்கர் 155
செய்கு உஸ்மான் வலியுல்லா 64
செய்கு சுலைமானுல் காதிரிய்யி 154
செய்கு செய்யிது முகம்மது ஒலியுல்லா பேரிற் சிந்து 143
செய்குத் தம்பிப் பாவலர் கா. ப. 143
செய்குதுமான் லெப்பை சாகிபு பேரில் முனாஜாத்து 146
செய்கு முகம்மது அப்துல்லா சாகிபு 152
செய்கு முஸ்தபா 152, 155
செய்கு முஸ்தபா ஒலியுல்லா 70, 138
செய்கு முஸ்தபா ஒலியுல்லாக் காரண அலங்காரக் கும்மி 138
செய்யது அகமது கபீர் 157
செய்யிது அஹமது மரைக்காயர்ப் புலவர் 150
செய்யிது அப்துல் வஹாபு ஆலிம் 160
செய்யிது அலிவாலை குருமஸ்தான் 152
செய்யிது அனபியா சாகிபு 133
செய்யிது மீருப் புலவர் 135
செய்யிது மீறு லெப்பை 133
செய்யிது முகம்மது 145
செய்யிது முகம்மது ஆலிம் சாகிபு 157
செய்யிது முகம்மது ஆலிம் புலவர் செ. மு. 148

செய்யிது முகம்மது காதறு 152
செய்யிது முகம்மது பலூல் 70
செய்யிது முகியித்தீன் கவிராயர் 133, 147
செய்யிது லெப்பை ஆலிம் 135
செருமானி 48, 86, 88
செவில் 43
சேசு (ஓவியக்கலைஞர்) 104
சைத்தூன் 149
சைத்தூன் கிஸ்ஸா 145, 149
சொரூஸ்றியனிசம் 39
சோனகர் 57, 58, 59, 60, 61, 62. 65, 66
சோபனப் பதம் 142

ஞ

ஞான ஒப்பாரி 152
ஞானக்குறம் 152
ஞானக் கோவை 153
ஞானசரநூல் 152
ஞானநடனம் 152
ஞானப் பாக்கள் 150, 151
ஞானப்பாடல்கள் 152
ஞானப்பால் 152
ஞானப்பிரசன்னகரத்தினம் 152
ஞானப்பூட்டு 152
ஞானமணி மாலை 152
ஞானரத்தினக் குறவஞ்சி 152
ஞானவாக்கியம் 152
ஞானேந்திரத்தினம் 152

ட

டொவேன் 90

த

தகரம் 83
தங்கப்பாட்டு மாலை 154
தண்டல் (படகுத்தலைவன்) 60, 61
தண்டேல் 61
தத்துவம் 41, 46, 47
தப்ரிக் (பங்கீடு) 89
தபாற் சேவை 74
தபூக் (ஓர் ஊர்) 35
தமஸ்க் 88
தமஸ்கஸ் (சீறியாவின் தலைநகர்) 40, 43, 47, 96, 111
தமஸ்கஸ் பள்ளிவாசல் 96
தரிப் (அறிக்கை) 89
தரைப்பாதை 84
தரை மார்க்கவர்க்கம் 86
தரௌரி (ஓர் இடம்) 51
தவளம் (போக்குவரத்து முறை) 61, 62
தவளமாடுகள் 62
தவறுமலை 137
தவாபு செய்தல் (சுற்றிவரல்) 24

தற்கலை பீர் முகம்மது சாகிபு 152
தறீக்குல் ஜன்னு 160
தன்பீஹுஸ்ஸாலிக்கீன் 159
தஸ்வாநாத் (ஓவியர்) 104
தாகி 145
தாகிப் படைப்போர் 144, 145
தாபரி (பூமிசாத்திர ஆசிரியர்) 58
தாய்மகள் ஏசல் 141
தாயுபு (ஒரு நகர்) 29
தாயுமானவர் 151
தாரா (ஓவியர்) 104
தாரிக் (படைத்தலைவன்) 43
தாலாட்டு 136
தாலாட்டுப் பாடல்கள் 138, 139
தாலி 67
தாவரவியல் 114
தாஜ் மகால் 56, 93, 98, 99 100, 101
திபெற்று 78, 103
தியூனீசியா 86
தியோஸ் கொறிதேஸ் 46
திரபிக் 89
திரிபந்தாதி 135
திரியேத்துவம் 157, 158
திரியேத்துவ நிவாரணம் 158
திருக்காவலூர்க் கலம்பகம் 129
திருக்குறள் 129
திருக்குர்ஆன் 10, 12, 13, 15, 18, 63, 96, 100, 102, 109, 113, 116 123,124
திருநெறிநீதம் 155
திருப்புகழ் 70, 136, 137
திருப் புத்தூர் 70
திருமக்காத்திரி பந்தாதி 135
திருமணி மாலை 132
திருமதீனத்தந்தாதி 135
திருமறை (திருக்குர்ஆன்) 9, 17
திருவாசகம் 129
தில்லி 51, 52, 53, 54, 55, 56, 64, 97
தில்லிச் சுல்தான் 51, 54
திறெபி ஸோன்ட் 87
திஹாமா (மாகாணத் தொகுதி) 24
தீண்டாமை 10, 21
தீமூர் 53, 103
தீர்க்கதரிசி 12, 13
துக்கங் காத்தல் 140
துக்கங் கொண்டாடுதல் 140
துக்லாக் ஷாவின்சமாதி 98
துணி 45
தும்பறை 66
துருக்கி 45, 108
துருக்கியர் 51, 52, 53, 54, 81, 82, 84, 97, 98, 114

துருக்கித்தான் 54, 78, 103
துருக்கி சுல்தான் 98
துஹ்ற் பத்துல் 157
தூய்மை 14
தூரக்கிழக்குத் தேசம் 45
தெய்புல்(இர் ஓடம்) 50
தெல் தேனியா 65
தேம்பாவணி 129
தேங்காய் 83
தேவதைகள் 25
தேவாரம் 129
தைகிரிஸ் (ஆறு) 44
தொங்கல் (யாப்பு) 150, 156,
தொமஸ் ரூே 105
தொல்காப்பியம் 129
தொலேதோ (ஒரு நகரம்) 43
தொழுகை 13, 14, 15, 16, 19, 22, 63, 94, 119 122, 153, 159
தோத்திரப் புஞ்சம் 69
தோலைப் பதனிடுதல் 48
தௌர் (மலைக்குன்று) 31

ந

நபி அவதார அம்மானை 134
நபிகள் நாயகம் (சல்) 12, 13 21, 25—37, 95, 115 123, 124, 125, 127, 130, 133—137, 140—143, 146—150, 158
நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ் 132, 133,
நபிநாயகம் (சல்) பேரில் ஏசல் 142
நபிகள் நாயகத்தின் பேரில் முனாஜாத்து 146
நபியவதாரப் படலம் 158
நயினா முகம்மது ஒலியுல்லா 142
நல்லூர் 63
நவநீத புஞ்சம் 147
நவநீதரத் நாலங்காரச்சிந்து 142
நவரத்தினத் திருப்புகழ் 70, 137
நன்னம்பிக்கை 124, 125
நஜத் பீடபூமி 24
நஜ்ரூன் (ஓர் இடம்) 25
நஜ்ஜாஷீ 28
நாகூர் 132, 135, 136, 142
நாகூர் ஆண்டவர் 133, 136
நாகூர் பிள்ளைத்தமிழ் 133
நாகூர்ப் புராணம் 132
நாகையந்தாதி 136
நாசிருதீன் மகுமூத் 52
நாசிறி குஷ்று 78
நாட்டுக் கூத்து 107, 109
நாடகம் 107, 108, 109
நாடுகளைப்பற்றிய நூல் 76
நாடோடிப் பாடல்கள் 71
நாணயங்கள் 60, 85

நாமா 144, 150
நாமே 150
நாயக்கமன்னர் 66
நாலாயிரத்திவ்விய பிரபந்தம் 129
நிழலாட்டம் 108
நிஜாமி 104
நுபுல் வத்துக் காண்டம் 131
நூல் நிலையம் 49
நூர் 150
நூர்நாமா 152
நூர்ஜஹான் 55
நூறு மசலா 149
நெசவு 48, 88
நெய்யிது அப்துல் வாரிது ஆலிம் மவ்லானு ஐதரூஸ் 152
நெய்னு மரிக்கார் 64
நெய்னு லெப்பை ஆலிம் சாகிபு 141
நெல்லிக் குப்பத்தை முகம்மது அப்துல் றகுமான் 156
நைல் 40
நொண்டிச் சிந்து 142
நோர்வே 85
நோன்பு 13, 17, 18, 19 119, 153

ப

பக்கீர் மதாறுப் புலவர் 141
பக்தாத் 42, 44, 45, 46, 47, 51, 58, 59, 72, 83, 97, 110, 141
பகவான் தாசு 55
பகுவீறு 149
பகுறுத்தீன் ஹூசைன் 154
பங்குடமை 123
பசாவன் 104
பஞ்சதந்திரம் 50
பஞ்சரத்தினத் தாலாட்டு 139
ப்ஞ்சவரலாற்று விளக்கம் 157
பஞ்சா 157
பட்டினத்தடிகள் 139
பட்டு 45, 48, 83, 84
படிக்காசுப் புலவர் 130
படைப்போர் 144
பத்தஹூல் தய்யான் 159
பத்தஹூல் மத்தீன் 159
பத்தஹூல் மிஸ்று 159
பத்பூர் சிக்றி 98
பத்ஹூஸ்ஸலாம் 159
பத்று 32
பதாயிகு கலம்பகம் 134
பப்பரத்தியார் அம்மானை 135
பல்கேரிய வர்த்தகம் 85, 86
பல்டாக்கோ 111
பலீபன் 52
பழவகை 45
பழைய கெய்ரோ 41

பள்ளிவாசல் 32, 44, 47, 48, 49, 51, 53, 63, 64, 65, 93—101
பஸ்ரியன் 111
பாங்கு சொல்லுதல் 15
பாண்டித்துரைத் தேவர் 132, 158
பாத்திமார் அரசவழி 42
பாத்திமா நாயகி பிள்ளைத்தமிழ் 133, 139, 141
பாதைகள் 75, 76, 77, 78, 80, 84
பாதைகளும் இராச்சியங்களும் 75
பாபர் 54, 85, 98, 104
பார்பரின் (வேர்விலை) 58
பாரசீகம் 38, 40, 41, 43, 44, 45, 46, 52, 54, 72. 73, 78, 82, 84, 88, 98, 103, 104, 108, 110, 138, 149, 150, 156,
பாரசீகர் 40, 60
பாரசீகக் கடல் 23, 24, 82
பாரதம் 129
பால்ரிக் மாகாணம் 84
பாலகர் தாலாட்டு 139
பாலைவனக்கப்பல் 83
பாவா ஆதமலை 58, 136
பாற்சோறு 67
பாறூக்கிய்யா 131
பாஸ்வோர்த் சிமிது 13
பிக்குஹ் சட்டம் 156
பிக்ஹு நூலகம் 189
பிச்சை இபுறுகிம் புலவர் 135
பித்தளை 48
பிரான்சு 38, 48, 87
பிரித்தானியர் 82, 85
பிருதிவிராஜன் 51
பிரோஷ்ஷா 53
பிள்ளைத்தமிழ் 132, 133
பிள்ளைத் தாலாட்டு 139
பிளேற்றோ 46
பின்லாந்து 85
பிஞஷ் (காய்கறி) 39
பிஜாத் 103, 104
பீர் முகம்மது சாகிபு 155, 156,
புகழ்ப் பாவணி 70
புத்தக வெளியீடு 111
புத்தளம் 58, 60, 65
புத்தளத்துப் பள்ளிவாசல் 65
புத்துகுஷ்ஷாம் 131, 132, 159
புரோகிதர் 11
புலந்தரவாசா (பள்ளிவாசல்) 98
புலவராற்றுப்படை 132, 135
புவியியல் அகராதி 79
புஸ்தாத் 111
பூகோளம் 23
பூதநூல் 114

பூமியின் உருவம் 75
பூவடிச் சிந்து 143
பூஜாநாடு 86
பெரிய புராணம் 129
பெரிய நூ ஹூ றலியுல்லா 155
பேர்குசன் 98
பேராதனே அரச பூந்தோட்டம் 66
பைசாந்தியம் 40, 41, 48, 86, 87
பைத்துல் முகத்தஸ் 47
பைத்துல் ஹிக்மாஹ் 73
பைஹுல் றகுமான் 159
பொன் 48, 86, 96
போக்குவரத்துச் சாதனம் 61, 62
போத்துக்கேயர் 63, 68, 82

ம

மஅரிபத்தின் தாலாட்டு 139
மஅரிபத்துமாலே 155
மஆனி 159
மக்கா 23-36, 47, 72, 74, 76, 78, 79, 93, 124, 133-137, 155
மக்காக் கலம்பகம் 134
மக்கூன் (ஓர் இடம்) 69
மக்சூறு (மறைப்பு) 94
மக்ஹாசிம் (பண்டகசாலே) 89
மகசீன் 89
மகமூது 110
மகுமூது 51
மங்காதீபம் 154
மங்கோலர் 53, 103
மச்சரேகைச் சித்தன் 152
மசலா 144, 149, 150
மசிலின் 88
மசூதி 93, 94, 95
மணிமந்திரத்தாலாட்டு 139
மணிமுத்துமாலே 154
மணிமேகலே 129
மத்தியதரை 83, 90
மதாறு சாகிபுப் புலவர் 148, 149, 150
மதீனு 23, 30, 31, 32, 33, 38, 72, 93, 94, 124, 135, 136, 137
மதுரை 53
மரக்கலமினுசு 57
மரணத்துலக்கமணிமாலே 154
மராத்தியர் 56
மருத்துவ நூல் 10
மருதானே 65
மருதானே ஜிமாப்பள்ளிவாசல் 65
மலாகா 43, 48
மலாயர் 45, 57
மலாயா 57, 58
மலிக் கபூர் 52
மலிந்தி (ஒரு நாடு) 82
மன்சூர் (ஓவியக் கலேஞர்) 106

மன்னூர் 58
மனோகரன் (ஓவியக் கலைஞர்) 106
மஹர் (பணம் செலுத்துகை) 67
மஸ்தான் சாகிபு 151, 152
மஸ்தான் சாகிபுபாடல் 136 151, 152
மஸ்ஜித் 64
மஸ்ஜித் குபா (பள்ளிவாசல்) 32
மஸ்ஜித் நபவீ (பள்ளிவாசல்) 82
மாடவில் 95, 96, 97
மாணிக்கக்கல் 62
மாந்தோட்டம் 58
மாப்பிள்ளை லெப்பை ஆலிம் சீவிய சரித்திரக்கும்மி 138
மாருல்ல ஹரான் (ஓர் இடம்) 34
மாலிகை 148
மாலை 136
மாலைத்தீவு 80
மாலை நூல்கள் 153, 154
மாலைப் பிரபந்தம் 140, 141
மிம்பர் (உயர் பீடம்) 94
மினறெற்று 94, 97
மினியேச்சர்ஸ் (விளக்கப்படங்கள்) 103
மிஃறுஜூ நாமா 150
மிஹ்றுப் (அரைவட்ட வடிவம்) 94
மீசான் மாலை 155
மீர் சையது அலி (ஓவியக் கலைஞர்) 104
மீரான் முகிய்யித்தீன் 71
மீருன் சாகிபு ஆண்டவர் 143, 147
மீருன் சாகிபுப் புலவர் 146, 147
மீருன் சாஹிபாண்டகையவர்கள் பேரில் முனாஜாத்து 147
மீருன் தாலாட்டு 139
மீருன் முகியித்தீன் 160
முஆவியா (றலி) 42, 94
முகம்மதலி பள்ளிவாசல் 65
முகம்மதிய்யாக்காண்டம் 131
முகம்மது அப்துல்லா லெப்பை 159
முகம்மது அப்துறஹுமான் 156
முகம்மது இபினு துக்லக் 52
முகம்மது கம்சா லெவ்வை 154
முகம்மது காசிம் 50
முகம்மது காசீம் புலவர் 138
முகம்மது சம்சுத்தீன் 158
முகம்மது தம்பிமரைக்காயர் 71, 155
முகம்மது நபி (சல்) 12, 14, 22, 25, 28, 32, 38, 39, 41, 47, 67, 70, 83, 103, 123, 125, 126, 130, 134, 135, 140, 144, 158

முகம்மது முஸ்தபா றசூல் (சல்) அவர்கள் பேரில் முனாஜாத்து 148
முகம்மது ஹனிபா 149
முகம்மது ஷாஹ் 56
முகியித்தீன் அப்துல் காதிறு 139
முகியித்தீன் ஆண்டவர் 132, 133, 137, 142, 151
முகியித்தீன் ஆண்டவர் சரித்திரம் 159
முகியித்தீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ் 133
முகியித்தீன் ஆண்டவர் திருப்புகழ் 137
முகியித்தீன் ஆண்டவர் பேரில் தாய் மகள் ஏசல் 142
முகியித்தீன் கவிராயர் 137
முகியித்தீன் சதகம் 151
முகியித்தீன் நாவலர் 138
முகியித்தீன் புராணம் 132
முகியித்தீன் மாலை 141
முகுந்தன் (ஓவியக் கலைஞர்) 104
முதலாளி (முதலை ஆள்பவன்) 60, 61
முதுமொழி மாலை 140
முந்நீர் வழக்கு 81, 82
மும் தாஜ் மஹால் 100, 101
முல்தான் 50
முனாஜாத்து 69, 70, 144-150
முனாஜாத்து மாலிகை 148
முஹறம் 157
முஹாஜிர்கள் (மக்காவிலிருந்து மதீனாவுக்கு நாடு கடந்து வந்தவர்) 32
முஹையுத்தீன் சரீபு சாகிபு 158
முஸ்அப் பின் உமைர் 30
முஸ்லிம் அத்வைத மூலமொழி 156
முஸ்லிம் திருமணம் 67
முஸ்லின் 111
முஷ்றிக்குகள் 25
மூசா 43, 44
மூர் 57
மூரிஷ்-சோனகச்சிற்ப முறை 65
மெசப்பொத்தேனியா 72, 79, 83
மெஞ்ஞான மனதலங்காரப் புகழ்ச்சி 152

மெய்ஞ்ஞானக்குரு செய்கு முகம்மது அப்துல் காதிறு செய்னுத்தீன் சா அன்சா ஆலிம் சாகிபு 154
மெய்ஞ்ஞானத் தங்கப்பாட்டு மாலை 154
மெய்ஞானத்தூது 152
மெரிதா (ஒரு நகர்) 44
மேற்கு ஆசியா 72
மேஹர்பான் 149
மையத்து வீடு 140
மொகலாய ஓவியம் 104, 105
மொகலாயக் கட்டடக்கலை 97, 98, 99
மொகலாயர் 54, 55, 56, 98, 104
மொசெய்க்கு 94
மொறொக்கோ 38, 48, 80, 86
மொன்சூன் 83
மோகல் பிரபுக்கள் 55
மோசுல் 111
மௌலானா றூமி சீவிய சரித்திரம் 159

ய

யப்பஹாவாக்கோட்டை 66
யப்பான் 76
யத்ரீப் (ஓர் இடம்) 25
யவன 57
யாக்கூற் (புவியியல் ஆசிரியர்) 79
யாகூபு நபி (அலை) 149
யாத்திரை நூல்கள் 75
யாழ் 107
யாழ்ப்பாணம் 58
யூசுபு நபி 149
யூசுபு நபி கிஸ்ஸா 148
யூதர் 25, 59, 87
யூபிரட்டிஸ் 58
யூல் 60
யூனானி வைத்திய முறை 114

ர

ரமலான் 13, 17, 19, 26
ராமன் (ஓவியக் கலைஞர்) 104
ராஜா பிகார் மால் 55
ருஷ்யா 45, 84, 86
ரெயர் 89

ல

லூற் (இசைக் கருவி) 89, 117
லெமன் (பழவகை) 89

வ

வச்சிர அச்சகம், யாழ்ப்பாணம் 135
வட ஆபிரிக்கா 44, 49
வடோச்சி 145
வடோச்சிப் படைப்போர் 144, 145
வணிகம் 59, 60, 61, 62, 63
வர்த்தகம் 81-90

வர்த்தகச்சட்டம் 128
வள்ளி தெய்வயானை ஏசல் 141
வளைமாடம் 65
வஸ்கொடகாமா 82
வாசனைத்திரவியம் 45,59,83
வாலை பாவா சாகிபு 149
வாலை மஸ்தான் சாகிபு 152
வாலை வாரிதி 130
வானசாத்திரம் 81
வான நூல் 23, 45, 46, 50
விக்கிரக வணக்கம் 25, 26, 27, 31, 35, 36
விஞ்ஞானம் 41, 44, 46, 47, 113
விட்டம் 95
விமானம் 100
வியாபாரம் 59, 60, 61, 62, 63, 66
வில் மச்சு மண்டபம் 98
விலாதத்துக்காண்டம் 131
விவசாயம் 49, 118
விவாகப் பதிவுகாரர் 64
விஸ்ஸெல் (காசோலை) 90
வீரசோழியம் 129
வெச்சல் (காசோலை) 90
வெள்ளி 48
வெள்ளாட்டி மசலா 152
வேதபுராணம் 155
வேதிநூல் 113
வேர்விலை 58, 64, 69, 70, 138
வேஷம் 107
வைத்தியம் 23, 41, 66, 114
வொட்டர் 142
வொல்கா 85

ற

றகுமான் பேரில் முனாஜாத்து 146, 147
றசூலுல்லா பேரில் முனாஜாத்து 147
றஸியா (தில்லித் துருக்கிய இராணி) 52
றிஸ்க் 89
றெுத்தறிக்கு (மன்னன்) 43
றோஜர் II 78

ஹ

ஹடித் (சட்ட மரபுகள்) 123, 124
ஹத்ரமவ்த் 24
ஹபீபு முகம்மது ஆலிம் 159
ஹம்சா 28
ஹம்பங் 57
ஹம்பங்காரயா 57
ஹனீபி (மார்க்கம்) 24
ஹயாத்து நபி 147
ஹஜ்ஜு (யாத்திரை) 14, 19, 20, 21, 30, 34, 36, 74
ஹஜ்ரத் அபூபக்கர் 31
ஹஜ்ரத் அலி 31
ஹரூன் அல் றஷீத் (கலிபா) 45, 58, 63, 73
ஹாபிஸ் (புலவர்) 54

ஹாஷிம் (குடும்பம்) 25, 29, 58
ஹ்ராஜீ 21
ஹிப்பொக்கிறற்றேஸ் 46
ஹிரு (ஒரு மலைக்குகை) 26
ஹிஜ்றி ஆண்டு 31, 34, 35, 36, 151
ஹிஜ்றத்துக்காண்டம் 131
ஹிஜறத் 31
ஹிஜாஸ் (ஒரு மாகாணம்) 23, 24
ஹிஷாம் முகம்மது அல் கல்பி (புவியியல் ஆசிரியர்) 75
ஹுதையிய்யா (ஓர் இடம்) 34
ஹுமாயூன் 55
ஹுனைன் இபினு இஷஹாக் (மொழிபெயர்ப்பாளர்) 46, 47
ஹெலியோபோலிஸ் (ஓர் இடம்) 41


## ஸ


ஸ்கண்டிநேவிய ருஷ்யா 85
ஸ்பெயின் 38, 41, 44, 47, 48. 49, 72, 78, 83, 85, 87, 111
ஸ்ரேலிங் 89
ஸ்ரேற்றர் 89
ஸாபிகீன் அவ்வலீன் 26
ஸித்தீக்கிய்யா 131


## ஷ


ஷக் (காசோலை) 86, 89
ஷம்பசுபானி குலம் 51
ஷல்லொப் 83
ஷா முகம்மது சியாவுத்தீன் சாகிபு காதிரி 158
ஷாஜஹான் 56, 98, 99, 100, 101
ஷிப் அபூ தாலிப் 29
ஷியாபுதீன் வலியுல்லா 70


## ஜ


ஜகன் (ஓவியக் கலைஞர்) 104
ஜபால் (ஜிபிரோல்ரர்) 43
ஜமாஹ் (திருச்சபை)
ஜலாலுத்தீன் அஸன் ஷா 53
ஜலாலுதீன் 52
ஜலாலுதீன் றூமி 54
ஜன்னத் பள்ளிவாசல் 65
ஜஹாங்கீர் 55, 105, 106
ஜிபிரோல்ரர் 43
ஜிமாப்பள்ளிவாசல் (மருதானை) 65
ஜித்தா (துறைமுகப் பட்டினம்) 23
ஜிஸ்யா 35
ஜுமெய்து 50
ஜெயிலானி 141
ஜெமாலுத்தீன் புலவர் 155


கிங்ஸ்லி அச்சகம் – கண்டி